மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

TIRUNELVELI-12

REVISED UNDER GRADUATE COURSES SYLLABI
(offered in the Affiliated Colleges)

with effect from the **Academic Year 2012 – 2013**

பகுதி - I தமிழ்
(CBCS)

2012 - 2013 கல்வியாண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ள பொது விருப்பப்பாடத் தேர்வுமுறை
(அனைத்துத் துறைப் பாடப் பிரிவினருக்கும் உரியது)
பாடத்திட்டம்

பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. பொது விருப்பப் பாடத் தேர்வு முறை விதிகளை அடிப்படையாகக் கொண்டும், மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கிலும், எளிமையாகவும், ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் கற்பிக்கும் முறையில் இக்கால இலக்கியம் தொடங்கிச் சங்கால இலக்கியம் வரை பாடத்திட்டங்கள் நெறிப்படுத்தப்பட்டள்ளன.
2. இலக்கணப்பயிற்சி, தமிழ்மொழியை எளிமைப்படுத்தும் முறையில், பிழையின்றி எழுதவும், பேசவும் பயிற்சி பெறும் விதமாக எழுத்து, சொல், பொருள், அணி என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
3. மாணவர்களின் நலன் கருதி இலக்கிய வரலாறு செய்யுள் அமைப்பிற்கேற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இன்றைய தகவல் தொடர்பு சாதனங்களின் வழி தமிழ் வளர்ச்சியை அறிந்து கொள்ளும் நிலையைத் தூண்டுதல் செய்யும் நோக்கத்துடன் பாடத்திட்டம் அமைக்கப்பட்டள்ளது.

பகுதி - I தமிழ்

2012 - 2013 கல்வியாண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ள பொது விருப்பப்பாடத்திட்டம்
(அனைத்துத் துறைப் பாடப் பிரிவினருக்கும் உரியது)
பாடத்திட்டக் காவலரையறை (அனைத்து பருவங்களுக்கும் உரியது)

பாடப்பகுப்பு	காலவரையறை
செய்யுள்	2 மணி
இலக்கணம்	1 மணி
உரைநடை	1 மணி
சிறுகதை	1 மணி
இலக்கிய வரலாறு	1 மணி

பாடத்திட்டம்	பருவம்	மதிப்பீடுகள்	நேரம் / வாரம்	மொத்த மதிப்பெண்கள்
தாள் 1 - செய்யுள், இலக்கணம் , உரைநடை, சிறுகதை, இலக்கியவரலாறு	1	3	6 x 15 = 90 மணிநேரம்	75 : 25

முதலாமாண்டு முதற்பருவம்

(தாள் 1 - செய்யுள், இலக்கணம், உரைநடை, சிறுகதை, இலக்கிய வரலாறு)

அலகு 1 : செய்யுள்பகுதி

அலகு 2 : இலக்கணம்

இவ்விரு அலகுகளும் பல்கலைக் கழகத் தொகுப்பிலிருந்து கற்பிக்கப்படும்

அலகு 3 : உரைநடை

இலக்கியக் கட்டுரைகள், சங்கத் தமிழர் வாழ்வியல்

ஆசிரியர் முனைவர். தா. நீல கண்ட பிள்ளை

அலகு 4 : சிறுகதை - நோன்பு

ஆசிரியர். டி. செல்வராஜ்

அலகு 5 : இலக்கிய வரலாறு

1. புதுக்கவிதை
2. சிறுகதை
3. நாவல்
4. நாடகம்

} தோற்றமும் வளர்ச்சியும்

5. நாட்டார் பாடல்கள்
6. தகவல் தொடர்பு சாதனங்களும் தமிழ் வளர்ச்சியும்

பார்வை நூல்கள்

இலக்கணம் - நன்னூல்

இலக்கிய வரலாறு - 1. வகைமை நோக்கில் இலக்கியவரலாறு

பாக்கியமேரி

2. இலக்கிய வரலாறு

எம். ஆர். அடைக்கலசாமி

3. இலக்கிய வரலாறு

முனைவர். சு. ஆனந்தன்

பெரியார், ஈ.வெ.ரா. கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 620 023

மதிப்பெண் பகுப்புமுறை	-	75 : 25
உள்மதிப்பீடு	-	25 மதிப்பெண்கள்
தேர்வு	-	20 மதிப்பெண்கள்
பயிற்சிக் கட்டுரை	-	5 மதிப்பெண்கள்
புறமதிப்பீடு	-	75 மதிப்பெண்கள் 3 மணி நேரம்

வினா அமையும் முறை

1. சரியான விடையைத் தேர்வு செய்யும் பகுதி அ அனைத்து அலகுகளிலும் இருந்து நான்கு வினாக்கள் அமையும் - 20 x 1 = 20
2. பகுதி ஆ - அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தரும் பகுதி - 5 x 4 = 20
3. பகுதி இ - அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடை தரும் பகுதி - 5 x 7 = 35

முதலாமாண்டு முதற்பருவம்

மாதிரி வினாத்தாள் - Paper I

PART I - TAMIL

(செய்யுள், இலக்கணம், உரைநடை, சிறுகதை, இலக்கிய வரலாறு)

காலம் - 3 மணி

மதிப்பெண் - 75

பிரிவு அ (20 x 1 = 20 மதிப்பெண்கள்)

சரியான விடையைத் தேர்வு செய்க

1. ஆசானை யாரென வணங்க வேண்டும்

   அ. தந்தை ஆ. கடவுள் இ. பெரியவர்

   ஈ. தாய்

2. மலையோடு நதிகளும் வாழ்கின்ற நாட்டில் எது இல்லை என கண்ணதாசன் குறிப்பிடுகிறார்

   அ. மனித நேயம் ஆ. மனித தத்துவம் இ. மனப்பாங்கு

   ஈ. மனசாட்சி

3. கற்பனை பெருகவேண்டுமானால் எதைப் பெருக்க வேண்டும்?

   அ. சிந்தனை ஆ. அறிவு இ. கல்வி

   ஈ. ஞானம்

4. மானுட ஆண்மைக்கு மண் கொடுத்த சீதனங்கள் எவை?
அ. மரங்கள் ஆ. விலங்குகள் இ. நீர்

ஈ. உலோகங்கள்

5. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்
அ. 22 ஆ. 24 இ.

30 ஈ. 28

6. சார்பெழுத்துக்கள் எததனை வகைப்படும்?
அ. 10 ஆ. 11 இ.

9 ஈ. 8

7. முதலெழுத்துக்கள் எத்தனை?
அ. 12 ஆ. 18 இ. 30
ஈ. 216

8. சுட்டு எத்தனை வகைப்படும்?
அ. 2 ஆ. 3 இ. 4

ஈ. 5

9. ‘‘வினையே ஆடவர்க்கு உயிரே’’ என்று குறிப்பிடும் நூல்
அ. நற்றிணை ஆ. குறுந்தொகை இ. பதிற்றுப்பத்து

ஈ. பரிபாடல்

10. அரசு கட்டிலில் தூங்கிய புலவர்
அ. மோசிக்கீரனார்ஆ. கபிலர் இ. நக்கீரர் ஈ.

பரணர்

11. ஔவையாருக்கு நெல்லிக்கனி கொடுத்தவர்
அ. அதியமான் ஆ. நலங்கிள்ளி இ. நெடுங்கிள்ளி

ஈ. பாரி

12. பிற்கால பயண நூல்களின் முன்னோடியாக அமைந்தது
அ. தொல்காப்பியம் ஆ. எட்டுத்தொகை
இ. ஆற்றுப்படை நூல்கள் ஈ. சிலப்பதிகாரம்

13. நோன்பு சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர்
அ. புதுமைப்பித்தன் ஆ. ஜெயகாந்தன் இ. அகிலன்

ஈ. டி. செல்வராஜ்

14. கிணறு சிறுகதையின் கதாநாயகன்

அ. காக்கையன் ஆ. சண்முகம் இ. புதுபணக்காரன்

ஈ. முருகன்

15. அனாதைகள் கதையில் வரும் என்ஜினியர் பெயர்
அ. விஜயசாரதி ஆ. பார்த்தசாரதி இ. பார்த்தீபன்

ஈ. விஜயன்

16. ‘‘போலோ மகாத்மா காந்திக்கு ஜே’’ என்று கோசமிட்டவர்
அ. பழநியப்பா பிள்ளை ஆ. வள்ளியம்மாள்

இ. சண்முகம் பிள்ளை ஈ. ஆறுமுகம் பிள்ளை

17. தமிழில் முதல் சிறுகதை
அ. மங்கையர்க்கரசியின் காதல் ஆ. குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை
இ. பரமார்த்த குருகதை ஈ. விடியுமா?

18. ஞானபீட பரிசு பெற்ற நூல்
அ. பெண் ஆ. பஞ்சும் பசியும் இ. சித்திரப் பாவை ஈ. நெஞ்சின் அலைகள்

19. ஹைக்கூ கவிதையின் பிறப்பிடம்
அ. ஜப்பான் ஆ. சீனா இ. இந்தியா

ஈ. இலங்கை

20. நாட்டுப்புறவியலை தமிழகத்தில் தனியொரு துறையாக வளர்த்தவர்
அ. ஆறு, இராம நாதன் ஆ. நா. வான மாமலை

இ. சு. சக்திவேல் ஈ. மு. இராம சுவாமி

பிரிவு ஆ (5x 4 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடைதருக

21. அ. புதுமை என்ற கவிதையில் கவிஞர் சுரதா கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

அல்லது

ஆ. ஏரியின் தன்மைகளாக கவிஞர் சல்மா கூறுவனவற்றை எழுதுக.

22. அ. கிரந்த எழுத்துக்கள் பற்றி எழுதுக.

அல்லது

ஆ. சுட்டெழுத்துக்கள் பற்றிக் கூறுக.

23. அ. தமிழர்களின் விஞ்ஞானப் பார்வை என்ற கட்டுரையில் ஆன்மீக அறிவியல் பற்றி கூறப்பட்டுள்ள கருத்துக்களை எழுதுக.

அல்லது

ஆ. பழந்தமிழ் இசையில் யாழ் பெறுமிடத்தைச் சுருக்கித் தருக.

24. அ. நோன்பு சிறுகதையில் ஸ்ரீவல்ல பாண்டியனின் மனநிலையை எழுதுக.

அல்லது

ஆ. பணமும் குலமும் சிறுகதையில் வரும் அற்புதமணியின் மனநிலையை எழுதுக.

25. அ. சிறுகதையின் இலக்கணத்தைத் தருக.

அல்லது

ஆ. சமூகப் புதினங்கள் பற்றி ஆய்க.

பிரிவு இ (5 x 7 = 35 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடைதருக

26. அ. மரங்களின் பயன்களாகக் கவிஞர் மு. மேத்தா கூறும் கருத்துக்களை எழுதுக.

அல்லது

ஆ. உழவர்கள் மழையை வரவேற்ற நிகழ்ச்சியை நும் செய்யுட் பகுதியில் வரும் நாட்டுப்புறபாடல் வழி விளக்குக.

27. அ. மொழி முதல் எழுத்துகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

அல்லது

ஆ. சார்பெழுத்துக்கள் என்றால் என்ன? ஏதேனும் அதன் ஐந்து வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக?

28. அ. பத்துப்பாட்டில் சமூக அறம் என்ற கட்டுரையிலுள்ள கருத்துக்களை எழுதுக.

அல்லது

ஆ. அகநானூற்றில் தமிழர் வழக்காறுகள் குறித்து எழுதுக.

29. அ. தொண்டன் சிறுகதையில் வரும் ஆறுமுகம் பிள்ளையின் பண்பு நலனை ஆய்க.

அல்லது

ஆ. அனாதைகள் சிறுகதையின் சிறப்பினை எழுதுக.

30. அ. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

அல்லது

ஆ. நாட்டார் பாடல்கள் குறித்து எழுதுக.

முதலாமாண்டு இரண்டாம் பருவம்
(தாள் 2 செய்யுள், இலக்கணம், உரைநடை,
வாழ்க்கை வரலாறு, இலக்கியவரலாறு)

அலகு 1 : செய்யுள்பகுதி

அலகு 2 : இலக்கணம்

இவ்விரு அலகுகளும் பல்கலைக் கழகத் தொகுப்பிலிருந்து கற்பிக்கப்படும்

அலகு 3 : உரைநடை

இலக்கியக் கட்டுரைகள் - இலக்கிய உலா

ஆசிரியர் டாக்டர் ம. திருமலை

அலகு 4 : வாழ்க்கை வரலாறு - பாட்டாளி கவிஞன்

பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

தொகுப்பாசிரியர் - கார்த்திகேயன்

அலகு 5 : இலக்கிய வரலாறு

நீதி நூல்களும், பக்தி இலக்கியங்களும்

1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

2. பன்னிரு திருமுறைகள்

3. நாலாயிர திவ்ய பிரபந்தம்

4. சமணம், பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாமியம் தமிழுக்குச் செய்த தெண்டு

வினா அமையும் முறை

1. சரியான விடையைத் தேர்வு செய்யும் பகுதி அ அனைத்து அலகுகளிலும் இருந்து நான்கு வினாக்கள் அமையும் - 20 x 1 = 20
2. பகுதி ஆ - அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தரும் பகுதி - 5 x 4 = 20

பகுதி இ - அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடை தரும் பகுதி - 5 x 7 = 35

இரண்டாம் பருவம்

மாதிரி வினாத்தாள் - Paper II

PART I - TAMIL

(செய்யுள், இலக்கணம், உரைநடை, வாழ்க்கை வரலாறு, இலக்கிய வரலாறு)

பிரிவு அ (20 x 1 = 20 மதிப்பெண்கள்)

சரியான விடையைத் தேர்வு செய்க

1. நஞ்சுண்டு தேவர்களுக்கு அமுது ஈந்தவன்.
   அ. பிரம்மன் ஆ. சிவன் இ. திருமால்
   ஈ. வருணன்

2. திருவருட்பாவின் ஆசிரியர்
   அ. திருமூலர் ஆ. வள்ளலார் இ. பட்டினத்தார்
   ஈ. தாயுமானவர்

3. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்றவர்
   அ. தாயுமானவர் ஆ. மாணிக்கவாசகர் இ. திருமூலர் ஈ. சுந்தரர்

4. 'வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்' எனப் பாடியவர்
   அ. குலசேகராழ்வார் ஆ. பெரியாழ்வார் இ. ஆண்டாள்
   ஈ. திருமங்கையாழ்வார்

5. வேற்றுமை உருபுகளை ஏற்கும் சொல்
   அ. வினைச்சொல் ஆ. பெயர்ச்சொல் இ. இடைச்சொல்
   ஈ. உரிச்சொல்

6. பொன்னன் என்பது
   அ. பொருட்பெயர் ஆ. இடப்பெயர் இ. காலப்பெயர்
   ஈ. சினைப்பெயர்

7. 'வாழ்க' என்பது
   அ. ஏவல் வினைமுற்று ஆ. வியங்கோள் வினைமுற்று
   இ. குறிப்பு வினைமுற்று ஈ. எதுவுமில்லை

8. 'சால' என்பது.
   அ. இடைச்சொல் ஆ. உரிச்சொல் இ. பெயர்ச்சொல்
   ஈ. வினைச்சொல்

9. 'பனிபெய்யும் இரவுகள்' நாவலின் ஆசிரியர்?
   அ. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஆ. வாசந்தி

இ. சிவசங்கரி ஈ. ராஜம் கிருஷ்ணன்

10. சேற்றில் மனிதர்கள் நாவல் எந்த மாவட்டத்தைப் பின்னணியாகக் கொண்டுள்ளது?
அ. குமரி மாவட்டம் ஆ. நெல்லை மாவட்டம்
இ. சிவகங்கை மாவட்டம் ஈ. தஞ்சை மாவட்டம்

11. கேரள சாகித்திய அகாடமியின் துணைத் தலைவராக இருந்தவர்
அ. சுந்தரம் பிள்ளை ஆ. வள்ளத்தோள் இ. கவிமணி ஈ. மறைமலைஅடிகள்

12. குறிஞ்சிப் பாட்டினை உளவியல் பாட்டு என்று கூறியவர்
அ. தமிழண்ணல் ஆ. அடைக்கலசாமி இ. ஆனந்தன் ஈ. சுயம்பு

13. பாரதி, பாரதிதாசன் தோற்றுவித்த சாலையில் கம்பீரமாய் பயணம் புறப்பட்டவர்.
அ. கண்ணதாசன் ஆ. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
இ. கவிமணி ஈ. மு. மேத்தா

14. பட்டுக்கோட்டையாரின் கடைசிக் கவிதை
அ. புது ஞாயிறு ஆ. ஜனநாயகம் இ. தங்கப்புதுமை ஈ. எவையுமில்லை

15. ‘ஜனசக்தி’ நாளிதழின் துணை ஆசிரியர்
அ. ஐ. மரியாண்டி பாரதி ஆ. பாரதியார் இ. பாரதிதாசன் ஈ. பட்டுக்கோட்டையார்

16. கம்யூனிஸ்ட்டாகவே இருக்க விரும்பிய கவிஞர்
அ. நாமக்கல் ஆ. கண்ணதாசன் இ. பட்டுக்கோட்டையார் ஈ. எவருமில்லை

17. திராவிடசிசு என்று அழைக்கப்படுபவர்
அ. சம்பந்தர் ஆ. நாவுக்கரசர் இ. சுந்தரர் ஈ. மாணிக்க வாசகர்

18. ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்ற தொடர் இடம் பெற்ற நூல்

அ. தேவாரம் ஆ. திருவாசகம் இ. திருமந்திரம்

ஈ. பெருமாள் திருமொழி

19. பதினெண் கீழ்க்கணக்கில் இடம்பெற்ற அகநூற்கள்
அ. 6 ஆ. 5 இ. 7

ஈ. 4

20. நாலடியாரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்
அ. கால்டுவெல் ஆ. ஜி.யு. போப் இ. வீரமாமுனிவர் ஈ. வேதநாயகம் பிள்ளை

பிரிவு ஆ (5x 4 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடைதருக

21. அ. திருஞான சம்பந்தர் இறைவனை எவ்வாறு புகழ்கின்றார்?

அல்லது

ஆ. ஈகை குறித்து நாலடியார் கூறும் கருத்துக்களை எழுதுக.

22. அ. இடைச்சொல்லின் இலக்கணம் கூறி ஏகார இடைச்சொற்களை விளக்குக.

அல்லது

ஆ. உரிச்சொல் என்றால் என்ன? சான்றுகளுடன் விளக்குக.

23. அ. பெண் குழந்தைத் தொழிலாளர் நிலை ‘‘கூட்டுக் குஞ்சுகள்’’ நாவலில் எங்ஙனம் சித்தரிக்கப்பட்டுள்ளது?

அல்லது

ஆ. குலேசகர ஆழ்வார் புலன்களை எவ்வாறு வசப்படுத்த வேண்டும் என்று கூறுகிறார்.

24. அ. இயற்கையை விரும்பிய கவிஞர் பட்டுக்கோட்டை என்பதை விளக்குக.

அல்லது

ஆ. டப்பாப்பாட்டு - குறிப்பெழுதுக.

25. அ. முதலாழ்வார்கள் - குறிப்பு வரைக.

அல்லது

ஆ. களவழி நாற்பது - குறிப்பு வரைக.

பிரிவு இ (5 x 7 = 35 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடைதருக

26. அ. கிறிஸ்து மொழிக்குறளில் திரு.வி.க. கூறும் கருத்துக்களை எழுதுக.

அல்லது

ஆ. பண்புடைமை பற்றி திருக்குறள் கூறும் கருத்துக்களை எழுதுக.

27. அ. நும் ஊரில் பழுதுப்பட்ட சாலையைச் சீரமைக்க வேண்டி மாவட்ட அலுவலருக்கு ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

ஆ. பத்திரிகையில் செய்திகளை எவ்வாறு வெளியிடலாம்?

28. அ. ஹைகூ கவிதைகளில் இயற்கை எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது?

அல்லது

ஆ. சிறுபாணாற்றுப்படை அமைந்துள்ள சிறப்பினை விவரி.

29. அ. பட்டுக்கோட்டையாரும் சினிமாவும் குறித்து எழுதுக.

அல்லது

ஆ. பட்டுக்கோட்டையாருக்கும் தோழர் ஜீவாவிற்கும் உள்ள தொடர்பினை எழுதுக.

30. அ. பதினெண்கீழ்க்கணக்கில் அகநூற்கள் பற்றி எழுதுக.

அல்லது

ஆ. சைவசமயக் குரவர் நால்வர் பற்றி விரிவான விடை தருக.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

செய்யுள் பாடப் பகுதிகள்

கலை, அறிவியல்

B.A., B.Sc., (Gen) B.Com., B.Sc., (Comp).,
B.A., B.B.A., B.B.M., & B.Sc.,
Electronics

மாணவர்க்குரியது

பகுதி - ஒன்று - தமிழ்

முதலாம், இரண்டாம் பருவங்களுக்குரிய
செய்யுள் பாடப் பகுதிகள்

முதற்பருவம் - இக்கால இலக்கியம்

இரண்டாம் பருவம் - சமய, நீதி இலக்கியங்கள்

பல்கலைக்கழக வெளியீடு
2012 - 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் சேரும் மாணவர்க்குரியது

பதிப்புரை

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் 2012 - 13 ஆம் கல்வியாண்டு முதல் புதிதாக சேரும் மாணாக்கர்களுக்கு முதல் இரு பருவங்களுக்குரிய செய்யுள் மற்றும் இலக்கணத் தொகுப்பாக இந்நூல் வெளி வருகிறது.

மனித மாண்புகள் தழைத்தோங்க வேண்டிய இச்சூழலில் அறிவை அகண்டமாக்கிக் கொண்டு மனித நேயங்களை வளர்த்திட இப்பாடத்திட்டம் வழி வகை செய்யும் என்ற நம்பிக்கையில் அமைக்கப்பட்டுள்ளது. சமூகத்தை உயர் நிலைக்குக் கொண்டு செல்லும் பண்பு இன்று அவசியமாகிறது. அப்பண்பினை உயர்த்திடும் பொறுப்பு தாய்மொழிப்

பாடத்திட்டத்திற்குரியது. இளைய சமுதாயத்தினைப் பொறுப்புமிக்க மனிதர்களாக ஆக்கும் மொழிப்பாடத்தின் பங்கு அளவிடற்கரியது. பொறுப்பை உணர்ந்து சிந்தனையைத் தூண்டி ஆர்வப்படுத்தும் நோக்கில் புதுமையினை விரும்பி பழமையினைப் பேணி செய்யுட் பாடப் பகுதிகள் இதில் இடம் பெற்றுள்ளன.

இச்செய்யுள் தொகுதி வெளிவருவதற்குப் பல்லாற்றானும் துணை புரிந்த மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்களுக்கும் பதிவாளர் முனைவர். ச. மாணிக்கம் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளிறோம்.

பாடத்திட்டக்குழுவினர்

பாடத்திட்டக்குழுவினர்

தலைவர்		திருமதி. நெ. பியூலா குமாரி இணைப் பேராசிரியர் மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி, நாகர்கோவில்.
உறுப்பினர்கள்	1.	முனைவர். பு. சித்திரைவேல் முதல்வர் (பொறுப்பு) இணைப் பேராசிரியர் காமராஜர் அரசு கலைக்கல்லூரி, சுரண்டை - 627 859.
	2.	ஜி. மாரியப்பன் இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஜி.வி.என். கல்லூரி, கோவில்பட்டி
	3.	முனைவர். மு. கண்ணன் இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் தமிழ்த்துறை ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி திருச்செந்தூர் - 628 216
	4.	திருமதி. தி. மரிய ஜுலியட் இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் விவேகானந்தா கல்லூரி, அகத்தீசுவரம்.
	5.	முனைவர் மு. செல்வம் தமிழ்த்துறைத் தலைவர் அறிஞர் அண்ணா கல்லூரி, ஆரல்வாய்மொழி
	6.	பேரா. மா. முத்துசாமி இணைப் பேராசிரியர் தமிழ்த்துறை, வ.உ.சி. கல்லூரி, தூத்துக்குடி - 628 008
	7.	முனைவர் ச. இராஜா இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, ப.மு. தேவர் கல்லூரி, மேலநீலித நல்லூர், சங்கரன்கோவில்.
	8.	முனைவர். கெ. லதா இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, பாத்திமா கல்லூரி, மதுரை.
	9.	முனைவர். எஸ். வேலாயுதன் இணைப் பேராசிரியர் தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்
	10.	முனைவர். மகிழ் உல்டா கமலம், இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, நேசமணி கிறித்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்.

உள்ளடக்கம்

1. அன்னையை வேண்டுதல் - பாரதியார்
2. தொழிலாளர் விண்ணப்பம் - பாரதிதாசன்
3. ஒற்றுமையே உயிர்நிலை - கவிமணி
4. மாணவனுக்கு - நாமக்கல்
5. புதுமை - சுரதா
6. இருபது கட்டளைகள் - வைரமுத்து
7. தம்பி, உனக்காக.....! - சிற்பி
8. வாழ்வு - மீரா
9. மரங்கள் - மு. மேத்தா
10. மனித தத்துவங்கள் தருக! - கண்ணதாசன்
11. அது ஏன்? - வாலி
12. ஊமை ராகங்கள் - மருத்துவர் மதியழகன்
13. முன்னேற்றம் வேண்டுமென்றால் - ஆலந்தூர் கோ. மோகனரங்கன்
14. பாரத புத்திரர்கள் - நந்தகுமார்
15. கைதிகள் - குமரி ஆதவன்
16. ஏரி - சல்மா
17. டவுண் பஸ் - சிவசோமன்
18. கவன ஈர்ப்பு தீர்மானம் - உமா ஹரிஹரன்
19. ஹைகூ கவிதைகள்
20. நாட்டார் பாடல்கள் - 1. தெய்வ கணங்கள், 2. பஞ்சமும் மழையும்

1. அன்னையை வேண்டுதல்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய் !

- - பாரதியார்

2. தொழிலாளர் விண்ணப்பம்

காடு களைந்தோம் - நல்ல
கழனி திருத்தியும் - உழவு புரிந்தும்
நாடுகள் செய்தோம் - அங்கு
நாற்றிசை வீதிகள் தோற்றவும் செய்தோம்
வீடுகள் கண்டோம் - அங்கு
வேண்டிய பண்டங்கள் ஈண்டிடச் செய்தோம்
பாடுகள் பட்டோம் - புவி
பதமுறவே நாங்கள் நிதமும் உழைத்தோம்

மலையைப் பிளந்தோம் - புவி
வாழ வென்றே கடல் ஆழமும் தூர்த்தோம்
அலை கடல் மீதில் - பல்
லாயிரங் கப்பல்கள் போய் வரச் செய்தோம்
பல தொல்லையுற்றோம் - யாம்
பாதாளம் சென்று பசும்பொன் எடுத்தோம்
உலையில் இரும்பை - யாம்
உருக்கிப்பல் யந்திரம் பெருக்கியுந் தந்தோம்

ஆடைகள் நெய்தோம் - பெரும்
ஆற்றை வளைத்து நெல் நாற்றுகள் நட்டோம்
கூடை கலங்கள் - முதல்
கோபுரம் நற்சுதை வேலைகள் செய்தோம்
கோடையைக் காக்க - யாம்
குடையளித்தோம் நல்ல நடையன்கள் செய்தோம்
தேடிய பண்டம் - இந்தச்
செகத்தில் நிறைந்திட முகத்தெதிர் வைத்தோம்

வாழ்வுக் கொவ்வாத - இந்த
வையத்தை இந்நிலை எய்தப்புரிந்தோம்
ஆழ்கடல் காடு - மலை
அத்தனையிற்பல சத்தை யெடுத்தோம்
ஈழை அசுத்தம் - குப்பை
இலை என்னவே எங்கள் தலையிற் சுமந்தோம்
சூழக்கிடந்தோம் - புவித்
தொழிலாளராம் எங்கள் நிலைமையைக் கேளீர்!

கந்தை யணிந்தோம் - இரு
கையை விரித்தெங்கள் மெய்யினைப் போர்த்தோம்

மொந்தையிற் கூழைப் - பலர்
மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்
சந்தையில் மாடாய் - யாம்
சந்ததம் தங்கிட வீடுமில்லாமல்
சிந்தை மெலிந்தோம் - எங்கள்
சேவைக் கெல்லாம் இது செய் நன்றி தானோ?

மதத்தின் தலைவீர்! இந்த
மண்ணை வளைத்துள்ள அண்ணாத்தை மாரே!
குதர்க்கம் விளைத்தே - பெருங்
கொள்ளையடித்திட்ட கோடீசுரர்காள்!
வதக்கிப் பிழிந்தே - சொத்தை
வடிகட்டி எம்மைத் துடிக்க விட்டீரே!
நிதியின் பெருக்கம் - விளை
நிலமுற்றும் உங்கள் வசம் பண்ணி விட்டீர்

செப்புதல் கேட்பீர்! இந்தச்
செகத் தொழிலாளர்கள் மிகப் பலர் ஆதலின்
கப்பல்களாக இனித்
தொழும்பர்களாக மதித்திட வேண்டாம் !
இப்பொழுதே நீர் - பொது
இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே - எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறு முன்பே
ஒப்படைப்பீரே !

- - பாரதிதாசன்

3. ஒற்றுமையே உயிர்நிலை

1. ஒற்றுமையாக உழைத்திடுவோம் - நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்
வெற்றுரை பேசித் திரிய வேண்டாம் - இன்னும்
வீணய்ப் புராணம் விரிக்க வேண்டாம்

2. கூடி விருந்துண்ண வேண்டவில்லை - பெண்ணைக்
கொண்டு கொடுக்கவும் வேண்டவில்லை
நாடி எவரொடும் நட்பினராய்த் - தேச
நன்மைக் குழைப்பதில் நஷ்டம் உண்டோ?

3. கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டு - சாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டு,
பாரதத் தாய் பெற்ற மக்கள் என்று - நிதம்
பல்லவி பாடிப் பயன் எதுவோ?

4. உச்சி மரத்திற் சுவைக்கனியும் - தூரில்
ஓடிப் பரந்தெழும் வேரதனில்
நச்சுக் கனியும் பழுத்த பலாமரம்
நானிலத் தெங்குமே கண்ட துண்டோ?

5. சாதி இரண்டல்லால் வேறுளதோ? ஔவைத்
தாயின் உரையும் மறந்தீரோ!
ஆதி இறைவன் வகுத்ததுவோ? - மக்கள்
ஆக்கிய கற்பனை தான் இதுவே?

6. வீட்டுக்குள் சண்டைகள் போடுவதேன்? - கூரை
வெந்து விழுவதும் கண்டிலிரோ?
நாட்டுக்கு நன்மையை நாடுபவர் - இந்த
நாடகம் ஆடுதல் நகைப்பலவோ?

7. மானமே வாழ்வின் உயிர் நிலையாம் - அதை
மாசுறச் செய்தல் கொடுங்கொலையாம்
ஈன சாதியெனும் பேச்சினைப் போல் - நெஞ்சை
ஈர்ந்திடும் வாளொன்றும் வேறுளதோ?

8. மன்னுயிர்க்காக முயல்பவரே - இந்த
மானிலத் தோங்கும் குலத்தினராம்
தன்னுயிர் போற்றித் திரிபவரே - என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோர். அம்மா!

- - கவிமணி

4. மாணவனுக்கு

கல்விபெறும் மாணவனாம் பருவம் கண்டீர்
கவலையற்ற களி சிறந்த காலமாகும்
தொல்லைமிக்க உலக நடைச் சூழலில் நேரும்
துன்பங்கள் துயரங்கள் தோன்றாக் காலம்
எல்லையற்ற ஆர்வமுள்ள இக்காலந்தான்
எக்கலையும் பயில்வதற்கு ஏற்றகாலம்
நல்வழியில் பயன்படுத்தும் மாணவர்க்கே
நாமகளின் திருவருளின் நலங்கள் கூடும்

ஆசானைத் தந்தையென வணங்க வேண்டும்
அவர் சொல்லும் அறிவுரைக்கும் இணங்க வேண்டும்
கூசாமல் தன் கருத்தைக் கூற வேண்டும்
குற்றமுண்டேல் ஒப்பி மனம் மாறவேண்டும்
மாசான வார்த்தையெதும் ஆசான்மாட்டு
மறந்தேனும் ஒருபோதும் பேசான் என்ற
ஆசாரம் உள்ளவனே நல்ல சீடன்
அறனறிந்த நல்வாழ்விற்கு அருகனாவான்

ஓதலினும் மிகச் சிறந்தது ஒழுக்கம் என்ற
உண்மைதனை மாணவர்கள் உணர வேண்டும்
மேதினியில் சிறப்படைந்த மேலோரெல்லாம்
மேன்மையுற்ற காரணம் நல்லொழுக்கமே தான்
வேதனைகள் வந்தாலும் விலகிப் போகும்
வெற்றிகளும் நல்லொழுக்கம் விரவினோர்க்கே
ஆதலினால் மாணவர் நல்லொழுக்கம் தன்னை
ஆருயிர் போல் கருதி அதைக் காக்க வேண்டும்.

பெற்றோர்கள் மிகப்பெரிதும் வறியரேனும்
பெற்றமகன் கல்வி கற்றால் போதும் என்ற
வற்றாத ஆசையினால் வாடித்தேடி
வயிறார உண்ணாதும் வருந்திச் சேர்த்துப்
பற்றோடும் அனுப்புகின்ற பணத்தையெல்லாம்
பட்டணத்துப் பகட்டுகளில் பாழாக்காமல்
சிற்றாசைகளிற் களித்துச் சீர்கெடாமல்
சிந்தைனையைக் கல்விக்கே செலுத்த வேண்டும்.

--

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

5. புதுமை

சரித்திரம் ஒவ்வோர் நாட்டின்
தழும்பாகும் நாட்டை வாட்டும்
தரித்திரம் பொருளாதாரத்
தடுமாற்றமாகும் கல்வி
விருத்தியே நெஞ்சிருட்டை
விரட்டிடும் விளக்காம் நூலில்
கருத்தினை அறியான், நூலின்
கனத்தையே அறிந்தோன் ஆவான்!

கற்பனை பெருக வேண்டின்
கல்வியைப் பெருக்க வேண்டும்
வெற்றியைப் பெருக்க வேண்டின்
மேன்மேலும் முயல வேண்டும்
அற்பமாய் முயன்றார் யாரும்
அறிவினாற் பழுத்தா ரில்லை
கற்பூரத் தீயினாலே
கற்சூளை வெந்தா போகும்?

புதுமையே அறிவின் ஆக்கம்
புதுமையே புகழுண்டாக்கும்
புதுமையே தலைமை தாங்கும்
புதுமையே நிலைத்து நிற்கும்
புதுமையே இன்றிப் பாடல்
புனைந்திடல் உயிரில்லாத
பதுமையின் மீது சுற்றும்
பட்டுடை போன்றதாகும்.

- - சுரதா

6. இருபது கட்டளைகள்

எங்கே ஊர்களில்
ஜாதி இல்லையோ
அங்கே கூவுக சேவல்களே.
எங்கே பூமியில்
போர்கள் இல்லையோ
அங்கே பாடுக பூங்குயிலே

எங்கே மனிதரில்
பேதம் இல்லையோ
அங்கே முழங்குக சங்கினமே
எங்கே மானுடம்
சிறகு தேடுமோ
அங்கே வழிவிடு வான் வெளியே

எங்கே குழந்தையின்
கைகள் நீளுமோ
அங்கே ஒளிருக வெண்ணிலவே
எங்கே உனக்கு முன்
மனிதர் விழிப்பரோ
அங்கே தோன்றுக கதிரவனே

எங்கே விதவையர்
கூந்தல் காயுமோ
அங்கே மலருக பூவினமே
எங்கே பூவினம்
தூங்கி விழிக்குமோ
அங்கே சுற்றுக வண்டினமே

எங்கே புன்னகை
போலியில்லையோ
அங்கே சிரித்திடு பொன்னிதழே
எங்கே தன்னலம்
அழிந்து போகுமோ
அங்கே நீர்பொழி என் விழியே

எங்கே வேர்வைகள்
தீர்ந்து போகுமோ
அங்கே மழைகொடு மாமுகிலே
எங்கே ஏழையர்
அடுப்பு தூங்குமோ
அங்கே பற்றுக தீச்சுடரே

எங்கே கன்றுகள்
மிச்சம் வைக்குமோ
அங்கே சிந்துக கறவைகளே
எங்கே மனிதர்கள்
சைவமாவரோ
அங்கே பாடுக பறவைகளே

எங்கே உழைப்பவர்
உயரம் உயருமோ
அங்கே சுழலுக ஆலைகளே
எங்கே விதைத்தவர்
வயிறு குளிருமோ
அங்கே விளைந்திடு நெல் மணியே
எங்கே கண்களில்
கள்ளமில்லையோ
அங்கே தோன்றுக கனவுகளே
எங்கே உறவுகள்
ஒழுக்கமாகுமோ
அங்கே வில்லெடு மன்மதனே

எங்கே பயணம்
மீளக்கூடுமோ
அங்கே நீளுக சாலைகளே
எங்கே மண்குடம்
காத்திருக்குமோ
அங்கே பரவுக ஆறுகளே

- - வைரமுத்து

7. தம்பி, உனக்காக .....!

இளைஞனே!
பருவ நெருப்பில்

காய்ச்சிய வாளே!
நாளை என்பது
உன் திரு நாளே!
நினைவிருக்கட்டும்
உன்
புருவ நெரிப்பில்
பூகம்பங்கள்
இமையைத் திறந்தால்
சூர்யோதயங்கள்.

நீ
கொட்டி முழக்கினால்
உலகமே செவிடு
எட்டி உதைத்தால்
திசைகளும் தவிடு.
இது உன் பலம்
அசுர பலம்
உனது
பலவீனங்கள்
எனது
விழி ஈரங்கள்

நீ
தலை நிமிர்ந்து நடந்தால்
நீல வானம் குடை பிடிக்கும்
தாழ்ந்து இழிந்து குனிந்தால்
கைக்குட்டையும் எட்டாத
வானமாகும்...
கொஞ்ச காலமாய்
பேதைப் பருவத்தில்
போதைக்குள்
சரண் புகுந்து விட்டாயாமே!

மழலை வயதில்
தாய் முகத்திலே போதை
மற்றும் ஒரு வயதில்
பொம்மைகளிலே போதை
ஆடும் பம்பரங்கள்
அவற்றின் மேல் கடும் போதை
இன்னொரு வயதில்
தேடும் விழியிரண்டில்
தேக்கி வைத்த பெரும் போதை
இவை இயற்கை.

ஆனால், நீ
மாயப் பொடிகளிலே
மனம் சொக்கி விட்டாயாம்
ஊசி முனைகளால்
உடல் காயப்பட்டாயாம்
நரகத்தில் கால் வைத்தால்
உருக்குலைந்து பாழாவாய்
உடனே தடம்மாறு.

வா!
நீ வெல்ல
விண்வெளி காத்திருக்கிறது.
நீ பந்தாட
கிரகங்கள் காத்திருக்கின்றன.

நீ
மனிதனின்
மகத்துவம்
புழுதிகளையும்
பிரளயமாக்கு
விழி திற!
வெற்றி உனக்கு முன்
கொடியெடுத்துப் போகிறது
வருக இளைஞனே ! வருக!

-- கவிஞர் சிற்பி

8. வாழ்வு

விண்ணுக்கு மனிதன் விரையட்டும் - அதற்குமுன்
கண்ணுக் கெதிரில் காணும் கயமையை
விரட்டி அடித்து வீழ்த்த வரட்டும்
செயற்கை மழை பெயச் செய்யட்டும் - அதற்கு முன்
மனிதனை மனிதனாய் மாற்ற வரட்டும்
வாழ்வை வசந்தமாய் ஆக்க வரட்டும்
எண்ணம் சரியா? இல்லையா? நண்பரீர் !
உங்களைக் கேட்கிறேன் ! உங்களைக் கேட்கிறேன்
என்றைக்கு,
ஏழ்மை, வறுமை இடுகாடு ஏகுமோ
சத்தியம் பூக்குமோ சமத்துவம் சிரிக்குமோ
இலட்சிய வெறிகொண் டிளைஞர் பட்டாளம்
புதிய உலகுக்குப் பூசை போடுமோ
பழைய பொய்ம்மைகள் பயந்தோடிடுமோ
தன்னலம் மறந்து தாயகம் காத்த
மறவர் படைக்கு மரியாதை கிடைக்குமோ
தியாக உணர்வுத் தீக்குளித் திட்ட
வீரருக் கெங்கும் விழாக்கள் நடக்குமோ
அன்றே
மனிதன் பிறக்கும் நாள் ! மனிதன் வாழும் நாள் !
அன்றே
மனிதனைப் பாடுவேன் மனிதனைப் பாடுவேன்
மனிதனைப் பாடுவேன் மனமகிழ்வோடே !

-- மீரா

9. மரங்கள்

மானுட ஆண்மைக்கு
மண் கொடுத்த சீதனங்கள்
மரங்கள் !

நாங்கள் -
சிறகுத் துடுப்புகள்

செலுத்திச் செல்கிற
படகுப் பறவைகளின்
பயணியர் விடுதிகள்.

எந்தப் பறவைக்கும்
இருக்க இடம் கொடுக்கும்
பொதுவுடமை வீடுகள் !
அதனால் தான் ...
தராதர மறியாத
தான் தோன்றிப் பறவைகள்
எங்கள் தலை மீதே
எச்சமிட்டுச் செல்கின்றன.

நாங்கள் -
சூடு படுகின்ற
சொந்தக் காரர்களுக்காக
விரித்தே வைத்திருக்கும்
வெண் கொற்றக் குடைகள் !

மழைக்கு ஒதுங்கும்
மர நிலையங்கள்
சரியாகப் போடாத
சல்லடைப் பந்தல்கள்
பாத சாரிகளின்
பணிமனைக் கூடங்கள் !

மனிதர்கள்
வாங்கி வைக்காத
மண்ணின் கைதிகள்...

அதனால் தான்
ஊருக்கு வெளியே
உட்கார்ந்திருந்தாலும்
எங்கள்
மார்பிலும் தோளிலும்
எண்களை எழுதி
மாட்டி வைக்கிறார்கள் !

நாங்கள்
காற்று மன்னவன்
கால்நடை யாத்திரையைக்
கண்டு முரசறையும்
கட்டியங் காரர்கள் !

தரையில் நடக்கப்
பிரியப்படாத போது
காற்று எங்கள்
தலைகளின் மீதே
நடந்து செல்கிறது ...

இரவுக் காற்றின்
ஈர உதடுகளோடு
உறவு கொள்கிறோம்
உலராத எச்சிலைப்
பனித்துளி யாக்கிப்

பரிசளிக்கிறோம்.

தென்றலின் பார்வையில்
செல்லப் பிள்ளைகள்
நாங்கள்
புயலின் கண்களில்
புரட்சிக் காரர்கள் !

சட்டையை மாற்றும்
சாரைப் பாம்புகளுடன்
சண்டையிட்டுக் கொண்டோம்
ஆதலால்
காலந்தோறும்
ஒரே உடையை
உடுத்தியிருக்கிறோம்
காலத்துக்குக் காலம்
எங்கள் உடை
கனமாகி வருகிறது.

எங்கள் உடுக்கையை
யாரேனும்
கழற்றவோ மாற்றவோ
வந்தால்
தடுக்க முடியாமல்
கண்ணீர் வடிக்கிறோம் !

வெட்டியெடுத்தால்
விறகாவோம் - வெய்யிலிலே
சுட்டு எடுத்தாலும்
சுறுசுறுப்பாய் அடுப்பெரிப்போம்
நாங்கள் - - -

கல்லில் எறிந்தாலும்
கம்பில் அடித்தாலும்
பரிசு கொடுக்கின்ற
பண்பின் வார்ப்புகள் !

வானத்தில் நடக்கும்
நட்சத்திர இரவு
விளையாட்டு மேடையில்
தவறி விழுவதைத்
தாங்கிப்
பிடிப்பதற்காக
மண்ணில் கட்டிய
வலை விரிப்புகள் !

மனிதர்கள்
தூங்கிய பிறகும்
வானத்தில் விளக்கெரிவது
மரங்களுக்காகவே!

--- மு. மேத்தா

10. மனித தத்துவங்கள் தருக!

விலைவாசி ஏறாத நடொன்று கூறுவாய்
விரைவில் நான் செல்ல வேண்டும்
வீராப்புப் பேசாத அரசியலைக் காட்டுவாய்
வேதமாய் ஆக்கல் வேண்டும்

கொலை களவு இல்லாத ஊரொன்று சொல்லுவாய்
குடியேறிப் பார்க்க வேண்டும்
குடியைக் கெடுக்காத அரசொன்று கூறினால்
கோஷத்தில் வாழ்த்த வேண்டும்

சிலைவைக்க இந்நாட்டில் இடமொன்று காட்டினால்
சேவைக்கு வைக்க வேண்டும்
சிரித்துக் கெடுக்காத நபரொன்று தோன்றினால்
தினமும் வணங்க வேண்டும்
மலையோடு நதிகளும் வாழ்கின்ற நாட்டினில்
மனித தத்துவங்க ளிலையே
மாபெரிய மதுரை நகர் ஆள்கின்ற தேவியே
மங்கை மீனாட்சி யுமையே.

- - - கவிஞர் கண்ணதாசன்

11. அது ஏன்?

மரங்கள்
தமக்குள்
முனகிக் கொண்டன
இந்த மனிதர்கள் -
நம்மைக் கொண்டு
பல
சிலுவைகளைச்
செய்து விடுகிறார்கள்
ஆனால் -
தம்மைக் கொண்டு
அவர்களால்
இன்னமும்
ஓர் ஏசுவைத்
தயாரிக்க
இயலவில்லையே
அது ஏன்?

--- வாலி

12. ஊமை ராகங்கள்

நாங்கள்
கால்நடைகள்
இயற்கையின்
இலவசப் பிரதிகள்

உளுத்துப்போன சொற்களை
உதிர்க்கத் தெரியாத
ஊமை ராகங்கள்

தாய் இருந்தும்

தாய்ப்பால் இல்லையெனில்
தன்பால் கொடுப்பதோ
கால்நடைதான்.

உழவனின்
தத்துவப் பிள்ளைகள்
செல்வம் அற்றோரின்
சேமிப்பு வங்கிகள்

உங்களை விட
ஒரு வழியில்
உயர்ந்தவர்கள் - நாங்கள்
யாருக்கும் பொய்சாட்சி சொல்ல
ஆஜரானது கிடையாது
தீண்டாமை என்ற சொல்
எங்கள் அகராதியில் கூட கிடையாது.

நந்தனார் முதல்
அந்தணர் வரையில்
அனைவரும் வணங்கும்
அன்பு தெய்வங்கள்

காரியென்றும்
வெள்ளையென்றும்
நிறங்கள் உண்டு - ஆனால்
நிறவெறி இல்லை

சிந்தியென்றும்
ஜோ்சி என்றும்
சாதிகள் உண்டு - ஆனால்
சண்டைகள் இல்லை

ஏ! மனிதர்களே
கால்நடைகள் என்றால்
கேவலமாக நினைக்கிறீர்களே!

நாங்கள்
உலகக் குழந்தைகளுக்கு
உறவில் மாற்றாந்தாய்

உங்கள் தமிழ்த்தாய்
அம்மா என்ற சொல்லை
எங்களிடமிருந்துதான்
கடன் வாங்கினாள்

- டாக்.
மதியழகன் - கால்நடை மருத்துவர்

13. முன்னேற்றம் வேண்டுமென்றால்

வாளெடுத்தோர் வையத்து மாந்தர் நெஞ்சில்
வாழ்ந்திருக்க முடியவில்லை உலகை ஆளச்
சூளெடுத்தோர் சுடப்பட்ட சாம்பல் ஆனார்

சொல்வதற்கும் ஆளின்றி மறைந்தார் வெற்றித்
தாளெடுத்து வரலாற்றைப் படைத்தார் கூடச்
சமுதாய மாறுதலால் மங்கிவிட்டார்
நாளெடுத்து வருகின்ற காலம் எந்த
நாளிலுமே வள்ளுவனைப் போற்றும் போற்றும்!

திறப்ப தென்றால் மனக்கதவைத் திறக்க வேண்டும்
தேய்ப்பதென்றால் கொடுமைகளைத் தேய்க்க வேண்டும்
துறப்பதென்றால் தீமைகளைத் துறக்க வேண்டும்
தொலைப்பதென்றால் பீடைகளைத் தொலைக்க வேண்டும்
மறப்பதென்றால் சூழ்ச்சி செய்ய மறக்க வேண்டும்
மடிவதென்றால் சோம்பல் தான் மடிய வேண்டும்
பறப்பதென்றால் அறியாமை பறக்க வேண்டும்
படிப்பதென்றால் வள்ளுவனப் படிக்க வேண்டும்

இமயமலை இருப்பது போல் இருக்கும் நூல் தான்
இவ்வுலகில் திருக்குறளாம் பொருள்கள் சேர்க்கச்
சமயம் போல் நடக்கின்ற தந்தி ரங்கள்
தழுவாத தனிநூலே குறள்நூல் மண்ணில்
தமிழருக்கு வாய்த்திட்ட இந்நூல் போலத்
தரணியிலே பிறருக்கு வாய்த்தி ருந்தால்
இமைகளுக்குள் இருக்கின்ற கண்ணைப் போல
எப்போதும் வைத்திருப்பார் ஒளியைக் காண்பார்!

-- ஆலந்தூர் கோ. மோகன ரங்கன்

14. பாரத புத்திரர்கள்

இதோ
புது பாரத புத்திரர்கள்
அரசியல் மேடைதான்
இவர்களுக்குக் கோயில்

அரசியல் மேடையில்
ஆதாயம் தேடும் இவர்கள்
பாரதத் தாயை உயர்த்துகிறார்களோ
இல்லையோ
உயர்வது என்னவோ
இவர்கள் வாழ்க்கை மேடை தான் !

அரசியல் என்றால்
ராஜ தந்திரம் இருக்கும்
ராஜ தந்திரரிகளான இவர்கள்
கட்சிகளை மட்டுமல்ல
பாரதத் தாயையும்
பள்ளத்தில் கவிழ்த்து விடுகிறார்கள்

பாரதத்தாய்
இவர்களால் அடிபட்டு அடிபட்டே
நோய்வாய்ப்பட்டுப் போகிறாள்
அவளுக்கு
மருத்துவம் செய்வதாகக் கூறி
இவர்கள் மருத்துவம்

செய்து கொள்கிறார்கள்

பாரதத்தாயின் மருத்துவச் செலவுக்கு
மக்கள் தரும் வரிப்பணம்
இவர்களின்
வைட்டமின் மாத்திரைகளுக்கே
சரியாகி விடுகிறது.

இந்தியாவின் இருட்டை
சூர்ய வெளிச்சத்தைத்
தவிர்த்து
மின்னல் வெளிச்சத்தால்
சரி செய்வதாய்
சபதம் செய்கிறார்கள்

முனிவர்கள்
தவமிருந்து
வரம்பெற்று
இறைவன் தலையில்
கை வைத்தது புராணக்கதை

தேர்தலில்
மக்களின்
வாக்கு வரங்களுக்காக
தவமிருக்கும் இவர்கள்
ஜெயித்த பின்
அவர்கள் தலையில்
கை வைப்பது புதிய கதை.

- - நந்த குமார்

15. கைதிகள்

சிறை சென்றவனை
கைதி யென்கிறீர்கள் ...
நீயும் நானும் கூட கைதி தானே!
துணையின் இதயச் சிறைக்குள்
வீழ்ந்து கிடக்கும் நீ யார்?

எத்தனை அன்புள்ளங்களில்
பிணைக் கைதியாய்
மாட்டிக் கிடக்கிறாய்?

விரும்பும் ஒன்றைச் செய்ய முடியாமல்
தவிக்கிறாயே - - -
உனக்குள்ளே நீ
கைதியாய் இருப்பது தெரியவில்லையா?

நேசிக்கும் ஒன்றைப்
பிரிய முடியாது நிற்கிறாயே!
நிலை கொள்கிறாய் என்றாலே
பிணைக்கப்பட்டிருக்கிறாய்
என்பது தானே பொருள் - - -

நிலை பெற்ற தண்ணீர்
குளத்தின் கைதி இல்லையா?
அடைபட்ட பறவை
கூட்டின் கைதி தானே!

இன்னொருவனால் வளர்க்கப்படுபவை
வளர்ப்பவன் வைத்திருக்கும்
கைதிகளல்லவா?

சிலர் கைதிகளாய் அகப்படுகிறார்கள்
சிலர் அகப்படுத்தப்படுகிறார்கள் - - -

உன் உடைமைகள்
உன்னுடனே இருக்க விரும்புகிறாய் - -
இவை நீ வைத்திருக்கும்
கைதிகள் தானே!

உனக்குள் ஓராயிரம் சிறை அறைகள்
அதற்குள் பல ஆயிரம் கைதிகள் ---
வலையைப் பின்னி விட்டு
நடுவில் இருக்கும்
வலையான் பூச்சியாய் நீயும்!

கல்லெறிவதற்குத் தகுதியுள்ளவன்
எவன் இருக்கிறான்?
தவறு செய்து பிடிபட்டவன்
மத்தியச் சிறையில் - - -
மற்றவன்
மன சாட்சியின் சிறையில் - - -

-- குமரி ஆதவன்

16. ஏரி

ஏங்கிக் கருமையுற்ற முகத்தோடு
ஏரி சலனமற்றிருக்கிறது

சில நாட்களுக்கு முன்
தயக்கமின்றி உன்னிடமிருந்து
காலியான மதுக்கோப்பைகளை
விட்டெறிந்திருந்தாய் அதை
மறுக்காமல் பெற்றுக் கொண்டது
ஏரி

பிறகொரு நாள்
நீ புகைத்த சாம்பல் கிண்ணத்தைக்
கழுவிச் சாம்பலையும் கரைத்தாய்

நேற்று கூடக்
கசந்து போன நம் உறவினை
.இகழ்ந்து எச்சில் துப்பினாய்
தண்ணீரில்

எந்தக் காலமென்றில்லாமல்
எல்லாக் காலங்களிலும்

உன் கழிவுகளைக் கொட்டி
உன்னைச் சுத்தப்படுத்தியிருக்கிறாய்

இன்று இதில் எதையும்
நினைவுறுத்தாது
உன் தாகம் தணிக்கத் தயாராகிறாய்

உன் அசுத்தங்களை
அடித்துக் கொண்டு போக
இது நதியில்லை
ஏரி

சலனமற்றுத் தேங்கிய நீர்
பத்திரமாய்ப் பாதுகாக்கும்
ஏதொன்றும் தொலைந்து போகாமல்

--- சல்மா

17. டவுண் பஸ்

சக்கரக் கால்கள்
நான்கு
வளைந்துச் செல்ல
ஒரு வட்டு

பிறப்பு முதல் இறப்பு வரை
இரவு பகல் பாராது
இடைவிடாது உழைக்கும்
இரக்கத்திற்குரிய உழைப்பாளிகள்
நாங்கள்

சில்லறை தேன் துளிகளை
பறந்து பறந்து சேகரிக்கும்
இரும்புத் தேனீக்கள்

ஆண்டுக்கு ஒரு முறை
ஆயுத பூஜைக்கான
அவசரக் குளியல்

இடையில் எப்போதாவது
வருண பகவான்
இரங்கினால் தான் உண்டு

சந்தன தீட்டலும்
சவ்வாது மேக்கப்பும்
அன்றைய தினம் மட்டும் தான்

ஆடி ஆவணி பார்க்காது
எப்போதும்
வயிற்றைத் தள்ளிக் கொண்டு
அலையும்
நித்தியக் கல்யாணிகள்

தள்ளாத வயதில் கூட
சிங்கிள் விசிலடித்து

கொத்து கொத்தாய்
சினையாக்கி விடுகிறார்கள்
பொல்லாத
விசில் மருத்துவர்கள்

பல நேரம்
சந்துகளிலும்
சில நேரம் சாலைகளிலும்
சகட்டு மேனிக்கு திரிவதால்
பிள்ளைகள் அனைத்தும்
சுகப் பிரசவம்.

நாளுக்கொரு நிறம் மாறுவோம்
அரசியல் வாதியைப் போல
நீங்கள் ஏறினால்
சில பல மணித்துளிகளில்
மதுரையோ சென்னையோ
நாங்கள் ஏறினால்
நொடிப் பொழுதில் எமலோகம்

ஊருக்கு உழைத்திடல்
யோகம் தான்
இருந்தாலும்
எங்கள் உயிருக்கு
உத்தரவாத மில்லை

சாதி சமயக் கலவரமோ
நீதிமன்ற தீர்ப்போ
கண்ணில் பட்டு தொலைப்பது
நாங்கள் தாம்

சின்ன வீட்டுச் சண்டையிலும்
சில்லறை புத்திரக்காரர்கள் என்மீது
தீக்குச்சியை வீசி விடுகிறார்கள்

கர்ப்பிணி என்றும் பாராமல்
எம்மை
கலவரக் கழுதைகள்
கொழுத்தி ரசிக்கின்றனர்
கற்பூரமாய்

மொத்தத்தில் எம்பொழைப்பு
நாய் பொழைப்பு மட்டுமல்ல
நாறாப் பொழைப்புங் கூட.

---சிவ. சோமன்.

18. கவன ஈர்ப்பு தீர்மானம் !

கதர்ச்சட்டையும் வேஷ்டியும்
கசங்காமல் உடுத்துவதில்
கவனம் அதிகம் அப்பாவுக்கு!

கல்விக்கேற்ற வேலை தேடுவதில்
கவனம் அதிகம் சகோதரனுக்கு!

கலர் கலராய் கோலம் போடுவதில்
கவனம் அதிகம் அம்மாவுக்கு!

கலர் கலராய் பூ வைத்துக் கொள்வதில்
கவனம் அதிகம் இளைய சகோதரிக்கு!

கால்கள் ஓயாமல் நான் தைப்பதிலேயே
காலம் கழியுது எங்கள் குடும்பத்துக்கு!

வீட்டுத் தீர்வை கட்டவும்
விளக்குக்கு எண்ணெய் வாங்கவும்
என்னைக் கேட்பார்கள்!

என்றைக்கு யார் வந்து
என்னைப் பெண் கேட்பார்கள்!

---உமா ஹரிஹரன்

19. ஹைகூ கவிதைகள்

1. இணையே இல்லை
ஈரம் பட்ட கன்னங்கள்
மழலை எச்சில் --- செந்தமிழினியன்

2. குழந்தை பிறந்ததும்
சோகத்தில் யாரும்
சிரிக்கவிலலை
பெண்குழந்தை --- சுடர்

3. அலையில் கூடவா பூ மலரும்?
அருமை அருமை அருமை
கூந்தல் அலையில் மலர் --- அமுதபாரதி

4. ரேசன் கடைக்காரருக்கு
குழந்தை பிறந்தது
எடை குறைவாய் --- ந.முத்து

5. சேலை வேட்டி செருப்பு
இலவசம்
மானமுள்ள தமிழன் --- இ. பரிமளம்

6. கரும்புள்ளி ஏந்தினோம் விரலில்
வெறும் புள்ளிகள் பெரும் புள்ளிகள்
தேர்தல் ---

குடந்தை சண்முகம்

7. எண்ணெய் தேய்த்துக் குளிக்கின்றன
தென்னை மரங்கள்
இன்று பௌர்ணமி --- கழினியூரன்

8. கம்பு ஊன்றியேனும்
நிமிர்ந்து நிற்கும்
குலை தள்ளிய வாழை --- முருகேஷ்

9. இருட்டுக்குப் பிரசவவலி
கிழக்கு வாசலில்

சிவப்புக் குழந்தை --- பல்லவன்

10. மரம் மன்னிக்குமா!
பூக்கள் இருந்த இடத்தில்
கட்சிக் கொடிகள் --- ராஜ முருகு பாண்டியன்

20. நாட்டார் பாடல்கள்

1. தெய்வ கணங்கள்

கிராம மக்கள் நூற்றுக்கணக்கான தெய்வங்களை பெயர் கொடுத்து அழைக்கிறார்கள். ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒரு குறிப்பிட்ட சக்தி உண்டென்று நம்புகிறார்கள். கோவில்பட்டி அருகிலுள்ள சிற்றூர்களில் மக்களால் வணங்கப்படும் தேவதைகளின் பெயர்களை இப்பாட்டில் நாம் காண்கிறோம். முனியசாமி, ஐயனார், கண்ணாத்தா, பாப்பாத்தி, உலகம்மன், பெத்தனாட்சி ஆகிய பெயர்களை இப்பாட்டிலிருந்து நாம் அறிகிறோம்.

கிராம மக்கள், மேலே குறிப்பிட்ட தேவதைகளை மட்டுமின்றி முஸ்லீம் தர்க்காக்களுக்கும் நேர்ந்து கொள்வதுமுண்டு. விசேஷக் காலங்களில் முஸ்லிம்களது யாத்திரை ஸ்தலங்களுக்கும் போவதுண்டு.

முத்து முனிய சாமி
மூர்க்கமுள்ள தேவதையே
சத்தத்தை நீ கொடய்யா
சரளி விட்டு நான் பாட
ஊருக்கு நேர் கிழக்கே
உறுதியுள்ள ஐயனாரே
சத்தத்தை நீ கொடய்யா!
சரளி விட்டு நான் படிக்க.

நாட்டரசன் கோட்டையிலே
நல்ல தொரு பாப்பாத்தி
வயித்தவலி தீர்த்தாயானால்
வந்திருவேன் சன்னதிக்கு
ஒட்டப் பிடாரத்திலே
உலகம்மன் கோயிலிலே
பூக்கட்டிப் பார்த்தேன்
பொருந்தலையே என் மனசு
கண்ணுலே அடிச்சுத்தாரேன்
கண்ட சத்தியம் பண்ணித் தாரேன்.

சிக்கந்தர் மலைக்கு வாங்க
சேலை போட்டுத் தாண்டித் தாரேன்
பூப்பூக்கும் புளியமரம்
பொன்னிலங்கும் ஐயனாரு
நாட்டி லங்கும் பெத்தனாச்சி
நல்லவரம் தருவா.
ஏழுமலை கடந்து
எடுத்து வந்தேன் சண்பகப்பூ
வாடாமல் சாத்தி வாரும்
வட மதுரைக் கந்தனுக்கு.

வட்டார வழக்கு - பாப்பாத்தி பிரம்ம ராக்கி சக்தி, ஐயனாரு - சாஸ்தா.
சேகரித்தவர் - எஸ்.எஸ். போத்தையா
இடம் - விளாத்திக்குளம், திருநெல்வேலி

2. பஞ்சமும் மழையும்

பஞ்சத்தில் ஆடு, மாடு, நகை, நட்டு எல்லாம் விற்றாகி விட்டது. காடு தேடிப் போய் கிடைக்கிற இலை தழைகளை அவித்துத் தின்னும் நிலைமை வந்து விட்டது. கம்பு விதைத்து மண்ணோடு மண்ணாகிக் கிடக்கிறது. மழையின் ரேகை சிறிதும் காணோம். மக்கள் உள்ளம் வெதும்பி வருணதேவனிடம் முறையிட்டுக் கொள்கிறார்கள்.

வருண தேவன் கருணையால், மழை பொழியத் தொடங்குகிறது. மின்னல் மின்ன இடி இடித்து மழை பெய்யும் போது பூமி குளிர்கிறது. மழையில் நனைந்து கொண்டே உழவர்கள் மழையை வரவேற்கிறார்கள்.

ஆடு வித்து, மாடு வித்து
ஐயோ வருண தேவா!
அத்தனையும் கூட வித்து
ஐயோ வருண தேவா!
காது கடுக்குவித்து
ஐயோ வருண தேவா!
கை வளையல் கூட வித்து
ஐயோ வருண தேவா!
இச் சிக்காய் தின்ன பஞ்சம்
ஐயோ வருண தேவா!
இன்னும் தெளியலையே
ஐயோ வருண தேவா!
காரைக்காய்த் தின்ன மக்கள்
ஐயோ வருண தேவா!
காதடைச்சு செத்த மக்கள்
ஐயோ வருண தேவா!
மக்க வெதச்ச கம்பு
மச்சு வந்து சேரணுமே !
ஓடி வெதச்ச கம்பு
ஊடுவந்து சேரணுமே!
கலப்பை பிடிக்குந் தம்பி
கை சோந்து நிக்கிறாங்க!
அதுக்கே மனமிரங்கு
ஐயோ வருண தேவா!
ஏர் பிடிக்குந் தம்பி யெல்லாம்
எண்ணப்பட்டு நிக்கிறாங்க
அதுக்கே இறங்க வேணும்
ஐயோ வருண தேவா!
பேயுதையா பேயுது
பேய் மழையும் பேயுது
ஊசி போல காலிறங்கி
உலகமெங்கும் பேயுது
உலக மெங்கும் பேஞ்ச மழை
ஊரிலெங்கும் பேயலே
பாசி போல காலிறங்கி
பட்டணமே பேயுது
பட்டணமே பேஞ்ச மழை
பட்டியிலே பேயிலே
துட்டு போல மின்னி
சீமையெங்கும் பேயுது

சீமை யெங்கும் பேஞ்ச மழை
செல்ல மழை பேயுது.

வட்டார வழக்கு - வித்து - விற்று, கடுக்கு - கடுக்கன், ஊடு - வீடு
உதவியர் - பாவாயி
சேகரித்தவர் - கு. சின்னப்ப பாரதி
இடம் - செருக்கலைப்பாளையம், புதுப்பாளையம்

முதற்பருவம்
இலக்கணப்பகுதி

1. எழுத்துப் பற்றிய விளக்கம்
2. முதலெழுத்து, சார்பெழுத்துக்கள்
3. சுட்டெழுத்துக்கள், வினாவெழுத்துக்கள்
4. மொழி முதல் எழுத்துகள், மொழி இறுதி எழுத்துக்கள் (தற்கால மொழி நிலையை ஒப்பிடுக).
5. கிரந்த எழுத்துகள்
6. வல்லினம் மிகும், மிகா இடங்கள்

II. ஒலிப்பு மாறுபாடுகளும், பொருள் வேறுபாடுகளும்

1. ண, ன வேறுபாடுகள்
2. ர, ற வேறுபாடுகள்
3. ல, ள, ழ வேறுபாடுகள்

கருத்துப் பரிமாற்றத்திற்குத் துணை செய்யக்கூடியது மொழி. அது மக்களின் அன்றாட வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது. மாறி வரும் காலச் சூழ்நிலையில் மொழிகளில் காணப்படும் ஒலி மாறுபாடு பொருள் வேறுபாட்டினைத் தோற்றுவிக்கின்றது என்பதை உணராமலே வாழ்கின்ற நிலை காணப்படுகின்றது. தமிழ் மொழியில் ஒலி மாறுபாடு அறிந்து சரியான பொருளை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது.

அ, ணகர, னகர வேறுபாடுகள்

நுனிநா மேல் அண்ணத்தைப் பொருந்த 'ணகரம்' பிறக்கும். நுனி நா மேல்வாய்ப் பற்களில் பொருந்த 'னகரம்' பிறக்கும்.

1.	அரன்	-	சிவபெருமான்
	அரண்	-	மதில்
2	அன்னம்	-	சோறு, ஒரு வகைப் பறவை
	அண்ணம்	-	மேல்வாய்
3.	ஆனை	-	யானை
	ஆணை	-	கட்டளை
4.	உன்னுதல்	-	நினைத்தல்
	உண்ணுதல்	-	சாப்பிடுதல்
5.	ஊன்	-	இறைச்சி
	ஊண்	-	உணவு
6.	கன்னன்	-	கர்ணன்
	கண்ணன்	-	கிருட்டினன்
7.	கனம்	-	பளு

	கணம்	-	கூட்டம்
8.	கனி	-	பழம்
	கணி	-	சோதிடர்
9.	பானம்	-	பருகும் பொருள்
	பாணம்	-	அம்பு
10.	புனை	-	அலங்காரம்
	புணை	-	தெப்பம்
11.	மன்	-	அரசன்
	மண்	-	நிலம்
12.	மனம்	-	உள்ளம்
	மணம்	-	வாசனை
13.	மான்	-	விலங்கினம்
	மாண்	-	மாட்சிமை
14.	வன்மை	-	வலிமை
	வண்மை	-	கொடை
15.	தினை	-	தானிய வகை
	திணை	-	ஒழுக்கம் (அகத்திணை, புறத்திணை)
16.	தனி	-	துணையின்மை
	தணி	-	அமைதி கொள்

ஆ, ரகர, றகர வேறுபாடுகள்

நா நுனியானது மேல் அண்ணத்தை வருடும் போது ‘ரகரம்’ பிறக்கும். நா நுனியானது மேல்வாயை நன்றாகப் பொருத்தி லேசாக அதிரும் போது ‘றகரம்’ பிறக்கும்.

1.	அரம்	-	வாள்
	அறம்	-	தருமம்
2.	அரி	-	வெட்டு
	அறி	-	உணர்தல்
3.	அருகு	-	பக்கம்
	அறுகு	-	அறுகம்புல்
4.	அரை	-	பாதி
	அறை	-	வாழுமிடம்
5.	இரத்தல்	-	பிறரிடம் கையேந்துதல்
	இறத்தல்	-	மரணமடைதல்
6.	இரை	-	உணவு
	இறை	-	கடவுள்
7.	உரவு	-	வலிமை
	உறவு	-	சொந்தம்
8.	உரு	-	தோற்றம் (வடிவம்)
	உறு	-	மிகுதி
9.	எரி	-	தணல் (நெருப்பு)

	எறி	-	எறிதல் (வீசுதல்)
10.	ஏரி	-	நீர்நிலை
	ஏறி	-	ஏறுதல்
11.	ஒருத்தல்	-	களிறு (யானை)
	ஒறுத்தல்	-	தண்டித்தல்
12.	கரி	-	யானை
	கறி	-	உணவுப் பொருள் (காய்கறி)
13.	கரை	-	ஆற்றங்கரை
	கறை	-	குற்றம்
14.	கீரி	-	கீரிப்பிள்ளை (பிராணி)
	கீறி	-	பிளவுபடுதல்
15.	குரங்கு	-	வானரம்
	குறங்கு	-	தொடை
16.	குரை	-	குரைத்தல் (ஒலி)
	குறை	-	குறைபாடு (ஊனம்)
17.	சீரிய	-	பெருமை பெற்ற
	சீறிய	-	கோபம் கொண்ட
18.	செரு	-	போர்
	செறு	-	வயல்
19.	துரவு	-	கிணறு
	துறவு	-	சந்தியாசம்
20.	பொருப்பு	-	மலை
	பொறுப்பு	-	கடமை
21.	விரகு	-	தந்திரம்
	விறகு	-	மரக்கட்டை
22.	மாரி	-	மழை
	மாறி	-	மாறி வருதல்
23.	நரை	-	வெண்மலர்
	நறை	-	தேன்
24.	நெரி	-	நெருக்கு
	நெறி	-	பாதை
25.	மரை	-	மான், தாமரை
	மறை	-	வேதம்

இ, லகர, ளகர வேறுபாடுகள்

மேல் வாய்ப்பல்லின் அடியை நுனி நாவின் ஓரமானது தடித்து மென்மையாகப் பொருந்தும் போது ‘லகரம்’ பிறக்கும்.

நா நுனியானது மேல் நோக்கி வளைந்து உள்நாவின் அருகில் வாயை வருடும்போது ‘ழகரம்’ பிறக்கும்.

நா நுனியானது சற்று மேல்நோக்கி வளைந்து மேல்வாயின் நடுப்பகுதியைத் தடவும் போது ‘ளகரம்’ பிறக்கும்.

1.	அலகு	-	பறவைகளின் மூக்கு
	அளகு	-	பெண் மயில்
	அழகு	-	எழில்
2.	அலம்	-	கலப்பை
	அளம்	-	உப்பளம்
3.	அலி	-	ஆணும், பெண்ணும் அற்றது
	அளி	-	கொடு
	அழி	-	இல்லாமல் செய்தல்
4.	அலை	-	கடல் அலை
	அளை	-	புற்று
5.	ஆல்	-	ஆலமரம்
	ஆள்	-	ஆட்சி செய்தல்
6.	ஆலி	-	மழைத்துளி
	ஆளி	-	ஒரு விலங்கு
	ஆழி	-	கடல்
7.	உளி	-	கரவி
	உழி	-	இடம்
8.	உலை	-	உலைக்களம்
	உளை	-	படரிமயிர்
	உழை	-	மான்
9.	உல்கு	-	சுங்கம்
	உள்கு	-	நினை
10.	எல்	-	பொழுது (பகல்
	எள்	-	தானியம்
11.	ஒலி	-	சப்தம்
	ஒளி	-	வெளிச்சம்
	ஒழி	-	அறவே நீக்குதல்
12.	கலி	-	ஓசை
	களி	-	மகிழ்ச்சி
	கழி	-	உப்பங்கழி
13.	கலை	-	ஆண் மான்
	களை	-	களைதல்
	கழை	-	மூங்கில்
14.	கிளவி	-	சொல்
	கிழவி	-	வயதான பெண்
15.	கூலி	-	சம்பளம்
	கூளி	-	பேய்
16.	சூல்	-	கருப்பம்

	சூள்	-	சபதம்
	சூழ்	-	சுற்று
17.	தலை	-	உடலின் ஓர் உறுப்பு
	தளை	-	செய்யுள் உறுப்புகளுள் ஒன்று
	தழை	-	இலை
18.	தால்	-	நாக்கு
	தாள்	-	முயற்சி
	தாழ்	-	பணிவு, தாழ்ப்பாள்
19.	நல்லார்	-	நண்பர்
	நள்ளார்	-	பகைவர்
20.	பல்லி	-	ஓர் உயிரினம்
	பள்ளி	-	பள்ளிக்கூடம்
21.	பசலை	-	பெண்ணிடம் தோன்றும் நிற வேறுபாடு
	பசளை	-	ஒரு வகைக் கொடி
22.	தோல்	-	சருமம்
	தோள்	-	புயம்
23.	துலை	-	தராசு, தூரம்
	துளை	-	துவாரம், மூங்கில்

ஒலி மாறுபாட்டால் பொருள் வேறுபடும் சொற்களை இனம் காண பயிற்சி அளித்திடல் வேண்டும்.

இலக்கிய வரலாறு

1. புதுக்கவிதை
2. சிறுகதை
3. நாவல்
4. நாடகம்

} தோற்றமும் வளர்ச்சியும்

5. நாட்டார் பாடல்கள்
6. தகவல் தொடர்பு சாதனங்களும் தமிழ் வளர்ச்சியும், தோற்றமும் வளர்ச்சியும்

இரண்டாம் பருவம்

சமய நீதி இலக்கியங்கள்

பக்தி மொழி தமிழ் எனத் தனிநாயகம் அடிகள் குறிப்பிட்டுள்ளார். அவர் கூற்றுக்கொப்ப தெய்வீகப் பாடல்கள் சமயச் சிறப்பினை எடுத்துரைத்துள்ளன. சமயமும் நீதியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போலப் பின்னிப் பிணைந்துள்ளன. யாதொரு உயிர்க்கும் தீங்கு இழைக்காத நெறி நீதி நெறியாகும். உலகில் உள்ள அனைத்து மொழிகளுள்ளும் நீதிநெறி, அறிவுரை, தத்துவங்கள் நிரம்பப் பெற்றுள்ள நூல்கள் நம்

தாய்மொழியாம் தமிழில் உள்ளன. உயர்ந்த பண்பாடு வாழ்க்கையினை உணர்த்தும் பெட்டகங்கள், சமய, நீதி இலக்கியங்கள் ஆகும்.

மக்களைப் பக்குவப்படுத்துவது சமயம். சமயச் சான்றோர்கள் மானுட வேறுபாட்டை மையமாகக் கொண்டே கவிதைகள் இயற்றினர். அவர்கள் மண்ணுலகில் விண்ணுலகு காண விழைந்தனர். அக இருள் அகற்றி மானுடம் பேண சமயம் மற்றும் நீதி இலக்கியங்கள் துணை புரிகின்றன.

தற்காலத்தில் மனிதர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள், போட்டி, பொறாமை, பூசல்கள் மிகுந்து காணப்படுகின்றன. அதனால் மனித நேயம் சிதைந்து விடுகின்றது. மனித நேயம் பேண, மானுடம் போற்ற வேண்டி உள்ளது. எனவே இறை அச்சத்தையும், இறை உணர்வையும், நீதிநெறியினையும் ஊட்ட இவ்விலக்கியங்களை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. நீதி இலக்கியங்கள் மனக் கோணலை நீக்கும். சமய இலக்கியங்கள் இறைவனைப் புரியவும், அறியவும் உதவும். சமுதாய ஒருமைப்பாட்டிற்கு வழி வகுக்கும் வகையில் மனித நேயம் போற்றப்படும் கலங்கரை விளக்காய் ஒளி வீசும் நோக்கில் இப்பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் பருவம் – செய்யுள் பாடப்பகுதிகள்

சமய நீதி இலக்கியங்கள்

சமய இலக்கியங்கள்

சைவம் - தேவாரம்
திருவாசகம்
திருமந்திரம்
திருவருட்பா
தாயுமானவர் திருப்பாடல்கள்

வைணவம் - பெருமாள் திருமொழி
பெரியாழ்வார் திருமொழி
பெரிய திருமொழி
திருப்பாவை

சமணம் - சூளாமணி

பௌத்தம் - குண்டலகேசி

கிறிஸ்துவம் - கிறிஸ்து மொழிக்குறள்

இசுலாமியம் - இறைஞ்சல் இயல்பு

நீதி இலக்கியங்கள் - திருக்குறள்
நாலடியார்
இன்னா நாற்பது

இனியவை நாற்பது

திரிகடுகம்

பழமொழி நானூறு

முதுமொழிக் காஞ்சி

உலக நீதி

தேவாரம் - திருஞான சம்மந்தர்

1. தோடுடைய செவி யன்விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுட லைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள் செய்த
பீடுடைய பிர மாபுரமேவிய பெம்மானி வனன்றே.

2. நீர் பரந்த நிமிர் புன்சடை மேலோர் நிலாவெண் மதிசூடி
ஏர்பரந்த வின வெள்வளை சோரவென் னுள்ளங் கவர் கள்வன்
ஊர்பரந்த வுல கின் முதலாகிய வோரூரிது வென்னப்
பேர்பரந்த பிர மாபுரமேவிய பெம்மானி வனன்றே.

3. ஒருமை பெண்மையுடை யன்சடையன் விடை யூரு மிவ னென்ன
அருமையாகவுரை செய்யமர்ந் தென துள்ளங் கவர் கள்வன்
கருமை பெற்ற கடல் கொள்ள மிகுந்ததோர் காலம்மிதுவென்னப்
பெருமை பெற்ற பிர மாபுரமேவிய பெம்மானி வனன்றே

4. சடைமுயங்குபுன லன் அனலன்எரி வீசிச் சதிர் வெய்த
உடைமுயங்கு மர வோடுழி தந்தென துள்ளங்கவர் கள்வன்
கடன் முயங்கு கழி சூழ் குளிர் கானலம் பொன்னஞ் சிறகன்னம்
பெடை முயங்குபிர மாபுரமேவிய பெம்மானி வனன்றே

திருநாவுக்கரசர்

1. சொல்லானைப் பொருளானைச் சுருதி யானைச்
சுடராழி நெடுமாலுக் கருள் செய் தானை
அல்லானைப் பகலானை அரியான் தன்னை
அடியார் கட் கெளியானை அரண் மூன் றெய்த
வில்லானைச் சரம் விசயற் கருள் செய் தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பி யேத்தும்
நல்லானைத் தீயாடு நம்பன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே.

2. பஞ்சுண்ட மெல்லடியாள் பங்கன் தன்னைப்
பாரொடு நீர் சுடர்படர் காற்றாயிளானை
மஞ்சுண்ட வானாகி வானந் தன்னில்
மதியாகி மதிசடைமேல் வைத்தான் தன்னை
நெஞ்சுண்டென் நினைவாகி நின்றான் தன்னை
நெடுங்கடலைக் கடைந்தவர் போய் நீங்க வோங்கும்
நஞ்சுண்டு தேவர்களுக் கமுதீந் தானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே.

3. புரையுடைய கரியுரிவைப் போர்வை யானைப்
புரிசடைமேற் புனலடைத்த புனிதன் தன்னை
விரையுடைய வெள்ளெருக்கங் கண்ணியானை

வெண்ணீறு செம்மேனி விரவினானை
வரையுடைய மகள் தவஞ்செய் மணாளன் தன்னை
வருபிணிநோய் பிரிவிக்கும் மருந்து தன்னை
நரைவிடைநற் கொடியுடைய நாதன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே.

சுந்தரர்

1. அன்றில் முட்டாது அடையும் சோலை
ஆரூர் அகத்தீரே
கன்று முட்டி உண்ணச் சுரந்த
காலி யவை போல
என்றும் முட்டாப் பாடும் அடியார்
தங்கண் காணாது
குன்றில் முட்டிக் குழியில் விழுந்தால்
வாழ்ந்து போதீரே

2. தினைத்தாள் அன்ன செங்கால் நாரை
சேருந் திருவாரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன் போல் மாலைப்
புரி புன் சடையீரே!
தனத்தா லின்றித் தாந்தாம் மெலிந்து
தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியார் இருந்தால்
வாழ்ந்து போதீரே

3. ஆயம் பேடை அடையும் சோலை
ஆரூர் அகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே ஆமாறு
உமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி
மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால்
வாழ்ந்து போதீரே

திருவாசகம்

1. நாடகத்தால் உன்னடியார்
போல் நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப் பெரிதும் விரைகின்றேன்
ஆடகச் சீர் மணிக்குன்றே
இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத்
தந்தருள் எம் உடையானே

2. யானேதும் பிறப்பஞ்சேன்
இறப்பதனுக்கு என் கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன்
மண்ணாள் வான் மதித்து மிரேன்
தேனேயும் மலர்க்கொன்றை
சிவனே எம்பெருமான் எம்மானே
உன் அருள் பெறும் நாள்
என்றென்றே வருந்துவேனே

3. வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி
உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென்று
அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை
என் சொல்லி வாழ்த்துவனே

--- மாணிக்க வாசகர்

திருமந்திரம்

1. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே,

2. கண்காணி யில்லென்று கள்ளம் பல செய்வார்
கண்காணி யில்லா விடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே.

3. இன்பத்து ளேபிறந் தின்பத்து ளே வளர்ந்
தின்பத்து ளேநினைக் கின்ற திதுமறந் (து)
துன்பத்து ளேசிலர் சோறொடு கூறையென் (று)
துன்பத்து ளேநின்று தூங்குகின் றார்களே.

4. பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே.

--- திருமூலர்

திருவருட்பா

1. அருள் விளக்கே அருட்சுடரே அருட்சோதிச் சிவமே
அருள் அமுதே அருள் நிறைவே அருள்வடிவப் பொருளே
இருள் கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே
என் அறிவே என் உயிரே எனக்கினிய உறவே
மருள் கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
தெருள் அளித்த திருவாளா ஞானஉரு வாளா
தெய்வநடத் தரசேநான் செய்மொழிஏற் றருளே

2. உண்ண உண்ணத் தெவிட்டாதே தித்தித்தென் உடம்போ
டுயிர் உணர்வும் கலந்து கலந் துள்ளகத்தும் புறத்தும்
தண்ணியவண் ணம்பரவப் பொங்கிநிறைந் தாங்கே
ததும்பி என்றன் மயம் எல்லாம் தன்மயமே ஆக்கி
எண்ணிய என் எண்ணம் எலாம் எய்தஒளி வழங்கி
இலங்குகின்ற பேர் அருளாம் இன்னமுதத் திரளே

புண்ணியமே என் பெரிய பொருளே என் அரசே
புன்மொழி என் றிகழாதே புனைந்து மகிழந் தருளே.

3. தனித்தனிமுக் கனி பிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்த நறுந் தேன் பெய்து பசும்பாலும் தேங்கின்
தனிப்பாலுங் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்அளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்த சுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள் ளமுதே
அணித்தமறத் திருப்பொதுவில் விளங்கு நடத் தரசே
அடிமலர்க் கென் சொல்லணியாம் அலங்கல் அணிந்தருளே

--- வள்ளலார்

தாயுமானவர் திருப்பாடல்கள்

பைங்கிளிக் கண்ணி

அகமேவும் அண்ணனுக்கென் அல்லலெல்லாஞ் சொல்லிச்
சுகமான நீபோய்ச் சுகங்கொடு வா பைங்கிளியே

ஆவிக்குள் ஆவியெனும் அற்புதனார் சிற்சுகந்தான்
பாவிக்குங் கிட்டுமோ சொல்லாய் நீ பைங்கிளியே

ஆருமறி யாமல் எனை அந்தரங்க மாக வந்து
சேரும்படி இறைக்குச் செப்பிவா பைங்கிளியே,

ஆறான கண்ணீர்க்கென் அங்கபங்க மானதையுங்
கூறாத தென்னோ குதலைமொழிப் பைங்கிளியே

ஊருமிலார் பேருமிலார் உற்றார்பெற் றாருடனே
யாருமிலார் என்னை அறிவாரோ பைங்கிளியே.

கண்ணுள்மணி போல் இன்பங் காட்டி எனைப் பிரிந்த
திண்ணியரும் இன்னம் வந்து சேர்வாரோ பைங்கிளியே

சிந்தை மருவித் தெளிவித் தெனையாள
வந்தகுரு நாதன் அருள் வாய்க்குமோ பைங்கிளியே

தொல்லைக் கவலை தொலைத்துத் தொலையாத
எல்லை இலா இன்பமயம் எய்துவனோ பைங்கிளியே

பெருமாள் திருமொழி

1. ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார்பூஞ் சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே.

2. வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவர்தம்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்
தேனார்பூஞ் சோலைத் திருவேங்கட மலைமேல்
கானாறாய்ப் பாயும் கருத்துடையேன் ஆவேனே.

3. செடியாய வல்லினைகள் தீர்க்கும் திருமாலே

நெடியானே வேங்கடவா நின்கோயி லின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய்க் காண்பேனே

--- குலசேகராழ்வார்

பெரியாழ்வார் திருமொழி

(அம்புலிப் பருவம் - சந்திரனை அழைத்தல்)

1. தன்முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்துபோய்
பொன்முகக் கிண்கிணி யார்ப்பப் புழுதி யளைகின்றான்
என்மகன் கோவிந்தன் கூத்தினை யிளமாமதீ!
நின்முகம் கண்ணுளவாகில் நீ இங்கே நோக்கிப்போ

2. என் சிறுக்குட்ட னெனக்கோ ரின்னமு தெம்பிரான்
தன்சிறுக் கைகளால் காட்டிக் காட்டி யழைக்கின்றன்
அஞ்சன வண்ணனோ டாடலாட வுறுதியேல்
மஞ்சில் மறையாதே மாமதீ! மகிழ்ந்தோடிவா.

3. தாழியில் வெண்ணெய் தடங்கை யார விழுங்கிய
பேழை வயிற்றெம் பிரான் கண்டாயுன்னைக் கூவுகின்றான்
ஆழிக் கொண்டுன்னை யெறியும் ஐயுறவில்லை காண்
வாழ வுறுதியேல் மாமதி! மகிழந்தோடிவா.

-- பெரியாழ்வார்

பெரிய திருமொழி

1. இலங்கைப் பதிக்கு அன்று இறையாய அரக்கர்
குலம் கெட்டு அவர்மாளக் கொடிப்புள் திரித்தாய்
விலங்கல் குடுமித் திருவேங்கடம் மேல்
அலங்கல் துளப முடியாய்! அருளாயே.

2. நீரார் கடலும் நிலனும் முழுவதுண்டு
ஏரால மிளந்தளிர் மேல்துயில் எந்தாய்
சீரார் திருவேங்கட மாமலை மேய
ஆராவமுதே ! அடியேற்கு அருளாயே

3. உண்டாய் உறிமேல் நறுநெய் அமுதாக
கொண்டாய் குறளாய் நிலம் ஈரடியாலே
விண்தோய் சிகரத் திருவேங்கடம் மேய
அண்டா! அடியேனுக்கு அருள்புரியாயே.

--- திருமங்கையாழ்வார்

திருப்பாவை

1. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்

ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாரா யணமே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்

2. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீ ரவளை எழுப்பீரோ உம் மகள் தான்
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்.

--- ஆண்டாள்

சமணம்

மெய்யறிவு

நூற்பொருள் கேட்டு நுனித்தோ ருணர்வது
மாற்படை கூட்டு மயங்கிருள் தீர்ப்பது
மேற்படை மெய்மை விளக்கும் விளக்கது
நாற்படை யோய் நல்ல ஞான நிகழ்வே

தியானம்

சென்று பெருகுந் தியான நிகழ்ச்சியும்
ஒன்ற வுரைப்பி னொரு நால் வகைப்படும்
நன்றியின் மாற்றினை நல்குமிரண் டல்லன
வென்றி விசும்பொடு வீடுந் தருமே

தோலாமொழித்தேவர் - (சூளாமணி)

பௌத்தம்

அழுகும் பொருள் மீது ஆசை ஏன்?

1. உறுப்புகள் தாம் உடன் கூடி
ஒன்றாய் இருந்த பெரும்பை
மறைப்பில் விழைவிற்குச் சார்வாய்
மயக்குவதால் இவ்வுறுப்புள்
குறைத்தன போல அழுகிக்
குறைந்து குறைந்து சொரிய
வெறுப்பிற் கிடந்த பொழுதின்
வேண்டப்படுவதும் உண்டோ?

2. ஆகுவது ஆகும்; அழிவது அழியும்

மறிப மறியும் ; மலிர்ப மலிரும் ;
பெறுப பெறும்; பெற்று இழப்ப இழக்கும்;
அறிவது அறிவார்; அழுங்கார்; உவவார்
உறுவது உறும் என்று உரைப்பது நன்று

நாதகுத்தனார் (குண்டலகேசி)

கிறிஸ்துவம்

கிறிஸ்து மொழிக்குறள்

1. கடவுள் அறிவு கருதித் தொழுக
இடமில் ஒரு பொருள் என்று.

2. கடவுள் அரசுலகம் கால் கொண்டிருக்கும்
இடம் உமதுள்ளம் இனிது.

3. உலகிலோர் அப்பன் உமக்கில்லை இல்லை
அலகில் வான் அப்பனே அப்பன்.

4. அப்பாற்போ சாத்தானே! அப்பன் ஒருவனையே
தப்பாமற் போற்றுமுன் சாற்று.

5. ஆக்கையைக் கொல்வோருக் கஞ்சற்க - ஆன்மாவைப்
போக்க அவர்க்குண்டோ புலம்.

6. உங்கள் தலைமயிர் ஒவ்வொன்றும் எண்ணிக்கை
தங்கி யுளது தக.

7. பற்பல குருவியினும் பன்மடங்கு மேற்பட்டீர்
எற்றுக்கோ அஞ்சுகின்றீர் ஈண்டு.

8. மக்களால் ஆகாத மாண்பெல்லாம் அப்பனால்
சிக்கின்றி ஆகும் சிறந்து.

9. மன்ன னுடையதை மன்னற்கும் மற்றப்பன்
தன்னதை அன்னவற்கும் தா.

10. உன்னுடைமை எல்லாம் ஒருவனே என்னுடைமை
என்னுடைமை உன்னுடைமை ஆம்.

--- திரு.வி.க.

இசுலாமியம்

இறைஞ்சல் இயல்பு

1. வல்லான் தண்டனை தாக்காமல்
வாய்ப்பாய் மீட்சி பெறுதற்காய்
அல்லாஹ் ஒருவனை நினைப்பது தான்
அமையும் வழியெனல் நபிமொழியாம்

2. இறைஞ்சலின்றி வேறெதுவும்
இறைவன் விதியை ஒழிக்காது
நிலையும் தன்மை பொழிந்து வந்து
நினைவில் நிற்கும் நபி மொழியாம்

3. எதையும் துலக்கப் பொருளுண்டாம்
இறையின் நினைவோ மனத்துவக்கும்
சிதையும் மனத்தைச் சீவிக்கும்
சீமான் முகம்மது நபிமொழியாம்

4. மடியும் மன்னுயிர் பிரியுங்கால்
மெய்யில் தோன்றும் இழுப்புவரை
அடியார் பாவ மன்னிப்பை
அருள்வான் இறைவன் நபிமொழியாம்

5. ஆளும் இறைவன் மன்னிப்பை
அன்பாய்க் கேட்டு மீண்டிடுவீர்
நாளொன் றுக்கு நூறுமுறை
நானே கேட்பேன் நபிமொழியாம்

---அப்துல் கபூர்

நீதி இலக்கியங்கள்

திருக்குறள்

பண்புடைமை

1. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு

2. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு

3. உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு

4. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு

5. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

6. பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மாண்புக்கு மாய்வது மன்

7. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.

8. நண்புஆற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்புஆற்றா ராதல் கடை

9. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்

10. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று

--- திருவள்ளுவர்

நாலடியார்

ஈகை

1. இல்லா விடத்தும் இயைந்த அளவினால்
உள்ள விடம் போல் பெரிதுவந்து - மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்கு
அடையாவாம் ஆண்டைக் கதவு.

2. இம்மி யரிசித் துணையானும் வைகலும்
தும்மில் இயைவ கொடுத்துண்மின் - உம்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்(து)
அடாஅ அடுப்பி னவர்.

3. மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவற்கு
உறுமா றியைவ கொடுத்தல் - வறுமையால்

ஈதல் இசையா தெனினும் இரவாமை
ஈதல் இரட்டி யுறும்.

4. பெயற்பால் மழைபெய்யாக் கண்ணும் உலகம்
செயற்பால செய்யாவிடினும் - கயற்புலால்
புன்னை கடியும் பொருகடல் தண்சேர்ப்ப!
என்னை உலகுய்யு மாறு.

-- சமணத் துறவிகள்

இன்னா நாற்பது

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா
கடுமொழியாளர் தொடர்பின்னா இன்னா
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு

உடம்பா டில்லாத மனைவிதோள் இன்னா
இடனில் சிறியரோடு யாத்தநண்பு இன்னா
இடங்கழி யாளர் தொடர்பின்னா இன்னா
கடனுடையார் காணப் புகல்.

-- கபிலர்

இனியவை நாற்பது

கடமுண்டு வாழாமை காண்டல் இனிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்கல் இனிதே
மனமாண்பி லாதவரை யஞ்சி அகறல்
எனைமாண்புத் தான்இனிது நன்கு

அதர்சென்று வாழாமை ஆற்ற இனிதே
குதர்சென்று கொள்ளாத கூர்மை இனிதே
உயிர்சென்று தான்படினும் உண்ணார்கைத் துண்ணாப்
பெருமைபோல் பீடுடையது இல்.

-- பூதஞ்சேந்தனார்

திரிகடுகம்

1. தானங் கொடுக்குந் தகைமையு மானத்தார்
குற்றங் கடிந்த வொழுக்கமுந் - தெற்றெனப்
பல்பொரு ணீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு.

2. வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கும் நோன்பியும்
இல்லது காமுற் றிருப்பானுங் கல்விச்
செவிக்குற்றம் பார்த்திருப் பானும்இம் மூவர்
உமிக்குத்திக் கைவருத்து வார்.

-- நல்லாதனார்

பழமொழி நானூறு

1. கன்றி முதிர்ந்த கழியப்பன் னாள் செயினும்

ஒன்றும் சிறியார்கண் என்றானும் - தோன்றாதாம்
ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு

2. தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்
எந்தீமை யென்றே உணர்ப தாம் - அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப!
ஒருவர் பொறையிருவர் நட்பு.

3. வெள்ளம் வருங்காலை ஈரம்பட் ட.ஃதே போல்
கள்ள முடையாரைக் கண்டே அறியலாம்
ஒள்ளமர் கண்ணாய் ! ஒளிப்பினும் உள்ளம்
படர்ந்ததே கூறும் முகம்.

4. எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குந் துணையாவார்த் தாந்தெரிதல் வேண்டா
பிறர்க்குப் பிறர் செய்வ துண்டோமற் றில்லை
தமக்கு மருத்துவர் தாம்.

--- முன்றுறை அரையனார்

முதுமொழிக் காஞ்சி

சிறந்த பத்து

ஆர்கலி யுலகத்து மக்கட்கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை
காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப்படுதல்
மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை
வண்மையிற் சிறந்தன்று வாய்மையுடைமை
இளமையிற் சிறந்தன்று மெய்பிணியின்மை
நலனுடைமையின் நாணுச் சிறந்தன்று
குலன் உடைமையிற் கற்புச் சிறந்தன்று
கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று
செற்றாரைச் செறுத்தலின் தற்செய்கை சிறந்தன்று
முற்பெருகலிற் பின் சிறுகாமை சிறந்தன்று

---மதுரைக் கூடலூர்க் கிழார்

உலகநீதி

1. குற்றம் ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்
கற்றவரை ஒரு நாளும் பழிக்க வேண்டாம்
கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்
கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்
மற்று நிகர் இல்லாத வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

2. வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரிய வேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்
முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்

வாத்தியார் கூலியைவைத் திருக்க வேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோடு இணங்க வேண்டாம்
சேர்த்த புக ழாளனொரு வள்ளி பங்கன்
திருக்கைவே லாயுதனைச் செப்பாய் நெஞ்சே!

3. கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கழிவை ஒரு நாளும் பேச வேண்டாம்
பொருவார் தம் போர்க்களத்தில் போக வேண்டாம்
பொது நிலத்தில் ஒரு நாளும் இருக்க வேண்டாம்
இருதாரம் ஒரு நாளும் தேட வேண்டாம்
எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்
குருகாரும் புனம் காக்கும் ஏழை பங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய் நெஞ்சே!

-- உலக நாதர்

இண்டாம் பருவம் - இலக்கணப் பகுதி

அ.

1. சொல்லின் பொது இலக்கணம்
2. பெயர்ச்சொல் - அறுவகைப் பெயர்கள் - ஆகுபெயர்
3. வினைச் சொல் - ஏவல், வியங்கோள், செய்வினை, செயப்பாட்டுவினை, தன்வினை, பிறவினை.
4. இடைச்சொல் - ஏ, ஓ, உம் இடைச்சொற்கள்
5. உரிச்சொல்

ஆ.

1. வழுஉச்சொற்களும், திருந்திய சொற்களும்
2. கடிதங்கள் - முறையீட்டுக்கடிதம், வேண்டுகைக் கடிதம் விண்ணப்பம்.
3. பத்திரிக்கையில் செய்திகள் வெளியிடுவதற்குப் பயிற்சி அளித்தல்
4. விளம்பரங்களைப் பத்திரிக்கையில் வெளியிடும் விதத்தை எடுத்துரைத்தல்

வழுஉச் சொற்களும் திருந்திய சொற்களும்

எழுத்து, பொருள் தரும் நிலையில் சொல்லாகும் தகுதியினைப் பெறுகின்றது. மொழியில் சொற்களைப் பயன்படுத்தும் போது சொற் குற்றம் ஏற்படுதல் கூடாது. வழக்கில் காணப்படும் வழுஉச் சொற்களைக் கண்டறிந்து அதற்கு இணையான திருந்திய சொற்களை அறிந்து கொள்ளுதல் என்பது தற்காலத்தில் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகின்றது. சொற்களில் காணப்படும் வழுஉச் சொற்களும், திருந்திய சொற்களும் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

வ.எண்	வழுஉச் சொற்கள்	திருந்திய சொற்கள்
1.	அஞ்சு	ஐந்து
2.	அடமானம்	அடைமானம்

3.	அடமழை	அடைமழை
4.	அருகாமையில்	அருகில்
5.	அவைகள்	அவை, அவற்றை
6.	அதுகள்	அவை
7.	ஆம்படையாள்	அகமுடையாள்
8.	அண்ணாக்கயிறு	அரைஞாண்கயிறு
9.	அது அல்ல	அது, அன்று
10.	அவன் அல்ல	அவன் அல்லன்
11.	இடது பக்கம்	இடப்பக்கம்
12.	உசிர், உசிரு	உயிர்
13.	உடமை	உடைமை
14.	உடம்படிக்கை	உடன்படிக்கை
15.	உத்திரவு	உத்தரவு
16.	ஊரணி	ஊருணி
17.	எலிமிச்சை	எலுமிச்சை
18.	எல்லோரும்	எல்லாரும்
19.	எளக்காரம்	இளக்காரம்
20.	என்னமோ	என்னவோ
21.	ஏற்கனவே	ஏற்கெனவே
22.	ஏமாந்து	ஏமாறி
23.	ஐநூறு	ஐந்நூறு
24.	ஒண்டியாய்	ஒன்றியாய்
25.	கடப்பாறை	கடப்பாரை
26.	கட்டிடம்	கட்டடம்
27.	கத்திரிக்காய்	கத்திரிக்காய்
28.	கத்திரிக்கோல்	கத்தரிக்கோல்
29.	கம்பிளி	கம்பளி
30.	கயறு	கயிறு
31.	கருவப்பிலை	கறிவேப்பிலை
32.	கருப்பட்டி	கருப்புக்கட்டி

33.	காக்கை	காக்கா
34.	கிடா	கடா (ஆட்டுக்கடா)
35.	கீத்து	கீற்று
36.	குண்டுமணி	குன்றிமணி
37.	குதவளை	குரல்வளை
38.	கூறைவீடு	கூரை வீடு
39.	கைமாறு	கைம்மாறு
40.	கொழம்பு	குழம்பு
41.	கோர்வை	கோவை
42.	சமயல்	சமையல்
43.	சவதி	சகதி
44.	சாயங்காலம்	சாயுங்காலம்
45.	சித்திரிப்பு	சித்தரிப்பு
46.	சிலது	சில
47.	சீயக்காய்	சீகைக்காய்
48.	சுடு தண்ணீர்	வெந்நீர்
49.	சுவற்றில்	சுவரில்
50.	செரங்கு	சிரங்கு
51.	சேதி	செய்தி
52.	சோம்பேரி	சோம்பேறி
53.	தங்கச்சி	தங்கை
54.	தமயன்	தமையன்
55.	தலகாணி	தலையணை
56.	தாவாரம்	தாழ்வாரம்
57.	துகையல்	துவையல்
58.	துடப்பம்	துடைப்பம்
59.	துடை	தொடை
60.	துறவுகோல்	திறவுகோல்
61.	துளிர்	தளிர்
62.	தேனீர்	தேநீர்

63.	தொந்திரவு	தொந்தரவு
64.	தொளாயிரம்	தொள்ளாயிரம்
65.	நஞ்சை	நன்செய்
66.	நல்லெண்ணை	நல்லெண்ணெய்
67.	நாகரீகம்	நாகரிகம்
68.	நாநூறு	நானூறு
69.	நேத்திக்கடன்	நேர்த்திக்கடன்
70.	நொங்கு	நுங்கு
71.	நோம்பு	நோன்பு
72.	பசும்பால்	பசுப்பால்
73.	பயிறு	பயறு
74.	பன்னிரெண்டு	பன்னிரண்டு
75.	புடவை	புடைவை
76.	புட்டு	பிட்டு
77.	புண்ணாக்கு	பிண்ணாக்கு
78.	புழக்கடை	புறக்கடை
79.	பூளை	பீளை
80.	பூசனிக்காய்	பூசுணைக்காய்
81.	பொண்டாட்டி	பெண்டாட்டி
82.	பொம்பிளை	பெண்பிள்ளை
83.	மறுவீடு	மரு வீடு
84.	மாதா மாதம்	மாதந்தோறும்
85.	மானாமாரி	வானாவாரி
86.	மிரட்டினார்	மருட்டினார்
87.	மிரண்டு	மருண்டு
88.	முகர்தல்	மோத்தல்
89.	முயற்சித்தார்	முயன்றார்
90.	முழுங்கு	விழுங்கு
91.	முனி	நுனி
92.	முன்னூறு	முந்நூறு

93.	மென்மேலும்	மேன்மேலும்
94.	வத்தல்	வற்றல்
95.	வயறு	வயிறு
96.	வலது கை	வலக்கை
97.	விரால் மீன்	வரால் மீன்
98.	வெள்ளாமை	வேளாண்மை
99.	வேக்குரு	வேர்க்குரு
100.	2006-ம் ஆண்டு	2006-ஆம் ஆண்டு
101.	5-ம், 6-வது ஆம், 6-ஆவது	ஐந்தாம், ஆறாவது - 5

இலக்கிய வரலாறு

நீதி நூல்களும், பக்தி இலக்கியங்களும்

1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்
2. பன்னிரு திருமுறைகள்
3. நாலாயிர திவ்ய பிரபந்தம்
4. சமணம், பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாமியம் தமிழுக்குச் செய்த தொண்டு.

PART I
MALAYALAM
(CBCS)

To be uploaded in the website in due course

PART I HINDI
(CBCS)

Syllabus for Part-I Language (National)-Hindi (CBCS)-2012 onwards
Common for B.A/B.Sc/B.B.A/B.Com/B.Sc–ComputerScience/Electronics
B.A-Corporate Secretaryship

Scheme of Examination

Semester	Title of the Paper	Teaching Hours/ week	Exam hrs	External marks	Internal Marks	Max. Marks	Passing Minimum
I Semester	Prose, Short stories, Grammar, Journalism and Comprehension	6	3	75	25	100	40
II Semester	Drama,Novel, SpokenHindi, Grammar, Letter writing and Precis writing	6	3	75	25	100	40
III Semester	AncientPoetry, Short-epic, History of HindiLiterature (AncientPeriod), Principles of Translation	6	3	75	25	100	40
IV Semester	Modern Poetry, History of Hindi Literature(Modern Period),Prosody & Poetics, General Essay, Administrative Hindi	6	3	75	25	100	40

<u>Eligibility Norms:</u> For Admission in the course students must have passed the Higher secondary course studied Hindi as Part –I Language or Passed Higher secondary course and Rashtra Bhasha Examination Conducted byDakshinBharath Hindi Prachar Sabha ,Chennai.

Components	I Semester Hours	Credits
Unit-I- Prose, Short stories	2	1
Unit -II- Grammar and Comprehension	2	1
Unit-III- Journalism	2	1
Components	II Semester Hours	Credits

Unit-I- Drama and Novel Unit -II- SpokenHindi and Grammar Unit-III- Letter writing and Precis writing	2 2 2	1 1 1
Components	IIISemester Hours	Credits
Unit-I- Ancient Poetry and Short epic Unit -II- History of Hindi Literature (Ancient Period) Unit-III- Principles of Translation	2 2 2	1 1 1
Components	IV Semester Hours	Credits
Unit-I- Modern Poetry Unit -II- History of Hindi Literature (Modern Period),Prosody and Poetics Unit-III- General Essay, Administrative Hindi	2 2 2	1 1 1

Semester –I
Paper I
Prose, Short stories,Grammar,Journalism and Comprehension
Unit –I
Prose- Text :Gadya Prakash by Sri.LakshmiKanth Varma
Publisher: Lokbharathi,15-A,Mahatma Gandhi Marg, Allahabad-3
Lessons to be taught :
1.Mere Swapnon ka Bharath
2.Bisati
3.TajMahal ki Atmakahani
4.Premchand
5.Bholaram ka Jeev
Short stories-Text: Hindi Ki Pratinidhi Kahaniyan by Virat
Publisher: Jawahar Pustakalaya,Sadar Bazar, Mathura,U.P, Pin code:281001
Lessons to be taught:
1.Sadgati
2.Dilli mein ek Mouth
3.Malbe ka Malik
4.Pahad
5.Swimming Pool

Unit –II

Grammar and Comprehension Text-Vyakaran Pradeep: By Ramdev
Publisher:Hindi Bhavan,Allahabad-2

Topics to be Covered: Noun,Gender,Number and Case ending, Pronoun,Adjectives

Unit –III

Journalism -Text: Adhunik Pathrakarita by Arjun Tiwari
Publisher:Viswavidyalaya Prakashan,Varanasi

Topics to be Covered: Origin of News paper- Collection of News-Various Sources-Feature writing-Editorial writing-Radio and Television News.

PART I
FRENCH
(CBCS)

The existing syllabus will be followed for this Academic year 2012-2013 also

Part – I Sanskrit (CBCS)

Part – I Sanskrit
(Syllabus for B.A./B.Sc./B.Mus)
First Semester

PAPER – I, TITLE: FUNDAMENTAL GRAMMAR , HISTORY OF SANSKRIT LITERATURE & TRANSLATION

UNIT I Fundamentals, Sentence Formation and Declension of Nouns ending in a, i (Masculine) , aa, ii (Feminine), a (Neuter).

UNIT II Simple Sandhis (Dirgha, Guna, Vrddhi), Conjugation – Present, Past, Future Tenses & Imperative mood of 10 verb roots viz., path, likh, dhav, nam, gam, khad, pib, sthaa, bhu and gaay.

UNIT III i. Translation into English or Tamil from Sanskrit. (Muurkha and Vidvat Paddhati of Nitisatakam of Bhartruhari).

ii. Translation into Sanskrit from English. (Sistaachaara and Paricaya chapters of Vyavahaarasaahasri).

UNIT IV Vedas & Vedangas – Pages 1to 25. (A short History of Sanskrit Literature)

UNIT V Epics and Puranas – Pages 26 to 57. (A short History of Sanskrit Literature)

Books Prescribed and Recommended :

1. Sabda Manjari published by R.S. Vadhyar & Sons, Palakkad.
2. Sandhi published by Samskrta Bharati.
3. Nitisatakam of Bhartruhari published by Sri Aurabindo Society, Pondicherry.
4. Vyavahaarasaahasri published by Samskrta Bharati.
5. A short History of Sanskrit Literature published by R.S. Vadhyar & Sons, Palakkad.

MANONMANIAM SUNDARANAR UNIVERSITY, TIRUNELVELI
(Syllabus for those who join the course from the Academic Year 2012-2013 onwards)

Part – I, Sanskrit
(Syllabus for B.A./B.Sc./B.Mus)
Second Semester

PAPER – II, TITLE: POETRY & HISTORY OF SANSKRIT LITERATURE

UNIT I Ramayanam – Sundara Kandam Ch.31 – Verses 1to19.

UNIT II Bhagavad Gita – Ch. 10 – Verses 1 to 25.

UNIT III Raghuvamsam – Samudra Varnanam – Verses 1to 15, Kalividambaanm - Verses 41to 49.

UNIT IV Narayaniyam – Dasakam 33 – Ambarisha Caritam , Champu Kavyass – Pages 116 to 120. (A short History of Sanskrit Literature)

UNIT V History of Panchamahakavyas – (A short History of Sanskrit Literature)

Books Prescribed and Recommended :

1. Sahitya Deepika by Prof. C.R. Anantaraman & Prof. T.R. Damodaran.
2. Bhagavad Gita published by R.K.Math, Mylapore.
3. A short History of Sanskrit Literature published by R.S. Vadhyar & Sons, Palakkad.

Part – I Sanskrit

(Syllabus for B.Com./BBA/BBM/BA Corporate Secretaryship/B.Sc Comp.Sci/B.Sc Electronics)

First Semester

PAPER – I, TITLE: FUNDAMENTAL GRAMMAR , POETRY, PROSE & HISTORY OF SANSKRIT LITERATURE

UNIT I Fundamentals, Sentence Formation and Declension of Nouns ending in a, i (Masculine) , aa, ii (Feminine), a (Neuter).

UNIT II Simple Sandhis (Dirgha, Guna, Vrddhi), Conjugation – Present, Past , Future Tenses & Imperative mood of 10 verb roots viz., path, likh, dhav, nam, gam, khad, pib, sthaa, bhu and gaay.

UNIT III Bhagavad Gita – Ch. 2 – Verses 1 to 25.

UNIT IV i. Sasa Kapinjala Katha of Pancatantra.

ii. History of Pancha Mahakavyas (A short History of Sanskrit Literature)

UNIT V History of Prose Literature - Pages 108 to 119and Tales&Fables – Pages 120 to 128 (A short History of Sanskrit Literature)

Books Prescribed and Recommended :

1. Sabda Manjari published by R.S. Vadhyar & Sons, Palakkad.
2. Sandhi published by Samskrta Bharati.
3. Bhagavad Gita published by R.K.Math, Mylapore.
4. A short History of Sanskrit Literature published by R.S. Vadhyar & Sons, Palakkad.
5. Sahitya Deepika by Prof. C.R. Anantaraman & Prof. T.R. Damodaran.

Part – I, Sanskrit

(Syllabus for B.Com./BBA/BBM/BA Corporate Secretaryship/ B.Sc.Comp.Sci/ B.Sc Electronics)

Second Semester

PAPER – II, TITLE: DRAMA, TRANSLATION & FUNCTIONAL SANSKRIT

UNIT I DUTAVAKYAM OF BHASA

UNIT II DUTAVAKYAM OF BHASA

UNIT III DUTAVAKYAM OF BHASA

UNIT IV Translation into English or Tamil from Sanskrit. (Muurkha and Vidvat Paddhati of Nitisatakam of Bhartruhari).

UNIT V Translation into Sanskrit from English. (Sistaachaara and Paricaya chapters of Vyavahaarasaahasri).

Functional Sanskrit (Spoken Sanskrit – Viva)

Books Prescribed and Recommended :

1. Dutavakyam published by R.S. Vadhyar & Sons, Palakkad.
2. Nitisatakam of Bhartruhari published by Sri Aurabindo Society, Pondicherry.

3.Vyavahaarasaahasri published by Samskrta Bharati.

PART I ARABIC (CBCS)

The existing syllabus will be followed for this Academic year 2012-2013 also

PART II
ENGLISH
(CBCS)

Taking into consideration the basic criterion of employability of the budding graduates, the syllabus for Part II English for UG courses has been revised. This revised syllabus framed under the choice Based Credit system aims at strengthening the communicative competence of the under graduate students. It focuses on improving all the four skills, namely listening, speaking, reading and writing English, thus enabling the students to fare better in the job market.

OBJECTIVES

1. To build the vocabulary of the students.
2. To give an exposure to grammar and usage
3. To develop their language skills through literature
4. To enable the students to read meaningfully and critically
5. To train them in the listening skill and help them to speak with clarity and confidence.
6. To help them write well-organised and correct English.

METHODOLOGY

To achieve these ends, the Board recommends communicative language methods centred on task based, interactive and learner – oriented approach.

SCHEME OF EXAMINATIONS IN PART II ENGLISH
(REVISED AND NEW)

Semester / Title of the Paper	Teaching Hours	Exam. Hours	Max. Marks	Internal Marks	External Marks	Overall Passing Minimum
SEMESTER I						
Prose, Short Stories, Grammar and Usage	**6 hrs. Per Week**	**3**	**100**	**25**	**75**	**35**
Prose, One Act, Plays Grammar and Usage and Communication Skills	**6 hrs. Per Week**	**3**	**100**	**25**	**75**	**35**

- The minimum pass mark in the external examination is 27 marks.
- For even semesters, the higher marks scored in one of the two written examinations and the marks awarded for the compulsory oral Examination in Spoken English will be taken for the calculation of internal marks.

  E.g. Test I. 16/20; Test II. 14/20; Test III. Spoken English 14/20

  Higher of the two test marks & Spoken English = 16+14 = 30/2 = 15

  Assignment = 4 out of 5

  Total = 19/25.

TRANSITORY PROVISION

The new syllabus comes into effect from June 2012 and will be valid till April 2015. However students with arrears will be able to appear for examinations in this syllabus till the end of the academic year 2017 – 2018.

PART II ENGLISH FOR UG COURSES

SYLLABUS

FIRST YEAR – SEMESTER I

PROSE, SHORT STORIES, GRAMMAR AND USAGE AND LANGUAGE SKILLS

UNIT I

PROSE (2 Hours)

TEXT BOOK : MACMILLAN COLLEGE PROSE

(Edited by T. SRIRAMAN Macmillan India Limited)

Prescribed Lessons

1. Spoken English and Broken English – G.B. Shaw.
2. Voluntary Poverty – M.K. Gandhi
3. A. Snake in the Grass – R.K. Narayan
4. The Civilization of To-day – C.E.M. Joad
5. With the Photographer –Stephen Leacock

UNIT II

SHORT STORIES (1 Hour)

TEXT BOOK : GIFTS TO POSTERITY

(Edited by Prof. A.E. SUBRAMANIAN)

(ANU – CHITHRA PUBLICATIONS, CHENNAI)

1. The Gateman's Gift - R.K. Narayan
2. The Open Window - H.H. Munro
3. Some Words with a Mummy - Edgar Allan Poe
4. The Ant and the Grasshopper - W. Somerset Maugham

GRAMMAR AND USAGE (2 Hours)

UNITS III & IV

Text Book : Emerald English Grammar and Composition: (Edited by Radhakrisnapillai) Emerald Publishers, Chennai.

UNIT III

GRAMMAR AND USAGE

CHAPTERS 1 - 6

1. Sentences
2. Nouns
3. Pronouns
4. Adjectives
5. Articles
6. Verbs

UNIT IV

GRAMMAR AND USAGE (CONTD.)

CHAPTERS 7 - 12

7. Non-finite Verbs
8. List of Irregular Verbs
9. Phrasal Verbs
10. Adverbs

11. Prepositions
12. Conjunctions and Interjections

UNIT V

PART I- LANGUAGE SKILLS (1 Hour)

From Emerald English Grammar and Composition: (Edited by Radhakrisnapillai) Emerald Publishers, Chennai.

1. Note Making
2. Precis – Writing
3. Developing Hints
4. Expansion of Proverbs

B.A TAMIL

MAJOR

(CBCS)

பகுதி III தமிழ்

2012 – 2013 ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ள தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்க்கான பாடத்திட்டம் ஒன்றாம் இரண்டாம் பருவங்களுக்குரிய செய்யுள் பகுதிகள்

பதிப்புரை

இப்பாடத் தொகுப்பு மனோன்மணியம் பல்கலைக்கழகத்தில் பயிலும் இளங்கலை தமிழ் மாணவர்களுக்கான ஒன்றாம் இரண்டாம் பருவங்களுக்குரிய பகுதியாக வெளிவருகிறது.

இளமையுடனும் ஆற்றலுடனும், அறிவுடனும், தமிழ் இலக்கியம், பயில வரும் மாணவர்களுக்கு தமிழ் மொழியின் மீது மிகுந்த ஆர்வத்தை தோற்றுவிக்கும் பொருட்டும், தாங்கள் வாழும் சமகாலத்தைப் புரிந்து கொள்ளும் நோக்குடனும் இக்கால இலக்கியங்கள் முதல் பருவத்தில் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. இலக்கணம் - நன்னூல் - எழுத்ததிகாரம், நாட்டுப் புறவியல், சுற்றுப் புறச் சூழல் கல்வி ஆகியவை முதல் பருவத்திற் குரியனவாக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

தற்காலத்தில் வாழும் மாணவச்செல்வங்கள் தொன்மை தமிழின் சிறப்புக்களை இலக்கிய வகைகளினுடாக அறிந்து கொள்ளுமாறு சிற்றிலக்கியங்களின் சில தொகுதிகள் இரண்டாம் பருவத்திற்கு பாடமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதனோடு இலக்கணம் நன்னூல் - சொல், நாட்டுப் புறவியல் கலைகள் சமூக மேம்பாட்டுக் கல்வியினையும் கொண்டு அமைந்துள்ளது.

இப் பாடத்தொகுப்பு வெளி வருவதற்கு வழிய காட்டிய மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்களுக்கும் பதிவாளர் முனைவர் S. மாணிக்கம் அவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைக் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாடத்திட்டக்
குழுவினர்

பாடத்திட்டக் குழுவினர்

தலைவர்:-

முனைவர் இ. மகிழ் உல்தா கமலம்

நேசமணி நினைவுக் கிறிஸ்தவக் கல்லூரி – மார்த்தாண்டம்

உறுப்பினர்கள்:-

1. **S. நிர்மலா ரெஞ்சினி**

   மகளிர் கிறிஸ்தவ கல்லூரி – நாகர்கோவில்

2. **முனைவர் N. சந்தம்மாள்**

   மகாலட்சுமி கல்லூரி – தூத்துக்குடி

3. **M. சாந்தினி தாஸ்**

   மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி – நாகர்கோவில்

4. **R. ஜான்சிராணி**

   கோவிந்தம்மாள் ஆதித்தனார் கல்லூரி -திருச்செந்தூர்

5. **முனைவர் M. சாந்தாள்**

   இந்துக்கல்லூரி நாகர்கோவில்

6. **முனைவர். C. செல்வகுமார்**

   நே.நி. கிறிஸ்தவக் கல்லூரி மார்த்தாண்டம்

7. **முனைவர் சிவ சங்கரன்**

   திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்

8. **முனைவர் ஆனந்தன்**

   ஆண்டார் கல்லூரி கருமத்தூர்

9. **முனைவர் ந. அ. அருணகிரி**

   பல்கலைக்கழக கல்லூரி பாளையம், திருவனந்தபுரம்.

10. **முனைவர் M. சரோஜா**

மாகலெட்சுமி கல்லூரி எட்டையபுரம்சாலை, தூத்துக்குடி.

மனோன்மணியம் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

SCHEME OF SYLLABUS

இளங்கலை – தமிழ் - பாடத்திட்டம்

பருவம் 1

இக்கால இலக்கியங்கள் முதற்பருவம் (First semester)

பொருளடக்கம்

அலகு -1

கவிதைகள்

மரபு கவிதைகள்

1 பாரதநாடு

2 தமிழ்

3 தமிழின் இனிமை

4 புதியதோர் உலகம் செய்வோம்

5 புத்தரும் ஏழை சிறுவனும்

6 இளந் தமிழருக்கு

7 பெண்மாட்சி

8 எது சுதந்திரம்

9 உழைப்பும் தேவை

10 எத்தனை தடவை மன்னிப்பது

11 சிக்கனம்

12 பாதுகாப்பை சுமந்து கொண்டு

புதுக்கவிதைகள்

1 வழித்துணை

2 விருட்ச மனிதர்கள்

3 ஸ்டேஷன்

4 வார்டு

5 மண்

6 அலைச்சல்

7 சினேகிதனின் தாழ்வான வீடு

8 நீரின்றி அமையாது உலகு

9. பொருள் வயின் பிரிவு

10. வாழ்வின் கசப்பு

கவிதைகள்

அலகு-2

உரைநடை நாள் மலர்கள் கட்டுரைத் தொகுப்பு

அலகு-3

சிறுகதைகள்

1 குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை

2 பொன்னகரம்

3 விரகமல்ல தனிமை

4 அரிசி

5 வீட்டின் மூலையில் ஒரு சமயலறை

6 சாவித்திரி

7 வெயிலோடு போய்

8 சாம்பல் கிண்ணம்

9 வக்கிரம்

10. சுருட்டு வாள்

அலகு-4

நாவல் புத்தன்வீடு

அலகு-5

பாரத நாடு

(ராகம் - ஹிந்துஸ்தானி தோடி)

பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்

பாரத நாடு.

சரணங்கள்

1. ஞானத்தி லேபர மோனத்திலே - உயர்

மானத்தி லேஅன்ன தானத்திலே,

கானத்தி லேஅமு தாக நிறைந்த

கவிதையி லேயுயர் நாடு - இந்தப் (பாரு)

2. தீரத்தி லேபடை வீரத்திலே - நெஞ்சில்

ஈரத்தி லேஉப காரத்திலே

சாரத்தி லேமிகு சாத்திரங் கண்டு

தருவதி லேயுயர் நாடு - இந்தப் (பாரு)

3. நன்மையி லேயுடல் வன்மையிலே - செல்வப்

பன்மையி லேமறத் தன்மையிலே,

பொன்மயி லொத்திடு மாதர்தங் கற்பின்

புகழினி லேயுயர் நாடு - இந்தப் (பாரு)

4. ஆக்கத்தி லேதொழி லூக்கத்திலே - புய

வீக்கத்தி லேயுயர் நோக்கத்திலே,

காக்கத் திறல்கொண்ட மல்லர்தஞ் சேனைக்

கட னி லேயுயர் நாடு - இந்தப் (பாரு)

5. வன்மையி லேயுளத் திண்மையிலே - மனத்

தண்மையி லேமதி நுண்மையிலே

உண்மையி லேதவ றாத புலவர்

உணர்வினி லேயுயர் நாடு - இந்தப் (பாரு)

6. யாகத்தி லேதவ வேகத்திலே - தனி

யோகத்தி லேபல போகத்திலே

ஆகத்திலே தெய்வ பக்திகொண் டார்தம்

அருளினி லேயுயர் நாடு - இந்தப் (பாரு)

7. ஆற்றினி லேசுனை யூற்றினிலே - தென்றற்

காற்றினி லேமலைப் பேற்றினிலே

ஏற்றினி லேபய னீந்திடுங் கா

யினத்தினி லேயுயர் நாடு - இந்தப் (பாரு)

8. தோட்டத்தி லேமரக் கூட்டத்திலே - கனி

வீட்டத்தி லேபயி ரூட்டத்திலே

தேட்டத்தி லேயடங் காத நிதியின்

சிறப்பினி லேயுயர் நாடு - இந்தப் (பாரு)

பாரதியார்

தமிழ்

1. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்

இனிதவா தெங்கும் காணோம்,

பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்

இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு

வாழ்ந்திடுதல் நன்றோ?சொல்வீர்!

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்

பரவும்வகை செய்தல் வேண்டும்.

2. யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்

வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்

பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை,

உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்

வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்!

சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்

தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

3. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்

தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;

இறவாத புகழுடைய புதுநூல்கள்

தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்

சொல்வதிலோர் மகிமை யில்லை;

திறமான புலமையெனில் வெளிநாட்டோர்

அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

4. உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்

வாக்கினிலே ஒளியுண்டாகும்;

வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்

கவிப்பெருக்கும் மேவு மாயின்

பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெலாம்

விழிபெற்றுப் பதவி கொள்வார்;

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்

இங்கமரர் சிறப்புக் கண்டார்

பாரதியார்

தமிழ்

தமிழின் இனிமை

கண்ணிகள்

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும், - காய்ச்சுப்
பாகிடை ஏறிய கவையும்;
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும், - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

பொழி டை வண்டின் ஒ யும் - ஓடைப்
புனவிடை வாய்க்கும் க யும்,
குழ டை வாய்க்கும் இசையும், - வீணை
கொட்டிடும் அமுதப் பண்ணும்,
குழவிகள் மழலைப் பேச்சும், - பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்,
விழைகுவ னேனும், தமிழும் - நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர்!

பயிலுறும் அண்ணன் தம்பி, - அக்கம்
பக்கத் துறவின் முறையார்,
தயைமிகு உடையாள் அன்னை, - என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை,
குயில்போற் பேசிடும் மனையாள், - அன்பைக்
கொட்டி வளர்க்கும் பிள்ளை,
அயலவ ராகும் வண்ணம் - தமிழ் என்

அறிவினில் உறைதல் கண்டீர்!

நீலச் சுடர்மணி வானம்,- ஆங்கே
நிறையக் குளிர்வெண் ணிலவாம்,
காலைப் பரிதியின் உதயம் - ஆங்கே
கடல்மேல் எல்லாம் ஒளியாம்,
மாலைச் சுடரினில் மூழ்கும், - நல்ல
மலைகளின் இன்பக் காட்சி,
மேலென எழுதும் கவிஞர்,, - தமிழின்
விந்தையை எழுதத் தரமோ?

செந்நெல் மாற்றிய சோறும் - பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்,
தன்னிகர் தானியம் முதிரை, - கட்டித்
தயிரோடு மிளகின் சாறும்,
நன்மது ரஞ்செய் கிழங்கு - காணில்
நாவினி னித்திடும் அப்பம்,
உன்னை வளர்ப்பன தமிழா! - உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!
பாரதிதாசன்

புதிய உலகு செய்வோம்

புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம் (புதிய)

பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம் (புதிய)

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்

‘இது எனதெ‘ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம் (புதிய)

உணர்வெனும் கன டை அயர்வினை எரிப்போம்
‘ஒருபொருள்தனி’ எனும் மனிதரைச் சிரிப்போம்! (புதிய)

இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம். (புதிய)

பாரதிதாசன்

புத்தரும் ஏழைச் சிறுவனும்

(அரண்மனையி ருந்து வெளிப்பட்டுச் சென்ற புத்தர் வழி நடந்த களைப்பால் சோர்ந்து கிடந்தார். அவரைக் கண்ட ஓர் இடைச் சிறுவன், தான் தாழ்ந்த குலத்தினனாதல் பற்றி, தன் கலயத்தில் பால் கறந்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினான். பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாராட்டலாகாது என்று புத்தர் அவனுக்குப் போதித்த வரலாறு இதனுள் கூறப்படுகிறது.

புத்தர் மயங்கி வீழ்தல்

புண்ணிய மூர்த்தி புத்தமா முனிவன்
உண்மையை உணர்ந்துஇவ் வுலகினில் என்றும்
அழியா இன்பம் அடையும் அவாவினால்
மன்னர் வாழ்வையும் மறுத்தவ னாகித்
தந்தையை மறந்து தனயனைத் துறந்து
மங்கை யசோதரை மதிமுகம் நீத்து
நள்ளிர வதனில் நன்னகர் நீங்கி,
உண்ணும் உணவும் உறக்கமும் இன்றி
இரவும் பகலும் இடைவிடாது எங்கும்
நடந்து மெ ந்து ந வுற்று ஒருநாள்
வேனில் வெயி ல் வெந்தெரி கான ல்
கைகால் தளர்ந்து கண்களும் மூடி
மூச்சும் அடங்கி முகமும் வெளிறி

உயிரும் உடம்பில் ஊச லாட
விஞ்சிய மயக்கால் வீழ்ந்து கிடந்தனன்.

ஆடுகள் மேய்த்து வரும் - ஒருவன்
ஆயர் குலச்சிறுவன்,
வாடிக் கிடந்தவனைச் - செல்லும்
வழியின் மீதுகண்டான்.

அவன் செயல்

வையகம் வாழ்ந்திடவே-பிறந்த
மாதவச் செல்வன்முகம்
வெய்யி ல் வெந்திடாமல்-தழைகள்
வெட்டி அருகில் நட்டான்.

தெய்வ குலத்திவனை-எளியோன்
தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யாதெனவே-சிறிது
சிந்தை தயங்கி நின்றான்.

உள்ளந் தெளிந்துடனே-வெள்ளாடு
ஒன்றை அழைத்துவந்து,
வள்ளல் மயக்கொழிய - மடுவை
வாயில் கறந்துவிட்டான்.

நட்ட தழைகளெல்லாம்-வளர்ந்து
நாற்புற மும்கவிந்து,
கட்டிய மாளிகைபோல் - வனத்தில்
காட்சி யளித்தஅம்மா?

பூவோடு காய்கனியும்-தளிரும்
பொ ந்து நிரம்பியங்கே
மேவு பலமணிகள்-இழைத்த
விதானமும் ஆனஅம்மா!
ஐயனே இவ்வுலகம்-காணுதற்கு
அரியவோர் தெய்வமெனக்
கைகள் தொழுதுநின்றான்-சிறுவன்
களங்க மிலாவுளத்தான்.

புத்தர் எழுந்து பால் கேட்டல்

நிலத்தில் கிடந்த ஐயன்-மெல்ல
நிமிர்ந்து தலைதூக்கிக்
“கலத்தினி லேகொஞ்சம்-பாலைக்
கறந்து தருவாய்”என்றான்.

சிறுவன் மறுத்தல்

“ஐயையோ ஆகாது”என்றான்-சிறுவன்
“அண்ணலே! யானும்உனைக்
கையினால் தீண்டவொண்ணா-இடையன்ஓர்
காட்டு மனிதன்” என்றான்.

புத்தர் அறிவுறுத்தல்

உலகம் புகழ்பெரியோன்-இந்த
உரையினைக் கேட்டு அந்நாள்
அலகில் கருணையினால் சொன்ன
அமுத மொழிஇதுவாம்;

“இடர் வரும்போதும்-உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர்போல்-மாந்தர்
உறவு கொள்வர், அப்பா!

ஓடும் உதிரத்தில்-வடிந்து
ஒழுகும் கண்ணீரில்,
தேடிப்பார்த்தாலும்-சாதி
தெரிவ துண்டோ அப்பா?

எவர் உடம்பினிலும்-சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர்விழி நீர்க்கும்-உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா!

நெற்றியில் நீறும்-மார்பில்
நீண்ட பூணூலும்
பெற்றஇவ் உலகுதனில்-எவரும்
பிறந்த துண்டோ அப்பா!

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டும், அப்பா!

நன்மை செய்பவரே-உலகம்
நாடும் மேற்குலத்தார்;
தின்மை செய்பவரே-அண்டித்

தீண்ட ஒண்ணாதார்.

சிறுவன் பால் தருதல்

நிலத்துயர் ஞானி-இவை
நிகழ்த்தி, “என் தம்பீ!
கலத்தினிலே கொஞ்சம் - பாலைக்
கறந்து தா” என்றான்.

ஆயர் சிறுவனும்-கலத்தில்
அளிக்க வாங்கியுண்டு,
தாயினும் இனியன்-கொண்ட
தளர்ச்சி நீங்கினனே.

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

தமிழன் இதயம்

இளந் தமிழருக்கு
இளந்தமிழா! உன்னைக்காண
இன்பமிக்கப் பெருகுது
இதுவரைக்கும் எனக்கிருந்த
துன்பம் சற்றுக்குறையுது
வளந்திகழும் வடிவினோடும்
வ மைபேசி வந்தனை
வறுமைமிக்க அடிமைநிற்கு
வந்தஊக்கம் கண்டுநான்
தளர்ந்திருந்த சோகம்விட்டுத்
தைரியங்கொண் டேனடா

தமிழர்நாட்டின் மேன்மைமீளத்
தக்ககாலம் வந்ததோ!
குளிர்ந்த எந்தன் உள்ளம்போல
குறைவிலாது நின்றுநீ
குற்றமற்ற சேவைசெய்து
கொற்றமோங்கி வாழ்குவாய்.

பண்டிருந்தார் சேரசோழ
பாண்டிமன்னர் நினைவெலாம்
பாயுதடா உன்னையின்று
பார்க்கும்போது நெஞ்சினில்
கொண்டகொள்கை அறம்விடாமல்
உயிர்கொடுத்த வீரர்கள்
கோடிகோடி தமிழர்வாழ்ந்த
கதைகள் வந்து குத்துது
மண்டலத்தே இணையிலாத
வாழ்வுகண்ட தமிழகம்
மகிமைகெட்டு அடிமைப்பட்டு
மதிமயங்கி நிற்பதேன்?

செண்டெழுந்தா லென்னப்பாய்ந்து
தேசமுற்றம் சுற்றி நீ
தீரவீரம் நம்முள்மீளச்
சேருமாறு சேவைசெய்

அன்பினோடு அறிவுசேர்ந்த
ஆண்மைவேண்டும் நாட்டிலே
அச்சமற்ற தூயவாழ்வின்

ஆற்றல்வேண்டும் வீட்டிலே
இன்பமான வார்த்தைபேசி
ஏழைமக்கள் யாவரும்
எம்முடன் பிறந்தபேர்கள்
என்ற எண்ணம்வேண்டுமே
துன்பமான கோடிகோடி
சூழ்ந்துவிட்ட போதிலும்
சோறு தின்ன மானம் விற்கும்
துச்சவாழ்வு தொட்டிடோம்
என்பதான நீதியாவும்
இந்தநாட்டில் எங்கணும்
இளந்தமிழா! என்றும் நின்று
ஏடெடுத்துப் பாடுவாய்.

பணமிருந்தார் என்பதற்காய்ப்
பணிந்திடாத மேன்மையும்
பயமுறுத்தல் என்பதற்கே
பயந்திடாத பான்மையும்
குணமிருந்தார் யாவரேனும்
போற்றுகின்ற கொள்கையும்

குற்றமுள்ளார் யாரென்றாலும்
இடித்துக் கூறும் தீரமும்
இனமிருந்தார் ஏழையென்று
கைவிடாத ஏற்றமும்
இழிகுலத்தார் என்றுசொல்
இகழ்ந்திடாமல் எவரையும்
மணமிகுந்தே இனிமைமண்டும்

தமிழ்மொழியால் ஒதிநீ
மாநிலத்தில் எவருங்கண்டு
மகிழுமாறு சேவைசெய்.

ஓடிஓடி நாட்டிலெங்கும்
உண்மையைப் பரப்புவாய்
ஊனமான அடிமைவாழ்வை
உதறித்தள்ள ஓதுவாய்
வாடிவாடி அறம்மறந்து
வறுமைப்பட்ட தமிழரை
வாய்மையோடு தூய்மைகாட்டும்
வ மைகொள்ளச் செய்குவாய்.
கூடிக்கூடிக் கதைகள் பேசிச்
செய்கையற்ற யாரையும்
குப்பையோடு தள்ளிவிட்டுக்
கொள்கையோடு நீன்று நீ
பாடிப் பாடித் தமிழின் ஓசை
உலகமெங்கம் பரவவே
பார்த்த யாரும் வார்த்தைகேட்டுப்
பணியுமாறு சேவைசெய்.

தமிழனென்ற பெருமையோடு
தலைநிமிர்ந்து நில்லடா
தரணியெங்கம் இணையிலாஉன்
சரிதைகொண்டு சொல்லடா
அமிழ்தமென்ற தமிழினோசை
அண்ட மூட்ட உலகெலாம்
அகிலதேச மக்களுங்கண்

டாசைகொள்ளச் செய்துமேல்
கமழ்மணத்தின் தமிழில்மற்ற
நாட்டிலுள்ள கலையெலாம்
கட்டிவந்து தமிழர்வீட்டில்
கதவிடித்துக் கொட்டியே
நமது சொந்தம் இந்தநாடு
நானிலத்தில் மீளவும்
நல்ல வாழ்வு கொள்ளச் சேவை
செய்துவாழ்க நீண்டநாள்.

– நாமக்கல்லார்

பெண் மாட்சி

சதாவதானி செய்கு தம்பிப் பாவலர்

பெண்ணே பெண்ணே பெண்மணியே
பெருமை நிறைந்த பெட்டகமே!
பண்ணே நிகர்த்த மொழிமறவாப்
பைம்பொற்கிளியே பசுந்தேனே!

நாவிலொருவன் இடத்தொருவன்
நறைசேர் மார்பின் நடுவொருவன்
ஆவியனைய வைத்ததுன்னை
அல்லால் யாரே அறையாயோ!

சிருட்டிக் கரசாய் எழுந்தனையே
செகத்தின் வடிவாய்த் திகழ்ந்தனையே
இருட்டி மறைத்த உலகினுக்கே
ஏற்றி வைத்த விளக்கானாய்!

கொள்ளுங் கணவர்க் குயிரானாய்

கூறும் அமைச்சும் தானானாய்

அள்ளம் பிணிக்கோ ரமுதானாய்

அறத்திற் குகந்த துணையானாய்

எல்லாம் நீயே இல்லையெனில்

எல்லாம் இல்லை என்றுரைக்கும்

வல்லார் வாய்மைக்கொரு சான்றாய்

வந்தாய் இருந்தாய் வாழ்ந்தாயே!

வாய்த்த உன்றன் மாட்சியெல்லாம்

வவ்வித் பறித்த மாக்களினி

ஆய்ந்து தெளியுங் காலமிதோ

அடுத்த தடுத்த தறிவாயே!

- சதாவதானி செய்கு தம்பி பாவலர்

எது சுதந்திரம்?

ஒன்பது மணிவரை படுக்கையில் கிடந்தே

உறங்கிடும் பொன்னனை எழுப்பினாள் அம்மா.

“இன்றுநம் தேசச் சுதந்திரத் திருநாள்,

எழுந்திரு சீக்கிரம்” என்றாள் அம்மா.

“சுதந்திர நாளில் சுகமாய்த் தூங்கச்

சுதந்திரம் உண்டு சும்மா போபோ,

மதியம் வரைநான் தூங்கிடு வேன்”என

மறுபுறம் திரும்பிப் பொன்னன் படுத்தான்.

பதினொரு மணிவரை தூங்கிடும் பொன்னனைப்
பார்த்ததும் தந்தை ஆத்திரம் கொண்டார்.
முதுகினில் இரண்டு பலமாய் வைத்தார்.
முணுமுணுத் தவனும் துள்ளி எழுந்தான்.

“அன்னையும் தந்தையும் சுதந்திர நாளில்
அடிமைபோல் என்னை நடத்திடு கின்றார்.
இன்றுநான் என்றன் இஷ்டம் போலவே
எதனையும் செய்வேன்” என்று நினைத்தான்.

கல்லை எடுத்தான், கருநிற நாயின்
கால்களைப் பார்த்துக் குறிவைத் தெறிந்தான்.
‘ளொள்’ என நாயும் சீறிப் பாய்ந்திட
நொடியில் பொன்னன் ஓடி ஒளிந்தான்.

சாலையில் கைகளை வீசி நடந்தான்;
தனக்கே சுதந்திரம் என்றவன் நினைத்தான்;
மாலையில் கார்கள், வண்டிகள் வந்தும்
வழிவிட வில்லை; எதிரில் நடந்தான்.

சட்டென ஒருகார் அவன்மேல் மோத,
தாவிக் குதித்தவன் தவறி விழுந்தான்.
பட்டெனத் தலையில் அடிபட லாச்சே;
பந்துபோல் நெற்றியும் புடைத்திட லாச்சே!

சுதந்திர நாளில் நினைத்ததைச் செய்வதே
சுதந்திரம் என்று பொன்னன் நினைத்தான்.

விதம்விதமான தொல்லைகள் வரவே

மெத்தவும் மனத்தில் வேதனை அடைந்தான்.

சோம்பிக் கிடைப்பது சுதந்திரம் இல்லை.

தெல்லைகள் தருவதும் சுதந்திரம் இல்லை.

வீம்புகள் செய்வதும் சுதந்திரம் இல்லை.

வேறெது உண்மைச் சுதந்திரம் ஆகும்!

பிறரது உரிமையை மதிப்பது சுதந்திரம்.

பேச்சிலும் செய லும் தூய்மையே சுதந்திரம்.

உரிமையும், கடமையும் ஒன்றாய்ச் சேர்வதே

உண்மையில் சுதந்திரம், சுதந்திரமாகும்!

அழ. வள்ளியப்பா.

உழைப்பும் தேவை!

படிப்புத் தேவை - அதோடு உழைப்பும் தேவை-முன்னேற

படிப்புத் தேவை - அதோடு உழைப்பும் தேவை!

உண்மை தெரியும் உலகம் தெரியும் படிப்பாலே - நம்

உடலும் வளரும் தொழிலும் வளரும் உழைப்பாலே - எதற்கும்

படிப்புத் தேவை.

பாடுபட்டதால் உயர்ந்த நாடுகள் பலப்பல உண்டு - மன

பக்குவம் கொண்டு மக்கள் முன்னேறக்

காரணம் இரண்டு - அதுதான் - படிப்புத் தேவை

வீரத்தலைவன் நெப்போ யனும் வீடுகட்டும் தொழிலாளி!

ரஷ்யா தேசத் தலைவன் மார்சல் ஸ்டா ன்

செருப்புத் தைக்கும் தொழிலாளி!

விஞ்ஞான மேதை ஜி.டி.நாயுடு காரு ஓட்டும் தொழிலாளி!

விண்ணொளிக்கதிர் விவரம் கண்ட

சர்.சி.வி. ராமனும் தொழிலாளி - எதற்கும் - படிப்புத் தேவை

ஜனத்தொகை மிகுந்தாலும் பசித்துயர் ம ந்தாலும்

பணத்தொகை மிகுந்தோர் - மேலும்

பணம் சேர்க்க முயல்வதாலும்

உழைத்தால்தான் பற்றாக்குறையை ஒழிக்க முடியும் - மக்கள்

ஓய்ந்திருந்தால் நாட்டின் நிலைமை மோகமாக முடியும்

எதற்கும் - படிப்புத் தேவை

- பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

இயேசு காவியம்

எத்தனை தடவை மன்னிப்பது

“என்னுடை சோதரர் குற்றம் புரிந்தால்

என்னிடமே ஐயா - நான்

எத்தனை முறைதான் குற்றம் பொறுப்பது

ஏழுமு றைதானா?”

என்றொரு சீடர் இயேசுவைக் கேட்க

இயேசுபி ரான்ஆங்கே - “அட

“ஏழு எழுபது எத்தனை முறையும்”

என்றொரு கதை சொன்னார்.”

“தலைவன் ஒருவன் ஊழியன் இடத்தில்

தன்கணக் கைக்கேட்டான் - அவன்
‘தரவேண் டியதோ பத்தா யிரம்’என
சத்திய மாய்ச்சொன்னான்!
‘உன்கடன் தீர்க்க வழிஇலை என்றால்
உடமைக ளைவிற்று - உன்
உறவினர் இருந்தால் அவரையும் விற்று
உடனே கடன்கட்டு’

“தலைவன் சொன்னதும் ஊழியன் அவனது
தாள்களி லேவீழ்ந்து - ‘கடன்
தருகின் றேன்எனைப் பொறுப்பீர்’ என்றான்
தலையொடு மெய்தாழ்ந்து!
தலைவனும் அவனை விட்டுவிட் டானவன்
தன்மையை ஆராய்ந்து - மிகத்
தாளா மகிழ்வில் ஊழியன் வாழ்ந்தான்
தனதில் லம் சென்று!
“அவனிடத் தில்ஒரு மனிதன் நாணயம்
நூறுக டன்பட்டான் - இவன்
அவனது கழுத்தில் துண்டினைப் போட்டுக்
கடனைத் தரக்கேட்டான்!
அவனும் அதுபோல் ‘பொறுப்பாய்’ என்றான்
பொறுக்கவில் லைஇவனே - கடன்
அதனைத் தரும்வரை சிறையில் அடைத்தான்
அவதியுற் றான்அவனே!

“உண்மை அறிந்த தலைவன் தனது
ஊழிய னைஅழைத்தான் - ‘நான்
உன்னைப் பொறுத்தேன் அவனை நீயும்

ஒறுத்தது ஏனென்’ன்றான்!
கண்ணியம் மறந்த ஊழியன் தன்னைக்
கைதுசெய் தேவதைத்தான் - தன்
கடனைத் தரும்வரை அவனை நாட்டின்
சிறையனி லேஅடைத்தான்!
“நீங்கள் பிறரை மன்னிக்க மறுத்தால்
நீங்களும் அதுபோல - மிக
நிச்சய மாகத் தண்டிக்கப் படுவீர்
தந்தை அவராலே! ”
தாங்குவ தில்தான் மகிமை உண்டு
தாக்குவ தில்அல்ல - இதைச்
சரியாய்ச் சொன்னார் இயேசு பிரானும்
சத்தியமே வெல்ல!

கவிஞர் கண்ணதாசன்

இயேசு காவியம்

மலைப்பொழிவு

அன்று தம் சீடர்க்கெல்லாம்
அறிவுரை கூற எண்ணிக்
குன்றின்மேல் ஏறி நின்று
கொடைக்கரம் விரித்து நீட்டி
ஒன்றிரண் டென்று நெஞ்சில்
உள்ளதை எண்ணி வைத்து
மன்றினைத் தொடங்கி வைத்தார்
மாரிபோல் இயேசு நாதர்!

இந்த ஓர் மலையும் பின்னாள்
இறுதிநாள் மலையும் பார்த்தால்
அந்தக மனிதர்க் கெல்லாம்
அறிவினை ஊட்டும் தோற்றம்!
விந்தைசேர் உலகில் இயேசு
வெடித்ததோர் புரட்சி ஓசை
சிந்திய முத்தோ மக்கள்
ஜீவனைக் காக்கும் பானம்!

எண்வகை மனிதர் தம்மை
இயல்புற விரித்துச் சொன்னார்
நுண்ணிய புலன்க ளோடும்
நுவலரும் சீடர் கேட்டார்
புண்ணியம் உலகில் எய்தப்
புகுந்தது புதிய வெள்ளம்!
கண்ணியன் இயேசு சொன்ன
கணக்கினைக் கீழே பார்ப்போம்!

எளிய மனத்தோர் பேறுபெற் றோரென
எடுத்ததும் அவர் சொன்னார் - இதில்
எளிமை என்பது பற்றில் லாமை
இறைவனை நம்புவதே!
வளமிகு செல்வம் மனையாள் சொந்தம்
வரவினை எண்ணாது - ஒரு
வஞ்சமில் லாத நெஞ்சத் துடனே
பிறர்பழி சொல்லாது
விளம்பிய வேதம் வகுத்தது போலே
வாழ்பவர் இவராவார் - அந்த

விண்ணர செல்லாம் இவருக் குரியது
அடைபவர் இவராவார்!
துயரம் உறுவோர் பேறுபெற் றோரெனத்
தூயமகன் சொன்னார் - அந்தத்
துயரம் அடைவோர் ஆறுதல் பெறுவர்
துன்பங்களை எண்ணார்!
அயராச் சுகமும் மதுவும் கீதமும்
ஆயிரம் இன்பங்கள் - அதை
அடைவது தானே பெருமையென் றெண்ணும்
மானிட உள்ளங்கள்!
வயிறே பெரிதாய் வாழ்ந்திடும் வாழ்வில்
ஓடிடும் எண்ணங்கள் - இது
வாழ்வல என்பது இயேசுவின் வார்த்தை
கூறிடும் சின்னங்கள்!
சாந்தம் உடையோர் பேறுபெற் றொரெனத்
தத்துவமும் சொன்னார் - இந்தத்
தாரணி முழுவதும் அவர்களுக் குரியது
தலைவர்கள் அவரென்றார்!

ஏந்தும் கோபம் பழிவாங் கும்குணம்
எத்தனை எத்தனையோ - இங்கே
இடறி விழுந்தால் கொடுமை நடத்தும்
வித்தகர் எத்தனையோ!
மாந்தரின் வாழ்வில் தேவைப் படுவது
சாந்தம் தானென்றார் - அது
மண்ணையும் ஆளும் விண்ணையும் ஆளும்
மகத்துவம் பாரென்றார்!
நீதியின் பாலே தாகங்கொண் டோரே

பேறுபெற் றோரென்றார் - அவர்

நிறைவே பெற்று முறையாய் வாழ்பவர்

அறமே தலையென்றார்!

சாதிக ளாலும் பேதங்க ளாலும்

தள்ளாடும் உலகம் - அது

தர்மம் ஒன்றை நம்பிய பிறகே

அடங்கிவிடும் கலகம்!

ஓதும் பொருளா தாரம் தனிலும்

உன்னத அறம்வேண்டும் - புவி

உயர்வும் தாழ்வும் இல்லா தான

வாழ்வினைப் பெறவேண்டும்!

இரக்கம் உடையோர் பேறுபெற் றோரென

இயேசுபிரான் சொன்னார் - அவர்

இரக்கம் காட்டி இரக்கத்தைப் பெறுவர்

இதுதான் பரிசென்றார்!

சுரக்கும் வட்டி பணத்தில் பற்று

தொழி ல் பெருங்கொள்ளை- யார்

தொழில் செய்தாலும் கூ தராது

செய்வது பெருந்தொல்லை

இறக்கும் மனிதன் தண்ணீர் கேட்டால்

ஊற்றுவதும் இல்லை இங்கு எல்லாம் இருந்தும் மனிதர்கள் நெஞ்சில்

இரக்கம் தானில்லை!

தூயமனத் தோர் பேறுபெற் றோரெனத்

தூயமகன் சொன்னார் - அவர்

தோன்றும் கடவுளை நேரில் காணபர்

சொர்க்கம் வருமென்றார்!

காயும் உடலை வாட்டி யெடுப்பது

காமம் களவுகளே - ஒரு

காலம் மயக்கும் இன்பங்கள் எல்லாம்
மறுநாள் கவலைகளே!
வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்
வாழ்க்கை பாலைவனம் - அவர்
தூய மனத்தில் வாழ நினைத்தால்
எல்லாம் சோலைவனம்!
அமைதி கொடுப்போர் பேறுபெற் றோரென
அன்புமகன் சொன்னார் - இங்கு
ஆண்டவன் பெற்ற பிள்ளைகள் எல்லாம்
அவர்கள் தானென்றார்!
தமையும் வாட்ப் பிறரையும் வாட்டும்
சண்டை சச்சரவு - தினம்
தன்னா டென்றும் பிறர்நா டென்றும்
பேசும் பொய்யுறவு!
இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி
எத்தனை வீண்கனவு - தினம்
இவை இல்லாது அமைதிகள் செய்தால்
இதயம் மலையளவு
நீதிக் காகத் துன்பம் உறுவோர்
பேறுபெற் றோரென்றார் - அவர்
நேரே அடைவர் விண்ணர சென்றே
நிச்சயமாய்ச் சொன்னார்!
மோதும் கொடுமை கண்ணில் கண்டும்
மூச்சுவிடா திருந்து - சுய
மோகம் தீர்த்து வாழ்வோர் சிலபேர்
சுயநலமே நிறைந்து!
வேதனை தீர்க்கத் தம்மை வருத்தும்
ஞானிகள் தாம் எவரோ - அந்த

விண்ணக அரசை என்றும் அடைந்து

வாழ்பவர்கள் அவரே! - கண்ணதாசன்

சிக்கனம்

உரைநடையின் சிக்கனந்தான் கவிதை - ஓங்கும்

உணர்ச்சிகளின் சிக்கனந்தான் அடக்கம்; காதல்

வரவேற்பின் சிக்கனந்தான் பெண்ணின் நாணம்

மாளிகையின் சிக்கனந்தான் குடிசை யாகும்

உரிமைகளின் சிக்கனந்தான் சட்ட திட்டம்

உணவுகளின் சிக்கனந்தான் பங்கீ டாகும்

அரசிய ன் சிக்கனந்தான் இரண்டே கட்சி

அனுபவத்தின் சிக்கனந்தான் நீதி நூற்கள்.

எப்படியும் வாழ்வதுதான் வாழ்க்கை என்றே

எண்ணுபவன் பொறுப்பற்ற மனித னாவான்

இப்படித்தான் நாம்வாழ வேண்டு மென்றே

எண்ணுபவன் சமூகத்தில் உயர்ந்தோ னாவான்

உப்பாக இருந்தாலும் நீரா னாலும்

உபயோகப் படுத்துவதில் அளவு வேண்டும்

அப்படிநாம் அளவறிந்து பயன் படுத்தும்

அதன்பெயரே சிக்கனமாம் அறிந்து கொள்வீர்.

ஆவிக்கு வேண்டுமெனில் அங்கம் வேண்டும்

அன்புக்கு வேண்டுமெனில் உள்ளம் வேண்டும்

பூவுக்கு வேண்டுமெனில் வாசம் வேண்டும்

புனலுக்கு வேண்டுமெனில் ஓட்டம் வேண்டும்

சேவிக்க வேண்டுமெனில் பக்தி வேண்டும்

சேமிக்க வேண்டுமெனில் புத்தி வேண்டும்

சேவிக்க பக்தியெனில் பொருளைப் போற்றிச்

சிறப்படையச் சிக்கனந்தான் முத ல் வேண்டும்.

உருண்டோடிக் கொண்டிருக்கும் கூழாங் கல் ல்
ஒருபோதும் பாசிவந்து படிவ தில்லை
வரவுக்குத் தக்கபடி செலவு செய்து
வருவோரைத் துன்பங்கள் தொடுவ தில்லை
சிரமங்கள் பெரும்பாலும் குறைய வேண்டின்
சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வாழ்வில்
பரபரப்பாய் மினுமினுப்பாய் வாழ்வ தாலே
பயனில்லை நாட்டுக்கும் நன்மை இல்லை.

பேரோடும் புகழோடும் வாழ்வ தற்குப்
பேரறிவே துணைபுரியும்; நாமெல் லோரும்
சீரோடும் சிறப்போடும் வாழ்வ தற்குச்
சிக்கனமே துணையுரியும்; பகட்டு வாழ்க்கை
நீராவி போன்றதுவாம்; சிக்க னந்தான்
நீருற்றைப் போன்றதுவாம் சிக்க னத்தை
வேரோடு பெயர்த்தெறிந்து வறுமை யுற்று
விக்கி விக்கி அழுதவர்கள் பலபே ருண்டு

- சுரதா

பாதுகாப்பைச் சுமந்து கொண்டு?

நண்டுக்கு வளை இருந்தது
மழைவந்ததும் -
உள்ளே ஓடிப் பதுங்கிக் கொண்டது.
ஆமைக்கு ஓடு இருந்தது
வெயில் வந்ததும் -
எல்லாவற்றையும் உள்ளே இழுத்துக் கொண்டது.

மனிதன் என்று ஒரு பிராணி!

அதற்கு வளை இல்லை;

உடம்பெல்லாம் ஓடு இல்லை;

மழை வந்தது; மனிதன் நனைந்தது;

வெயில் காய்ந்தது; மனிதன் உலர்ந்தது;

வளைவாயி ல் எட்டிப் பார்த்தது நண்டு;

மூக்கை வெளியே நீட்டிப் பார்த்தது ஆமை;

மனிதன் என்ற பிராணி

நீர்க்கோவை பற்றித்

தும்மிக் கொண்டே இருக்கும் என்று

பார்த்தன இவை -

பாதுகாப்பாக இருந்தவை அல்லவா?

மனிதன் விழுந்து கிடக்கவில்லை; -

அதன் போக்கிலேயே அது போயிற்று .

காலம் ஓடியது,

கனகாலம் சென்றது.

இன்னமும் -

நண்டுக்கு வளையே கதி -

ஆமைக்கு ஓடே கதி -

மனிதனுக்கோ ?

மழை அவன் சொன்ன இடத்தில் பெய்கிறது:

வெயில் அவனுக்குப் பயந்து ஓடுகிறது;

அகிலமே அவனோடு நட்புக் கொள்ள வருகிறது;

பழைய தனிவளைகளையே புதுக்குபவர்கள்

பழைய பாதுகாப்பையே சுமந்து திரிபவர்கள்

சிந்திப்பார்களா? - சாலை இளந்திரையன்

புதுக்கவிதைகள்

வழித்துணை

என்றோ நமது புராணங்களில் படித்த ஒரு கதை இதற்கு ஆதாரம். கதையின் கருவை மட்டும் எடுத்துக் கொண்டேன். கருவுக்கும் உருவுக்கும் இடைப்பட்ட சப்த தாதுக்கள் என்னுடையவை.

1.

பல்லாண்டு பல்லாண்டாய்
பாண்டங்கள் செய்து
பழுத்தவிரல் படைத்த
பண்டைப் பழங்குயவன்
பணிசெய்யும் வேளையின்
இடைநேரத் திரையில்
முயலுதடு, மூக்கறையன்,
பன்றிக்கண், தொன்னைச் செவி,
குச்சிக்கால், மோழைவிரல்,
ஏற்றச்சால் வயிறு,
மழை கரைத்த ரஸ்தா
கப்பில்கல் பல்வரிசை -
படைதிரண் பெடழுவதைப்
பார்த்துப் பதைத்தான்.

ஏமாற்றும் காற்றை
உட்கொண்ட பாண்டங்கள்
ஒ க்காத பேச்சில்
வினவுவதை உணர்ந்தான்.
“பலயுகமாய்ப் பணியில்
விரல்பழுத்துப் போனாலும்
நின்று நிதானிக்க
நேரம் கிடைக்காமல்,
காலத்தின் திருட்டுகதி
குளம்படிக் கஞ்சி,
வெந்ததும் வேகாததுமாய்
பச்சையாய்,
அரை வேக்காடாய்,
அவசரத்தில் பாண்டங்களை
அறுத்துத் தள்ளும்
சட்டிபானைக்
கடைக்காரனா நீ?”
மர்மம் அறியாத
மலட்டுக் கலைஞனா?
வனப்புக் கடலறியா
வாவித் தவளையா?”
பேச்சைச் கேட்டதிர்ந்து
நிலைபுரண்டு மண்ணில்
நெடும்பனையாய் வீழ்ந்த
பண்டைப் பழங்குயவன்
குமரபுரக் காட்டின்
மூ கைக் காற்று

முகத்தில் பட்டதும்
விழியைத் திறந்தான்.

2.

குமரபுரத்தி லொரு
தச்சன் - கொல்லன் -
கொத்தன் - கலைஞன்
எல்லாம்,
கற்பகத் தருவாய்
வேண்டுவோர்க்கு வேண்டுவதாய்
ஆகும் மேதை,
பொருளுக்கு அடிமை
ஆகாத பேதை.
செய்வதைச் சுத்தமாய்
செய்வதில் மனத்தை
கற்பூரமாக்கும்
இயல்புப் பைத்தியம்.
தச்சன் கொத்தன் என்று
வில்லைகள் ஒட்டி,
பல்வேறு பணிகளுக்கும்
பரிந்தழைத்தாலும்,
வேலையைக் கறந்து
கூ க்கு நாமம்
குழைத்துப் போட்டாலும்
பதறாத ஊமை,
சிதறாத ஆமை.
செய்யும் வேலையன்றி
சாயுஜ்ய மறியாத

செங்கால் கொக்கு,

செயலும் சித்தமும்

விரலும் திறமையும்

ஒன்றாகி வாழ்வில்

தலைமை தந்தாலும்

தனிப்பிறவி நடத்தூடே

செல்லும் தேனீ

சுவடில்லாப் பாதையில்

வழிகாட்ட

நத்தைக்குக் கொம்புண்டு

யானைக்கு முன்கால் உண்டு,

குருடனுக்குக் கோலுண்டு;

தச்சனோ

தினத்திற்கும் வழிகாட்டும்

கைக்கோலைச் செய்ய

வனத்திற்கு ஓர் நாள்

வழிந்தாடி வந்தான்.

காலையில் வந்தவன்

கண்ணோட்டம் விட்டான்;

மருதை, மா, பலா,

கருங்கா , நாகை,

வாகை, வேங்கை,

கல்லாலம், காட்டுப்பனை,

வெப்பாலை, நிலவேம்பு,

காட்டிலந்தை, குருந்தை -

அத்தனை மரங்களும்

அன்பார்ந் தழைத்தன.

என்றாலும்

தகுந்த கொம்பைத்

தேர்ந்தெடுக்கும் சோதனையில்

கடமைக்கும் கலைக்கும்

கருணை நெகிழ்வேது?

கருங்கா பாறாங்கல்,

மருதை மாம்பழநார்.

கல்லாலமதை இழைத்தால்

இழைப்புளியின் வாயுதிரும்,

காட்டுமர வகை எல்லாம்

தனித்தனியாய் சோதித்து

நல்லதைப் பொறுக்க

பிடித்தநாள் கணக்கை

விழிதிறந்த குயவன்

வியப்புடனே கணித்தான்.

தான் விழுந்த நாளில்

நண்டுநடமாடும் கடகத்தில் இருந்த ரவி

இன்றோ முதலைக் கரவிருக்கும்

மகரத்தில் தென்பட்டான்.

வெண்மரக் கிளை எதிரே

வெட்டிக் கிடந்தது.

மரம் பொறக்கவா

மாதம் ஆறு?

ஆறு மாதத்தில்

அவனாயிருந்தால்

ஆறு லக்ஷம்

அறுத்தெடுதிருப்பான்!

காலக் கண்ணற்று

கிணற்றில் வளையவரும்

ஆறுகால் பூச்சி இவன்

என்று நகையாடிப்

பழங்குயவன்

வானேறிச் சென்றான் .

ஆதிக்குயவன்

அமைதியுடன் சூளையிலே

பண்டைப் போக்கில்

பாண்டங்கள் செய்தாலும்,

அதிசயமாய்,

தச்சனும் மரக்கிளையும்

மனஅலையில் அமிழ்ந்தெழுதல்

கண்டு படபடத்தான்.

இதை

அசட்டையுடன் அடிமனத்தில்

ஆள்வதற்கு விடவா?

அன்றி,

நினைவுடனே,

வானத்தில் சாளரத்தில் கண்ணோட்டி

பாலைப் புளிக்கவைக்கும்

பழக்கத்தைப் பயிலவா?

எண்ணெண்ணி எண்ணி

இருக்கையிலே மற்றொருநாள்.

3.

குமரபுர கிராமத்தார்,

தொழிலாளர், மற்றவர்கள்,

கூடவே தச்சனின்

நிலைகுலைந்த மனைவியும்

காணாதுபோன தச்சனைத்தேடி,

கடைசியில் காட்டில்

கண்டதும்

குடும்பம் மறந்து

ஊர்மறந்து

கைக்கோலைச் செய்யும் சிறு பணியில்

வாழ்வுப் பெருநாளை

பாழாக்கும் பேதையைக்

கண்டதும் .

“கைக்கோலைக் கடைந்தெடுக்க

வந்தமதி மச்சானே!

மரம்பொறுக்க

மாதம் ஆறானால்

பட்டைசீவி,

கழியின் வைரத்தில்

வடிவத்தைக் காண்பதற்குள்

பாவைஇவள் போய்விடுவாள்

குங்குமம் மஞ்சளுடன்;

வேலை என்றால் ஈக்கடிபோல்

தொட்டோட வேண்டும்

தண்ணீரில் உப்பாகித்

தானழிந்து போவதென்றால்

தமரும் அழிவார்;

தரணியும் அழியும்.

வாழ்க்கைப் பெருநதிக்கு

நின்று,

திரும்பி,

நெடுநோக்கை ஓட்ட

நேரமில்லை.

இருந்தால்

கிருதயுகத்தில் துவக்கிய கைக்கோலை

க யில் எடுத்துவரப்

போதிருக்கும்

ஆனாலோ

காலம் நிக்காது.

கைக்கோலும் தடுக்காது

வா வீடு" என்று

வக்கணைகள் படித்தார்;

"செய்வதைத் திருந்தச்

செய்வதே வேலை,

யோகம்,

ரவிகூறும் மர்மம்,

புவிகூறும் கர்மம்,

வயிற்றுக்காய் வேலை என்றால்

நெஞ்சில் ஒரு பிசாசுத்தலை

நில்லாமல் ஆடும்.

ஒதுக்க முடியாத

உள்ளத்து உந்தலானால்

கட்டாந்தரைகள்

கனக மாளிகையாகும்.

கையே கடவுளாய்

சோலைகளாய் ஆலைகளாய்

வாழ்வின் திருவாக்கை

வெளிஎங்கும் எழுதிவிடும்.

வேளையிலே வான்தோன்றும்.

காலத்தின் வாலாடாது .

கடமை முடிந்ததும்

கைக்கோலழகோடு

காலாற வருவேன்.

கூ க் கணக்கும்

காலக் கணக்கும்

படித்தவர் சொன்னாலும்

பழுத்தவர்க் கில்லை"

விளக்கத்தைக் கேட்டு

பித்துப்பிடித்தவர் போல்

நின்றவர்கள் வாயடைத்துத்

திரும்பினர் குமரபுரம்.

4.

குமரபுரக்காட்டில்

தச்சனும் ஊராரும் வாக்காடி,

பின்னர்,

ஊரார் உளைந்து

ஊருக்குத் திரும்பியதை

வானத்துச் சாளரத்தால்

வாங்கிய பழங்குயவன்

சித்தத்தலைகள்

சிரிப்பிடையே சொல் யதை

உன்னிப்பாய்க் கேட்டான்.

“வயிற்றுக்கு மிஞ்சிய

விஷ்ணுவைக் காணாதார்க்கும்,

காலம் நில்லாதென்னும்

கணக்குப் பிள்ளைகளுக்கும்,

நினைப்புத் தடித்து

நிகழும் நிமிஷத்தில்

புணர்ந்தின்பம் காணும்

அசட்டுத் தச்சனுக்கும்

இடையே

உருண்டு வரும் அலையே

மெய்யான வாழ்வின்

எல்லைத் துவக்கமா?

சித்தத்தலைகள் காட்டியகட ல்

ஆழும் முனைப்புத்

தகுமா உனக்கு?

மனம்துயிலக் கைஓடும்

வினைவிளைவில் அழகா?

மனம் விரலாய் மாறுவதால்

உயிரியக்கில் வனப்பா?

வனப்பு மேலா

கணக்கா?

தரமா அளவா?”

தத்வத்தின் அலைகள்
தறிகெட்டுஓட,
காலத்தின் இறகு
கமுக்கமாய்ப் பறக்க,
சிந்தனை ஏக்கம்
குயவனுக்கே னென்று
சாளரத்தை விட்டுத்
திகிரியைச் சுழற்றினான் .
குமரபுரக் கலைஞனோ
ஒருமையுடன் கைக்கோலை
இழைப்பதில் இருந்தான்.
மரத்தின் இலைகள்
பழுத்து உதிர்வதும்
பருவங்கள் தோன்றிப்
பதுங்கி மறைவதும்
பார்க்காத லயத்தில்
பணியாற்றி வந்தான்.

5.

காலத்தின் ஆற்றல்
கரையோரம்,
பரிச ல் கறுந்தேவன்
படர்ந்து கிடந்தாலும்
பாதைவழி எங்கும்
விழிநட்டிருந்தான்.

குமரபுரத்தார்கள்
ஒருவர்பின் ஒருவராய்

பரிச ல் ஏறிப்

பணிவுடன் அமர்ந்ததைப்

பார்த்துப் பதைத்தான்

“வயதில் பழுத்தவர்கள்,

வா பர்கள்,

இடை வயதோர்,

நோயுள்ளோர் இல்லாதோர்,

அவசரமாய் வந்தேற,

வயதில் மூத்த

கலைக்காரன்,

கலங்கல்காரன்,

மடத்தச்சன்,

அவன்மட்டும் வராத வயணமென்ன!”

பல்தெரியக் கேட்டான்!

“சங்கொ க்க நாங்கள் வந்தோம்

தங்கிவிட்டார் தத்துவத்தை

நாங்கள் ஏதும் அறியோம்”

காலம் முகஞ்சுளித்து,

தள்ளுகோ லெடுக்கப்

பரிசல் பறந்தது

கறும் வெளியினூடே.

6.

அன்றொருநாள் காட்டில்

ஊரார்கள் வந்து,

பேய்பிடித்த தச்சனென்று

உலகவழி வேப்பிலையால்

ஓட்டமுயன்று

மனம்முறிந்து திரும்பியதும்,
தச்சன்,
காற்றிடித்த மலையாகக்
கலையாதிருந்ததுவும்,
கண்டிருந்த குயவன்
திகிரியை உருட்டி,
நிற்காமல் கணக்காய்ப்
பாண்டங்கள் வளைந்தாலும்,
குடுக்கைக்குள் கரப்பு
கொரகொரப்பது போலுணர்வில்
உறுத்தல் நிலைகுலைக்க,
கலைஞனிடம்பேசி
கர்மத்தின் மர்மத்தைக்
கண்டறியும் கிண்டலுடன்
காட்டுக்கு வந்தான்.

வந்தாலோ?
வானத்தமைதி
வடித்தெடுத்த வதனம்,
தண்ணீரில சூரியஒளி
தத்தளிக்கும் மேனி,
காலத்தின் சுவடுகள்
பதியாத பாங்கு,
கண்ணாழ்ந்த கையில்
கலையான கொம்பு.

“காட்டுக்கு வந்த அன்று
சிம்மத்தில் இருந்த குரு

இன்றும் இருக்கின்றான்.

ஈராறு வருடம்

இன்றோடு ஓடியும்,

கொம்பைத் தேர்ந்து,

தோலெடுத்து,

இழைத்து,

சீர்திருத்தம் செய்யுமுன்

பெரியதலை, சின்னத்தலை,

வாடிவிழுந்தமனைவி,

ஊருடனே ஒத்துப்போய்

அறிவாளி யானவர்கள் -

அனைவரும் அக்கரையைச்

சேர்த்துவிட்டார் ரகசியமாய்.

இருந்தும்

மாயத் தச்சன்மட்டும்

காலத்திற் கணைகட்டி

குறையா ஒளியாய்,

வாடாமலராய்,

ந யாக் கலைஞனாய்

கைக்கோ ல் கருத்தழிந்து

காலத்தைக் கடக்க

கைகொடுத்த கோலெதுவோ?

காலமவன் காலடியில்

கமலாசனமிட்டு

தியானத்தமர்ந்ததனால்,

தான் ஆன கற்பனைத்

தானாய் அழிந்திட,

நிலையான இளமையின்
மலைமிஞ்சி நின்றதோ?

காலத்தின் ஜபமாலை
உருட்டலுக் கஞ்சி,
திகிரியை நிறுத்தாமல்,
பண்ணிய பாண்டங்களின்
பவுசுகளை எண்ணாமல்,
கடமைக்கும் கலைக்குமிடை
கல்சுவரை எழுப்பியதால்
கடனக்கு வேலை,
கணக்குக்குப் பாண்டம்
செய்யும் தொழிலாளி
வகைஒன்றைச் சேர்ந்ததனால்
ஈனம்தான் மகசூலா
பொல்லாப்புத்தான் பரிசா?"

இவை நினைந்து நினைந்து
நெஞ்சம் உளைந்த
பழங்குயவன் தச்சனிடம்
கைகட்டி நின்றான்.
7.
ஆண்டுகள் பலவாச்சு,
காடுமேடாச்சு,
மேடு காடாச்ச,
குமரபுரம் இருந்தஇடம்
புல்மண்டிப் போச்சு.
கைக்கோலை மேலும்

அளவாக்கி மெருகூட்டி

தலையில்

யாளிமுகம் அமைத்து

கண்ணுக்கு நெருப்புக்கல்

ஒளியைப் புதைக்கும்முன்

காண்டஹார்மன்னர் பரம்பரை

இலை உதிர்காலத்து

வாதா மரம்போல்

இலை இலையாய் உதிர்ந்து

மொட்டைப்பேய் மரமாகி,

காலக் கொடூரத்தின்

கண்ணாடி ஆயிற்று.

8.

ஆதிகுயவனுக்குப்

பகலுண்டு இரவுண்டு.

வயதெல்லை உண்டு.

ஆதி அன்னைக்கு

இவை ஏதும் இல்லை.

திகிரியைச் சுழற்றி

கைஓய்ந்த குயவன்

கண்ணோயும் இரவுக்குக்

காத்திருக்கும் அந்தியில்

காட்டுக்கு வந்து

காவற்ற கலைஞனின்

கதிகாண வந்தான்.

தன்கண் வியப்பால்

விசும்பாய் விரிந்தது
மன்னரின் பெயர்கள்
மண ல் தெரிந்தன.
கைக்கோ ன் கைப்பிடி
முடியாமல் இருந்தது.
தச்சனின் இளமை
குன்றாமல் எரிந்தது.
தான்வெல்லாக் காலத்தை
அவன் வென்றுவிட்டான்.
தான்காணா மர்மத்தை
அவன் கண்டு விட்டான்
என்றெண்ணி இருப்பிடம்
ச த்துத் திரும்பி
பிரும்மாவின் இரவில்
ஒன்றாகி விட்டான்.

9.

பிரும்மாவின் இரவு
கரைந்தோடும் காலை
குயவன் தன் சூளைக்குக்
கருத்தோடு வந்தான்
சூளை இருந்த இடம்
சுடராய் இருந்தது
திகிரி இருந்த இடம்
தேனாகிவிட்டது.

மாய விளைவுகளை
கண்ணுற்ற குயவன்

மர்மப் புதுமை எதோ

அண்டத்தை அளாவும்

அழகைக் கண்டு

காட்டில் இறங்கினான்.

கண்ணெதிரே கைக்கோலா?

வெந்தழ ன் நேர்நாக்கா?

மின்னின் மினுக்கா?

மெய்ப்பொருளின் கதவிடுக்கா?

அது

கைக்கோ ன் பிடியா?

உயிரியக்கைக் காட்டும்

உள்ளார்ந்த கண்ணா?

பேரணுவின் சூக்குமத்துக்

குறியீட்டுக் சுழலா?

அவன்

தச்சனா, தச்சனா

தச்சன் தானா?

முத்தொழில் பிரிவினைகள்

மூடத்தனம் கண்ட

முதல் குயவன்

மனமடங்கி மேலேற

எண்ணிய நேரத்தில்

காலக் கணக்குப்படி

புதுப்பிரும்மப் பட்டம்

பெறுவதற்குப் புதியவன்

வருவதைக் கண்டான்

அயர்ந்தான்

அவிந்தான் .

புல்கள் சிரித்தன,

தச்சனும் சிரித்தான்.

இழைப்புளி சீவிய

மரச்சுருள் ஒன்று

கால்மீது காற்றில்

உருண்டு சிரித்தது.

புல்கள் சிரித்தன.

– ந. பிச்சமூர்த்தி

விருட்ச மனிதர்கள்

மரங்கள்போல் வாழ்வு என்று கிடைக்கும்?

மோனமும் அழகும் அங்கு கூடி நிற்கின்றன

கவலைஇல்லை

விபத்தும் நோயும் வறுமையும் உண்டு

கவலைஇல்லை.

செடிகளின் வறுமையைப் பற்றி யோசித்திருக்கிறோமா?

மிருகங்கள்பறவைகள்புழுக்கள்பூச்சிகள்செடிகள்

இவற்றின் துக்கங்களைப் பற்றி யோசத்திருக்கிறோமா?

இவற்றையும் சேர்த்து யோசிக்கும்போது

நம் கஷ்டங்கள் தீரும்.

மனிதனுக்காக ஜீவன்கள் அழிந்துகொண்டிருக்கும்

வரையிலும்

'என்னை சந்தோஷமாக வை' என்று

மனிதன் எப்படி யாரிடம் கேட்க முடியும்?

மரங்கள் உன்னதமானவை

கம்பீரமான எளிமை

நிர்மலமான இதயம்

மேலே மேலே என்று செல்லும் அவா

சூரியக் கிரணங்களில் குளிப்பதில் மோகம்

மண்ணை எப்போதும் மறக்காத தன்மை

மௌனம்.

மனிதர்கள் மரங்கள்போல் வாழும் காலம் வரும்.

- பசுவய்யா

ஸ்டேஷன்

ரயிலை விட்டிறங்கியதும்

ஸ்டேஷனில் யாருமில்லை

அப்பொழுதுதான்

அவன் கவனித்தான்

ரயி லும் யாருமில்லை

என்பதை;

'அது ஸ்டேஷன் இல்லை'

என்று நம்புவதி ருந்து

அவனால் அவனை

விடுவிடுத்துக் கொள்ள

முடியவில்லை

ஏனென்றால்

ஸ்டேஷன் இருந்தது.

- நகுலன்

வார்டு

வெளிறிப் படர்ந்த

மருத்துவ மனைக்கூரை

முகமாகக் கூம்பிற்று.

‘வா’வென்றழைத்து

வாயாகிற்று.

தலைமாட்டில் உயிரின்

விபரப் பதிவுகள்.

காலருகே, சற்றே எட்டி ஒரு

கருவியின் திரையில்

இதயத்தின் கடிகாரம்.

விஞ்ஞானத் தாதுத் துகள்கள்

உதிரத்தின்

நடைபாதை நாளத்தில்

ஓடும் உயிருடன்

ஏட்டிக்குப் போட்டி

போடும் துடிப்புகள்.

ஓடும் உயிரை

ஓடாது நிறுத்துகிற

நிபுணர்கள் கூடி

வாழ்வின் அவல

விபத்துக்கு

அணைபோட ஓடி

அவசரத்தைச் சடங்காக்கும்

ஆளரவக் காலடிகள்.

‘வா’ என்றது மீண்டும்

வெண்கூரை

தயக்கம்.

இன்னும் ஒரு கணம்.

கெஞ்சல்!

மறுகணம்

யுகப் பிரளயம்! இல்லை

இதயத்தின்

ஒரேஒரு இறுதி

ஜீவமரணப் போர்!

காலடியில்

ஒளிர்ந்து ஒளிர்ந்து

எகிறிய கணங்களை

கடிகாரத் திரையிலே

விழுங்கிற்று ஒரு

பேயிருள்.

கூரை வழியாக

வெற்று வெளியாக

மேல் கீழ்

கீழ் மேலாயிற்று.

நாபியி ருந்து

எல்லையற்று

எஃகு நூ லையாய்

எங்கோ ஏதோ

ஒரு துகள்

ஓடிற்று ஒளிர்ந்து.

– பிரமிள்

மண்

உயிர்களின் கருப்பை நான்

சமாதியும் நானே!

புற்கள் என் புளகம்

பூக்கள் என் கனவுகள்

குறிஞ்சி என் கொங்கை

முல்லை என் கூந்தல்

மருதம் என் மணிக்கரம்

நெய்தல் என் சேலை

பாலை, என்

வேனிற்கால வியாதி!

வசந்தத்தில்

நான் பூப்படைகிறேன்

கார்காலத்தில்

கலவி செய்கிறேன்

இலையுதிர் காலத்தில்

விரதமிருக்கிறேன்

உங்கள் தாய்

பத்து மாதம்தான்

உங்களைச் சுமக்கிறாள்;

நானோ

ஆயுள் முழுவதும் சுமக்கிறேன்

பெற்றவளே 'பிணம்' என்று

உங்களை ஒதுக்கும்போதும்

என் வயிறு உங்களை

ஏற்றுக் கொள்கிறது

உங்களை

முத ல் என் மார்பில்
தவழவிட்டு
இறுதியில் வயிற்றில்
ஏந்தும் நான்
உங்கள் தாயின் எதிர்ப்பதம்!

ஒரே நேரத்தில் நான்
உங்களுக்குச் சமாதியாகவும்
விதைகளுக்குக் கருப்பையாகவும்
இருக்கிறேன்

நான் ஆக்குகிறேன்
காக்கிறேன்
அழிக்கிறேன் .
ஆக்குவதற்காகவே
அழிக்கிறேன்

கடவுளுக்கு நான்
காரியதரிசி!

உங்கள் தொட்டில் நான்
ஊட்டும் வட்டில் நான்
கடைசியில் தூங்கும்
கட்டிலும் நானே!

மண் என்ற பெயரில்
என் மீது
ஆசை வைப்பவரைப்

பழிப்பதும் நீங்கள்தான்
நாடென்ற பெயரில்
ஆசை வைத்தால்
‘பற்று’ என்று
பாராட்டுவதும் நீங்கள்தான்

தான் மலடில்லை
என்னை யாரேனும்
மலடி என்றால்
அவர்கள்
ஆண்மையைத்தான்
சந்தேகிப்பேன்

உழைக்காமல்
‘இல்லை’ என்கிறார் சிலர்
அவர்களைக் கண்டு சிரிக்கிறேன்
உழைத்தும்
‘இல்லை’ என்கிறார் சிலர்
அவர்களைக் கண்டு அழுகிறேன்

என்னை ஆள விரும்புகிறவனை
நான் வெறுக்கிறேன்
என்னில் ஆக்க விரும்புகிறவனை
நான் காத க்கிறேன்

நீங்கள் என்னைக்
காலால் மிதிக்கிறபோது
பெருமை அடைகிறேன்.

ஆனால் என்னில்

பிச்சைப் பாத்திரம் செய்து

கையில் ஏந்துகிறபோது

நான் அவமானப்படுகிறேன்

நீங்கள் என்னைக்

கீறுகிறீர்கள்

நான் சோறு தருகிறேன்

என்னைக் காயப்படுத்துகிறீர்கள்

நான் பாலூட்டுகிறேன்

பெண்களுக்குப்

பொறுமைக் குணம் வந்தது

மசக்கை நேரத்தில்

என்னைத் தின்றதால்தான்

நீங்களும் நானும் வேறல்ல

காலக் குயவன்

என்னைப் பிசைந்து

பரிணாம சக்கரத்தில் வனைந்த

பாத்திரங்கள்தாம் நீங்கள்!

- அப்துல் ரகுமான்

அலைச்சல்

இக்கரைக்கும் அக்கரைக்கும்

பரிசல் ஓட்டிப்

பரிசல் ஓட்டி

எக்கரை

என்கரை என்று

மறக்கும்

இடையோடும் நதி மெல்லச்

சிரிக்கும்.

- கல்யாண்ஜி

சினேகிதனின் தாழ்வான வீடு

கறுப்பேறிப் போன

உத்திரம்,

வீட்டின் வளர்ந்த பிள்ளைகளுக்கு

கையெட்டும் உயரத்தில்.

காலேஜ் படிக்கும் அண்ணன்

அதில் அவ்வப்போது

திருக்குறள்,

பொன்மொழிகள்

சினிமாப் பாட்டின்

நல்லவரிகள் - என

எழுதியெழுதி அழிப்பான்

எழுதுவான்.

படிப்பை நிறுத்திவிட்டு

பழையபேட்டை மில் ல்

வேலை பார்க்கும் அண்ணன்

பாஸிங்ஷோ சிகரெட்டும்

தலைகொடுத்தான் தம்பி

விளம்பரம் ஒட்டிய

வெட்டும்பு தீப்பெட்டியும்

உத்திரத்தின்

கடைசி இடைவெளியில்

(ஒளித்து) வைத்திருப்பான்.

அப்பா வெறுமனே

பத்திரப்படுத்தி வந்த

தாத்தாவின்- பல

தல புராணங்கள்

சிவஞானபோதம்

கைவல்ய நவநீதம்

சைவக்குரவர் சரித்திரங்கள்

பலவற்றை,

வெள்ளையடிக்கச் சொன்ன

எரிச்ச ல், பெரிய அண்ணன்

வீசி எறியப் போனான்.

கெஞ்சி வாங்கி

விளக்கு மாடத்தில் அடைத்ததுபோக

உத்திர இடைவெளிகளில்

ஒன்றில் தவிர

அனைத்திலும்

அடைத்து வைத்திருப்பாள்

அவன் அம்மா.

முதல் பிள்ளையை

பெற்றெடுத்துப் போனபின்

வரவே வராத அக்கா

வந்தால்-

தொட்டில்கட்ட

தோதுவாய் - அதை

விட்டு வைத்திருப்பதாயும்

கூறுவாள் .

நின்றால் எட்டிவிடும்

உயரம்

காலைக் கயிற்றால் பிணைத்து-

இதில் தூக்கு மாட்டித்தான்

செத்துப் போனார்

சினேகிதனின்

அப்பா.

- கலாப்பிரியா

நீரின்றி அமையாது உலகு

மழைத்துளிகளெனக் கண்களிரண்டும்

உருண்டுகொண்டிருக்கின்றன

அருவியெனக் கூந்தல்

வழிந்துகொண்டிருக்கிறது

நதியென உடல்

வாழ்வைக் கடந்து கொண்டிருக்கிறது

கடலடைந்த கணத்தில்

எல்லையற்றதாகிச் சுழல்கிறது

உடலுலகு.

-மாலதி மைத்திரி

பொருள்வயின் பிரிவு

அன்றைக்கு

அதிகாலை இருள் பிரிந்திருக்கவில்லை

நிசப்தம் காடாக விரிந்துகிடந்தது

சாரல்மழை பெய்து

சுகமானகுளிர் வியாபித்திருந்தது

அயர்ந்து
தூங்கிக் கொண்டிருந்தான் பெரியவன்
அரவம்கேட்டுவிழித்த சின்னவன்
சிரித்துவிளையாடிக்கொண்டிருந்தது
சித்திரமாக இருக்கிறது கண்ணுக்குள்

இவள்
வெந்நீர்வைத்துக் கொடுத்தாள்
வெளுத்த துணிகளை எடுத்துவைத்தாள்
வாசல்வரை வந்து
வழியனப்பிவைத்தாள் தாய்போல

முதல்பேருந்து
ஓட்டுநர் இருக்கைக்குப் பின்புற ஜன்னலோரம்
பிழைப்புக்காக
பிரிந்து வந்துகொண்டிருந்தேன்
மனசுகிடந்து அடித்துக்கொள்ள.

- விக்கிரமாதித்தன்

வாழ்வின் கசப்பு

வாழ்வின் கசப்பு
மரங்களுக்கும்
உண்டென்று
சொல் நிற்கிறது
வேப்ப மரம்.

அணில் குதித்தோ

காற்றசைத்தோ

தோட்ட வெளியெங்கும்

பரவும் வேப்பம் பூக்களை

வாரிக் கொட்டுகிறேன்.

அதற்காக நியமிக்கப்பட்டாற்போலவே

கச்சிதமாய்

செய்ய முடிகிறது

என்னால்.

பூக்கள் உதிர்வதைப் பார்ப்பதும்

பெருக்கிக் கொட்டுவதுமே

என் வேலையாயிருந்தால்

வாழ்வின் கசப்பு

வராது போயிருக்கலாம்.

- அ. வெண்ணிலா

ஹைக்கூ கவிதைகள்

அறுவடைப்பாட்டில்

கலந்தே கேட்கிறது

பசித்த குரல்

- மு. முருகேஷ்

கிடைக்காது

என்று தெரிந்தும்

முயற்சிக்கிறேன்

ஆசை!

- ராஜாமுகமது

சிதறியது முத்துக்கள்

நட்சத்திரமாய்

மழலையின் சிரிப்பு

- சித்ரபாரதி

இங்கு குழந்தைகள் வேலையில் இல்லை

போர்டை விற்றுக் கொண்டிருந்தான்

சிறுவன்

- சித்ரபாரதி

உதிர்ந்தப் பூக்களை

புழுதிப் பறக்க பெருக்கும்

பூந்துடைப்பம்

- ரவி ஆதித்யா

நல்ல தீனி

ஊடகங்களுக்கு

சாமியார்கள் கூத்து!

- கவிஞர் இரா.இரவி

பறிக்கப் பறிக்கத் துளிர்க்கும்

அட்சயப் பாத்திரம்

தேயிலைச்செடி!

- இரா.இரவி

அம்மா விரதமென்றால்

சும்மா இருந்தது

அரிசிப்பானை!

காகிதச் சிறகடித்து

கனவுப் பயணம்

படபடக்கும் பரிசுச்சீட்டு!

- இளந்தென்றல்

தூண்டி ல் சிக்கும்

மீனுக்குத் தெரியுமா

புழுவின் வ !

- அமுதபாரதி

குடிசை ஓட்டைகள்

காட்டிக்கொடுக்கும்

மழை!

- அமுதபாரதி

வருடிய காற்று

கவர்ந்தது

பூ வாசத்தை

- வண்ணைசிவா

அழுகையினூடே

குழந்தைச் சொல்கிறது

அழும் காரணத்தை

- வண்ணை சிவா

உரைநடை : நாள் மலர்கள்

சிறுகதைகள்

குளத்தங்கரை அரசமரம்

வ. வே.சு. ஐயா

.

பார்க்கப்போனால் நான் மரந்தான். ஆனால் என் மனஸிலுள்ளதையெல்லாம் சொல்லுகிறதானால் இன்னைக்கெல்லாம் சொன்னாலும் தீராது. இந்த ஆயுஸுக்குள் கண்ணாலே எத்தனை பார்த்திருக்கிறேன். காதாலே எத்தனை கேட்டிருக்கிறேன் உங்கள் பாட்டிகளுக்குப் பாட்டிகள் தவுந்து விளையாடுவதை இந்தக் கண்ணாலே பார்த்திருக்கிறேன் சிரிக்கிறீர்கள் சொல்லுகிறதலே எள்ளளவேணும் பொய்யில்லை. நான் பழைய நாளத்து மரம். இப்போதொண்ணூறு நூறு வருஷமிருக்கும். உங்கள் கொள்ளுப்பாட்டிகளின் பாட்டிகளெல்லாம் நம்ம குளத்தங்கரைக்குத்தான் குடமுங் கையுமாக வருவார்கள்.சிலபேர் குழந்தைகளையும் கூட கூட்டிக்கொண்டு வருவார்கள். பட்டடுப்பட்டாய் இருக்கும் குழந்தைகள். அதுகளைக் கரையில் விட்டுவிட்டுப் புடவைகளை அழுக்குப் போகத் தோய்த்து, மஞ்சள் பூசிக்கொண்டு அழகாக ஸ்நாநம்

பண்ணுவார்கள். குழந்தைகளெல்லாம் ராஜகோபாலன் போலத்தவுந்து கொண்டு மல்லிகைச் செடியண்டே போய் மல்லிகை மொக்குகளைப் பார்த்துச் சிரிக்கும். அந்தக் காலத்திலே ஒரு பவள மல்லிகைச் செடி, முத்து முத்தாய்ப் பூப் பூத்துக் கொண்டு அந்த ஓரத்திலிருந்து குளத்தங்கரையெல்லாம் கம் என்று மணம் வீசும். இப்பொழுது ஆதரிப்பாரில்லாமல் பட்டுப் போய்விட்டது. கொஞ்சம் பெரிய குழந்தைகள் அதன் புஷ்பங்களைப் பொறுக்கி ஆசையுடன் மோந்துப் பார்க்கும்.. ஆ அந்த நாளையெல்லாம் நினைத்தால் என்ன ஆசையாயிருக்கிறது...

ஆனால் இப்போது நான் உங்களுக்கு அந்த காலத்து கதை ஒன்றும் சொல்லுவதாக இல்லை. மனசு சந்தோஷமாகயிருக்கும்போது சொல்லுகிறேன். ஏழெட்டு நாளாய் எனக்கு ருக்மணியின் ஞாபகமாகவே இருக்கிறது. பதினஞ்சு வருஷமாச்சு. ஆனால் எனக்கு நேற்றுப்போல் இருக்கிறது. உங்களில் ஒருவருக்கும் ருக்மிணியைத் தெரியாது. பார்த்தால் சுவர்ண விக்கிரகம் போலிருப்பாள் குழந்தை. அவளுடைய சிரிச்ச முகத்தை நினைச்சால் அவளே எதிரில் வந்து நிற்பது போல இருக்கிறது எனக்கு. அவள் நெத்தியில் அழகை இன்னைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். நல்ல உயரமாக இருப்பாள். அவள் கையும் காலும் தாமரைத்தண்டுகள் மாதிரி நீளமாயிருக்கும். அவள் சரீரமோ மல்லிகைப் புஷ்பம் போல் மிருதுவாக இருக்கும். ஆனால் அவள் அழகெல்லாமம் கண்ணிலேதானட. ஏன்ன விசாலம் என்ன தெளிவு என்ன அறிவு களங்கமற்ற நீல ஆகாசம் ஞாபகத்துக்கு வரும். அவள் கண்களை பார்த்ததும்-நீலோற்பலம் நிறஞ்ச நிர்மலமான நீரோடையைப் பார்ப்பது போலிருக்கும். பார்வையிலுந்தான் எத்தனை அன்பி எத்தனை பரிவு ஸோம வார அமாவாசைகளில் பரமாத்மாவை பூஜிக்கிறதற்காக என்னை பிரதஷிணம் செய்வாள். அப்போது அவள் என்னைப் பார்க்கும் பார்வையிலிருக்கும் அன்பை என்னவென்று சொல்லுவேன் என்னுடைய காய்ந்துபே பான கப்புகளுங்கூட அவளுடைய பிரேமையான பார்வை பட்டதும் துளிர்த்துவிடுமே! ஐயோ, என் ருக்மிணித் தங்கமே எப்போ காண்பேன் இனிமேல் உன்னைப் போல குழந்தையை

அவள் குழந்தைப் பருவம் முதல் அவளுடை.ய கடைசி நாள் வரையில் இங்கே வராத நாளே கிடையாது. அஞ்சாறு வயசின் போதெல்லாம் ஸதா ஸர்வ காலமும் இங்கேதான் விளையாடிக் கொண்டிருப்பாள். அவளைப் பார்த்ததும் வாரியெடுத்து முத்தங்கொடுக்க வேணுமேன்று நினையாதவர்இல்லை. எத்தனை அவசரமான காரியமிருந்தாலும்சரி நம்ம வேணுகோபால சாஸ்திரி இருந்தாரே அவர் காலமே ஸ்நாநஞ் செய்துவிட்டு, குழந்தை கை நிறைய மல்லகைப பூப்பறித்துக்

கொடுத்துவிட்டுத்தான் போவார். நம்மூர் மாடு கன்றுகள் கூட, எத்தனை முரடராக இருந்தாலும் சரி அவளை கண்டதும் உடனே முரட்டுத் தனத்தையெல்லாம் விட்டுவிட்டு, அவளுடைய சிறிய கைகளால்' தடவிக் கொடுக்க வேணுமென்று அவள் பக்கத்திலே போய் காத்துக்கொண்டிருக்கும்.

குழந்தைகள் என்றால் எனக்கு எப்பொழுதுமே ஆசை. ஆனால் அவள் வந்து விட்டால் போதும். மெய்மறந்து போய்விடுவேன். அவள் பேரில் துளி வெயில் படக்கூடாது. அவள் கொஞ்சம் ஒதுங்கியிருந்தால் கூட என் கைகளை நீட்டி அவளுக்குக் குடை பிடிப்பேன். என்னுடைய நாதனான சூரியனுடைய முகத்தைக் காலமே ஆசை பயப்பக்தியோடு தரிசனம் செய்தானதும் எனக்குக் குழந்தை ருக்மிணியின் ஞாபகம் வந்துவிடும். அவள் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பேன். அவள் வந்ததும் எனக்குள் அடங்காத ஆனந்தம் பிறந்து விடும். குழந்தைகளுக்குள் பேதம் பாராட்டக்கூடாதுதான். ஆனால் மற்ற யார் வந்தாலும் எனக்கு அவள் வருகிறது போல் இருப்பதில்லை. நான் மாத்திரமா ஊரிலுள்ள மற்ற குழந்தைகள் கூட அவள் வந்த பிறகுதான் பூரணமான ஆனந்தத்துடன் விளையாடும் அவள்தான் அவர்களுக்குகுள்ளே ராணி. அத்தனை காந்த சக்தியிருந்தது அவளிடத்தில்

அப்போதெல்லாம் அவள் அப்பா காமேசுவரையர் நல்ல ஸதிதியில் இருக்கிறார். குழந்தை பேரில் அவருக்கு மிகுந்த பிரேமை அவளுக்குச் செய்வதற்கு என்றால் அவருக்கு சலிக்கிறதே இல்லை. கடை வீதியில் பட்டுத்தினுசுகள் புதுசாக வந்திருப்பது ஏதாவது பார்த்தால் நம்ம ருக்மிணி அணிந்து கொண்டால் அழகாக இருக்கும் என்று உடனே வாங்கிக் கொண்டு வந்து விடுவார். முதல் தரமான வைரமும் சிவப்பும் இழைத்து அவளுக்கு நிறைய நகைகள் செய்திருந்தார். அவளுக்குப் பத்து வயசாயிருந்தபோது கோலாட்ட ஜோத்ரைக்கு என்று ஒரு பாவாடையும் தாவணியும் வாங்கியிருந்தார். அந்த நிலாவுக்கும் அவளுடைய அலங்காரத்துக்கும் அவளுடைய அழகுக்கும் என்ன ஏர்வை என்ன ஏர்வை கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது எனக்கு அவள் சரீரம். இன்னைக்கெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாலும் சலிக்காது. அவள் குரலைப்ற்றி உங்களுக்குச் சொல்ல மறந்து போய்விட்டேன் குயிர் என்னத்திற்கு ஆச்சு! தங்கக்கம்பி போல இழையும் அவள் சரீரம்ஜோத்ரைகளின் போதுதான் அவள் பாட்டை நான் கேட்டிருக்கிறேன். ஆனால், இப்போது நினைச்சாலுங்கூட அவளுடைய குரல் அதே இனிமையுடனும் நயத்துடனும் என் மனசில் கேட்கிறது.

அவளுக்கு வயசாக ஆக, அவளுடைய அன்பு வளர்ந்த அழகை என்ன என்று சொல்லுவேன் குழந்தையாக இருக்கும்போதே யாரிடத்திலும் ஒட்டுதலாக இருப்பாள். இந்த குணம் நாளுக்கு நாள் விருத்தியாய்க் கொண்டே ந்தது. தோழிகள் வேறு, தான் வேறு என்கிற எண்ணம் அவளுக்கு இராது. ஏழை வீட்டுப் பெண்ணாயிருந்தாலும் சரி, பணக்காரர் வீட்டுப் பெண்ணாயிருந்தாலும் சரி அவளுக்கு எல்லாத் தோழிகள் பேரிலும் ஒரே பயந்தான். இன்னும் பார்க்கப்போனால் ஏழைக் குழந்தைகள் பேரில் மற்றவர்கள் பேரில் விட அதிகமான பக்ஷம் பாராட்டுவாள். பிச்சைக்காரர்கள் வந்தால் கை நிறைய அரிசி கொண்டு வந்து போடுவாள் கண்பொட்டையான பிச்சைக்காரர்களைப் பார்க்கும் போது அவளை அறியாமலே அவள் கண்ணில் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகுவதை எத்தனை தடவைகளில் எட்டிப்பார்த்திருக்கிறேன் அவர்களுக்கு மற்றவர்களுக்குப் போடுவதைவிட அதிகமாகவே பிச்சைப்போடுவாள்.இப்படி அளவு கடந்த தயையும் இரக்கமும் அவளுக்கு இருந்தனால்தான் அவளை நினைக்கும் போதெல்லாம் எனக்கு கடினமான கோடைக்குப் பிறகு நல்ல மழை பெய்யும்போது உண்டாகும் அந்த நிரதிசயமான ஆனந்தம் உண்டாகிறது.

இவ்விதம் கண்ணுக்கு கண்ணாய் நான் பாவித்து வந்த என் அருமைக் குழந்தையின் கதி இப்படியா போகணும் நான் பாவி வைச்ச ஆசை பழாய்ப் போகணுமா பிரும்ம தேவனுக்குக் கொஞ்சங்கூடக் கண்ணில்லாமல் போய்விட்டதே ஆனால் பிரும்மதேவன் என்ன பண்ணுவான் மனுஷாள் செய்யும் அக்கிரமத்துக்கு?

ருக்மிணிக்குக் பன்னிரண்டு வயசானதும் அவள் அப்பா அவளை நம்மூர் மணியம் ராமசுவாமி ஐயர் குமாரன் நாகராஜனுக்குக் கன்னிகாதானமாகக் கொடுத்தார். கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தது. தோழிப் பொங்கலன்னிக்கும், ஊர் கோலத்தன்னிக்கும் அவள் ஸர்வாலங்காரத்துடனும் கிராமப் பிரதஷிணம் வருவதைப் பார்த்தேன். கண்பட்டுவிடும் அத்தனை அழகாயிருந்தது. அவள் தோழிகளுக்கு மத்தியில் இருந்ததைப் பார்க்கும்போது மின்னற்கொடிகளெல்லாம் சேவித்து நிற்க மின்னரசு ஜொலிக்குமே. ஆந்தமாதிரியேதான் இருந்தது.

காமேசுவரையர் ருக்மிணிக்குக் கல்யாணம் பந்தலில் நிறையச் சீரும் செனத்தியும் செய்திருந்தார். ருக்மிணியின் மாமியாருக்கும் மாமனாருக்கும் ரொம்பத் திருப்தியாயிருந்தது. கல்யாணத்துக்கு பிறகு மாமியார் அவளை அடிக்கடி அழைச்சுக் கொண்டு போய் அகத்திலேயே வைச்சுப் கொள்ளுவாள். ஆசையோடு அவளுக்குத் தலைபின்னிப் பூச்சூட்டுவாள். தன் பந்துக்களைப் பார்க்கப் போகும்போது அவளை

அழைச்சுக்கொண்டு போகாமல் போகவே மாட்டாள். இப்படி சகலவிதமாகவும் ஜானகி (அதுதான் ருக்மிணி மாமியார் பேர்) தனக்கு ருக்மிணியின் பேரிலுள்ள அபிமானத்தைக் காட்டி வந்தாள். மாப்பிள்ளை நாகராஜனும் நல்ல புத்திசாலி. அவனும் ருக்மிணியின் பேரில் மிகவும் பிரியமாய் இருப்பான். கிராமத்தில் அவர்கள் இருவருந்தான் ரூபத்திலும் புத்தியிலும் செல்வத்திலும் சரியான இணை என்று நினைக்காதவர் பேசிக் கொள்ளாதவர் கிடையாது.

இப்படி மூணு வருஷ காலம் சென்றது. அந்த மூணு வருஷத்துக்குள் எத்தனை மாறுபாடுகள் காமேசுவரையருக்குக் கையிளைச்சிப் போய்விட்டது. ரொக்க ஐவேஜியையெல்லாம் ஏதோ அருபத்து நாட்டுக் கம்பெனியாம். அதில் வட்டிக்குப் போட்டிருந்தார். நம்மூர்ப் பணம் நாலுகோடி ரூபாயையும் முழுங்கிவிட்டு அது ஏப்பம் விட்டுவிடவே, காமேசுவரையர் ஒரு நாளில் ஸர்வ ஏழையாய்ப் போய்விட்டார். ருக்மிணியின் தாயார் மீனாட்சியம்மான் உடம்பிலிருந்து நகைகள் தான் அவருக்கு மிச்சம். பூர்விக சொத்தான வீட்டையும் நிலங்களையும் வித்துத்தான் அவர் கொடுக்க வேண்டியக டன்களைத் தீர்க்க வேண்டியதாயிருந்தது. இப்போ குப்புசாமி ஐயர் இருக்காரே வாய்க்காங்கரையோரத்தில் அந்த வீட்டில் வந்து அவர் குடியிருக்கலானர். மீனாட்சியும் பார்க்கிறதுக்கு மஹாலட்சுமி மாதிரி இருப்பாள். அவளுடைய சாந்தத்துக்கு எல்லையே இல்லை. ஏத்தனை பெரிய கஷ்டம் வந்துவிட்டதே. இருந்தாலும் அவள் மனம் கொஞ்சமேனும் இடியவில்லை. ஏதோ இத்தனை நாள் சுகமாக வாழ்ந்தோம். யாரைக் கேட்டுக்கொண்டு ஸ்வாமி கொடுத்தார் அவர் கொடுத்ததை அவரே எடுத்துக் கொண்டு விட்டார். இதனலே என்ன இப்போ அவாளும் ருக்மிணியும் ஆயுஸோடு இருக்கிறவரையில் எனக்கு ஒரு குறைச்சலுமில்லை. இந்த தை மாஸத்திலே ருக்மிணிக்குச் சாந்திமுகூர்த்தம் பண்ணிப் புக்காத்துக்கு அனுப்பிவிட்டால் அப்புறம் எங்களுக்கு நிர்விசாரம். கஞ்சியோ கூழோ சாப்பிட்டுக்கொண்டு வழக்கம் போல்பகவத்தியானம் பண்ணிக்கொண்டே எங்கள் காலத்தைக் கழித்து விடுகிறனேம் என்று சொல்லுவாள். ஐயோ பாவம் நடக்கப் போகிற சங்கதியை அவள் எப்படி அறிஞ்சிருப்பாள்

கமேசுவரையும் ஐவேஜியில் கொஞ்சமேனும் தேறாது என்று ஏற்பட்டதும் ராமசுவாமி ஐயருக்கு அவருடனிருந்த சிநேகம் குளிர ஆரம்பித்துவிட்டது. இதற்கு முன்னெல்லாம் அவர் காமேசுவரையர் அகத்துக்கு அடிக்கடி வருவார். வழியில் அவரைக் கண்டால் பத்து நிமிஷம் நின்று பேசாமல் போகவே மாட்டார். இப்பொழுதே காமேசுரையர் தூர வருகிறதைக் கண்டுவிட்டால் எதோ அவசர காரியமாகப் போகிறது

போல இன்னொருபக்கம் திரும்பி வேகமாகப் போய்விடுவார். இப்படி செய்பவர், அவர் வீட்டுக்கு வருவதை நிறுத்திவிட்டார் என்று நான் சொல்லாமலே நீங்கள் நினைத்துக் கொண்டு விடுவீர்கள். ஆவர் சம்சாரம் ஜானகியும் அதேமாதிரி மீனாட்சியம்மாளிடம் நெருங்குவதை நிறுத்திவிட்டாள். ஆனால் இதையெல்லாம் மீனாட்சியம்மாளும் காமேசுவரயையும் ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. செல்வமுள்ளபோது, உறவு கொண்டாடுகிறது. அதுபோய்விட்டபோது வேத்து மனுஷாள் போலப் போய் விடுகிறது. இதெல்லாம் ஒரு சிநேகத்தோடு சேர்த்தியா.

ஆனால் அவர்கள் ருக்மிணி விஷயத்திலுங்கூட வேத்துமைபாராட்ட ஆரம்பித்து விட்டார்கள்., அறுபத்து நாட்டு உடைகிறதற்கு முந்தி சில மாதங்களாக ஜானகி பிரதி வெள்ளிக்கிழமையும் சாப்பிட்டானதும், ருக்மிணியை அழைத்துக்கொண்டு வரும்படி வேலைக்காரியை அனுப்பி விடுவாள். அன்னைக்கு, அவளுக்குத் தலைபின்னி, மைச்சாந்திவிட்டு சிங்காரிச்சு அகிலாண்டேசுவரி கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு போய்த் தரிசனம் பண்ணிட்டு அன்னைக்கு ராத்திரி முழுவதும் தங்கள் அகத்திலேயே வைத்துக்கொண்டிருந்து அடுத்தநாள் காலமேதான் அவளை அகத்துக்கு அனுப்புவாள். ஆனால் அறுபத்து நாட்டில் போனது போனது தான் என்று ஏற்பட்டுவிட்ட பிறகு வந்த முதல் வெள்ளிக் கிழமையன்னைக்கே எனக்கு ஆத்தில் இன்னைக்கு ரொம்ப வேலையாக இருக்கும் என்பாள் அடுத்த வெள்ளிக்கிழமை முதல் அவ்விதம் சொல்லியனுப்புவதைக் கூட நிறுத்திவிட்டாள். இது மீனாட்சிக்கும் காமேசுவரையருக்கும் மிகுந்த துக்கத்தைத் தந்தது. ருக்மிணியும், நம்மை இவ்வளவு இளக்காரம் செய்கிறாள் பார்த்தாயா நம்ப மாமியார் கூட என்று மிகவும் வருத்தப்பட்டாள்

இப்படிக் கொஞ்ச நாளாச்சு ஊரெல்லாம் குசுகுசு என்று பேசிக் கொண்டிருப்பார்கள். எல்லா ரகசியங்களும் குளத்தங்கரையிலே தான். ஆனால் அரை வார்த்தையுங் குறை வார்த்தையுமாகத்தான் என் காதில் விழுமேயொழிய முட்ட முழுக்க ஒரு பேச்சும் எனக்கு எட்டாது. ஊரிலே இப்படி எப்போதும் இருந்ததில்லை. எனக்கு மனசு குறுகுறுத்துக் கொண்டேயிருந்தது. என்னனவோ கெடுதலுக்குத்தான் இத்தனை ரகசியம் வந்திருக்கிறது என்று எனக்கு அப்பொழுதே தோன்றிவிட்டது. ஆனால் யாருக்கு, என்ன, என்ன என்று மாத்திரம் தெரியவில்லை.

கடைசியாக அப்படியும் இப்படியுமாய், அத்தையும் இத்தையும் கூட்டிச் சேர்த்துப் பார்க்கப் பார்க்க, கொஞ்சங் கொஞ்சமாய்ச் சமாசாரம் என்மனசுக்கு அத்துப்படியாச்சு. ராமசாமி ஐயரும் ஜானகியும் ருக்மிணியை வாழாதே பண்ணிவிட்டு நாகராஜனுக்கு

வேறு கல்யாணம் செய்துவைக்க நிச்சயித்துவிட்டார்கள் என்ன பண்ணுவேன் என் மனசு இடிஞ்சு போய்விட்டது. குழந்தை ருக்மிணியைத் தள்ளிவைக்கத் துணியுமா மனுஷாளுக்கு அடிபாவி உன்னைப் போலே அதுவும் ஒரு பெண்ணில்லையா என்ன பண்ணித்து அது உன்னை! அதைக் கண்ணாலே பார்த்தால் கல்லும் இரங்குமே கல்லையும்விட அழுத்தமா உன் நெஞ்சு காமேசுவரையருக்கும் மீனாட்சிக்கும் முகத்திலே ஈ ஆடாது, எனக்கே இப்படி இருந்தபோது பெத்த தாயார் தகப்பனாருக்கு கேட்கணுமா

இனிமேல் நாகராஜனைப் பற்றி ஏதாவது நம்பிக்கை வைத்தால்'தான் உண்டு அவன் பட்டணத்தில் படித்துக் கொண்டிருந்தான். மார்கழி பிறந்துவிட்டது. அவன் வருகிற நாளை எண்ணிக்கொண்டே இருந்தேன். கடைசியாக வந்து சேர்ந்தான். வந்த அன்னைக்குக் காலமே அவன் முகத்தில் சிரிப்பும் விளையாட்டுமாக இருந்தது. சந்தோஷம் மாறி வேறாகிவிட்டது. தாயார் தகப்பனார் அவன் மனதைக் கலைக்க ஆரம்பித்து விட்டார்கள். நாளுக்கு நாள் முகத்தில் கலக்கம் அதிகரித்துக் கொண்டே வந்தது. கரைப்பார் கரைச்சால் கல்லுங்கரையும் என்பார்கள் . அவன் கலங்கின முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு வயித்திலே பகீர் என்னும் இனிமேல் ஏது இந்த ஆசை இருந்தது அதுவும் போய்விட்டது. ருக்மிணியின் கெதி அதோகதிதான் என்று நினைத்து விட்டேன்.

தைபிறந்தது. வெளிப்படையாக பேச ஆரம்பித்துவிட்டார்கள். ஏதோ கிழக்கத்திப் பெண்ணாம். தகப்பனாருக்கு நாலு லட்ச ரூபாய்ககு பூஸ்திதியாம். பிள்ளை கிடையாதாம். இந்தப் பெண்ணைத் தவிர இன்னும் ஒரே ஒரு பெண்தானாம். காலாக் கிரமத்தில் ராமசாமி ஐயர் குடும்பத்துக்கு இரண்டு லட்ச ரூபாய் சொத்துச் சேர்த்துவிடுமாம். இதெல்லாம் எனக்குக் கர்ணகடூரமாக இருக்கும். ஆனால் என்ன செய்கிறது ? தலைவிதியே என்று கேட்டுக் கொண்டிருப்பேன்.

இந்தப் பேச்சுப் புறப்பட்டது முதல், மீனாட்சி பகலில் வெளியிலேயே வருகிறதில்லை. சூரியோதயத்துக்கு முன்னேயே குளத்துக்கு வந்து ஸ்நாதம் செய்துவிட்டுத் தீர்த்தம் எடுத்துக் கொண்டு போய் விடுவாள். அவள் முகத்தைப் பார்த்தால் கண்ட்ராவியாயிருக்கும். சரியான தூக்கமேது? சாப்பாடேது? ஓஹோ என்று வாழ்ந்துவிட்டு, இந்தக் கதிக்கு ஆளானோமே என்கிற ஏக்கம் அவள் அழகை அழித்துவிட்டது. வீடுவாசல் போய்விட்டதே என்றாவது, நகை நட்டுடெல்லாம் போய் வெறும் உரிசல் தாலியை மாத்திரம் கட்டிக் கொண்டிருக்கும்படியாகிவிட்டதே என்றாவதுஅவள் வருத்தப்படவில்லை. கிளிபோல் குழந்தை அகத்திலிருக்க, ஜானகி

அதன்பேரில் கொஞ்சமேனும் இரக்கம் வைக்காமல் கண்ணுக்கெதிராகவே பிள்ளைக்கு வேறு விவாகம் பண்ணி வைக்க நினைத்துவிட்டாள் பார்த்தாயா என்னும் ஏக்கந்தான் அவளுக்கு இரவு பகலெல்லாம். அவள் முகத்தைப் பார்த்தால் ஜானகிக்குக் கூட மனசு உருகிப் போய்விடும். ஆனால் ராணி, அவளெங்கே பார்ப்பாள்.

அப்போதெல்லாம் ருக்மணி எப்படி இருந்தாளோ, என்ன நினைத்தாளோ, எனக்கொண்ணுந் தெரியாது. அறியாத குழந்தை அது என்ன நினத்திருக்குமோ ஒருவேளை மாமியார் நம்மைக் கட்டோடே கெடுத்துவிடமாட்டாள் என்று நினைத்தாளோ? அல்லது மாமியார் என்ன நினைத்தாலும், நாகராஜன் சம்மதிக்க மாட்டான் என்று நினைத்தாளோ ? இன்றும் முட்ட முழுக்க ஐந்து வருஷமாகவில்லையே அவர்களிருவரும் ஜோடியாய் நம்ம குளத்தங்கரையில் விளையாடி கல்யாணமான பிறகுங்கூடஒருவருக்குந் தெரியாமல் எத்தனை தடவை பார்த்துப் பழைய நாள் போலவே அன்பும் ஆதரவுமாக நாகராஜ் அவளோடு பேசியிருக்கிறான் அவன் கைவிடமாட்டன் என்றேதான் ருக்மிணி நினைத்திருப்பாள்.

ஆனால் நாளாக ஆக நாகராஜனுடைய கல்யாணப் பேச்சு முத்திக்கொண்டே வந்தது. நாகராஜன் மனதில் மாத்திரம் இன்னது இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. பட்டணத்திலருந்து வந்த அன்று மாமனாரையும் மாமியாரையும் நமஸ்காரம் செய்வதற்காக அகத்துக்கு அகத்துக்கு வந்தானே அவ்வளவுதான். பிறகு ருக்மிணியை அவன் ஸ்மரித்தான் என்பதற்கு எள்ளளவுகூட அடையாளமில்லை. ஆனால் முகத்தைவிட்டு முதனாள் போன உல்லாஸக்குறி மறுபடியும் திரும்பி வரவேயில்லை. யாருடனும் பேசாமல் எப்பொழுதும் சுளித்த முகமாகவேயிருப்பான்.

கடைசியாக, நாள் வைத்தாகிவிட்டது. பெண் அகத்துக்காரர் வந்து லக்கினப் பத்திரிகையும் வாசித்து விட்டுப் போய்விட்டார்கள். ஐயோ அன்னைக்கு மேளச் சத்ததைக் கேட்க என் பஞ்சப் பிராணனும் துடித்தது. காமெசுவர ஐயருக்கு எப்படி இருந்திருக்குமோ மீனாட்சிக்கு மனசு எப்படித்துடித்ததோ ருக்மிணி எப்படிச் சகித்தாளோ ? எல்லாம் ஈசுவரனுக்குத்தான் தெரியும்.

நாகராஜனுக்குக் கூடத் துளி இரக்கம் பச்சாத்தாபமில்லாமற் போய்விட்டது. பார்த்தையா என்று நான் அழாத நாள் கிடையாது. சில வேளைகளில், இப்படியெலர்லாம் பண்ணினால் இவன் மாத்திரம் நன்றாக இருப்பானா என்றுகூடச் சொல்லிவிடுவேன்... இப்படி என் மனசு தளும்பித் தத்தளித்துக் கொண்டிருக்கிறபோது, ஒரு நாள் வயித்திலே பால் வார்த்தாப்போல ஒரு சங்கதி என்

காதிலே விழுந்துது. நாகராஜனோடு கூடப் படித்துக்கொண்டு இருந்தவனாம் ஸ்ரீநிவாசன என்ற ஒரு பையன். அவன் நாகராஜனைப் பார்க்கிறதற்கென்று வந்தான். அவர்களுக்கெல்லாம் ரகசியமாகப் பேச இடம் வேறெங்கே? நம்ம குளத்தங்கரைதானே?

ஒரு நாள் சாயங்காலம் ஏழெட்டு மணிக்கு எல்லோரும் போய்விட்ட பிறகு இவர்கள் இரண்டு பேரும் இங்கே வந்தார்கள். ஸ்ரீனிவாசன் ரொம்ப நல்லவன். அவன் ஊர் ஐம்பது அறுபது கல்லுக்கந்தண்டை இருக்கிறது. நாகராஜன், பெண்ணிருக்க, வேறுபெண் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறான் என்று யாரோ அவனுக்கு எழுதிவிட்டார்களாகும். ஊடனே தபால்வண்டி மாதிரி ஓடிவந்து விட்டான். குளத்தங்கரைக்கு வந்ததும், தான் கேள்விப்பட்டதைச் சொல்லி இதெல்லாம் வாஷ்தவந்தானா என்று அவன் நாகராஜனைக் கேட்டான். நாகராஜனும், அம்மாவும் அப்பாவும் சேர்ந்து நிச்சயம் செய்துவிட்ட போது நான் மாட்டேன் என்று சொன்னால் தான் தீரப் போகிறதா? தவிர, பெண்ணும் லட்சணமாக இருக்கிறதாம். அவள்தகப்பனார், லட்சரூபாய், ஆஸ்தி அவள் பேருக்கு எழுதி வைத்திருக்றாராம். அவருக்குப் பிற்காலத்தில் இன்னொரு லட்சரூபாய் சொத்துச் சேருமாம். இப்படி, தானே வருகிற சீதேவியை எதற்கு வேண்டமென்று சொல்லுகிறது? என்று சொன்னான்.

இந்த வார்த்தையெல்லாம் சொல்லும்போது ஸ்ரீநிவாசன் முகம்போன போக்கை என்ன என்று சொல்லுவது? நாகராஜன் நிறுத்தினதும் அரைமணி தேசகாலம் ஸ்ரீநிவாசன் அவனுக்கு, எத்தனை லட்சந்தான் வரட்டுமே, ஒரு பெண் பாவத்தைக் கட்டிக் கொள்ளலாமா? கல்யாணப் பந்தலில் மந்திர ரூபமாகச் செய்த பிரமாணத்தையெல்லாம் அழித்துவிடலாமா என்று நானாவிதமாய்த் தர்மத்தையும் நியாயத்தையும் எடுத்துச் சொல்லி, கல்லுங்கரையும்யாக ருக்மிணிக்காகப் பரிஞ்சு பேசினான். அவன் நன்றாக இருக்க வேணும். க்ஷேமமாக இருக்க வேணும், ஒரு குறைவுமில்லாமல் வாழ வேணும் என்று நிமிஷத்துக்கு நிமிஷம் நான் வாழ்த்திக்கொண்டே இருந்தேன்.

ஆனால் அவன் பேசியானதும் நாகராஜன் அவனைப் பார்த்து, ஸ்ரீநிவாசா, உன்னிடம் இதுவரை சொன்னதெல்லாம், விளையாட்டாக்கும். நான் காசுக்காக இவ்வளவு அற்பமாகப் போய்விடுவேன் என்று நினைக்கிறாயா? நான் யாருக்கும் தெரியாமல் வைத்துக் கொண்டிருக்க வேணும் என்றிருந்தேன். ஆனால் எப்போ இவ்வளவு துரம் பேசிவிட்டோமோ, இனிமேல் உனக்குத் தெரியாமல் வைக்கிறதில் காரியமில்லை என்று நினைத்துவிட்டேன். ஆனால் ஒன்றுமாத்திரம் இதை நீ

யாருக்கும் சொல்லக்கூடாது, இவர்களொலாம் ஆரியத் தன்மையைவிட்டு மிலேச்சத்தனமாய் நடக்க உத்தேசிதிருக்கிறபடியால், இவர்களை நன்றாக அவமானம் செய்துவிட வேண்டியதென்று நிச்சயித்துவிட்டேன். நான் எத்தனை நிச்சயித்துவிட்டேன். நான் எத்தனை மறுத்தும் அப்பாவும் அம்மாவும் ஒரே பிடிவாதமாக இருக்கிறார்கள். ஆகையால் மன்னார்கோவிலுக்கே போகிறேன். அங்கே போயும் மாட்டேனென்றே சொல்லுவேன். ஆனால் கட்டாயப் படுத்தத்தான் போகிறார்கள். முகூர்த்தப் பந்தலிலும் உட்காருவேன். ஆனால் என்ன இருந்தாலும் திருமங்கலியத்தில் நான்தானே முடிச்சுப் போடவேணும்? வேறு ஒருவரும் போட முடியாதே. அந்த சமயத்தில் கண்டிப்பாக மாட்டேனென்று சொல்லிவிடப் போகிறேன். எல்லோரும் இஞ்சிதின்ற குரங்கு போலே விழிக்கட்டும். ருக்மிணியைத் தொட்டகையினாலே இன்னொரு பெண்ணையும் நான் தொடுவேன்என்றிருக்றாயா? என்று சொல்லி முடித்தான்.

ஆனால் நீ விவாகத்துக்கெ கன்று போகுங் காலத்தில், ருக்மிணி அவள் அப்பா அம்மா மனதெல்லாம் எப்படியிருக்கும் என்று யோசித்துப் பார்த்தாயா? என்று ஸ்ரீநிவாசன் கேட்டான். அதற்கு நாகராஜன் யோசித்தேன் ஆனால் எல்லாம்போய்விட்டதென்று அவர்கள்... நிராசையாய்த் தவித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென்று நான் ஓடிவந்து மாமியார் மாமனாரை வணங்கி, துயரப்படாதீர்கள் என் ருக்மிணியை நான் ஒரு நாளும் கைவிடமாட்டேன் பணத்தாசை பிடித்தவர்களையெல்லாம் மணப் பந்தலில் மானபங்கம் செய்துவிட்டு இங்கே வந்துவிட்டேன் என்று நான் சொல்லுங் காலத்தில் அவர்களுக்கு எத்தனை ஆனந்தமாக இருக்கும் அதைப் பார்த்து அனுபவிக்க விரும்புகிறேன். என்றான்.

அந்த நாள் வரையில் அவர்கள் மனசு எப்படி அடித்துக் கொண்டிருக்கும்? நினைத்துப்பார் என்றான் ஸ்ரீநிவாசன். அதற்கு நாகராஜன், இன்னும் ஐந்து நாளில்லை, இன்றுவெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை இவ்விடமிருந்து எல்லோரும் புறப்படப்போகிறோம். அடுத்த நாள் முகூர்த்தம் அன்றைக்கே புறப்பட்டு. அடுத்த நாள் காலையில் இங்கே திரும்பிவிடுவேன். என்னவோ அப்பா, எனக்கு இது சரியில்லை என்று தோன்றுகிறது. என்று ஸ்ரீநிவாசன் பேசிக் கொண்டிருக்கும் போதே இருவரும் நகர ஆரம்பித்து விட்டார்கள். எனக்கு மேலே ஒன்றும் கேட்கவில்லை.

அன்னைக்கு ராத்திரியெல்லாம் என்க்குத் தூக்கமே வரவில்லை. பார்த்தாயா, நாகராஜனை வையக்கூட வசேனே பாவி, அவனைப் போல ஸத்புத்திரன் உண்டா உலகத்திலே என்று சொல்லிக் கொண்டேன். இனிமேல் பயமில்லை அஞ்சு நாளென்ன,

பத்து நானனென்ன? நாகராஜன் பிடிவாதக்காரன் சொன்னபடியே செய்து விடுவான். ருக்மிணிக்கு இனிமேல் ஒரு குறைச்சலுமில்லையென்று பூரித்துப் போய்விட்டேன்.

ஞாயிற்றுக் கிழமை இவர்களேல்லாம் மன்னார் கோவிலுக்குப் புறப்படுகிறார்களென்னு ஊரெல்லாம் அல்லோகல்லோலப் பட்டது. ராமஸ்வாமி ஐயரையும் ஜானகியையும் வையாதவர்கள் கிடையாது. ஆனால் அவர்களைக் கூப்பிட்டு நல்ல புத்தி சொல்லுவதற்கு மாத்திரம் ஒருவரும் இல்லை. அப்படியே யாரேனும் சொன்னாலும் அவர் கட்டுப்படுகிறவர்களும் இல்லை.

அவர்கள் புறப்படுகிற அன்னைக்கு ஊரிலிருந்து கண்ணாலே பார்த்தால் இன்னுங் கொஞ்சம் வயித்தெரிச்சல் தானே அதிகமாகுமென்று நினைத்து காமேசுவரையரும் மீனாட்சியும் சனிக்கிழமை மத்தியானமே புறப்பட்டு மணப்பாறைக்குப் போய்விட்டார்கள். அகத்தில் ருக்மணிக்கு அவள் அத்தை சுப்புலட்சுமி அம்மாள் தான் துணை.

சனிக்கிழமை ராத்திரியாச்சு ஊரடங்க ஆரம்பித்து விட்டது. ஒன்பது மணி இருக்கும். நாகராஜன் தனியாகக் குளத்தங்கரைக்கு வந்தான். வந்து வேப்பமரத்தடியில் உட்கார்ந்து கொண்டு ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான். சில நாழிக்கெல்லாம் தூரத்தில் ஒரு பெண் உருவம் தென்பட்டது. அது குளத்தங் கரைப்பக்கம் வந்து கொண்டிருந்தது. ஆனால் அடிக்கொரு தடவை பின் பக்கம் பார்த்துக் கொண்டே வந்து, கடைசியாக நாகராஜன் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்தில் வந்து நிற்கும் போதுதான் அது ருக்மணி என்று நான் அறிந்து கொண்டேன். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஆனால் உடனே தெறிஞ்சு கொண்டு என்ன நடக்கிறது பார்க்கலாம் என்று கண்ணைத் துடைத்துக் கொண்டு உன்னிப்பாய்க் கவனிக்கலானேன்.

ஐந்து நிமிஷம் வரையில் நாகராஜன் கவனிக்கவேயில்லை. ஆழ்ந்த யோசனையில் இருந்தான். ருக்மணி அசைற்று அப்படியே நின்று கொண்டிருந்தான்.

எதிர்ச்சையாய் நாகராஜன் தலையைத் தூக்கினான். ருக்மிணியைப் பார்த்தான். பார்த்ததும் அவனும் திடுக்கிட்டுப் போய்விட்டான். ஆனால் உடனே நிதானித்துக் கொண்டு ருக்மணி இத்தனை நாழிகைக்கு மேலே தனியாக இங்கே வரலாமா நீ என்று கேட்டான். நீங்கள் இருக்கிற இடத்தில் தனியாக நான் இருக்க வேண்டிய நாள் இன்னும் வரவில்லையே! என்று பதில் சொல்லிவிட்டு ருக்மணி நின்றாள். இரண்டு மூன்று நிமிஷத்துக்கு ஒருவரும் வாய்திறக்கவில்லை. இரண்டு பேர் மனதும் குழம்பிக்

கொண்டிருந்தது. ஆனால் எப்படி ஆரம்பிக்கிறது, என்ன பேசுகிறது என்று அவர்களுக்கு ஒன்றுந் தோன்றவில்லை.

கடைசியில் நாகராஜன் இந்த வேளையில் நாம் இங்கேயிருப்பது தெரிந்தால் ஊரில் ஏதாவது சொல்லுவார்கள் வா அகத்துக்குப் போய்விடலாம் என்றான் அதற்கு ருக்மணி உங்களிடத்தில் சில வார்த்தைகள் சொல்ல வேணுமென்று இந்த ஒரு மாதமாய்க் பார்த்துக் கொண்டிருந்தேன். இன்னைக்குத்தான் நேர்ந்திருக்கிறது. அதை சொல்ல உத்தரவு கொடுக்க வேணும் என்றாள் ''சொல்லேன்'' என்று நாகராஜன் சொல்ல, ருக்மணி பேசலானாள்.

எனக்கு உங்களிடத்தில் என்ன சொல்லுகிறது என்று தெரியவில்லை. இந்த மூணு மாசமாய் மனசு படுகிறபாடு அந்த அகிலாண்டேசுவரிக்குத் தான் தெரியுமேயொழிய மனுஷியாளுக்குத் தெரியாது. நீங்கள் பட்டணத்திலேயிருந்து வந்தவுடன் என் கலக்கமெல்லாம் போய்விடும் என்றிருந்தேன். மாமாவும் மாமியும் என்ன செய்தாலும் நீங்கள் என்னை கைவிட மாட்டீர்கள் என்று நம்பியிருந்தேன். ஆனால் நீங்களும் என்னைக் கைவிட்டு விட்டால் அப்புறம் எதை நம்பிக்கொண்டு நான் வாழ்வேன். வேலியே பயிரை அழித்துவிட ஆரம்பித்தால் பயிரின் கதி என்னவாகும்? இது வரையில் நடந்ததெல்லாம் என் மனசை உடைத்துவிட்டது. நீங்கள் அதைச் சேர்த்து வைத்தால் தான் உண்டு, இல்லையானால் என் ஆயுசு இவ்வளவுதான், அதில் சந்தேகமில்லை.

இந்த வார்த்தையைப் பேசும்போது ருக்மிணியின் கண்களில் ஜலம் வந்துவிட்டது. அத்தோடு நின்றுவிட்டான். நாகராஜன் பேசவில்லை. ருக்மிணியும் சில நாழி வரைக்கும் பார்த்துவிட்டு நானைக்குப் பயணம் வைத்திருக்காப் போலிருக்கிறதே நீங்கள் போகத்தானே போகிறீர்கள்? என்று கேட்டாள். கொஞ்ச நாழி யோசித்துவிட்டு நாகராஜன் ஆமாம் போகலாம் என்றுதான் இருக்கிறேன். என்றான். அப்படி சொன்னதும் ருக்மணிக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு துக்கம் வந்துவிட்டது. உடம்பு கிடுகிடு என்று நடுங்கியது. கண்ணில் ஜலம் ததும்பிவிட்டது. ஆனால் பல்லைக் கடித்துக் கொண்டு அதையெல்லாம் வெளியில் காட்டிக் கொள்ளாமல் அப்படியானால் நீங்கள் என்னைக் கைவிட்டு விட்டீர்கள்தானே? என்று கேட்டான். அதற்கு நாகராஜன் உன்னை நான் கைவிடுவேனா ருக்மணி? ஒரு நாளும் விடமாட்டேன். ஆனால் அம்மா அப்பாவைத் திருப்திப ண்ணி வைக்க வேண்டியதும் கடமை தானே? அதற்காகத்தான் அவர் பேச்சைத் தட்டாமல் புறப்படுகிறேன். ஆனால் நீ கவலைப்படாதே, உன்னை ஒருநானும் தள்ளிவிடமாட்டேன் என்றான். ருக்மிணிக்குப் பொறுக்கவில்லை. நீங்கள்

மறுவிவாகம் பண்ணிக் கொண்டு விடுகிறது! நான் கவலைப்படாமலிருக்கிறது! என்னை ஒருநாளும் கைவிடமாட்டீர்கள்! ஆனால் அம்மா அப்பா சொல்லுகிறதை இது விஷயத்தில் தட்டமாட்டீர்கள்! நான் சொல்லக்கூடியது இனிமேல் என்ன இருக்கு? என் கதி இத்தனைதானாக்கும்! என்று சொல்லிக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

நாகராஜன் ஒன்றும் பேசவில்லை. கல்யாணத்தை நிறுத்திவிடுகிறேன் என்கிற ஒரு வார்த்தையைத் தவிர வேறே எந்த வார்த்தை சொன்னால் தான் ருக்மணியின் மனதைத் தேத்தலாம்? அந்த வார்த்தையை இப்போது சொல்லவோ அவனுக்கு சம்மதமில்லை. ஆகையால் அவன் வாயால் ஒண்ணும் பேசாமல் தன் மனதிலுள்ள அன்பையும் ஆதரவையும் சமிக்கினையினால் மாத்திரம் அவளுக்கு ஒரு மாதிரி காட்டினான். அவள் கையைத் தன்னுடைய கைகளால் வாரி எடுத்து மடியில் வைத்துக் கொண்டு மிருதுவாய்ப் பிடித்தான். குழந்தையைத் தட்டிக் கொடுத்துத் தேத்துவது போல், முதுகில் ஆதரவோடு தடவினான். அப்பொழுது அவள் தலைமையிர் அவன் கையில் பட்டது. உடனே சடையாய்ப் போய்விட்டதே இப்படித்தானா பண்ணிக் கொள்ளுகிறது? உன்னை இந்த அலங்கோலத்தில் பார்க்க என் மனசு சகிக்கவில்லையே! எங்கே உன் முகத்தைப் பார்ப்போம்! ஐயோ கண்ணெல்லாம் செக்கச் செவேர் என்று சிவந்து போயிருக்கிறதே! முகத்தின் ஒளியெல்லாம் போய்விட்டதே! என் கண்ணே இப்படி இருக்காதே உன்னை நான் கைவிடமாட்டேன். என்று சத்தியமாற் நம்பு உன் மனதில் கொஞ்சங்கூட அதைரியப்படாதே. ஏன் ஹிருதய பூர்வமாகச் சொல்லுகிறேன். எனக்குப் பொறுக்கவில்லை உன்னை இந்த ஸ்திதியில் பார்க்க சின்ன வயது முதல் நாமிருந்த அன்னியோன்த்தை மறந்துவிட்டேன் என்று கனவில்கூட நீ நினையாமே வா போகலாம் நாழிகையாகிவிட்டது இனிமேல் நாம் இங்கே இருக்ககூடாது என்று சொல்லி முடித்தான்.

ருக்மணி எழுந்திருக்கவில்லை. ஏக்கம் பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள். அதைப் பார்த்ததும் நாகராஜனுக்கு கண்ணில் ஜலம் ததும்பிவிட்டது. அந்தச் சமயத்தில் தன் மனதிலுள்ள ரகசியத்தைச் சொல்லித்தான் விடலாமே என்று அவன் புத்தியில் தோன்றியது போலிருந்தது. அவனுடைய விளையாட்டுத்தான் பெரிதாய்ப் பட்டது. ஆகையினாலே அதை மாத்திரம் அவன் வாய்விடவில்லை. ஆனால் அவனுக்குத்தான் எப்படித் தெரியும். இப்படியெல்லாம் வரும் என்று? அத்தனை வயசாகி எனக்கே தெரியவில்லையே அந்தச் சமயத்திலே, அவனுக்கு எங்கே தெரிந்திருக்கப் போகிறது குழந்தைக்கு?

அப்படி நினைத்துபோய் உட்கார்ந்திருந்த ருக்மணியை நாகராஜன் மெல்லப் பூத்தாப் போலே தூக்கி மார்போடே அணைத்துக் கொண்டு என்ன ஒன்றும் பேசமாட்டேன் என்கிறாயே ருக்மணி நான் என்ன செய்யட்டும் என்று கருணையோடு இரங்கிச் சொன்னான். ருக்மணிய தலை நிமிர்த்து அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வையின் குறிப்பை உங்களுக்கு எப்படி சொல்லுவேன்? பிரவாகத்தில் அகப்பட்டு கை அலுத்தப் போய் ஆத்தோடு போகிற ஒருகூனுக்கு தூரத்தில் கட்டை ஒன்று மிதந்து போவது போலே தென்பட, அவனும் பதை பதைத்துக் கொண்டு ஆசையும் ஆவலுமாய் அதன் பக்கம் நீந்திக் கொண்டு போய் அப்பா பிழைத்தோம்டான்னு சொல்லிக் கொண்டு அதைப் போய்த் தொடும்போது ஐயோ பாவம் அது கட்டையாக இராமல் வெறும் குப்பை செத்தையாக இருந்து விட்டால் அவன் மனசு எப்படி விண்டுவிடும். அவன் முகம் எப்படியாகிவிடும். அப்படி இருந்தது ருக்மணியின் முகமும், அந்த முகத்தில் பிரதிம்பித்துக் காட்டி ய அவள் மனசும். எல்லையில்லாத துன்பம். எல்லையில்லாத கஷ்டம். அந்தப் பார்வையில் இருந்தது. அதைக் கண்டும் நாகராஜன் மௌனமாக இருப்பதைப் பார்த்து ருக்மிணி மெல்ல ஒதுங்கிக் கொண்டு நான் சொல்லக்கூடியது இனிமேல் ஒண்ணுமில்லை. மன்னார்கோவிலுக்குப் போகிறதில்லை என்கிற வார்ததையை நீங்கள் என்க்குக் சொல்லமாட்டேன். என்கிறீர்கள இன்றோடு என தலைவிதி முடிந்தது. நீங்கள் எப்போது என்னை இவ்விதம் விடத்துணிந்தீர்களோ, நான் இனி மேல் எதை நம்பிக் கொண்டு யாருக்காக உயிரை வைத்துக் கொண்டிருப்பது? உங்கள் மீதுஎனக்கு வருத்தமில்லை. உங்கள் மனது இந்தக் காரியத்துக்குச் சம்மதியாது. என்னுடைய விதிவசம், என் அப்பா அம்மாவுடைய கஷ்டம். உங்களை இப்படியெல்லாம் செய்யச் சொல்லுகிறது. இனிமேல் ருக்மிணி என்று ஒருத்தி இருந்தாள், பிராணனை விடுவிற போதுகூட நம்மையே நினைத்து கொண்டு தான் பிராணனை விட்டாளென்று எப்பொழுதுதாவது நினைத்துக் கொள்ளுங்கள். இதுதான் நான் உங்களிடம் கடைசியாகக்கேட்டுக் கொள்வது. என்று சொல்லிக் கொண்டு நூாகராஜன் காலில் விழுந்து காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தேம்பித்தேமிபி அழுதாள். நாகராஜன் உடனே அவளைத் தரையிலிலுந்து தூக்கியெடுத்து பைத்தியமே, அப்படி ஒன்றும் பண்ணிவைத்துவிடாதோ, நீ போய் விட்டால் என் ஆவியே போய்விடும்.அப்புறம் யார் யாரை நினைக்கிறது? மழைத்தூற்றல் போடுகிறது. வானமெல்லாம் கறுக்கும்மென்றாகிவிட்டது. இன்னும் சற்றுப் போனால்

சந்தரத்தாரையாய்க கொட்டும் போலிருக்கிறது. வா அகத்துக்குப் போகலாம். ஏன்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு ரெண்டடி எடுத்துவைத்தான்.

ஆகாயத்தில் சந்திரன், நட்சத்திரம் ஒன்றும் தெரியவில்லை. எங்கே பார்த்தாலும் ஒரே அந்தகாரம். சித்தைக்கொருதரம் மேகத்தைவாளால் வெட்டுகிறபோலே மின்னல் கொடிகள் ஜொலிக்கும். ஆனால் அடுத்த நிமிஷம் முன்னிலும் அதிகமான காடாந்தகாரமாகிகிடும். பூமியெல்லாம் கிடுகிடு என்று நடுங்க ஆகாயத்தையே பிளந்துவிடும் போலே இடி இடிக்கும். காற்று ஒன்று சண்டமாருதம் போல அடித்துக் கொண்டிருந்தது.

தூரத்தில் பிரமாதமாக மழை பெய்து கொண்டிருந்த இரைச்சல் அதிகமாகவே நெருங்கிக் கொண்டு வந்தது. இந்தப் பிரளய காலத்தைப் போல இருந்த அரவத்தில் ருக்மணியும் நாகராஜனும் பேசிக்கொண்டு போன வார்த்தைகள் என காதில் சரிவரப் படவில்லை. அவர்களும் அகத்துப்பக்கம் வேகமாகச் சென்று கொண்டிருந்தார்கள். ஒரு மின்னல் மின்னும் போது ருக்மணி வீட்டுக்குப் போக மனமில்லாமல் பின் வாங்குவதும், ஆனால் நாகராஜன் தடுத்து முன்னால் அழைத்துச் செல்லுவது மாத்திரம் கண்ணுக்குத் தென்பட்டது. அவர்கள் வார்த்தையும் ஒண்ணும் ரெண்டுமாகத்தான் என காதில் பட்டது. ...பிராணன் நிற்காது.... அம்மாவுடைய ஹிருதயம் திருப்தி... வெள்ளிக்கிழமை காலமே ...ஸ்திரீர்களின்... உடைத்துவிடும்... சொல்லாதே... கொடுத்து வைத்துதானே... அந்தப் பெண்ணை யாராவது நன்றாய் வைத்துக் கொள்ளுங்கள்... கடைசி நமஸ்காரம்... வரையில் பொறுத்துக்கொள்... இந்த வார்த்தைகள் தான் இடி முழக்கத்திலும், காற்றின் அமலையிலும், மழை இரைச்சலிலும் எனக்குக் கேட்டது. மழை தாரை தாரையாகக் கொட்ட ஆரம்பித்துவிட்டது. ருக்மணியும் நாகராஜனும் என் கண்ணுக்கு மறைந்து போய்விட்டார்கள்.

ஆச்சு, அடுத்த நான் காலமே விடிந்து, மழை நின்றுவிட்டது.

ஆனால் ஆகாயத்திலே தெளிவு வரவில்லை. மேகங்களின் கருக்கல் வாங்கவில்லை. காற்று, ஸமாதானஞ செய்ய மனுஷியாள் இல்லாத குழந்தைபோல, ஓயாமல், கதறிக் கொண்டேயிருந்தது. என் மனசிலும் குழப்பம் சொல்லி முடியாது. எப்படி நிதானித்துக் கொண்டாலும் மனசுக்குச் சமாதானம் வரவில்லை. என்னடா இது என்னைக்கும் இல்லாத துக்கம் இன்னைக்கு மனசில் அடைத்துக் கொண்டு வருகிறது.

காரணம் ஒண்ணும் தெரியவில்லையே என்று நான் எனக்கு? யோசித்துக் கொண்டேயிருக்கும்போது மீனா, என்னடியம்மா, இங்கே ஒரு புடைவை மிதக்கிறது?

என்று கத்தினான். உடனே பதட்டம் பதட்டமாய் அந்தப் பக்கம் திரும்பினேன். குளத்திலே குளித்துக் கொண்டிருந்த பெண்களெல்லோரும் அப்படியே திரும்பிப் பார்த்தார்கள். பார்த்துவிட்டு என்னவோ காதோடு காதாய் ரகசியம் பேச ஆரம்பித்துவிட்டார்கள். எனக்குப் பஞ்சப் பிராணும் போய்விட்டது. புடைவையைப் பார்த்தால் காமாஷியம்மாள் புடவை போல் இருந்தது. சரி, அம்மா, அப்பா தலையிலே கல்லைக் தூக்கிப் போட்டுவிட்டு ருக்மணிதான் மறுபடியும் வந்து குளத்திலே விழுந்துவிட்டாள் என்று நினைத்தேன் அதுதான் தெரியும் அப்படியே மூர்சசை போய்விட்டேன்.

அப்புறம் சித்த நாழி கழித்து எனக்குப் பிரக்கினை வந்தது. அதற்குள்ளே குளத்தங்கரையெல்லாம் கும்பலாய்க் கூடிப் போய்விட்டது. ஜானகியையும் ராமசுவாமி ஐயரையும் வையாதவர் இல்லை. இனிமேல் வைதாலென்னா, வையாதே போனாலென்ன? ஊரின் சோபையையும் தாயார் தகப்பனார் ஜீவனையும், என்னுடைய சந்தோஷத்தையும் எல்லாம் ஒண்ணாய்ச் சேர்த்துக் கட்டிக் கொண்டு ஒரு நிமிஷத்தில் பறந்து போய்விட்டாளே என் ருக்மிணி! கீழே அந்த மல்லிகைப்கொடி ஓரத்திலேதான் அவளை விட்டிருந்தார்காள். எத்தனை தடைவ அந்த மல்லிகை மொக்ககளைப் பறித்திருக் கிறார்கள் அவள் பொன்னான கையாலே! குளத்தங்கரையெல்லாம், அவள் குழந்தையாயிருக்கிற போது அவள் பாதம் படாத இடம் ஏது அவள் தொடா மரமேது செடியேது ஐயோ, நினைக்க மனம் குமுறுகிறது. அந்த அழகான கைகள், அந்த அழகிய பாதங்கள் எல்லாம் துவண்டு தோஞ்சு போய்விட்டன. ஆனால் அவள் முகத்தின் களை மாத்திரம் மாறவே இல்லை. பழைய துக்கக் குறிப்பெல்லாம், போய் முகத்தில் ஒருவித அத்தியாச்சரியமான சாந்தம் வியாபித்திருந்தது!

இதையெல்லாம் கொஞ்சம்தான் கவனிக்கப் போது இருந்தது. அதற்குள்ளே நாகராஜன் வறான் என்ற ஆரவாரம் கூட்டத்தில் பிறந்தது. ஆமாம் நிசந்தான் இவன் தான் தலைகால் தெரியாமல் பதைக்கப் பதைக்க ஓடி வந்து கொண்டருந்தான். வந்துவிட்டான். மல்லிகைச் செடியண்டை வந்ததும் கும்பலையாவது கும்பலில் இருந்த தாயார் தகப்பனாரையாவது கவனிக்காமல் ருக்மணி என்ன பண்ணிவிட்டாய் ருக்மணி! என்று கதறிக் கொண்டு கீழே மரம் போல சாய்ந்துவிட்டான். கூட்டத்தில் சத்தம் கம் என்று அடங்கிப் போய்விட்டது. எல்லோரும் நாகராஜனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ரொம்ப நாழி வரைக்கும் அவன் தரையில் மூர்ச்சை போட்டே கிடந்தான். ராமசுவாமி ஐயர் பயந்து போய் அவன் முகத்திலே ஜலத்தைத் தெளித்து விசிறியால்

விசிறிக் கொண்டிருக்கையில் அவனுக்குக் கடைசியாய் பிரக்கினை வந்தது. கண்ணை முழித்தான். ஆனால் தகப்பனாரிடத்திலே ஒரு வார்தததைக் கூடப் பேசவில்லை. ருக்மிணியின் உயிரற்ற சரீரத்தைப் பார்த்து உன்னுடைய எண்ணமத்தனையும் பாழாக்கி விட்டு ஜீலியெத் மாதிரி பறந்தோடிப் போய்விட்டாயே ருக்மிணி! ஸ்ரீநிவாசன் சொன்னது சரியாய்ப் போய்விட்டது! பாவி என்னால் தான் நீ உயிரை விட்டாய், நான்தான் உன்னைக் கொலை செய்த பாதகன்! நேற்று நான் உன்னிடம் ரகசியம் முழுவதையும் சொல்லியிருந்தால் இந்தக் கதி நமக்கு இன்று வந்திருக்காதே! குஸீம ஸத்ருசம்... ஸத்ய: பாதி ப்ரணயி ஹருதயம் என்கிற ஆழமான வாக்கியத்தை வேடிக்கையாக மாத்திரந்தான் படித்தேனேயொழிய அதன் சத்தியத்தை நான் உணரவில்லையே! இனிமேல் எனக்கென்ன இருக்கிறது? ருக்மிணி! நீயோ அவசரப்பட்டு என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாய். எனக்கு இனிமேல் சம்சார வாழ்க்கை வேண்டாம். இதோ சன்னியாசம் வாங்கிக் கொள்ளுகிறேன்! என்று சொல்லிக்கொண்டே யாரும் தடுப்பதற்கு முந்தித்தான் உடுத்தியிருந்த வேஷ்டியையும் உத்தரீயத்தையும் அப்படியே தாறாய்க் கிழித்துவிட்டான். அவன் தாயார் தகப்பனார் ஒருவரும் வாய் பேசவில்லை. நாகராஜனும் அவர்கள் காலில் சாஷ்டாங்கமாய் விழந்து நமஸ்காரம் பண்ணிவிட்டு யாருடனும் பேசாமல் கௌபீனதாரியாய்ப் புறப்பட்டுப் போய்விட்டான்.

இப்படி முடிந்தது என் ருக்மிணியின் கதை! என் அருமைக் குழந்தைகளே! பெண்கள் மனசு நோகும்படி ஏதாவது செய்யத் தோணும்போது இனிமேல் இந்தக் கதையை நினைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். வியாட்டுக்காகக் கூடப் பெண்ணாய்ப் பிறந்தவர்களின் மனதைக் கசக்க வேண்டாம். எந்த விளையாட்டு உன்ன வினைக்குக் கொண்டு விடும் என்று யாரால் சொல்ல முடியும்?''

பொன்னகரம்

புதுமைப்பித்தன்

பொன்னகரத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப்போல் அங்கு ஒன்றுமில்லை. பூர்வ புண்ணியம் என்று சொல்லுகிறார்களே, அந்த தத்துவத்தைக் கொண்டு, நியாயம் என்று சமாதானப்படவேண்டிய விதிதான். ஒரு சில 'மகராஜர்களுக்காக' இம்மையின் பயனைத் தேடிக்கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு உண்மையில் ஒரு பொன் நகரந்தான் அது.

ரயில்வே தண்டவாளத்தின் பக்கமாக, சாராய டிப்போவுக்குப் போகிறதே ஒரு சந்து. அதுதான் அங்கு மெயின் ரஸ்தா கைகோர்த்த நான்கு பேர் வரிசை தாராளமாகப் போகலாம். ஏதிரே வண்டிகள் வராவிட்டால் இதற்குக் கிளையாக உள் வளைவுகள் உண்டு. முயல் வளைகள் போல்.

இந்தத் திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால் சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக்கொண்டிருக்கும் பொழுது சென்றால்தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக முனிசிபல் கங்கை- அல்ல யமுனைதானே கறுப்பாக இருக்கும்? - அதுதான். பிறகு ஓர் இரும்பு வேலி. அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வே தண்டவாளம்.

மறுபக்கம் வரிசையாக மனிதக்கூடுகள் ஆமாம் வசிப்பதற்குத்தான்!

தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன். மின்சார விளக்கு? ஞாபகமில்லை – சாதாரண எண்ணெய் விளக்கு அதாவது சந்திரன் இல்லாத காலங்களில் (கிருஷ்ணபட்சத்தில்) ஏற்றிவைத்தால் போதாதா?

பொன்னகரத்துக் குழந்தைகளுக்கு மீன்பிடித்து விளையாடுவதில் வெகு பிரியம். ஆந்த முனிசிபல் தீர்த்தத்தில் மீன் ஏது? எங்கிருந்த பணக்கார வீடுகளிலிருந்தோ, சில சமயம் அழுகிய பழம், ஊசிய வடை, இத்யாதி உருண்டை வரும். அது அந்த ஊர்க் குழந்தைகளின் ரகசியம்.

ரயில்வே தண்டவாளத்தின் பக்கத்தில் விளையாடுவதில் என்ன ஆனந்தமோ? வேலி இருக்கத்தான் செய்கிறது. போகக்கூடாது என்ற சட்டம் குழந்தைகளுக்கு தெரியுமா? போனால் பெற்றோருக்குத்தான் கொஞ்சம் பாரம் ஒழிந்ததே! குழந்தைகள்தான் என்ன கிளாக்ஸே மெல்லின்ஸ் பூட் குழந்தைகளா கம்பி இடையில் போக முடியாமலிருக்க புகைந்தோடும் அந்த இரும்பு நாகரிகத்திற்கு வரிசையாக நின்று குட்மார்னி சார்! என்று கத்துவதில் ரொம்ப ஆனந்தம் அவர்களுக்கு அதுதான் அவர்களுக்குக் கிடைக்கும் ஆரம்ப ஆங்கிலக் கல்வி.

ஐந்து மணிக்கு அப்புறந்தான் ஊர் கலகலவென்று உயிர்பெற்று இருக்கும். அப்பொழுதிலிருந்துதான் அவ்வூர்ப் பெண்கள் தங்கள் வேலையைச் செய்வார்கள். சாராய வண்டிகள், தண்ணீர் எடுக்க வரும் பெண்கள்! அங்கு தண்ணீர் எடுப்பது என்றால் ஒரு பாரதப்போர்.

இளவயதில் நரைத்ததுபோல் பஞ்சு படிந்த தலை மாசடைந்த கண்கள் விடிய விடிய மின்சார ஸ்பின்டிலைப் (கதி) பார்த்துக் கொண்டு இருந்தால், பிறகு கண் என்னமாக இருக்கு கண்கள்தாம் என்ன இரும்பா? உழைப்பின் ஆரோக்கியத்தால்

ஏற்பட்ட கட்டடைந்த அழகு ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது பாக்டீரியா, விஷக்கிருமிகள், காலரா இத்யாதி அங்கிருந்துதானே உற்பத்தி செய்யப்படுகின்றன! எப்படியாவது உயிர் வாழ வேண்டும் என்ற ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும். பழைய கற்காலத்து மனிதன் பல சிங்கங்களுடன் குகையில் வாழ்ந்து வந்தான். அவைகளும் அவைகளைக் கொன்றன. அதற்காக வலிமையற்று வம்சத்தை விருத்தி செய்யாது செத்தொழிந்தா போனான்? வாழ்க்கையே ஒரு பெரிய வேட்கை அதற்கென்ன?

கழுத்தில் ஒரு கறுப்புக்கயிறு – வாழ்க்கைத் தொழுவின் அறிஞர் அதைப்பற்றி அங்கு அதிகக் கவலையில்லை அது வேறு உலகம், அதன் தர்மங்களும் வேறு.

அம்மாளு ஒரு மில் கூலி. வயது இருபது, அல்லது இருபத்திரண்டிற்கு மேல் போகாது, புருஷன் ஜட்கா வைத்திருக்கிறான் சொந்த வண்டிதான். அம்மாளு முருகேசன் (அவள் புருஷன்) அவன் தாயார், தம்பி முருகேசன் குதிரை – ஆக நபர் ஐந்து சேர்ந்து அவர்கள் குடும்பம். இருவருடைய வரும்படியில்தான், இவர்கள் சாப்பாடு (குதிரை உள்பட), வீட்டு வாடகை, போலீஸ் மாமூல் முருகேசன் தம்பி திருட்டுதனமாக கஞ்சா அடிக்க காசு – எல்லாம் இதற்குள்தான். எல்லோரும் ஏகதேசக் குடியர்கள்தான். டல் ஸீஸனில் பசியை மறக்க வேறு வழி? பசி, ஐயா, பசி! பத்தும் பசி வந்திடப் பறந்துபோம் என்று வெகு ஒய்யாரமாக உடம்பில் பிடிக்காமல் பாடுகறீரே, அங்கு நீர் ஒருநாள் இருந்தால் உமக்கு அடிவயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!

அன்றைக்கு முருகேசனுக்குக் குஷி அவனும் குதிரையும் தண்ணி போட்டு விட்டு ரேஸ் விட்டார்கள். வண்டி டோக்கர் அடித்தது. ஏர்க்கால் ஒடிந்தது. குதிரைக்குப் பலமான காயம். முருகேசனுக்கு ஊமையடி வீட்டில் கொண்டு வந்து போடும்பொழுது பேச்சு மூச்சில்லை. நல்ல காலம் குடித்திருந்தான். இந்த மாதிரி வலி தெரியாமலாவது கிடக்க. வீக்கத்திற்கு என்னத்தையோ அரைத்துப் பூசினாள் அம்மாளு. அப்பொழுது தான் சற்றுப் பேசினான் அவனுக்குப் பால் கஞ்சி வேண்டுமாம்! அம்மாளுவுக்குக் கூலி போட இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசேது?

அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள்.

கும்மிருட்டு பஞ்சாங்கத்தின்படி இன்றைக்குச் சந்திரன் வர வேண்டும். ஆனால் அது மேகத்தில் மறைந்துகொண்டால் முனிசிபாலிடி என்ன செய்ய முடியும்?

எப்பொழுதும்போல் இரைச்சல்தான். ஒருவாறு தண்ணீர் பிடித்தாய்விட்டது. திரும்பி வருகிறாள்.

சந்தின் பக்கத்தில் ஒருவன் - அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் கண் வைத்திருந்தவன்.

இருவரும் இருளில் மறைகிறார்கள். ஆம்மாள முக்கால் ரூபாய் சம்பாதித்துவிட்டாள். ஆம் புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்!

என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்!

விரகமல்ல தனிமை

ஆதவன் தீட்சண்யா

அன்பில் ஊறும் மகாவுக்கு,

ரொம்பவும் சிரமப்பட்டு வந்து சேர்ந்தேன். டிக்கெட் ரிசர்வ் பண்ணிட்டு கிளம்புங்கன்னு நீ சொன்னது வழி முழுக்க ஞாபத்தில். காலம் கடந்து நினைச்சா எது நடக்கும். பங்குனி உத்திர கூட்டம் வேறு. ஈரோடு வரைக்கும் ஸ்டாண்டிங். நெரிசல்ல சிக்கி முழி பிதுங்கிருச்சு.

அன்னிக்கு ராத்திரி பஸ் ஸ்டாண்டுக்கு கொஞ்சம் தள்ளின லாட்ஜ்ல ரூம் கிடைச்சது. பக்கத்து ரூம்ல கெக்கேன்னு சிரிப்பு. இம்சை தாங்கலை. அருவருப்பு. இந்த ஊர்ல பொண்ணுங்களும் சிலதுகள் தண்ணி, தம்மெல்லாம் அடிக்கும் போல. நிதானம் தப்பின பேச்சு, பாட்டு, கூத்து, கும்மாளம். இடையில, பாத்ரூம் போனவ, "இன்னும் தூங்கலையா சார்... லைட் எரியுதே" ன்னு விசாரிக்கிற அளவுக்கு தைரியம்.

அடுத்த வீட்டு ஆம்பளையை இவளோ, அவன் இவளையோ பார்த்துடக் கூடாதுன்னு, விடிகாலைல வாசல் தெளிச்சு கோலம் போட்டுட்டு வீட்டுக்குள்ள அடைஞ்சிடறபடி பொண்ணுங்களை வளர்த்த இந்த மண்ணுல, இப்ப பொண்ணுங்க எப்படி ஆயிடுச்சு பாத்தியா மகா... ஒருவேளை இப்படி வளர்த்தினது தான் அவங்கள இப்படி ஆக்கிடுச்சோ... என்ன இழவோ, விடிஞ்சாப் போதும்னு ஆயிருச்சு.

ehd; otprdy; MgP!;y ,Ue;jg;g/ Tl njtuh$;D xUj;jd; ntiy ghh]j;jhnd "hgfkpUf;fh... ek;k fy;ahzj;Jf;F Tl te;jpUf;fhk;kh. My;gj;Jy ghU/ btSj;j $Pd;!^k; Kul;L $pg;ght[k;/ brhwp";rp tpl;lhg;y jhoa[khapUg;ghd;. mtd; ,g;g ,';fjhdpUf;fhd;. te;J MW

tUrkhapUr;rhk;. ,d;dKk; fl;il gpuk;kr;rhhp. buz;lhk; ehs;nyapUe;J mtd; +k;y jhd; vd; thrk;.

அவன் ரொம்பவும் விசாரிச்சான். "அதென்னடா பையனுக்கு நல்ல தமிழ்ப்பேரா வைக்காம அரவிந்துன்னு பேர் வச்சிருக்கே... அடுத்ததும் பையனா பொறந்துட்டா, முழு விந்துன்னு வச்சுத் தொலைக்காதே" ன்னு சத்தம் போட்டான். அவன் எப்பவும் இப்படித்தான். ஏடாகூடாமா ஏதாச்சும் சொல்லுவான். மெட்ராஸ் ஆபீஸ்ல வினோத்குமார்னு ஒரு லிப்ட் ஆபரேட்டார். எப்பவும் நிரோத்குமார்னு தான் இவன் கூப்பிடுவான். அவனவன் மொழி, கலாச்சாரத்துக்கு தக்கன பேரை வைக்கணும்கிறது அவன் வாதம். நமக்கெங்கே அந்த யோசனையெல்லாம்... கூப்பிட ஒரு பேரிருந்தா போதும்னு நினைக்கிறோம்.

நேத்தைக்கு பீர் குடிக்கக் கூப்பிட்டான். வேண்டாம்னேன். "என்னடா, கல்யாணத்துக்கப்புறம் எல்லாத்தையும் விட்டுட்டியா... பரவால்ல, தங்கச்சி கெட்டிக்காரிதான். கரெக்டா லகான் மாட்டியிருக்கா" ன்னு உன்னை பாராட்டினான். எந்தப் பெண்ணும் தம் புருசன் குடிக்கிறதை விரும்பமாட்டாள்னு, நானாத்தான் நிப்பாட்டினேன். ஆனா, பாராட்டு உனக்கு... நம்ம ஜனங்களே இப்படித்தான். திட்டறதாயிருந்தாலும், பாராட்டறதாயிருந்தாலும் காரணம் யாரோ. அவங்களை திட்டறதுமில்லை பாராட்டுறதுமில்லை.

இங்க எல்லாமே காஸ்ட்லி மகா. முந்தா நாள் சலூன்ல ஷேவிங் பண்ணிக்கிட்டு பத்து ரூபா கொடுத்தா, மிச்சம் மூணு ரூபா தந்தான். ஷேவிங் மட்டும் தான்னேன். அதுக்கு மட்டும் தான் எடுத்திருக்கேன்னான். வெறுத்துப் போச்சு. பேசாம, தேவராஜாட்டம் நானும் தாடி விட்டுட்டா என்னன்னு யோசனை.

பக்கத்து சந்துல ஒரு மெஸ். மூணு வேளையும் அங்க தான். தினமும் அங்கயே சாப்பிட்டாலும் எக்ஸ்ட்ராவா கறியோ மீனோ வாங்கிக்கிட்டா தனி உபசாரம். என்னவோ ஒவ்வொருத்தனுக்காகவும் ஒவ்வொருவாட்டி ஆத்துக்கோ கடலுக்கோ போய் மீன் பிடிச்சாந்து வறுத்து தர்ற மாதிரி ஒரு துண்டு 12 ரூபா. நமக்கெங்கே கட்டுப்படியாவும்... எக்ஸ்ட்ரா எதுவும் வாங்கிக்கிறதில்லை. மிஞ்சிப் போனா ஒரு ஆம்லெட்டோ ஆப்பாயிலோ. கடனுக்கு போடறாப்ல

டொப்பு டொப்புன்னு தலையில இடிக்கிற மாதிரிதான் ஒவ்வொன்றையும் வைப்பானுங்க. எப்படிப் பார்த்தாலும் ஒரு நாளைக்கு அம்பது ரூபாயைத் தாண்டிடுது. அது இல்லாம மேல்செலவு வேற. ஆபீஸ்ல தர்ற படியெல்லாம் தாங்காது. இன்னும் மூணுவாரம் பல்லைக் கடிச்சிட்டு இருந்துட்டு வரவேண்டியது தான்.

இந்த ட்ரெயினிங்கால ஒரு பிரயோஜனமுமில்லை. என்ன பண்ணித் தொலைக்கிறது, ஒரு இன்க்ரிமென்ட்டுக்காக இந்த கூத்துல நானும் ஆடித்தானாகணும். தமாஷா, இல்லே கொடுமையான்னு தெரியல. எங்க செக்ஷனை குளோஸ் பண்ணி சேலம் ஆபீஸோட சேர்க்க உத்தரவு வந்திருக்கு. நான் கம்ப்யூட்டர் ட்ரெயினிங் முடிச்சிட்டு வந்து மோட்டுவளையை பாத்துக்கிட்டு இருக்கணும். வேலைவெட்டி இல்லாம கிடக்க எதுக்க கம்ப்யூட்டர் ட்ரெயினிங்... தலையில கிரீடம் அடியில அம்மணம்னு நம்மூர்ல சொல்ற கதைதான் இது.

m';f ey;y kiHd;D ngg;gh]y ghh]j;njd;. c';fg;gh bghd;ndh] fl;ol;lhuh... ,e;j kiHa ek;gp vijahtJ btijr;rpl;L mg;g[wk; fha[nj fUFnjd;D bghyk;gg; nghwhU. vJf;Fk; ,d;bdhU kiHa ghh]f;fr; brhy;Y. ,y;nyd;dh nghdtUr fijjhd; ,g;gt[k;D MapLk;.

இங்கயும் ரெண்டு நாளா மழை. தெருவுல கால் வைக்க முடியலை. நசநசன்னு சேறும் சகதியும். சாக்கடைன்னு ஒண்ணு தனியா எதுக்கு இருக்குன்னே விளங்கலை. எல்லாமே ரோட்டுலதான். "தெருக்குள் நேர்நேராகவும், அகலமாகவும், வடிகால் வசதியோடும் இருந்தன" ன்னு புதையுண்ட மொகஞ்சதாரோ ஹரப்பாவுக்கு பிறகு எந்த நகரத்திலயும் இருக்கிறதை பார்க்கவும் முடியலே. படிக்கவும் முடியலே. த்தூத்தேறி...

நம்ம வால் எப்படியிருக்கான்? மாமனுங்க ரெண்டு பேருக்கும் செமத்தியா செலவு வச்சிருப்பானே... விளையாடப் போகாதே வெளியப் போகாதேன்னு அவனை கட்டுதிட்டமா வைக்காதே. இப்ப லீவ்தானே. விடு, விளையாடட்டும். அஞ்சுல வளையலேன்னா அம்பதுல வளையாதுங்கன்னு இதைப் படிக்கிறப்பவே எனக்கு பதில் சொல்லணும்னு உன் வாய் துடிக்கும். ஒரேயடியா வளைச்சு கடைசியில நிமிரத் தெரியாம போயிடக்கூடாதில்லையா? அதுவுமில்லாம அம்பதுல எதுக்கு வளையணும்னு கூட நாம யோசிக்க வேண்டியிருக்கு மகா.

நமக்காச்சும் மடியில கிடத்தி கதை சொல்ல தாத்தா பாட்டி இந்தாங்க. இப்ப இருந்தாலும் எந்த பாட்டிக்கு கதை தெரியும்? அவங்கதான் இப்ப டி.வி. முன்னாடி வாய் பொளந்து கிடக்காங்களே... குழந்தைக்கு என்ன தெரியும்? அவங்க உலகமே தனி. அதுக்குள்ள நாம நுழையாம இருக்கிறவரைக்கும் அவங்களுக்கு சந்தோசம். நீயும் நானும் அனுபவிச்சு இழந்து மறந்த சந்தோசம். அது அவனுக்கு விளையாட்டுல கிடைக்கும்னா நாம ஏன் தடுக்கணும்...

சரி மகா நீ எப்படியிருக்கே... உனக்கென்னடியம்மா, காலையில வந்தா சாயங்காலம் பஸ்ஸேறி பறக்கிற மகள், ஒரு மாசம் முழுசா தங்கறதுக்கு வந்திருக்காள்னு சந்தோசத்துல உங்கம்மாவுக்கு தலைகால் புரியாது. உன் தங்கச்சி சிறுவாட்டுல வளர்ற கோழியெல்லாம் உன் தட்டுலதான் இருக்கும். நல்லா சாப்புடு. எப்ப தண்ணி லாரியோட ஹாரன் சத்தம் கேட்குமாங்குற நித்ய கவலைய விட்டுட்டு நல்லா சாப்பிட்டு தூங்கி இந்த ஒரு மாசத்துலயாவது உடம்பை கொஞ்சம் தேத்து.

ரொம்ப அனிமிக்கா இருக்கேன்னு டாக்டர் தந்த டானிக் முழுசையும் நீ குடிச்சிருக்கணும். மறுத்திட்டே. அலமாரியில பாதி பாட்டில் நிறம் மாறி கிடக்கு. கேட்டா, எண்ணைய பூசிக்கிட்டு உருண்டாலும் ஒட்டறதுதாங்க ஒட்டும்னு பாட்டியாட்டம் பழமை சொல்றே. ஒவ்வொண்ணுகளும் எப்படி திண்டுக்கட்டைங் களாட்டம் திமிர்த்துக்கிட்டு ஊறுதுங்க, நீ என்னடான்னா நாளிருக்க நாளிருக்க இளைச்சுக்கிட்டே போற. போனவாரம் தைச்ச ஜாக்கெட் இந்த வாரம் லூசாயிருக்குங்றே வேளாவேளைக்குஏதாச்சும் சாப்பிட்டாத் தானே... பசின்னா பத்தும் பறக்கும்பாங்க... உனக்கு பத்தும் பறந்து வந்து பக்கத்துல நின்னாலும் பசி மட்டும் வரமாட்டேங்குது. மனசுல தீராத கவலை உள்ளவங்களுக்கு உடம்புல எதுவும் ஒட்டாதாம். ஏன் மகா, சொல்லி ஆத்திக்க முடியாத கவலை ஏதாச்சும் உனக்குள்ள இருக்கா... வெளிப்படுத்த முடியாம மனசுக்குள்ளயே நெனச்சு நெனச்சு மருகிக் கிட்டிருக்கியா... சொல்லு மகா...

இந்த எட்டு வருசத்துல ஒருநாளும் உன்னைக் கேட்டதில்லை. சொல்லியும் எதுவும் ஆகப்போறதில்லேன்னு நெனச்சோ என்னவோ நீயும் எதையும் சொன்னதில்லை. அதுவுமில்லாம, நேருக்கு நேரா கேட்டா இயல்பா இருக்காது. சினிமாவுல கேட்கிற மாதிரி செயற்கையா இருக்கும். பதிலும்

வெளிப்படையா இல்லாம போலியாத் தானிருக்கும். அதனால தான் இப்ப லட்டர்ல கேட்கிறேன். இவனை விடவும் வேற ஒரு எடத்துல நமக்கு நேர்ந்திருந்தா நல்லா பொழைச்சிருக்கலாம்னு உனக்கு எப்பவாச்சும் தோணியிருக்கா... அப்படி தோணுற அளவுக்கு என்னோட நடவடிக்கையில எதெது இருக்கு...

"என்னங்க இது, கல்யாணமாகி இத்தனை வருசம் கழிச்சு இப்படியெல்லாம் கேட்டுட்டு..." ன்னு சம்பிரதாயமா பதில் சொல்லாதே. அட்லீஸ்ட், இதை படிக்கிறப்ப வாச்சும், உன் மனசுல இருக்கிறதை ஒரு வாட்டி வாய்விட்டு சொன்னாக்கூட ஆறுதலாயிருக்கும்.

என்னோட, கடைசி வரைக்கும் கஷ்ட நஷ்டங்கள்ல (சுகதுக்கம்னு நமக்கு கிடையாது. நமக்கெல்லாம் கஷ்ட நஷ்டங்கள்தான்) பங்கெடுத்துக்கிறவ நீதான்ற முறையிலயோ, உனக்கும் உணர்வுகள் இருக்குங்கற வகையிலயோ உன்னை மதிச்சு கலந்து பேசி முடிவெடுக்கிற பக்குவம் எனக்கு இன்னமும் வரலை. முரட்டடியா "எனக்குத்தான் தெரியும்" ன்னு சொல்லாமலே அப்படியான மனநிலையிலதான் உன்னை நடத்தியிருக்கேன். ஆனா நீ முகஞ்சுளிச்சதில்லை.

யோசிச்சுப் பார்த்தா, உனக்குன்னு எதையும் செய்யலேங்கறது நல்லாவே படுது. உடம்பை மறைக்கத் துணியும், வயித்தை நெறைக்க சோறும்கிறதை தாண்டி, ஊர் உலகத்துல மத்த பொம்பளைகளுக்கு வாய்ச்சிருக்கிற எதுவும் உனக்கு நேரலை. கல்யாண நாள்ல புடவை எடுக்கறதுகூட, முதல் வருசததோட நின்னுப் போச்சில்லையா... எப்பவெல்லாம் கோவாப்டெக்ஸ்ல நிலுவை தீருதோ அப்பத்தான் நமக்கு தீபாவளியும் திருநாளும்னு மாறிடுச்சு. என்னவோ ஒரு கலர்ல சேலை, அதுக்கு சம்பந்தமேயில்லாத ஜாக்கெட்... முந்திய கழுத்து வரைக்கும் இழுத்து விட்டுகிட்டு நீ நடக்குறப்ப பல நாள்ல எனக்கு அழுகை முட்டிக்கிட்டு வந்திருக்கும். தாலிக்கயிறை தவிர பொட்டிலிருந்து மெட்டி வரைக்கும் மேசிங்கா போட்டுக்கணும்னு கிழவிங்க கூட ஆசைப்படற இந்தக் காலத்துல, உனக்கு அந்த ஆசையெல்லாம் வர்றதில்லையா? ஒரு குண்டுமணி செஞ்சுப் போடலேன்னாலும், இருந்ததையாவது விட்டுவச்சேனா... எல்லாத்தையும் தொலைச்சு முடிச்சாச்சு.

என்ன பண்றது... நம்ம நெனைப்புக்கும் திட்டத்துக்கும் மீறி வந்த செலவுங்க ஒண்ணா ரெண்டா... ஒப்புதலில்லேன்னாலும் செஞ்சாக வேண்டிய செலவுகள்... மூத்தப் பையன்கிற பொறுப்பால தட்டிக் கழிக்க முடியாத செலவுகள். ஒத்தை சம்பளத்துல அதுவும் சொத்தை சம்பளத்துல அத்தனைக்கும் ஈடு கொடுத்து தாக்குபிடிச்சு நின்னேன்னா அது உன்னோட பலத்துலதான் மகா. கூட நம்ம பிரண்ட்ஸ்ங்க சிலர்.

நேத்து சர்வீஸ்ல சேர்ந்தவன் கூட வீடுவாசல் தோட்டம் தொறவு வண்டி வாகனம்னு பொண்டாட்டி புள்ளைய சுகபோகமா வச்சிருக்கிறதை பாக்குறப்போ கண்ணுக்கு தெரியாத மாயவாள் மனசை அறுத்தறுத்து ரணமாக்குது. அவங்களுக்கு சம்பளத்துல மிச்சம் பிடிக்கிற அளவுக்கு பிக்கல் பிடுங்கல் இல்லாத குடும்ப சூழ்நிலை. இல்லேன்னா ஏதாச்சும் சைடு பிஸினஸ். கொஞ்சம் பேர்தான் அப்படி. பெரும் பாலானவங்க கிம்பளத்தைத்தான் நம்பியிருக்காங்க. என் சுபாவத்துக்கு அது பொருந்தலை. பத்து பேருகிட்ட கை நீட்டி உனக்கு பட்டுப்புடவை வாங்கித் தரலாம். கட்டிக்கிட்டு நீ தெருவுல நடக்குறப்ப, நாம கொடுத்த லஞ்சப் பணத்துல வாங்கினதுதான் இவ கட்டியிருக்கிற சேலைன்னு தந்தவன்ல எவனாச்சும் நெனைப்பான். அப்படி நெனைக்கிறது, நீ கட்டியிருக்கிற துணியை ஊடுருவி, உன்னோட நிர்வாணத்தை பாக்குறதுக்கு சமம்தானே... அதை எதிர்த்துக் கேட்கிற தார்மீக பலமும் உரிமையும் எனக்கும் உனக்கும் இல்லாம போயிடும்னு பயப்படறேன்.

உங்கப்பாவுக்கு கூட இதுல என்மேல ரொம்ப வருத்தம். ‘‘நீங்க மட்டும் கை நீட்டாம இருந்தா சிலையா வைக்கப் போறாங்க’’ ன்னார் ஒருநாள். ‘‘எல்லா காரியங்களையும் சிலையை குறிவச்சே நடத்தினா, அப்புறம் நாட்டுல மனுசங்க நடமாட இடமிருக்கும்... அவங்கவங்களுக்குன்னு மனசாட்சி எப்படி வழிகாட்டுதோ அப்படித்ததான் நடக்க முடியும்... ஊரு எப்படியிருக்கோ அப்படி நீங்களும் இருந்துட்டுப் போங்களேன் னார் இன்னொருவாட்டி ஊருங்கிறது எது மகா.. நாமெல்லாம் இல்லாமயா.. நாமபோற போக்குல ஊரும் ஒரு நாளைக்கு வரும்னு நம்பி போய்க்கிட்டே இருக்க வேண்டியது தான். அதை விட்டுவிட்டு, வாய்கொப்பளிக்க தண்ணியிருக்குன்னு, நரகலை அள்ளத்திங்க முடியாதில்லியா..

விடு மகா இன்னம் ஒருவருசம், சொடக்குப் போட்டாப்ல ஓடிவிடும். சீட்டுக்கடனும் முடிஞ்சிட்டா, நம்மாலயும் கொஞ்சம் மூச்சுவிட முடியும்.

சரிப்பா ரொம்ப புலம்பிட்டேன்னு நெனைக்கிறேன். வெகு நாளா உங்கிட்ட சொல்லணும்னு மனசு முழுக்க நெறைய சேர்த்து வச்சிருந்ததாலத்தான். இதெயெல்லாம் உனக்கு எழுதினதால, உன்னைப்பிரிஞ்சு இவ்வளவு தூரத்துல இருக்கேன்ற தனிமை தெரியவை. மத்தபடி இந்த லைப்பும் ஒருவகையில் நல்லாத்தானிருக்கு.

சுவர் முழுக்க சினிமாக்காரங்களோட ப்ளோ அப், சிகரெட் புகைமண்டியிருக்கும் ரூமுக்குள் எறைஞ்சிக்கிடக்கிற புஸ்தகங்க, கால நேரமில்லாத அரட்டை, தூக்கம், ஈரத்துணிங்களோட மக்கின வீச்சம் இப்படியெல்லாம் வாழ்ந்த 'பேச்சிலர் லைப்' மறுபடியும் ஞாபகத்தில் வந்து வந்து போகுது. வாழ்ந்து நிறுத்திய வாழ்க்கையை மறுபடியும்' தொட்டுத் தொடரஒரு வாய்ப்புக் கிடைக்கிறதும் கூட சந்தோஷம் போல.

காலச் சக்கரத்தை திருப்பி சுழற்ற முடியாதுன்னு தெரிஞ்சிருந்தாலும் கூட, சுத்தற மாதிரி தெரியற கணம்- அந்த கணத்தில் வேறொரு தளத்துல இயங்குற வாழ்க்கை எல்லாமே மனசுக்கு தேவைதான் மேலேறுகிற போது பொட்டுவிட்டுப் போன கைக்குட்டையை மறுசுற்றில் எடுத்து பத்திரப்படுத்திக் கொள்ளும் சந்தோஷமும் சாகசமும் ரங்கராட்டினத்தில் மட்டுமில்லை, வாழ்க்கையிலும் தட்டுபடத்தான் செய்கிறது. உனக்கு அங்கும் எனக்கு இங்குமாக கழிகிற அந்த வாழ்க்கையை நினைப்பூட்ட இந்த கடிதம் சாட்சியாக இருக்கட்டும் அன்போடு அன்புக்கு.

அரிசி

நீல. பத்மநாபன்

சற்றுத்தொலைவில் நீரில் துடுப்புகள் சலசலக்கும் ஓசை... காலூன்றி நின்ற வையத்திலும், அண்ணாந்து பார்த்த வானிலும் இருள் தளம் கெட்டி நிற்கையில், விருட்சங்களுக்கு மட்டும் எப்படித் தோற்றம் இருக்க முடியும்?

மண்ணிலும் காற்றிலும் ஈரம் சொட்டுகிறது அடுத்த மழை எப்போது வேண்டுமானாலும் பெய்யலாம்...

மேற்கு வான்மூலையில் அடிக்கடி மின்னலின் மின்சார வீச்சு.. அதோடு இடியோசையும் சடசடவென்கிறது...

நெய்யாறில் மழை வெள்ளம் குமுறிக் கொந்தளித்து, ஆர்ப்பரித்து ஓடி, இங்கே பூவாறில் வந்து சேருகையில் சமுத்திரம்போல், பரந்து படர்ந்து அலையெழுப்பி ஓடிக் கொண்டிருக்கிறது...

சற்றுத் தொலைவில் கடல் இரைந்து கொண்டிருந்துது.

பரந்து கிடந்த, ஆறே இருளில் அரூபியாக இருக்கையில், காதரின் தோணிக்க மட்டும் எப்படி ரூபம் இருக்க முடியும்... ? துடுப்புத் துழையும் சத்தம் மட்டும் காட்டாற்று வெள்ளத்தின் இரைச்சலின் இடையில், மெல்லியதாய்க் கேட்டுக்கொண்டு இருந்தது.

கரி பிடித்த லாந்தரின் முணுமுணுக்கும் மங்கிய வெளிச்சம் கூட இல்லாமல், இந்த மழை வெள்ளத்தில்அனாயாசமாக படகைச் செலுத்திக்கொண்டிருக்கும் காதர் காக்காவை நினைத்த போது, இருளுடன் இருளாகச் கரையில் நின்று கொண்டிருந்த மூக்கனுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.

கேரள எல்லைக்குள் எந்நேரத்தில் வேண்டுமானாலும் பிரவேசிக்க, பிரத்யேக அனுமதி பெற்று ரோந்து சுற்றிக் கொண்டிருக்கும் தமிழக ஊர்க்காவற்படை, எப்போது, எங்கிருந்து, எப்படி, அங்கே தோன்றிவிடுமென்று நிர்ணயிக்க முடியாது... பீடியின் மினுமினுப்புக்கூட ஆபத்தானது..

பீடியை ஒரு தடவைகூட தீர்க்கமாய் இழுத்துவிட்டு, கீழே எறிந்தான் மூக்கன். ஈரத்தில் புசுபுசுத்துத் தீமுனை அணைந்தது...

வேறு ஒருசில பேர்கள் கூட சைக்கிளில் அங்கே வந்திறங்குகிறார்கள்...

"ஆரு மூக்கனா...?

ஆமா...ஆரு சைமனா

ஆரு உம்மறா?

ஆரு ராமனா?

அங்கே சப்தங்களுக்கு உருவமும், தோற்ற வேறுபாடுகளுகம் இருந்தன போலும் குரலின் வித்தியாசங்களில் இருந்து ஆட்கள் பரஸ்பரம் அறிமுகமாகிறார்கள், இனம் கண்டு கொள்கிறிார்கள்..

எல்லோரும் ஒரு முகமாக ஒற்றுமையாகக் குளிரைச் சபித்தார்கள்…

ஒருவருக்கும் தரையில் கால் பாகவில்லை.. எங்கோ அவர்களுக்கு முற்றிலும் அஞ்ஞானமான மூலைகளில் இருந்து – முனைகளில் இருந்து, அபாயம் அவர்களை உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது. முறைத்துப்பார்த்துக் கொண்டிருக்கிறது. எந்த நொடியில் என்று சொல்வதற்கில்லை. அது அவர்கள் மீது பைசாச வெறியோடு பாய்ந்து, பிய்த்துப் பிடுங்கி நசுக்கிவிடும்!

ஒரு பழுத்த இலை உதிர்ந்து விழும் ஒலிகூட, சிறைத்தண்டனையின் அபாய அறிவிப்பாக அவர்களை விழித்துப் பார்த்துப் பயமுறுத்துகிறது.

டெமாக்ளஸின் கட்கம்போல், தலைக்குமேல் நூலிழையில் அசைந்தாடிக் கொண்டிருந்த அபாயத்திலிருந்து, எந்தக் கணத்திலும் ஓடித் தப்பிக்கத் தயாரெடுத்தவாறு, நாலா புறமும் பரக்கப் பார்த்தவாறு, இருளில் பிசாசுக்களைப்போல் அந்த ஏழெட்டு பேர்களும் நிற்கிறார்கள்...

பேச்சொலியை வெளியே சிந்தக்கூட எல்லோருக்கும் ஒரு கிலி...காதர்காக்காவின் தோணி கரைக்கடப்பதையே அதீதமான ஆவலோடு எதிர்பார்த்தவாறு மௌனமாக அவர்கள் நிற்கிறார்கள்.

அப்பாடா..! இருளில் இழையும் ஓர் ஆமையையப்போல் தோணி கரையை அடைந்தது… காதர் எறிந்த கயிற்றை இழுத்து கரையில் நின்ற மரத்தில் மூக்கன் கட்டியதும், கூட்டம் ரொம்ப சுறுசுறுப்பாகி விட்டது.....

சைக்கிள் கேரியரில் வைத்து அவர்கள் கொண்டு வந்திருந்த மரவள்ளிக் கிழங்கு மூட்டைக்குள் படகுக்கும், படகில் இருந்த அரிசிக் சாக்குகள் ஒவ்வொருவர் சைக்கிள் கேரியருக்கும் இடம் மாறிக் கொள்ளும் பரபரப்பு…

எல்லோருக்கும் பயம் கலந்த ஒரே துடிதுடிப்பு….

படகு கிடந்து தத்தளிக்கிறது….

“லே…. கவனம் ….. கவனம் ….. மலை வெள்ளத்துக்க பயங்கர ஒழுக்கு.. இங்கணெயானா அசல் கசம்…. எவப்பராளப் பட்டுட்டு தண்ணீலெ விளுந்துட்டா பொறவு பொறயிதம் கூடக் கிடைக்காது… சொல்லிப்போட்டேன்….”

இப்படி அடிக்கடி அடித்தொண்டை கரகரக்கச் சொல்லியவாறு டார்ச்சைமின்ன வைத்து அணைக்கிறான் காதர். அதற்கிடையில் நீரில் குதிர்ந்துபோய், மடியிலிருந்த

டயரியை வெளியே எடுத்து, ஒவ்வொருத்தர் கணக்கையும் தனித்தனியாக அதில் எழுதிக் கொள்வதோடு சிலரிடமிருந்து பணம் வாங்குவதும், வேறு சிலருக்கு எண்ணிக் கொடுப்பதுமாகச் சுறுசுறுப்பாக இயங்குகிறான் அவன்.

இத்தனை நேரமாய்க குமுறிக் கொண்டிருந்த மழையும், இதுதான் சமயமென்று சடசடவென்று பெய்யத் தொடங்கி விட்டது.

''எல்லாரும் கொஞ்சம் கவனியுங்கோ... காருக்க சத்தம் கேக்குல்லா .....?'' என்று சடக்கென்று காதர் சொன்னானோ இல்லையோ, எல்லோருக்கும் வயிறு கலங்கியது.

கைகால்களுக்கு ஏன் இந்தத் திடீர் சோர்வு?

எல்லோரும் ஸ்தமித்துப் போய்விட்டார்கள்.

மழையின் சத்தத்தின் இடையில், இப்போது எல்லோருக்கும் அந்த ஒலியைத் தெளிவாகக் கேட்டு, இனம் கண்டு கொள்ள முடிகிறது.

''போலீஸ் வேனேதான்...''

''இடி வண்டி.....''

எல்லோருக்கும் பொறி கலங்கியது.... ஒரே ஒரு கக்ஷணம் தான்! ''உம்... சட்டுண்ணு சட்டுணு... தேணிக்கயத்தை அவுத்துடு.... நா அப்படி ஒதுங்கிப் போரயிரட்டும்...'' என்று முண்டாசை இறுக்கிவிட்டு, லுங்கியை மடக்கி உடுத்தியவாறு காதர் சொன்னதும் எல்லோரும் பரபரப்போடு சுறுசுறுப்பானார்கள்.

விளாக விளாசென்று மழை அடித்து நொறுக்கிப் பெய்கிறது...

படகில் ஏற்ற வேண்டியதும், படகிலிருந்து இறக்க வேண்டியதும் முடிந்து விட்டிருந்தது.

சிலர் சைக்கிள் கேரியரில் முழுச் சாக்கை வைத்துக் கட்டிக் கொண்டிருந்தார்கள். வேறு சிலர் சைக்கிளுக்கும் தோணிக்கும் இடையில் மூட்டைக்குள் நிற்கிறார்கள்.

கயிறை அவிழ்த்துவிட்டு நீரோட்டத்தோடு ஓட்டமாக, கரையோரமாய்ப் படகைச் செலுத்தியவாறு தண்ணீரில் சரிந்து, வெள்ளத்தின் ஓட்டத்தில் சலசலத்தவாறு, மூடிக்கிடந்த மரங்களின் ராட்சசக் கிளைகளின் இடையில் சென்று மறைந்தான் காதர்.

சைக்கிளில் வைத்துக் கெட்டியது பாதி, கெட்டாதது பாதியாக சிலர் பக்கத்துப் புதர்களுக்குச் சைக்கிளை உருட்டியவாறு மரணப் பாய்ச்சல் பாய்கிறார்கள்.

இயக்கவேகம் கொண்ட பயங்கர நிமிஷங்கள்... அகப்பட்டுக் கொண்டால்?

போச்சு.... எல்லாம் போச்சு...! பிடிப்பவர்கள் உடனடித் தரும் கைநீட்டத்தின் கூட, ஏழோ எட்டோ மாசம் கம்பி எண்ணவேண்டி வந்துவிட்டால்....

வீட்டில் பெண்டாட்டி புள்ளைகள் கதி....?

அப்பா அம்மாவின் கதி?

மூக்கனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை...

எங்கே ஓடுவது?

எப்படிப் பதுங்குவது?

காரின் வெளிச்சம் தெரிகிறது.

போலீஸ் வேனா.... இல்லை ஜீப்பா?

நினைத்துப் பார்க்கவோ, நிதானிக்கவோ, துளிக்கூட நேரம் இல்லை அவகாசமில்லை.

உடனடி முடிவு செய்யவேண்டும்.....!

கூட்டாளிகள் யாவரும் சைக்கிளில் இருக்கும் அரிசி மூட்டையுடன் பத்திரமாய் ஒளிந்து கொண்டு விட்டார்கள். அவனுக்கு உன்றுமே புரியவில்லை....

கேரியரில் வைத்துப் பலமாய்க் கட்டியிருந்த ஒரு சாக்கு அரிசியோடு, சைக்கிளை, செடி கொடிகள் வழி ஆற்றோரமாய் கொஞ்சம் தூரம் உருட்டிக்கொண்டு வெகுவேகமாய் ஓடினான்.... சடக்கென்று சைக்கிளைத் தண்ணீரில் இறக்கிக் கரையோடு கரையாய்ச் சேர்த்து அழுத்திப் பலமாகப் படித்த படி, அவனும் ஆற்றில் இறங்கினான்.

ஏற்கனவே மழை வெள்ளத்தாலும், வியர்வையாலும் தொப்புதொப்புபென்று நனைந்து போயிருந்த உடம்பில் ஆற்று நீரின் பனிக்கட்டியைப்போன்ற குளிர், உறைக்காமல் இருக்கவில்லை.

சைக்கிளின் குறுக்குச் சட்டத்தின் உள்வழி இருகைகளையும் நுழைத்து, தலையின் மீது வந்த விழுந்த கிடந்த மரக்கிளைகளை உடும்புப் பிடியாகப் பிடித்தவாறு ஆற்றின் ஆழம் தெரியாத அடிமட்டத்து மண்ணில் போய்ச் சேராத கால்களோடு, அரிசி மூட்டை நீரில் முழுகிவிடாமலிக்கத் தன் கை புஜங்களில் தொங்கும் சைக்கிளைக் தூக்கிலான கரை மண்ணோடு மண்ணாகத் தன் முழு உடம்பால் அழுத்தித் தாங்கியவாறு, தண்ணீரில் கழுத்தளவுக்கு முழுகி அந்தரத்தில் நின்றான் அவன். கரையின் மண் விளிம்பு தலைக்கு மீது நாலைந்து அடி உயரத்தில் இருந்தது.

பிராயண பயம்...

உயிரைக் காக்கும் வெறி....

ஆபாயத்தை நேருக்குநேர் சந்திக்கையில் மனிதனுக்கு வந்துவிடும் அபார-அசாதாரணமான, தைரியம்தான் மூக்கினிட மும் முழுமூச்சாய் வேலை செய்தது.

உயிருக்கே ஆபத்தான விநாடிகள்..... புஜங்களில் சைக்கிளும் அரிசி மூட்டையும் கீழே அழுத்த, உடம்பை நீரோட்டம் வலுக்கட்டாயமாக பக்கவாட்டில் இழுக்கிறது.....

பிராண ரட்சைக்காக மரக்கிளையை வீறோடு பற்றியிருக்கும் கரங்கள் மட்டும் ஓய்ந்து விட்டால்....?

அன்போடு அரவணைத்து இறுகித் தழுவி தன்னில் ஒன்று கலகக்ச் செய்ய ரொம்ப நெருங்கிவந்து, கொட்டுக் கொட்டென்று அவனையே பார்த்துக் கொண்டு நிற்கிறது மரணம்....

அது எந்த உருவில்...?

நீரில் முழுகி துர்மரணமாவோ?

இது என்ன உயிர் வாழும் சமரா: இல்லை: உணவைக் காத்து உணவைத் தேடி, ஒரு குடும்பத்தின் பட்டினிச்சாவைச் சமாளிக்கும் புண்ணிய வேள்வியா?

தமிழகப் போலீஸ் வேன்-ஆர்ப்பாட்டமாக சற்று தொலைவில் வந்து நிற்கிறது.

சடசடவென்ற மழை இன்னும் ஓயவில்லை.

திமுதிமுவென்று வேனிலிருந்து இறங்கியவர்கள் டார்ச் ஒளியை பாய்ச்சி, அங்குமிங்கும் பாய்நது இரையைத் தேடுகிறார்கள்.

தன் தலைக்கு மீது கரையில் காலடியோசை....

குலதெய்வங்களை எல்லாம் பிரார்த்திக் கொண்டு, இமைகளை மூடி ஒருவித மோன தியானத்தில் அவன் முழுகினான்.

பார்த்துவிடுவார்களா?

பார்த்துவிட்டால்?

பாவம்.... வேலம்மை தேடித்தேடி இருப்பாள்... உம்... அம்மைக்கு சீக்கு எப்படி இருக்கோ? வீட்டிலிருந்து இறங்கும் போது அவளுக்கு நல்ல நினைவு கூட இல்லை....

கோமுவுக்குக் காய்ச்சல் எப்படி இருக்கோ? இந்த நெருக்கடி யான நாளில், வீட்டில் தான்மட்டும் இல்லாவிட்டால்...? என்னாண்ணு மூண்டு கேக்க வேறெ ஆரு

இருக்கா? ஆறோ ஏழோ மாசம் ஜெயில் விருந்தெல்லாம் கழிஞ்சு, திரும்பி வரும்போது குடிசையில் யார்யார் மிஞ்சியிருப்பார்களோ என்னவோ!

“ஐயோ....”

யாரது? மேலே யாரோ அகப்பட்டுக் கொண்டு விட்டார்கள் போலிருக்குது.

“லே.... இப்படி வாலே... எவ்வளவு நாளாட்டு இந்த வேலை நடக்கூ? திருட்டு ராஸ்கல்...”

“ஐயோ... பொன்னு யசமானே இனி மாட்டவே மாட்டேன்...”

“ஐயோ...”

“ஐயோ...”

பாவம்... நொண்டி ராமன்தான்.

செத்தான்!

இனி அடுத்தது யாரோ?

“நான் தானா....?”

காலில் என்னவோ வழுவழுக்கிறது.... நீர்ப்பாம்பா...? எதுவாக இருந்தாலும் என்ன செய்யமுடியும்! கைகள் இரண்டும் மேலே அல்லவா தொங்குகிறது... அதை விட்டு விட்டால்...

பாவம் ராமன்...! இடது காலைக் கொஞ்சம் இழுத்து இழுத்துத்தான் நடப்பான்... ஆனா... அவன்கூட ஓட யாராலும் முடியாது... எப்படி அகப்பட்டுக் கொண்டு விட்டான்.!

முதன்முதலில் அவனைச் சந்தித்த நாள்...

மூணு நாலு வருஷங்களுக்கு முன்னால்....

நாகர்கோவிலில் இருந்து திருவனந்தபுரத்துக்கு வந்து கொண்டிருந்த ஒரு கேரளா பஸ், களியாக்கவிளை செக் போஸ்டின் முன் வந்ததும், நிற்கிறது.

திமுதிமுவென்று பஸ்ஸீக்குள் நாலைந்து பேர்கள் நுழைகிறார்கள்... துப்பாக்கி தாங்கிய போலிஸ் ஜவான்கள் வெளியில் தயராக நிற்கிறார்கள்...

பஸ் பிரயாணிகளின் பெட்டி படுக்கைகளை, பைகளை எல்லாம் பிடித்திழுத்துத் திறந்து உள்ளே இருந்தவைகளைத் தலை கீழாகக் கவிழ்க்கிறார்கள்... ஏழ்மையின் தரித்திர முத்திரையோடு பரிதாபமாகத் தெரிந்தவர்களிடம் முற்றுகை பலமாக இருக்கிறது.

சில பைகளில் அழுக்குத் துணிகள்...

சில பைகளிலிருந்து வடசேரிச் சந்தைக் காய்கறிகள் உருண்டோடுகின்றன. சில பைகளில் கன்னியாகுமரி கயர் பந்து...!

சில கிராமத்துப் பெண்களின் பைகளில் இருந்து கந்தலாகிப்போன கண்டாங்கி எண்ணைச்சிக்கு வாடை கொண்ட சவரி, இவைகளின் கூட கீழே சிதறிய சம்பா அரிசி மணிகளும் கைப்பற்றப்படுகின்றன.

அப்போதான், பார்க்கப் பிச்சைக்காரன் போலிருந்த ஒரு நொண்டி, ''ஐயோ... பொன்னு எசமானே.... தர்ம தொரையே... விட்டுரும்.. நா வீடுவீடா ஏறி இறங்கி பிச்சை எடுத்து சம்பாரித்து... விட்டுரும்...விட்டுரும்...'' என்று கண்ணீர் வடித்துக் கதறியதை ஒன்றும் பொருட்படுத்தாமல், கந்தலாகிப்போன அவன் வேட்டியின் உள்ளிருந்து, ஒரு சின்ன அழுக்குத் துணி மூட்டையை முரட்டுத்தனமாய்க் கைப்பற்றி இழுத்தான், பரிசோதனைச் சிப்பந்தி.

பஸ்ஸில் ஒரே பரபரப்பு...

பிராயாணிகள் இரு கட்சிகளாகப் பிரிகிறார்கள்.... அடடா..! இப்படியுண்டா அநியாயம்? இவுனுகளுக்கெல்லாம் எவ்வளவு துணிச்சல் இருக்கணும்? சார்... இப்படிப்பட்ட ராஜத் துரோகிகளை எல்லாம் தூக்கிலெ ஏத்தணும்... அப்பம்தான் நாடு நல்லாவும்! என்றார் கோட்டும் ஸுட்டுமாகக் கம்பீரமாய்க் காட்சியளித்த ஒருவர், அழகாய் இருந்த தன் தோல் பையை மடியில் பத்திரப்படுத்தியவாறு.

எனக்கு நாகர்கோவிலில் சொந்த வயலிருந்தும் கூட, என் குடும்பம் இருக்கும் திருவனந்தபுரத்துக்கு நெல்லு கொண்டு போக முடியாமெ தட்டளியேன் என்றார் ஒரு மூக்குக் கண்ணாடி ஆசாமி.

''கேரளா பஸ்ஸல்லவா..! இந்த டிரைவருக்கும், கண்டக்டருக்கும் கூடப் பங்கு இருக்கும் சார்.. இவுனுகளை எல்லாம் டிஸ்மிஸ் செய்யணும்...''

இப்படி ஒருவர் ஆக்ரோஷமாக அலறியதும், பரிசோதனை அதிகாரி, டிரைவரையும், கண்டக்டரையும் பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கிச் சொல்லி அதிகார தோரணையில், பிராயாணிகளின் பைகளில் அரிசி ஏதாவது இருக்காண்ணு செக் பண்ணாமல் எப்படி ஓய் பஸ்ஸில் ஏற்றலாம்...? உம்.. உம்ம லைஸன்சை எடும்.. பாட்ஜை எங்கே? பேரைச் சொல்லும்?'' என்று சத்தம் போட்டார்.

''சார் நாங்க பார்த்துதான் ஏத்தினோம்... ஏறும்போது இதையொண்ணும் நாங்க காணவே இல்லை சார்...

அழமாட்டாக குறைாகக் கண்டக்டர் அவரிடம் சொல்கிறான்.

அழுகையையும் கதறலையும் ஒன்றும் பாராட்டாமல் அந்தப் பிச்சை அரிசி பறிமுதல் செய்யப்படுகிறது.

வயிற்றுப்பாட்டுகளை குலத்தொழிலை இழந்து, பிழைப்பைத் தேடி, திருவனந்தபுரத்துக்குக் குடும்பத்தோடு யாத்திரை செய்து கொண்டிருந்த மூக்கனுக்கு, இந்தக்களேபரத்தைக் கண்டபோது பொறுக்கவில்லை.

என்னத்துக்கு இந்த பகளம்? பாவம்... கொஞ்சம் அரிசி வீடுவீடாகப் பரேய் எரந்து வாங்கிக்கொண்டு போறான்.. எரந்து திங்கப்பட்டவனைத் தொரந்து வாங்கியோ நாடு நல்லாவப் போவுது? லாரிக்கணக்கில் அரிசியும் சோறும் மொத்தமா கொண்டுப் போறா.. அதைக் கேப்பாரில்லை?

அவன் வார்த்தைகள் அங்கே எடுபடுமா? போனது போனதுதான்...?

பிறகு பஸ் விட்டபின், மூக்கைச் சிந்திப்போட்டு அழுதவாறு உலகத்தையே சபித்துக் கொண்டிருந்த ராமனைத்தேற்ற மூக்கன் ஒருவன் மட்டுதான் அந்த பஸ்ஸில் இருந்தான். "போட்டும் ஓய்... இந்த சட்டமான சட்டமெல்லாம் கடேசீ லே பாவங்களுக்க வயத்தைதான் வந்து அடிக்கு.. உம்.. ஆரூட்டெச் சொல்ல...!"

பட்டம் தாணுப் பிள்ளை முதல் மந்திரியாக இருந்த காலத்தில் கன்யாகுமரி ஜில்லாவை, தாய்த் தமிழகத்துடன் இணைக்க நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில், தன் இடதுகால் முடமான செய்தியையும் அப்போதுதான் ராமன் அவனிடம் வெளியிட்டான்... இப்படித்தான் நொண்டி ராமனுடன் தனக்குப் பழக்கம் நேர்ந்தது. இதோ அவன் பிடிபட்டு விட்டான்...

இனி யாரு...?

நான் தானா...?

அப்பப்பா! இந்த கைகளுக்குத்தான் என்ன வலி.. தோளில் இருந்து விடுபட்டுப் போய்விடப்போகிறதோ என்னம்மோ..! உச்சி முதல் உள்ளங்கால்வரை உடம்பு முழுவதும் மரத்துப் போய்விட்டது போலிருந்தது...

எத்தனை யுகங்களாக இந்தக் குளிர்ந்த நீரில் கிடக்கிறோம்..! இன்னம் எத்தனை யுகங்கள்....?

அதற்க்குள்.. தன் ரத்தமும் சதையும் எல்லாம் பனிக்கட்டியாய் உறைந்து போகாதா? கடவுளே..!

மேலே காலடியோசைகள்..

பிடிபட்டு விட்டால்...?

அவனால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. மூளையில் தெளிவில்லாத என்னவெல்லாமோ ஸ்மரணைகள்...

பாலக்காட்டில் இருந்து கோயம்புத்தூருக்கும், பொள்ளாச்சிக்கும், அரிசியும் மரவள்ளிக்கிழங்குத் தூளும் கடத்திய நாட்களில் இப்படியொரு சித்ரவதைக்கு ஆளாகவில்லை. உம்... இந்த வாதநோய் பிடிச்ச அம்மாவை ஆயுர்வேத தர்ம ஆஸ்பத்திரியில் காட்ட வேண்டி திருவனந்தபுரத்துக்குத் திரும்பி வர நேர்ந்தது ஆபத்தாக முடிந்தது.

இனி என்ன செய்ய...?

இதெல்லாம் இந்த மூணுநாலு வருஷங்களுக்கிடையில் அண்ணைக்கு நான் நாகர்கோவிலில் இருந்து இங்கே வந்தம் பொறவுதானே...!

குலத்தொழிலைச் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தால் இப்படி ஏதாவது வந்திருக்குமா? அப்பா குமாரசாமி ஆசாரி தான் எவ்வளவு பெரிய பொன் வேலைக்காரர்...! எனக்கும் பிரமாதமாகத்தான் அவரு வேலை படிப்பிச்சுத் தந்திருந்தாரு... சின்னப் பயலா நா இருக்கையில் நுண்ணிய வேலைப் பாடுகளுக்கிண்ணே நீளமாய், மெல்லியதாய் அமைஞ்சிருக்குண்ணு, அப்பா என் விரல்களை எத்தனை தடைவ தடவியவாறு புகழ்ந்திருக்கிறார்...!

உம்... அந்த விரல்கள் இப்போ படும்பாடு...!

கடைசியில்...? அப்பா உயிரோடு இருக்கையில் இப்படி விபரீதம் ஏதாவது உண்டா? அப்பா எல்லோரும் இதை விட செழிப்பாகத்தான் இருந்ததார்கள்...

பிறகுதான், தங்கக்கட்டுப்பாடு சட்டத்தால் குடும்பமே நாசமானது.... அப்படி இருந்தும் வயிற்றுப்பாட்டை நடத்த, கள்ளக்களவில் தொழிலைச் செய்து கொண்டுதானிருந்தேன்.. ஆனால் இரண்டு தடைவ உருப்படி (நகை) செய்ய ஆளுகளிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்திருந்த தங்கத்தோடு போலீஸில் பிடிபட்டு, பணமும் மானமும் நாசம் அடைந்த பின், என்னை நம்பி யாரு பொன்னைத் தருவார்கள்....?

அதனால்தான் குடும்பத்தைக் காக்க என்னவெல்லாமோ தொழில் செய்து வேறு வழியில்லாமல், கடைசியில் இந்தத் தொழிலை வந்து சரணாகதி அடைந்தேன்.

இப்போ... அகப்பட்டுக் கொள்வேனா..?

கடவுளே... இந்த ஒரே தடைவ மட்டும் இவர்கள் கையில் சிக்கி விடாமல் என்னைக் காப்பாற்றி விட்டு விடு... இனி இந்த அபாய விளையாட்டுக்கு நான் இல்லை...

இல்லவே இல்லை.

இது சத்தியம்.

மேல இன்னும் ஆள் அரவம் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

டார்ச் விளக்கின் ஒளிவட்டம், மேலிருந்து ஆற்றின் வெள்ளத்தில் சரிந்து விழந்து, அதன் தங்க நிறத்தைக் காட்டிச் சிதறுகிறது.

ஆற்று நீருடன் மழை நீர்.... மழை நீருடன் வியர்வை...!

கடவுளே! அகப்பட்டுக் கொள்ளக்கூடாதே...! நித்ய கண்டம் பூர்ணாயிசான இந்தத் தொழில் இனிமேல் வேண்டவே வேண்டாம்... பழவங்காடி பிள்ளையார் கோவிலுக்கு இண்ணைக்கே ஒரு தேங்காய் உடைக்கிறேன்.

நிமிஷங்கள் இழைகின்றன....

சைக்கிள் வாடகை, அங்கே கமிஷன், வழியில் செலவு இதெல்லாம் போக, திருவனந்தபுரத்தில் வாடிக்கை ஹோட்டலில் கொண்டு போய்க் கொடுத்தால், இந்த ஒரு சாக்கு அரிசியில் இருந்து கூடிப் போனால் பத்து பதினெஞ்சு ரூபாதான் கிடைக்கும்...!

அதுவும் என்றும் கிடையாது.. இந்தக் கடல் வழியையும் அதிகாரிகள் கண்டுபிடித்து விட்டார்கள்...! போலீஸ் பந்தோபஸ்து தீவிரமாய் இருந்தால், சேர்ந்தாற்போல் ஒரு மாசம் வரை தொழிலே இருக்காது... இதுக்குப் படும் பிராணாவஸ்தை என்னா, சித்ரவதை என்னா...! இப்போதான் பார்க்கவில்லையா, கரணம் தப்பினால் மரணம் தானே...

ஆனால் ... இந்த வரும்படியும் இல்லாவிட்டால், தான், அம்மா, பொண்டாட்டி, மூணு குழந்தைகள் எல்லாம் எப்படிக் காலம் கழிப்பது...?

தெரிந்த குலத்தொழிலையே செய்ய முடியாத பரிதாபம்... ஏனையத் தொழில்கள் யாவற்றிலும் போட்டியும் பொறாமையும்... இந்தத் தொழிலையும் விட்டுவிட்டால், பின் எப்படித் தான் உயிர் வாழ்வது? குடும்பத்தை வாழ்விப்பது? இல்லை பட்டினிபோட்டே அழித்து விடுவதா?

எது எப்படியானாலும் இதுதான் கடேசி முறை....! இப்போ தப்பித்துக் கொண்டால் இனி இந்த நரக அவதனை அனுபவிக்க முடியவே முடியாது... இது கடவுள் மீது சத்தியம்...!

உடம்பு குளிரில் மரத்துப் போகப்போக, அவனது மானசீக சபதத்தின் தீட்சண்யம் தீவிரமாகிக் கொண்டே இருந்தது.

ஆனா.. தப்பித்துக் கொள்வேனா..?

எவ்வளவு யுங்கள் கழிந்தனவோ... தெரிவதற்கில்லை... கிடைத்த இரையைக் கவ்வியவாறு போலீஸ் வேன் போய் விட்டது போலிருந்தது.

அடைமழை தூறலாகி விட்டது.

மேலே சூறாவளி ஒய்ந்த ஓர் அமைதி...

எப்படியோ முக்கி முனுங்கிக் கரையேறி, மண்ணில் படுத்துக் கொண்டு சைக்கிளை அரிசி மூட்டையோடு இழுத்துக் கரையில் ஏற்றினான்...

கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது.

நேரம் விடியும்முன் திருவனந்தபுரம் போய்ச் சேர்ந்தாக வேண்டும்... அதற்கிடையில் இந்த நேரத்தில், அரிசியைச் சேர்க்க வேண்டிய இடத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டு, அவன் வீடுபோய்ச் சேர்ந்திருப்பான்.. உம்... இன்று சகுனம் சரியில்லை... அப்பப்பா... எவ்வளவு பயங்கரமான பிராண அவஸ்தை...!

கைகால்களை உதறி, தயார் எடுத்துக் கொண்டான். கேரியரில் இருக்கும் ஒரு சாக்கு அரிசியோடு இன்னும் இருபது, இருபத்தி ஐந்து மைல்களுக்கு மேல், சைக்கிளை விட வேண்டாமா?

வழக்கம்போல், எந்த கஷணத்தில் பிடிபட்டு விடுவோம் என்ற அச்சத்தின் மன அவசத்தோடு, அசாதாரணமான அன்றைய ராட்சஸ பிரயத்தனத்தால் உச்சி முதல் உள்ளங்கால் வரை விண்வின் என்று வேதனை தெறிக்க சர்.சி.பியின் காலத்தில் போட்ட முக்கியக் கான்கீரிட்ரோடைத் தவிர்க்க, பலவித சின்னச்சின்ன ஊடுவழிகள் வழியாக, சைக்கிளை விட்டும், உருட்டியும், தூக்கி எடுத்துக் கொண்டு நடந்தும், அவன் திருவனந்தபுரம் போய்ச் சேரும்போதும், சேர்க்க வேண்டிய இடத்தில் பத்திரமாய் அரிசியைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் போதும், பின் பழவங்காடி பிள்ளையார் கோவிலில் தேங்காய் வாங்கி உடைத்துவிட்டு, வீட்டுக்குத் திரும்பும் வழியில் பரமுவின் குடிசையில் நுழைந்து கொஞ்சம் போட்டு விட்டு வீட்டில் வந்து படுத்தபோதும் எல்லா நிமிஷங்களிலும், இது தான் கடேசி, இனி இந்தத் தொழிலுக்கு நான் இல்லை...

இல்லை... என்றெல்லாம் தீர்மானமாய் மனதில் தன் சத்தியத்தை ஆத்மார்த்தமாகப் புதுப்பித்துக் கொண்டே இருந்தான் அவன்.

முதல் நாள் களைப்பில், அடித்துப்போட்டது போல் தூங்கிக் கொண்டிருந்த மூக்கன், பழக்க தோஷத்தால்தானோ என்னமோ, இரவு இரண்டு மணிக்கு வழக்கம்போல் பாயிலிருந்து எழுந்து உட்கார்ந்தான்.

வெளியில் என்னவோ ஆள் அரவம்...

அவனுக்கு முன்னாலேயே எழுந்து குடிசை நடையில் நின்றவாறு வெளியே பார்த்துக் கொண்டிருந்த வேலம்மை, அவன் எழுந்து உட்கார்ந்ததைக் கண்டு அவனிடம் ஓடி வந்தான்.

''அறிஞ்சேளா சங்கதியை...! முந்தாநேற்றுதான் ஜெயிலில் இருந்து வெளீலெ வந்த பரமுவைக் கையும் களவுமா அன்னா பின்னையும் போலீஸ் வந்து பிடிச்சிட்டுப் போவுது... அவனுக்க பொண்டாட்டி, புள்ளையொ எல்லாருக்கும் கூட கள்ளச்சாராயம் காய்ச்சத் தெரியுமாம்...உம்''

பெருமூச்சு விட்டுவிட்டு அவளே சொன்னாள்.

''உம்... பாவம்... பரமுவைச் சொல்லவும் குத்தமில்லை... ஏளெட்டுப் பேருக்கு வயத்துப்பாடு களியாண்டமா....?''

மூக்கினின் மூளை விழிப்படைந்தது... அவனுக்கு எரிச்சல் எரிச்சலாக வேறு வந்தது...

உட்கார்ந்து கொண்டே சுற்று முற்றும் பார்த்தான்....

முக்கி முனங்கிக் கொண்டு கிடக்கும் அம்மாவும், போர்க் களத்தில் தாறுமாறாய்ச் சாய்ந்து கிடக்கும் உடல்களைப் போல் அவனைச் சுற்றி, பட்டினிக் கோலங்களாய்த் தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகளும், முன்னால் கந்தலின் பிரத்யட்ச வடிவாய் எழுந்து நிற்கும் பெண்டாட்டியும் அவன் நேற்றுச் செய்த பிரதிக்ஞையை-சத்தியத்தைப் பார்த்து வெவ்வெவ்வே காட்டுகிறார்களா?

திக்பிரமைப் பிடித்தவன்போல் ஒரு நிமிஷம் இருந்த அவன், ஒரு கர்ம வீரனைப்போல் சடக்கென்று எழுந்தான்...

சற்று தொலைவிலிருந்து வந்து கொண்டிருந்த நீரில் துடுப்புகள் சலசலக்கும் ஓசையைக் கேட்டவாறு, நின்று கொண்டிருந்தான் மூக்கன்.

வீட்டின் மூலையில் ஒரு சமையலறை

அம்பை

ஒரு சதுர கஜம் எட்டரை விலைக்கு நிலம் வாங்கி வீடு கட்டினாராம் கிஷனின் அப்பா. ரயில்பெட்டித் தொடர் மாதிரி வரிசையாய் அறைகள், எல்லா அறைகளும் முடிந்தபின் போனால் போகிறது என்று ஒட்டவைத்தாற்போல் ஒரு சமையலறை. இரு ஜன்னல்கள் ஒரு ஜன்னலின் கீழ், குழாய் வைத்த தொட்டி ஒரு பெரிய தட்டுக்கூட இல்லாமல் வைக்க வகையில்லாமல் குறுகியது. கீழே செங்கல் தடுப்பு இல்லாத சாக்கடை முற்றம். மேலே குழாயைத் திறந்தும் கீழே பாதங்கள் குறுகுறுக்கும். பத்து நிமிடங்களில் ஒரு சிறு வெள்ளக்காடு காலடியில் அதில் நின்று நின்று அடிப்பாதம் எல்லாம் வெடிப்புக் கீறல்கள் சமையலறையில் அடி வைத்து முதல் நாள் சமைத்து, கைக்குத் தங்க வளையல் போட்ட உடனேயே வெடிப்புக்குத் தடவ ஒரு மெழுகுக் களிம்பு தந்து விடுவாள், ஜீஜி என்று எல்லோரும் கூப்பிடும் கிஷனின் அம்மா.

சமையலறையின் கிழக்குப்புறம் பார்த்த ஜன்னல் வழியே பச்சை மலைகள். மேலே ஒரு வெள்ளைப் பொட்டுக் கோயில் பிள்ளையார் கோயில். அந்த ஜன்னலின் கீழேதான் சமைக்கும் மேடை. வெடிப்புப் பாதங்கள் பச்சை மலையில் உறுத்தாமல் இருந்திருக்கலாம். ஆனால் அந்த ஜன்னல் வெளியேதான் துணி உலர்த்தும் கொடி. கால்சராய், சட்டை, பைஜாமே, புடவை, பாவாடை விரிந்து ஜன்னலை மறைக்கும்.

கொத்தமல்லிப்பொடி, காரப்பொடி, கரம் மசாலாப்பொடி தூவி, அரைத்த பசு மஞ்சளும், இஞ்சியும் தடவப்பட்டுத் தயிரில் ஊறிய மாமிசத் துண்டங்களைக் கிளறி நிமிர்பவர்களை எதிர்கொள்வது ஒரு நாடா தொங்கும் பைஜாமாவாக இருக்கலாம். இதில் யாருக்கும் ஆட்சேபனை இருப்பதாகத் தெரியவில்லை.

அவர்கள் வாழும் பாங்கு சமையலறையைச் சுற்றியே இருந்தது. சமையலறை என்ற தத்துவத்தை ஒட்டி, சாப்பாட்டுப் பிரியர்கள், மதுப்பிரியர்கள்

என்றே பெயரெடுத்த வம்சம். அனுபவிப்பவர்கள், உல்லாசிகள், பார்க்கப்போனால் இவர்கள் கல்யாணத்தில் அஜ்மீர் உறவினர்களுக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்காத விஷயம் யாருக்கும் எந்தவித மதுபானமும் குடிக்கத் தரவில்லை என்பதுதான்.

குலதெய்வம் அம்மாவுக்குக்கூட மதுதான் பிரஸாதம். ஸ்காட்சிலிருந்து நாட்டுச் சரக்குவரை எதைத் திறந்தாலும் சுவரில் தெளித்து ஜெய் அம்பே சொல்லி விட்டுத்தான் குடிப்பது. பிறந்த குழந்தையின் வாயில் முதலில் மதுவில் முக்கிய விரலைத்தான் இடுவது. அப்படி இருக்கும்போது இப்படிக் கல்யாணம் செய்து கொண்டால்? சரி. ரம், ஜின், விஸ்கி வேண்டாம். அஜ்மீரிலேயே தயாராகும் ஆரஞ்சு வண்ணக் கேஸர் கஸ்தூரி இல்லையா? மண்டையைப் போய் ஒரு உதை உதைக்குமே? சே சே. இது என்ன இப்படிக் கல்யாணம் செய்து கொண்டாய் என்றார்கள் அவனிடம். வீரனுக்கு லட்சணமான குதிரையும் மதுவும் இல்லாமல் ஒரு கல்யாணமா? ராட்சஸப்பூக்கள் வரைந்த கடும் செம்மண், பச்சை, ஆரஞ்சு சிவப்பு வண்ணப் பாவாடைகள் இடுப்பிலிருந்து உப்பிப் பருத்த பிருஷ்டங்களின்மேல் மடங்கி மடங்கிச் சரிய, வெள்ளி நிறச் சரிகைகள் இட்ட முக்காடுகளைத் தூக்கி வயதான பெண்கள் அவனிடம் கேட்டார்கள். குடிக்க ஒன்றுமில்லையா?

ஜீஜி நடமாடிக்கொண்டிருந்த போது டாணென்று மாலை ஏழு மணிக்கு அப்பளம் சுட ஆரம்பித்து விடுவாள். பப்பாஜி வெளியறை முக்காலியில் மற்ற விஷயங்களை வைத்துவிட்டுத் தயாராக இருப்பார். ஜீஜி கார அப்பளம் தட்டில் அடுக்கி எடுத்து வருவாள். கார அப்பளம் தீர்ந்ததும் நாக்கில் சுள்ளென்று உறைக்கும் பிகானீர் ஸேவ். அது அலுத்தால் சோளப் பக்கோடா, நிலக்கடலை எதிரெதிரே அமர்ந்து 'ஜெய்அம்பே' என்று விட்டு ஆரம்பிப்பார்கள். பிள்ளைகளும் பெண்களும் இருந்தால் குடும்பத்தோடு சிரித்துக் கொண்டு. ஜீஜி நாட்டுப் பாடல்கள் பாடுவாள் - 'சந்தைக்குப் போனால் எனக்கொரு குஞ்சலம் வாங்கி வா….. நல்ல வண்ணத் தாவணி வாங்கி வா…..' 'இன்னமுமா ஆசை?' என்று பப்பாஜி சிரிப்பார்.

சமையலறை மூலையில் ஒரு கும்மட்டி அடுப்பில் சாய் செய்யத் தண்ணீர் கொதித்தவாறே இருக்கும். சாப்பிடும் சமயத்தில் வீட்டு வாசலில் யாராவது தெரிந்தவர் வந்துவிட்டால் முதலில் 'ஜில்' லென்று தண்ணீர்.

''சாப்பிடுங்களேன். சாச்சாவுக்கு ஒரு தட்டு கொடு'' என்று ஆரம்பிப்பார் பப்பாஜி.

''இல்லை. சும்மா இப்படி வந்தேன்''

''சரி, சாய் குடிக்க என்ன வந்தது?

''வேண்டாமே''

''கா.ஃ.பி?''

''தண்ணி போதும் ''

''அதெப்படி வெறும் தண்ணி, கொஞ்சம் ஷர்பத் போட்டுக் குடியுங்கள். ''

''சரி''

ஜீஜி எழுந்திருப்பாள்

''அப்படியே ஒரு தட்டில் ரெண்டு கபாப் கொடு''

ஜீஜி சமையலறை எட்டும்முன் காலையில் செய்த வெந்தயக் கீரை பரோட்டா பப்பாஜிக்கு நினைவு வரும். ''ஸுனியேஜி'' என்று மனைவியை விளிப்பார். ''அந்த மேதி பரோட்டாவும் ரெண்டு சூடாக்கி வெண்ணெய் தடவிக் கொண்டுவா. சாச்சா ருசி பார்க்கட்டும் என்பார்.

வந்தவர் தோல்வியை ஒப்புக்கொள்வார்

நான் சாப்பிட்டே விடுகிறேன்.

ஜீஜி எப்படியும் சமையறைக்குப் போவாள். இரண்டு முட்டைகள் மிளகும் உப்பும் தூவிப் பொரிக்க, ஒருவேளை, சாப்பாட்டு அளவில் ஏதாவது குறைந்துவிட்டால்?

ஆனால் சமையலறை என்ற பௌதிக விவரம் அவர்களைப் பாதிக்கவில்லை. அப்படிப்பட்ட ஒன்று இல்லாதது போல் இருந்தார்கள். அவர்கள் கூட்டுக்குடும்ப வீடுகளில் பரந்த கல்தரை, முற்றம், கூடம் இவற்றைத் தாண்டிய

இருள் மூலை சமையலறை. பூஜ்ய வாட் விளக்கு எரியும் அங்கு. முக்காடு அணிந்து, அழுத்தமான வண்ணப் பாவாடைகள் இருளை ஒட்டியே இருக்க. பெண்கள் நிழல்களாயத் தெரிவார்கள் அந்த அறையில் அறைந்து அறைந்து சப்பாத்தி மாவு பிசைந்து கொண்டோ, அடுப்படியில் கும்மென்று மணக்கும் மஸாலா பருப்பைக் கிளறயைவாறே சமையலறை ஒரு இடம் இல்லை. ஒரு கோட்பாடு மட்டுமே. அத்தனை ருசியான, நாக்கை அடிமைப்படுத்தும் சாப்பாடும் மாயக் கம்பளத்தில் வந்ததுபோல் அலட்டிக் கொள்ளாமல் இருந்தார்கள்.

மீனாட்சிதான் ஒருமுறை சாப்பிடும் நேரத்தில் அந்த விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள், பப்பாஜி அப்போது கீழே இருந்த கார் ஷெட்டின் மேல் ஒரு அறை கட்டிக்கொண்டிருந்தார்.

''பப்பாஜி, சமையலறைக்கு வெளியே உள்ள தாழ்வாரத்தைப் பெரிது பண்ணி விடுங்களேன். அதை நீங்கள் அகலமாக்கினால் நாற்காலி போட்டு உட்காரலாம். இடது பக்கம் ஒரு பாத்ரூம் கட்டினால் அதில் பெரிய தொட்டி போடலாம். பாத்திரம் தேய்க்க பாத்ரூமுக்கு வெளியே துணி உலர்த்த அலுமினியக் கம்பி போட்டு விடலாம்.

பப்பாஜி இந்த அப்பிராயத்தால் தாக்கப்பட்டவர்போல் பார்த்தார்.

ஜீஜியும் வியப்படைந்தவள்போல் அவரைப் பார்த்தாள். மருமகள்கள் இதுவரை இப்படிப்பட்ட அபிப்பராயங்களை முன்வைத்ததில்லை. ராதா பாபிஜி, தட்டை வெறித்துப் பார்த்தாள். குஸுமா தலை முக்காட்டைச் சரி செய்து கொண்டாள், அவள் படபடப்பை மறைக்க பப்பாஜி கிஷனை நோக்கினார். அவன் நிதானமாகச் சாப்பிட்டவாறிருந்தான்.

பப்பாஜி தொண்டையைச் செருமிக்கொண்டு, ''எதற்காக?'' என்றார்.

''இந்த சமையலறைத் தொட்டி ரொம்பச் சின்னது. தண்ணி வேறு சரியாகப் போவதில்லை. வேலைக்காரி அங்கேயே பாத்திரம் தேய்த்தால் சமையலறை முழுவதும் தண்ணீர். நிற்க முடியவில்லை. ஜன்னலுக்கு வெளியில் துணி தொங்கினால் மலையை மறைக்கிறது பப்பாஜி. ''

கிஷனைப் பார்த்தார் மீண்டும். அந்தக் கட்டடக் கலை நிபுணன் தன் மனைவியோடு உடன்பட்டான்.

''அவள் சொல்வது சரிதான் பப்பாஜி. அப்படியே செய்து விடலாம். ''

''நீ எங்கே சமையலறை பக்கம் போனாய்? ''

''அவள் மைசூர் சமையல் செய்யும் போது இவன்தான் மிளகாய், வெங்காயம் அரிந்தான்'' என்றாள் ஜீஜி.

''பேசாமல் உனக்கே தங்க வளையல் போடலாம் போலிருக்கிறதே''

''தங்கவளை எதற்கு பப்பாஜி. மோதிரம் போடுங்கள். '' பப்பாஜி சிரித்தார்.

அறை கட்டி முடித்தாகிவிட்டது. சமையலறை நிலவரம் மாற்றப்படவில்லை. துணி உலர்த்த இன்னும் இரண்டு நைலான் கயிறுகள் கட்டப்பட்டன. ஜன்னல் எதிரே பப்பாஜியின் மௌனச் சவால்: பெண்ணே, மைசுர்ப் பெண்ணே, இங்கே நிரந்தரமாக வாழாத உனக்கு மலை எதற்கு? அதன் பச்சை எதற்கு? ராஜஸ்தானுக்குச் சமையல் பண்பாட்டுக்கும் ஜன்னலுக்கும் பாத்திரம் அலம்பும் தொட்டிக்கும் என்ன சம்மந்தம் பெண்ணே, கறுத்த நிறமுடைய, முக்காடு அணிய மறுக்கும், என் பையனை வசியப்படுத்திய, நிறைய பேசும் பெண்ணே....

பின்னிரவு மூன்று மணி வாக்கில் மயில்கள் அகவ ஆரம்பித்தன. ஒன்றன்பின் ஒன்றாக கர்ண கடூரமாக குரல் இழந்த சாதகம். ஐந்தரை மணிக்கு அவளும் கிஷனும் மொட்டைம ாடி போனபோது எதிரே மரத்தில் சிவன் விரித்த ஜடையாய் மயில்வால் தொங்கியது. கரு நீலமும், மென் பச்சையும் தீர்க்கப் பச்சையும் பளீரிடத் திரும்பியது. எதிர்பாராத போது பறந்து மொட்டை மாடிச் சுவரில் அமர்ந்து வாலை நீட்டிப்போட்டது. பிறகு, இரண்டு மொட்டை வால் மயில்கள் திரும்புவதற்குள் இன்னும் இரண்டு சாட்டை வால்களுடன் வயிற்றினுள் ஒரு மென்தன்மை இதமாயப் பரவியது. காலைக்கடன்களை முடித்ததும் வயிற்றுக்கனம் அகலும் இதம். அந்த கருநீலப் பச்சை ஐஸ் துகள் சிலீருடன் எல்லா அடங்காச் சூட்டையும் தணித்தது. கிஷனின் உதடுகளில் ஒரு முறை நாக்கால் தடவி மென்மையாக முத்தமிட்டாள். பனித்துளி ஒட்டிய, அடித்தளச் சூட்டை இனம் காட்டிய முத்தம்.

மொட்டை மாடிக் கதவு கிர்ட்டது. படி ஜீஜி (பெரிய ஜீஜி) எழுந்தாயிற்று. கதவருகே இருந்த பெரிய ட்ரம்மிலிருந்து கரி எடுக்க வந்திருப்பாள். கும்மட்டி

அடுப்புப் பற்றவைக்க, படி ஜீஜி பப்பாஜியின் சிறிய தயார். பப்பாஜிக்கு பதினேழு வயதாகும்போது அவருடைய தந்தை இன்னொரு திருமணம் செய்துகொண்டார். ஒரு பதினேழு வயதுப்பெண்ணை. ஐந்து பெண்கள் பெற்றாள், பப்பாஜியின் ஆதரவு. பெயர்தான் படி ஜீஜி, அவளுக்கும் ஜீஜிக்கும் இடையே இரண்டே வயதுதான் வித்தியாசம். பொக்கை வாய் பொய்ப் பல் வேண்டாம் என்று விட்டாள். மாமிஸம் சாப்பிடுவதை விட்ட பின்னர் எதற்குப் பல் என்று கூறிவிட்டாள்.

காலில் அணிந்த கனத்த வெள்ளித் தண்டை படியில் இடிக்க, போய்விட்டாள் படி ஜீஜி

''சாய் கொண்டுவரட்டுமா மீனா?''

''ம். ''

கிஷன் போனதும் மாடி இரும்புத் தொட்டிக் குழாயைத் திறந்து முகம் கழுவி, பல் தேய்த்தாள்.

தொப்பியால் மூடிய கெட்டிலில் சாய் கொண்டு வந்தான். கிஷன். கீழே வைத்து இரு கோப்பைகளில் சாய் ஊற்றியபோது இஞ்சி, துளசி மணம் பரவியது. ஒரு காலை நட்சத்திரம் மினுக்கியது. மயில் நீலப் பச்சையில் தெறித்தது. சாய் தொண்டையில் சூடாய் இறங்கியது.

கீழே போன போது சமையலறை மூலையில் பெரிய பித்தளை டம்பிளரில் கிஷன் ஊற்றித் தந்திருந்த சாயை முக்காட்டுத் தாவணித் துணியால் பிடித்தவாறு அமர்ந்து, ஊதி ஊதிக் குடித்துக் கொண்டிருந்தாள் படி ஜீஜி . ராதா பாபிஜி இன்னொரு பெரிய கெட்டிலில் சாய்த் தூளைப் போட்டுச் சுடுதண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

நாஸ்தாவுக்கு மாவு பிசையட்டுமா? என்றாள் படி ஜீஜி.

பப்பாஜி உலாவப் போயிருக்கிறார். சமோசாவும் ஜிலேபியும் வாங்கிவருவார். ரொட்டி வாங்கினால் போதும், அதை நான் வெளியில் டோஸ்ட் செய்து கொள்கிறேன். இன்றைக்கு என்ன நம் சமையலா, இல்லை மைசூர் சமையலா?

அவளும் கிஷனுமாய் நேற்று காய்கறியும் தேங்காயும் வாங்கி வந்தார்கள்.

என்ன தேங்காய் சமையல் சப்புச்சப்பென்று? நீங்கள் ஒன்று செய்யுங்கள், படி ஜீஜி. மஞ்சளும் இஞ்சியும் அரைத்துவிடுங்கள் மட்டன் புலாவ் செய்துவிடலாம். சுரைக்காய் துருவிவைத்து விடுங்கள். கோ.ப்தா செய்துவிடலாம். சேப்பங்கிழங்கைத் தொலி சீவிவிடுங்கள். பெரிய ஏலம், மிளகு, லவங்கப்பட்டை, தனியா, லவங்கம் இடித்து விடுங்கள். நல்லா நைஸாக தனியாவை வேறாக எடுத்து இடியுங்கள் கொஞ்சம். ராத்திரி ஆலு-கோபிக்குப் போடலாம்.

சமையலறைக்கு வெளியே வந்தாள் சாய் கெட்டிலும் கோப்பைகளும் வைத்த தட்டை ஏந்தியவாறு.

என்ன மீனா, இன்றைக்கு என்ன சமைக்கப் போகிறாய்

எதுவும் இல்லை, நாங்கள் கணேஷ் மந்திர் மலையில் ஏறபபோகிறோம்,

''சரிதான்''

மீனாட்சி சமையலறையில் நுழைந்தாள் இரண்டாம் ஈடு சாய் தயாரிக்க.

படி ஜீஜி பொக்கை வாய் திறந்து சிரித்தாள். தன் பித்தளை டம்ளரை நீட்டினாள்.

''எனக்கும் சாய் .''

''இஞ்சி போடவா படி ஜீஜி?''

''ம். போடு. எனக்கு, நீ போடும் சாய் பிடிக்கும்,''

''சமோசாவும் ஜிலேபியும் வாங்கி வந்திருக்கிறேன். கொஞ்சம் ஜிலேபியைப் பாலில் போடுங்கள்'' என்று ஒரு பொது உத்தரவு வெளியிலிருந்து வந்தது. மீனாட்சி ஜிலேபிப் பொட்டலத்தைச் சமையலறைக்குக் கொண்டுவந்து பிரித்தாள்.

''உஷ்..... இதோ..... இதோ.....''

மீனாட்சி திரும்பினாள். எனக்கு நாலு குடு என்றாள் படி ஜீஜி.

அது ஒரு உணவுப் போர். நிதர்சனமாகப் பங்குபெறுவோர் - ஜீஜி படி ஜீஜி. தாத்தா உயிருடன் இருந்தபோது படி ஜீஜி கொடுங்கோல் ஆட்சி செய்தாள்.

மலை மலையாய்ச் சப்பாத்தி மாவு பிரசந்தாள் ஜீஜி. கூடை கூடையாய் வெங்காயம் அரிந்து கிலோ கணக்கில் மாமிசம் சமைத்தாள். மாலை வேளைகளில் படி ஜீஜி கேஸர் கஸ்தூரி குடித்த போது அப்பளம் சுட்டாள். பக்கோடா செய்தாள். குடல் பொரித்தாள். தாத்தா இறந்தார். பத்து நாட்களில் சமையலறையில் ஜீஜிக்குப் பதவிப் பிரமாணம் நடந்தது. குங்குமம், வெற்றிலை, மது, மாமிசம் இவற்றுடன் படி ஜீஜியின் மற்ற சாப்பாடும் பறிக்கப்பட்டது. நிதம் நிதம் மாமிசம் சமைக்கப்பட்டது. மரக்கறி உணவு உண்பவர்களுக்கு (படி ஜீஜி மாத்திரம்தான்) ஜனநாயக உணர்வுடன் உருளைக்கிழங்கு வழங்கப்பட்டது. படி ஜீஜி இரவெல்லாம் ஏப்பம் விட்டுக் கொண்டும், உடம்பையே கிழிப்பதுபோல் குசுவிட்டுக் கொண்டும் கக்கூஸில் உம் ஆ என்று முனுகியவாறும் தன் போர்க்களத் தோல்வியைக் கொண்டாடிக்கொண்டிருந்தாள். மீண்டும் தாக்கப்படும்முன் அவள் இரண்டாம் போர்முனை ஒன்றைத் துவக்கினாள். ஆறு மாதத்திற்கு ஒரு முறை படி ஜீஜி மேல் அம்பா வர ஆரம்பித்தாள்.

ஜீஜியும் பப்பாஜியும் அவரவர் பானங்கள், சுட்ட அப்பளங்கள் இவற்றுடன் அமரும் மாலை வேளைகளை அம்பா தேர்ந்தெடுத்தாள். முதலில் அறையிலிருந்து 'ஹே' என்று குரல் கொடுத்தாள் அடி வயிற்றிலிருந்து. பதறி ஓடி வந்ததும் என்னை மறந்தாய்? என்று சீறினாள். தாழ்ந்து வணங்கி உத்தரவிடுங்கள் அம்பே என்று ஜீஜி சொன்னதும், எனக்கான பானத்தைத் தா, கேஸர் கஸ்தூரி வேண்டும். ஒரு கிலோ பர்பி வேண்டும். வறுத்த இறைச்சி வேண்டும்….. ஆ…..ஆ…" என்று கட்டளையிட்டாள். எல்லாம் தரப்பட்டதும் அம்பா "போங்கள் எல்லோரும்" என்று உத்தரவிடுவாள். படி ஜீஜியின் அறையில் ஆரவாரம் கேட்கும் சற்று நாழிகை.

மறுநாள் காலை மதுவால் கனத்த கண் இமைகளைக் கஷ்டப்பட்டுத் திறந்து சமையலறையில் ஒரு பொக்கைவாய்ப் புன்னகையுடன் காட்சியளிப்பாள் படி ஜீஜி. அம்பா கஷ்டப்படுத்தி விட்டாள் என்பாள்.

படி ஜீஜியை வம்புக்கு இழுக்கலாம். அம்பாவைக் கேள்வி கேட்கும் தைரியம் ஜீஜிக்கு வரவில்லை.

ஜிலேபி தா என்றாள் படி ஜீஜி

நாலு ஜிலேபிகளைத் தந்தாள் மீனாட்சி. வீட்டில் எல்லாருக்குமாக ஜிலேபி பிரிக்கப்படும்போது படி ஜீஜிக்கு அவள் பங்கு கிடைக்கும். இது ஆசையினால். ஆரம்பத்தில் இவற்றை அவள் அங்கேதான் வைக்கின்றாள் என்று நினைத்தாள் மீனாட்சி. பிறகுதான் தெரிந்தது பல மடிப்புகள் தைத்த நாலு கஜப் பாவாடையினுள் அவள் ஒரு ஜேபிகள் தைத்திருந்தாள். அவற்றை மீனாட்சிக்குக் காட்டியடிருக்கின்றாள்

தொப்பியால் சாய் கெட்டிலை மூடினாள்.

மசாலா சாமான்களை தந்துவிட்டுப் போயேன் என்றாள் படி ஜீஜி. நெய்யும் வேணும் மட்டன் புலாவ் செய்ய

இது சமீபத்தில் எழுத்த ஒரு புதுக்களம். ஜீஜியின் ஆஸ்மாவும் இரத்த அழுத்தமும் அவள் நடமாட்டத்தை குறைத்து விட்டன. அவள் படுககை அருகே உள்ள மர பீரோவில் லவங்கம், குங்குமப்பூ, லவங்கப்பட்டை, மிளகு, திராட்சை, பெரிய ஏலம், ஏலக்காய், சர்க்கரை, நெய், முந்திரி எல்லாம் இருக்கும் அவளைத் தாண்டாமல் பீரோவை எட்ட முடியாது. அதை அடையும்முன் ஒரு கேள்விப் பட்டியல் நீட்டப்படும். எதற்காக நெய்? நேற்று தந்தது என்ன ஆயிற்று. சப்பாத்திக்கு தடவினதில் மீதி அரைக்கிண்ணம் இருந்தால் இப்போதைக்கு கால் கிண்ணம் போதுமே? மசாலா சாமான்களை காட்டிவிட்டு எடுத்துப்போ காஷ்மீரத்திலிருந்து வரவழைத்த குங்குமப்பூ. அதை புலவில் கொட்ட வேண்டாம். மரக்கறி சாப்பிடுபவர்களுக்கு இன்றைக்கு என்ன காய்கறி? நேற்று சமைத்தது ஏதும் மீறவில்லையா அவர்களுக்கு? சாப்பிட்டு சாப்பிட்டுக் கக்கூஸில் போனால் யாருக்கு என்ன பயன்.

ஒளியற்ற, ஜன்னல் குறுகிய அந்தச் சமையலறையிலிருந்து கடலில் வசிக்கும் ஆக்டபஸ் ஐந்துவின் எண்கால்போல் ஆதிக்கக் கரங்கள் நீண்டு வளைத்துப் போட்டன. கால்கள் இறுக இறுகக் கட்டுண்டு கிடந்தனர். ஆனந்தமாக அவை இடுப்பை இறுக்கினால் ஒட்டியாணம் என்றும், காலைச் சுற்றினால் கொலுசு என்றும் தலையில் பட்டால் கிரீடம் என்றும் நினைத்துக் கொண்டனர் பெண்கள். நாலாபுறமும் கம்பிகள் எழும்பிய உலகில் புகுந்துகொண்டு அதை ராஜ்யம் என்று நினைத்து அரசோச்சினர். இன்று மட்டன்

புலவு, நாளை பூரி மசாலா என்று பூமியைத் திருப்பிப்போடும் முடிவுகளை எடுத்தனர். பேடி அதிகாரம்.

ஜன்னலைத் திறந்து மலையையும் பச்சையையும் ஆகாசத்தையும் நீலத்தையும் உள்ளேஇழுத்தும் பலம் உறிஞ்சப்பட்டார்போல் இளைத்தனர். வீணா மோஸியைப்போல் , கிஷனின் சித்தி ஐம்பது வயது. பதினைந்து வயதில் விதவை. ஒரு கிராமத்தில் டீச்சராக இருந்தாள். பள்ளிச் சொந்தக்காரர் வீட்டுத் தோட்டத்து மூலையில் ஒரு அறையும் சமையலறையும் அசோகமரம் வாசலில், சமையலறை பின்னால் சம்பக் மரம். வெள்ளைப் பூக்களும் மஞ்சள் தண்டுமாய், ஜன்னலை ஒட்டிய பூங்கொடிகள் உள்ளே நுழைந்துவிடும் சுதந்திரமாய் பசித்தால் சமையல் மாலையில் பக்கத்திலுள்ள குழந்தைகள் வந்து விடும் டீச்சரைப் பார்க்க இல்லாவிட்டால் அசோக மரத்துக் குயில் பாட்டு. ஆனால் வீணா மோஸி நான் அதிகாரமற்றுப்போனேன் என்பாள். டீச்சர் டீச்சர் என்று சுற்றிக்கொள்ளும் குழந்தைகள் பள்ளியின் ஆரம்பக் கல்வியின் பூரணப் பொறுப்பு. நினைத்தால் வீசு நடை பஜார் வரை நார்க் கட்டிலை அசோக மரத்தின் கீழே இழுத்துப்போட்டு கக்ஹு கக்ஹு என்று தாகம் தீரும்வரை குயில் தோழமை. மலர்கள் இருந்தும் வீணா மோஸிக்கு மூச்சு முட்டியது. வெட்ட வெளீல் எம்பியதும் மண்ணுக்காக வீறிட்டாள், யோனியும், கருப்பையும் மார்க்காம்புகளும் கல்லாகின. கனம், இழுப்பு, கீழ் நோக்கி விழுந்து விழுந்து விழுந்து விழுந்து மண்ணில் சரண் பாதங்களைப் புதைத்து அசைவற்று நிற்க

* * *

ஏரியின் மூலையிலிருந்து வெள்ளை இறக்கைகள் நளினமாய்த் தாழ்ந்தும், உயர்ந்தும் சாய்ந்தும் நகர ஆரம்பித்தன. கண்ணில் பட்ட முதல் கணம் ஒரு சிறு வியப்பு மீனாட்சியினுள் சிதறியது. ஏரியின் முழு வீச்சிலும் சுழன்று நீரில் மிதக்கும்போது அந்தச் சிவப்பு அலகுகள் தூரத்தில் ஒளிர்ந்தன. பிறகு மீண்டும் எழும்பி வெள்ளை இறக்கைகளைச் சரேலெனப் பிரித்து இடமும் வலமும் சாய்ந்தும் எழுந்தும் ... வெகு அருகே, முகத்தின் அருகே இறக்கை வீச்சு, பவழ அலகு தட்டையாய் நீண்டு. ரஷ்யப் பறவைகள். ஆனா சாகர் ஏரியில் சில மாதங்கள் வரும் திடீர் விருந்தினராய்.

அதற்கு முந்தைய இரவுதான் ஏரிப் பயணம் தீர்மானிக்கப்பட்டது. எல்லா உறவினர்களுடனும் ஏரியைப் பார்க்கும் திட்டம். இருபது பேர்களுக்கு நூறு பூரி. உருளைக்கிழங்கு, ஸப்ஜி, தக்காளிச் சட்னி, ஸாண்ட்விச் நூறு, நொறுக்குத் தீனி, குழந்தைகளுக்கு நிரப்பப்பட்ட பால் புட்டிகள் ∴ப்ளாஸ்கில் வெந்நீர். மாலையில் சூடாகப் பக்கோடா சாப்பிட ஒரு ஸ்டவ், ஒரு பாட்டிலில் எண்ணெய், கடலை மாவு, வெங்காயம், மிளகாய்ப் பொடி, உப்பு, பெரிய மிளகாய் - பஜ்ஜி போட - இத்யாதி.

விடிகாலை நான்கு மணிக்குச் சமையலறை விளக்கு எரிந்தது. ஒரு பெரிய தாம்பளத்தில் கோதுமை மாவைப் போட்டுப் பிசைய ஆரம்பித்தாள் ஜீஜி. குஸுமா வாணலியில் எண்ணையை விட்டு பிசைந்த மாவை இட்டுப் பொரிக்கத் துவங்கினாள். ராதா பாபிஜி ரொட்டியில் வெண்ணையும் சட்னியும் தடவ ஆரம்பித்தான். ரொட்டிப் பொட்டலங்கள் அவளைச்சுற்றி படி ஜீஜி நொறுக்குத் தீனிகளைப் ப்ளாஸ்டிக் பொட்டலங்களில் போட்டு ரப்பர் வளையத்தால் இறுக்கினாள். ஏரிப் பயணத்தின் இந்த அம்சக்தைப்பற்றி மீனா யோசித்திருக்கவில்லை.

மீனா எழுந்துவிட்டாயா? என்றாள் ராதா பாபிஜி. கூந்தல் வியர்வையில் ஒட்டிக்கொண்டிருந்தது. சாய் போடுகிறாயா?

மீனா இவர்கள் எல்லோருக்கும் சாய் போட ஆரம்பித்தாள். துளசி இலையைப்போட்டாள் வெந்நீரில். பல் தேய்த்துவிட்டு வந்த கிஷன் கோப்பைகளைத் தட்டில் வைத்தான்.

ராதா பாபிஜி தனக்குத் தானே பேசிக்கொண்டிருந்தாள். "குழந்தைகளைக் குளிப்பாட்ட வேண்டும். ப்ளாஸ்டிக் பையில் ரெண்டு, மூணு ஜட்டி அதிகப்படியாய் எடுத்துக் கொள்ள வேண்டும். ப்ரியா சில சமயம் சொல்லாமலே போய்விடுவாள். புல்லில் விரிக்க ஐந்தாறு கம்பளங்களாவது சுருட்டி வைக்க வேண்டும். எத்தனை கைக்குழந்தைகள் மொத்தம்? நாலு. பால் டப்பா. க்ளாக்ஸோ மீனாவுக்கு, அர்ச்சனா குழந்தைக்க லாக்டோஜன் மறக்காமல் பிஸ்கட் பொட்டலம். இதுக்கு உப்புதான் பிடிக்கும். இல்லாவிட்டால் வழியில் வாங்க வேண்டும். அழுது தொலைக்கும். இல்லாவிட்டால் இவருக்குப் பிடிக்காது. சர்க்கரை, ஸ்பூன் மறக்காமல் பரிமாறக் கரண்டி, தட்டுகள். குஸுமா, அந்த சோப் பாட்டிலை

எடுத்துக்கொள். தட்டுக் கழுவ அங்கே குழாய் உண்டு. படி ஜீஜி வெங்காயம் ஒரு பத்து, பதினைந்து அரிந்து விடுங்கள். ப்ளாஸ்டிக் பொட்டலத்தில் போட்டுக் கொண்டு போனால் நிமிஷமாய் பக்கோடா மீனா, ப்ளீஸ் குழந்தைகளைக் குளிப்பாட்டுகிறாயா?

பாபிஜி, ஆஆறு மணிதான் ஆகிறது. அழும் எழும்பினால் கோபால் பாய் சாஹப் குளிப்பாட்டட்டுமே அப்புறமாய்.

ஆமாம் அவர் குளிப்பாட்டுவார், நினைத்துக் கொண்டு இரு.

மீனா சாய் கோப்பையை நீட்டினாள். பித்தளை டம்ளரில் படி ஜீஜிக்கு விட்டுத் தந்தாள். ராதா பாபிஜி சலிப்புடன் பேசியது அவளுக்குப் புரிந்தது. ராதா பாபிஜி கணக்கில் புலி. அதில் மேல்படிப்பு மேற்கோள்ள வீட்டில் அனுமதிக்காததால் ஒரு வங்கியில் பெரிய பதவியில் இருந்தாள். வங்கியில் அவளுக்கு சகுந்தலா தேவி என்றே பெயர். சில மாதங்களுக்கு முன் அவளும் கோபால்பாய ஸாஹபும் கிஷனையும் மீனாட்சியையும் ஜோத்பூருக்கு வந்து சில நாட்கள் தங்கும்படி அழைத்திருந்தனர். அங்குள்ள ஆஸ்பத்திரியில் கோபால்பாய் சாஹப் டாக்டர். நல்ல வெய்யில் காலம். மத்தியானச் சாப்பாடு இன்னும் ஆகவில்லை.

இந்த ஊர் வெய்யில் எரிந்துவிடும். ஒன்றும் செய்ய முடியாது. ராதா பாங்க் வேலைக்காக இரண்டு நாட்கள் போனாள். தவித்து விட்டேன். சமையலறையில் நிற்க முடியவில்லை . இங்கே வேலைக்கு ஆளும் கிடைக்கமாட்டார்கள். ஒரு டீ போடக்கூட சமையலறையில் நிற்க முடியவில்லை. என்றால் பார்த்துக்கொள் கிஷன்.

கிஷன் மெள்ளச் சொன்னான். பாங்கில் பெரிய வேலை பார்க்கும் ராதா பாபிஜி இப்போது அதே சமையறையில் தானே சமைத்துப் கொண்டிருக்கிறாள்.

ஆமாம் அதற்கென்ன? பெண்களுக்கு அதெல்லாம் சகஜம்தானே?

கோபால்பாய் சாஹப் விடுமுறைக்கு வந்த வேளையில் சீக்கிரம் எழுந்து குழந்தைகளைக் குளிப்பாட்டுவார் என்று எதிர்பார்க்க முடியாதுதான்.
ராதா பாபிஜி எந்தப் புடவை கட்டிக்கொள்ளப் போகிறீர்கள்? என்றாள் குஸுமா.

அந்தச் சிவப்பு ஸில்க்தான் ராத்திரியே இஸ்திரி போட்டாகி விட்டது. அவருடையது அப்புறம் குழந்தைகளுடைய சட்டைகளுக்கும் போட்டு விட்டேன்.

நாள் அந்தக் கறுப்பு பொட்டுப் போட்ட வெள்ளைப் புடவை கட்டலாம் என்று நினைத்தேன். ரவிக்கை இஸ்திரி போடவில்லை. மீனா, உன் கறுப்பு ரவிக்கை தருகிறாயா?

எடுத்துக்கொள்ளேன். ஆனால் அது ஸ்லீவ்லெஸ்

அடடா அப்படியானால் என ரவிக்கையை இஸ்திரி போடுகிறாயா மீனா? நான் ஸ்லீவ்லெஸ் போட முடியாது என்கை சுத்தமாயில்லை.

தலைப்பால் போர்த்திக் கொண்டு விடு பேசாமல் நீளத் தலைப்பு விட்டு உன் கைக்கு அடியில் யார் வந்து பார்க்கபபோகிறார்கள்.

இதோ பார் மீனா. தமாஷ் பண்ணாதே. இஸ்திரி போடுகிறாயா ?

சரி, சரி.

மெதுவாகச் சுவரைப் பிடித்து நடந்து வந்து ஜீஜி உறுகாய்ப் பரணியைத் திறந்தாள்

என்ன செய்கிறீர்கள் ஜீஜி போய்ப் படுங்கள் பேசாமல் என்று அதட்டினாள் ராதா பாபிஜி.

ஊறுகாய் பிடிக்குமே எல்லோருக்கும் எடுத்து வைக்கிறேன்.

அங்கே சமையலறையில் என்ன சத்தம், தூங்கவிடாமல் எனறு குரல் கேட்டது.

நச்சென்று மௌனம்

ரகசியக குரலில் மீனா சாய் அடுப்பில் உருளைக்கிழங்கை வேகப்போடுகிறாயா?

ராதா பாபிஜி தாளித்து ப்ரஷர் குக்கரில் போடலாமே? வேகவிட்டு உரிக்க வேண்டாம் குஸுமா கிசுகிசுத்தாள்.

நீ செய் அதை. மீதி பூரி படி ஜீஜி பொரிக்கட்டும்.

எட்டு மணி அளவில் கழுத்து அக்குள் எல்லாம் வியர்வை மழை ரவிக்கை ஒட்டிக் கொண்டது. எண்ணெய்ப் புகை கண்ணில் முழுத் தூக்கம் இல்லாமல் கனம் ஏறிய இமைகள். பாப்பிஜி சமையலறையில் எட்டிப்பார்த்தார்.

ஏரிக்குப் போகலாம் என்றதுமே உற்சாகம் பொத்துக் கொண்டு விடுமே உங்களுக்கு என்றார்

அஹ்ஹா என்று சிரித்தார்.

சிறு சிறு பறவைகள் க்ளக் என்றபடி நீரில் மிதந்தன. கறுப்பும் மஞ்சளுமாய் திடீரெண்று வெள்ளை இறக்கை வீச்சு. பவழ நிழலுடன்.

கம்பளங்களில் சீட்டுக் குலுக்கல் சிலவற்றில் பெண்கள் மம்மீஜி டட்டி என்று பின்பாகத்தைப் பிடித்துக்கொண்டு குழந்தை சொல்லும்வரை பழைய பேப்பரைக் கையில் ஏந்தியபின் கக்கூஸ் பயணம் குழந்தை தலையில் ஒரு குட்டு. வலிக்க வலிக்க அம்மாக்கள் ஒழித்த அடத்தில் கன்னிப் பெண்கள். இடையிடையே சீட்டை வைத்துவிட்டு எழுந்து தண்ணீர் உபசாரம்.

சாப்பிட்ட தடடுகளை குஸுமாவும் ராதா பாபிஜியும் கழுவியாயிற்று. ஸ்டவ் ஏற்றல் பக்கோடா போட ஆரம்பித்தனர்.

அரே என்ன வாசைன ? எனக்கு இரண்டு வெறும் மிளகாயுடன்

இடையில் குாந்தைகளுடன் பேச்சு.

ராஜு, நீ என்ன செய்வாய் பெரியவன் ஆனதும்?

பைலட் ஸுய்ங்கென்று

நீ ப்ரியா?

நானு….. நானு …… நானு…… வந்து …… தப்பாத்தி தெய்வேன் எங்க வீட்டிலே

என்ன சமத்தாய்ப் பேசுகிறது? ஜீஜி சிரித்தாள்.

அஜ்மீரைச் சுற்றியுள்ள அத்தனை மலைகளிலும் நான் ஏறியிருக்கிறேன். எனறார் பப்பாஜி.

ஜிஜீ நீங்கள் என்றாள் மீனாட்சி.

அவர் மலை ஏறின போதெல்லாம் எனக்கு வயிற்றில் குழந்தை எனறாள் ஜீஜி. சிரித்தாள் வாய்விட்டு. எல்லோரும் சிரித்தனர் ஜீஜி பதினாலு குழந்தைகள் பெற்றாள்.

எல்லாவற்றையும் வாரிக்கொண்டு இன்னொரு முறை டட்டி போகலாமா என்று யோசித்த குழந்தைகளின் மனதைத் திசைதிருப்பிவிட்டுக் கிளம்பினர்.

குஸுமா பின்தங்கினாள். மீனா மெள்ள நடவேன் இன்னும் நான் பறவைகளைச் சரியாகப் பார்க்கவில்லை.

ஸதீஷைக் கூப்பிடவா?

இல்லை இல்லை அவர் போகட்டும் கலாட்டா ஆகிவிடும் அவரைக் கூப்பிட்டால்

மெதுவாக நடந்தார்கள்

பத்து நாள் தள்ளிப்போயிற்று. லேடி டாக்டரிடம் போகணும் என்று நினைப்பதற்குள் வந்துவிட்டது.

தயாராக வந்தாயா? நீ சொல்லியிருந்தால் கடைக்குப் போய் ஸானிடரி டவல் வாங்கியிருக்கலாமே….,

தயாராய்த்தான் வந்தேன். இருந்தாலும் வெள்ளைப் புடவை கொஞ்சம் பின்னால் பார்.

இல்லை ஒன்றும் ஆகவில்லை.

வேகமாக நடப்போமா? ஏரிப் பக்கம் உட்கார நேரம் இல்லை. ராத்திரி சமையலுக்குப் பூண்டு உரிக்க வேண்டும்…..,

வா நீ பேசாமல்

ஏரி அருகே குஸுமாவை உட்கார்த்தி மௌனித்தாள்.

ஜீஜியிடம் ஒரு முறை உங்கள் மூன்றாம் பிள்ளைக்கு எப்படிப்பட்ட மருமகள் வேண்டும்? என்றபோது சடாரென்று பதிலளித்தாள். ஜீஜி – படித்தவள். வெளுப்பானவள், பேசாதவள் என்று சரியாகச் சொன்னாய் என்றார். பப்பாஜி. அப்படி ஒரு பெண் இருப்பாள் என்று மீனாட்சி நம்ப மறுத்தாள். ஜீஜியின் பதில் அன்று மத்தியானம் நடந்திருந்த சம்பவத்தின் நீட்சி என்று நினைத்தாள். மத்தியானம் பப்பாஜியின் நண்பர் வந்திருந்தார். சரும நோய் நிபுணர். அப்போது

மீனாட்சிக்குக் கையில் சில வெள்ளைத் திட்டுக்கள் வந்திருந்தன. கொஞ்சம் அரிப்புடன் சரும நோய் நிபுணரிடம் பப்பாஜி அறிமுகப்பமுகப்படுத்தினார். இவள் கிஷனின் மனைவி. ஓயாமல் ஊர் சுற்றுகிறாள். சதா கையில் புத்தகம். வாயாடி இவள் கையைப் பாருங்கள்.

நிபுணர் உபதேசம் நீ வீட்டில் இரு மற்ற பெண்கள் மாதிரி. எல்லாம் சரியாகிவிடும். அவரவர் அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட மாதிரி இருந்துவிட்டால் ஏது நோய்?

ஆஹா என்றார் பப்பாஜி.

ஜீஜி கூறியது அதை ஒட்டிய ஹாஸ்யம் என்று நினைத்தாள். ஆனால் ஜீஜியின் விளக்கத்துக்கு உரை போட்டாற்போல் கிடைத்தாள் குஸுமா.

அரசியலில் எம்.ஏ., ∴ப்ரெஞ்சில் டிபுளோமா. எதற்காக ∴ப்ரெஞ்ச் படிததாள் என்று தெரியவில்லை. திருமணத்திற்காகக் காத்திருக்கும்போது ஏதாவது மொழியில் டிப்ளமோ வாங்குவது காத்திருத்தலின ஒரு அம்சம் என்று தெரிந்தது. வெளியூரில் வேலை செய்யும் மாப்பிளையானால் வெளிநாட்டு மொழி உபயோகமாக இருக்கும். பூ வேலை செய்த குஷன்கள், தலையணை உறைகள், கை வேலைப் பொருட்கள், பூ வேலையும் லேஸ் வேலையும் செய்த புடவைகள் எல்லாம் செய்திருந்தாள் குஸுமா அந்தச் சயத்தில் பூ அலங்கார வகுப்புகள், பேக்கரி வகுப்புகள், தையல் வகுப்புகள், ஜாம் ஜுஸ், ஊறுகாய் வகுப்புகள் எதையும் அவள் விட்டுவைக்கவில்லை. எல்லா வித்தைகளையும் கற்றிருந்தாள் பூரணமான மருமகள்.

வெகு தூரத்திற்குப் போய்விட்டிருந்த வெள்ளைக் கூட்டம் நினைத்துக் கொண்டாற் போல் உயரே எழும்பி வட்டம் சுற்றி இடப்பக்கம் வந்தது. மிதமான வேகத்தில் மிதந்தாற்போல் வந்து சுழன்றது.

குஸுமா அழ ஆரம்பித்தாள்.

''அந்த அலகு..... என்ன சிவப்பு .... என்று விசித்தாள்.

மெல்லச் சிவக்கத் தொடங்கிய மாலையில் பவழம் மிதந்தது இறக்கைகளுடன்

உரிக்காத பூண்டு ..... இறக்கைகள் திறந்தன மறு வட்டம் அடிக்க

உருவாகாத கரு….. ஒயிலாக நீரின்மேல் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று சறுக்கி இறங்கி மிதந்தன.

விசும்பல் ஒலி

* * *

ஹோலிப் பண்டிகை வீடுமுறையில் அஜ்மீர் வந்தபோதுதான் ஜீஜிக்கு நோயின் கடுமையான தாக்குதல் நேர்ந்தது. ஒரு மத்தியானம் அன்றைய சமையலுக்கான உபகரணங்களைத் தந்துவிட்டு சாவியை இடுப்பில் செருகிக்கொண்டு குளிர்பதனப் பெட்டியில் என்ன மிஞ்சியிருக்கிறது. என்று பார்க்க ஜீஜி மெல்ல நடந்து வந்தாள். அதை எட்டும் முன்பே மூச்சு முட்டியது. சுவாசம் பெருத்த ஓசையுடன் இழுத்தது. மற்றவர் ஓடி வரும்முன் தன் கனத்த சரீரத்துடன் தரையில் விழுந்து தரையில் விழுந்து விட்டாள் ஜீஜி. வியர்வை பெருகியது. சிறுநீர் பெருகி உடையெல்லாம் ஈரம்.

"நான் போய்விடுவேன்…. நான் போய்விடுவேன் …. என் மருமகள்கள் எல்லோரும் வெளியூரில் ….. அந்தப் பாவி படி ஜீஜி என் சமையலறையை ஆளப்போகிறாள்…. ஹே பக்வான் …. என்று அரற்றிக்கொண்டே தலையை இடமும் வலமும் திருப்பினாள். கீழே இருந்த டாக்டர். ஓடி வந்து ஊசி போட்டார். மூச்சு சீராகியது. இமைகள் இழுக்க உறங்கிப்போனாள்.

கண் விழித்ததும் இடுப்புச் சாவியைத் தொட்டுக் கொண்டாள். ராத்திரி என்ன சமையல் ? என்று கேட்டாள் பீன்ஸ் என்றதும் ஏன் நான் காலி.ஃப்ளவர் அல்லவா சொல்லியிருந்தேன்? அவள் மாறறினாளா? நான் போய்விடுவேன் என்று நினைத்தாளோ? என்று பொருமினாள்.

இல்லை ஜீஜி. காலி.ஃப்ளவர் கிடைக்கவில்லை பஜாரில்.

புடவை…. வேறு புடவை … தா என்றார்.

குஸுமா, ஜீஜியின் பீரோவைத் திறந்து பச்சைப் புடவை, பச்சை உள்பாவாடை, இளம் மஞ்சள் ரவிக்கை எடுத்தாள் ஜீஜியின் படுக்கை அருகே வைத்தாள். தலையைத் திருப்பிப் பார்த்த ஜீஜி பச்சை வளையல் எங்கே? என்றாள். ஈனஸ்வரத்தில். மீனாட்சி வளையல் பெட்டியைத் திறந்து பச்சைக் கண்ணாடி வளையல்களை எடுத்து வைத்தாள்.

கதவை மூடி ஜீஜியின் ஆடைகளை அகற்றினர். முழுவதும் சிவக்கப் பழுத்த பழம் ஒன்று வற்றினார்போல் இருந்தது அவள் உடம்பு. அகங்கையில் கோடுகள் கனத்து ஓடின. புறங்கை சுருங்கி நரம்புகள் பளபளத்தன. அடிவயிற்றில் ஏரிட்டு உழுதாற்போல் ஆழமான பிரசவ வரித் தழும்புகள். அவள் உறுப்பின் மேல் புறத்துமயிர் வெளேரென்று பசையற்று, அங்காங்கே உதிர்ந்து இருந்தது. பருத்துப் பின்தளர்ந்த பின்பாகமும், தொடைகளும் வெளுத்த கீறல்களுடன் சுருங்கத் தொங்கின. உள்தொடை இடுக்கின் அருகே கருகிய வாழைத் தோல்போல் வதங்கிக் கிடந்தது. ஸ்தனங்கள் சுருகிய திராட்சை முலைக்காம்புகளுடன் தாழ்ந்து தொங்கின. கழுத்தில் பல தங்கச் செயின்களின் கரிக்கோடுகள் நெற்றியில் வகிட்டின் முனையில் கனத்த தங்கக் குண்டுடன் தலையில் அணிந்த சுட்டிப் பட்டம் அழுத்தி அழுத்தி வழுக்கை விழுந்தார்போல் வழவழவென்று ஒரு தழும்பு.

வாழ்ந்த உடம்பு, சிறுநீர், மலம், ரத்தம், குழந்தைகள் எல்லாவற்றையும் வெளிப்படுத்தியிருந்த உடம்பு. எத்தனை தடங்கள் அதில்.

புடவை கட்டி முடித்ததும், ஜீஜியின் தலையை வாரி, வண்ண நூல் குஞ்சலம் தொங்கும் கருத்த நூர் சவுரியைக் கூந்தலில் இணைத்துப் பின்னிவிட்டாள் ராதா பாபிஜி. பீரோ சாவியைக் குஸுமா ஜீஜியின் இடுப்பில் செருகினாள். ஜீஜி படுக்கையில் சாய்ந்து கொண்டாள்.

மற்றவர்கள் போனதும் ஜீஜி அருகில் உட்கார்ந்து கொண்டாள் மீனாட்சி. ஜீஜியின் கை இடுப்பைத் துழாவியது. ஜன்னல் திரைகள் மூடப்பட்ட அறை இருண்டிருந்தது.

சிறிது நேரம் பொறுத்து ஜீஜி பேசினாள்.

மருந்து, தூக்கம், அயர்ச்சி சேர்ந்து ஜீஜியின் குரல் கனத்து வெளிப்பட்டது. ஆனால் காற்றினில் அலைந்துவிட்டு வந்தது போல் அழுத்தமின்றி இருந்தது.

சிகப்புக் கலர் பாவாடை .....

என்ன ஜீஜி?

என் கல்யாணப்பாவாடை சிகப்புக் கலர், தங்க வெள்ளிச் சரிகை உடலெல்லாம் தங்க தகட்டுப் பொட்டு. பன்னிரெண்டு தங்க வளையல்கள், இரண்டு அட்டிகை, சிவப்பில், பச்சையில் முத்துத்தோடு, பவழத்தோடு நெற்றிச்சுட்டியின் தங்கக் குண்டு அஞ்சு பவுன். ஒரு வெள்ளிச் சாவி வளையம், பதினாலு வயது எனக்கு. என்னை வழியனுப்புகிற பிதாயின் போது என் அம்மா காதில் சொன்னாள். நெஞ்சில் முட்டுகிறது அந்த பிதாய் முக்காட்டோடு அவள் குனிந்து என்னைக் கட்டிக்கொண்டாள். பெரிய மூக்கு வளையம் உறுத்தியது. சமையலறை ஆக்ரமித்துக்கொள். அலங்காரம் செய்துகொள்ள மறக்காதே... இரண்டும்தான் உன் பலம். அதிலிருந்துதான் அதிகாரம்....
இருக்கட்டும் ஜீஜி தூங்குங்கள்.

ஞாபகம் வருகிறது... எல்லாம்....

முப்பது பேர் வீட்டில். அஞ்சு கிலோ ஆட்டா பிசைவேன் முந்நூறு சப்பாத்தி இடுவேன். முதல் தடைவ இரண்டு உள்ளங்கையும் ரத்தம் கட்டி நீலமாய் இருந்தது. தோள் பட்டையில் குத்திக் குத்தி வலித்துது... பப்பாஜி சொன்னார்... சபாஷ்.... நீ.... நல்ல உழைப்பாளி.... என்று.....,

ஹா என்று மூச்சு விட்டாள்.

கோபாலுக்கு முன் ஒரு ஆண் குழந்தை. அவள் போய்விட்டான். தெரியுமா? ஒரு வயதில் பூஜை அன்று, எல்லோரும் சமையலறையில் ... குழந்தை படியேறி மதில் சுவரில் ஏறப்பார்த்து விழுந்துவிட்டாள்... முப்பது படி ஏறியிருந்தான்.... எண்ணெயில் பூரியைப் போட்டதும் ஈச்சென்ற அலறல் .... வயிற்றில் முட்டியது... பின் மண்டையிள் பிளவு ... முற்றத்துக் கல் தரையில் வெள்ளைப புழுக்கை மாதிரி அவன் மூளை சிதறியிருந்தது... ஆண் பிள்ளைகள் எல்லாம் வந்தபின்... பொரித்தேன்..... மீனா... கேட்கிறாயா ..... பொரித்தேன் மீதம் பூரிகளை ....

மீனாட்சி ஜீஜியின் நெற்றியில் தடவினாள்

மாமனார் போனதும் வெள்ளிச் சாவி வளையத்தில் சாவி கோத்துக் கொண்டேன்...

மீனா... எனக்கு எத்தனை செல்வாக்கு பார்த்தாயா? நான் ராணி மாதிரி அதிகாரம் செலுத்துகிறேன்.... இல்லையா? ஜீஜி முனகினாள் உறங்கினார் போல் கிடந்தாள்.

பெரிய வட்டப் புஷ்ப வடிவில் கமலமும், நீலமும், பச்சையும் முத்துப் பதித்த தோடுகளை அணிந்த சருகுச் செவிகள் அருகே மீனாட்சி குனிந்தாள். விரிந்த கடலில் பாம்புப் படுக்கையில் மகா விஷ்ணு மிதப்பது போல் ஜீஜியும் அவளும் மட்டுமே. இருண்டு கிடந்த அறையில் ஒரு தொப்புள் கொடி அறுந்த தன்மை ஏற்பட்டது. அந்த உரையாடலை அவள் நிகழ்த்தினாளா, அது தன்னால் ஏற்பட்டதா, அப்படிப் பலமுறை யோசித்தால் நிகழ்ந்தது போன்ற உணர்வு ஏற்பட்டதா, அது ஜீஜிக்கும் அவளுக்கும் மட்டுமேயான உரையாடலா தெரியவில்லை.

ஜீஜி, அந்தச் சமையலறை அட்டிகை வளை தங்கக் குண்டுச்சுட்டி – அதிலெல்லாம் ஒரு பலமுமில்லை.

அதிகாரம் அதிலிருந்து வரவில்லை.

அது பப்பாஜியை ஒட்டிய அதிகாரம்

அதிலிருந்து எல்லாம்.

விடுபடுங்கள்

விடுபடுங்கள்

விடுபடுங்கள்

விடுபட்டால் .... அப்புறம் .... எஞ்சுவது?

சமையலறை, நகைகள், குழந்தைகள், பப்பாஜி எல்லாவற்றையும் துறந்த நீங்கள்தான் அறுபட்ட நீங்கள், வெறும் கேஸர்பாயி, கேஸர்பாயி மட்டுமே. அங்கிருந்துதான் பலம். அதிகாரம்.

அதை எல்லாம் துறந்த நான் .... நான்... யார்?

கண்டு பிடியுங்கள். முங்கிப்பாருங்கள்

எதில்?

கிணற்றில், உங்கள் அந்தரங்கக் கிணற்றில்.

பற்றிக்கொள்ள எதுவுமில்லையே….. பயமாக ….

இன்னும் முங்குங்கள், முங்குங்கள், கேஸர்பாயிக்கும் உலகுக்கும் என்ன சம்பந்தம் என்று பாருங்கள்.

நிதம் இடப்பட்ட அந்த முந்நூறு சப்பாத்திகளும், பதினாலு குழந்தைகளை உதைக்கவிட்ட வயிறும் இல்லாவிட்டால்

மட்டன் புலவு, மஸாலா, பூரி-ஆலு, தனியாப் பொடி, உப்பு, சர்க்கரை, பால், எண்ணெய், நெய் என்று யோசித்திருக்காவிட்டால்

நாலு நாட்களுக்குஒரு முறை ஸ்டவ் திரியை இழுத்துவிட வேண்டும். மண்ணெண்ணெய் கிடைக்கும்போது வாங்க வேண்டும். மழைக் காலத்தின் கவலை அரிசி, பருப்பில், பூச்சி மாங்காய்க் காலத்தில் ஊறுகாய் வெய்யில் காலத்தில் அப்பளம், பழங்கள் காலத்தை ஒட்டி ஷர்பத், ஜுஸ், ஜாம் பழைய துணிகள் போட்டுப் பாத்திரம் சமையலறை முற்றத்துக்கு இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை சுண்ணாம்பு , மாதவிடாய் தள்ளிப் போயிற்றோ என்று கவலை, தள்ளிப் போகாவிட்டால் கவலை என்று மண்டையெல்லாம் பூச்சி, ஊறுகாய் சுண்ணாம்பு அடைத்திருக்காவிட்டால்

மூளையின் இழுப்பறைகளை இவற்றை எல்லாம் போட்டு நிரப்பியிருக்காவிட்டால்

ஒருவேளை நீங்கள் அந்த ஆப்பிள் விழுவதைப் பார்த்திருக்கலாம். தண்ணீர் கெட்டிலின் மூக்கு நுனி ஆவியைப் பார்த்திருக்கலாம்.

புதுக் கண்டங்களைக் கண்டுபிடித்திருக்கலாம். கைலாஸ பர்வதத்தில் அமர்ந்து காவியம் எழுதியிருக்கலாம். குகைக்குள் ஓவியம் தீட்டியிருக்கலாம். பறந்திருக்கலாம். போர்கள், சிறைகள், தூக்குமரங்கள், ரஸாயன யுத்தங்கள் இல்லாத உலகத்தை உண்டாக்கியிருக்கலாம்.

நீங்கள் எங்கே போய்விட்டீர்கள் ஜீஜி?

சரியான அளவில் எல்லாம் இடப்பட்ட சமையலில்

காதிலும் கழுத்திலும் நுதலிலும் உறுத்திய நகையில்

பலம் என்று

எப்படி நினைத்துக் கொண்டீர்கள்?

முங்குங்கள் இன்னும் ஆழமாக.

அடியை எட்டியதும் உலகளந்த நீரைத் தொடுவீர்கள். சுற்றியுள்ள உலகுடன் தொடர்பு கொள்வீர்கள்.

உங்கள் யோனியும், ஸ்தனங்களும், கருப்பையும் கழன்று விழும். சமையல் மணம் தூரப் போய்விடும். நகையின் மினுமினுப்பு மறைந்துவிடும். பால்தன்மை அற்ற நீங்கள் அதில் சிக்காத நீங்கள் அதில் குறுகாத நீங்கள் அதனின்றும் விடுபட்ட நீங்கள்.

அதைத் தொடுங்கள் ஜீஜி.

தொட்டு

எழுங்கள்.

எழுங்கள்.

எழுங்கள்.

அதுதான் பலம். அதனின்றும்தான் அதிகாரம்.

ஜீஜி திரும்பி, மீனாட்சியின் கையைத் தேடிப் பற்றிக்கொண்டாள்.

சாவித்திரி

க.நா. சுப்பிரமணியம்

ஆபீசிலிருந்து அன்று வெகு சீக்கிரம் வீடு திரும்பிவிட்டேன். வாசலில், வழக்கமான நாற்காலியில் அப்பாவைக் காணோம். உள்ளே பானையிலிருந்து ஜலம் எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவருக்காக நான் புத்தக சாலையிலிருந்து கொண்டு வந்த புத்தகத்தை அவர் நாற்காலியில் போட்டுவிட்டு, "அப்பா..... வ்...வ்!" என்று குரல் கொடுத்தேன்.

பதில் இல்லை. நாங்கள் இருவரும் ரேழியில் சந்தித்தோம். அவர் உதடுகள் கோணல் கோணலாகத் துடித்துக் கொண்டிருந்தன; கண் கலங்கியிருந்தது.

"என்ன அப்பா? "

"ஒண்ணும் இல்லையே!" அவர் குரல் சற்று நடுங்கிற்று.

சரி, சட்டையைக் கழற்றிவிட்டு இன்னுங் கொஞ்ச நாழி கழித்து விசாரித்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்து, மாடிச் சாவியை எடுத்துவரச் சமையலறைக்குள்

புகுந்தேன். ராஜியின் கண்களும் கலங்கியிருந்தன. அவள் கலக்கத்துக்குக் காரணம் அவள் நறுக்கிக் கொண்டிருந்த வெங்காயமாக இருக்கலாம்! சாவிக் கொத்தைக் கையில் எடுத்தபடியே "அப்பா ஏன் அப்படி என்னமோ போல் இருக்கா?" என்று விசாரித்தேன்.

"ஏன்? எனக்குத் தெரியாதே!" என்றாள் என் மனைவி. அவள் குரலும் சற்று நடுங்கிற்று. அவள் கண்களில் உள்ள கலக்கம் வெங்காயத்தால் மட்டும் ஏற்பட்டதல்ல என்று தீர்மானித்துக் கொண்டேன். என்ன தகராறு என்று யோசித்தபடியே, "ஏன்?" என்ன விசேஷம்?" என்று விசாரித்தேன்.

ஒரு நிமிஷம் மௌனம் சாதித்தாள் என் மனைவி. பின்னர், "ஏதுத்தாத்திலே, கார்த்தாலை ஒரு புடவை, மத்யானம் ஒரு புடவை, சாயங்காலம் ஒரு புடவை புதுசு புதுசாக் கட்டிக் கொண்டு வாசலில் நின்னுண்டிருக்குமே, அந்தப் பெண் செத்துப்போயிடுத்தாம்..."

"யாரு?"

"சாவித்திரீன்னு அந்த எதுத்தாத்து மாமா பெண். அவ பாட்டி கார்த்தாலை முதல் முட்டிண்டு மோதிண்டு அழறா"....

"எப்போ செத்துப் போச்சாம்?"

"கார்த்தாலை பத்து மணிக்கு?"

"எந்தூரிலே?"

"எல்லாம் இந்த ஊரிலேதான். ஏதோ தொண்டையில் ஆபரேஷன்னு ஆஸ்பத்திரிக்கு அழைச்சுண்டு போனாளாம். டாக்டர் மயக்கம் கொடுத்தானாம்; அந்த மயக்கத்திலேருந்து முழிச்சிக்கவேயில்லை.... பாவம் இப்படித்தான்...."

"எத்தனை ....."

"கேளுங்களேன். அந்தப் பெண் நாலு மாசமாய் ஸ்நாதனம் பண்ணாமல் இருந்துதாள். பத்துநாள் கொண்டு வந்து வைத்துக் கொள்ளலாம் என்ற அவப்பா முந்தா நாள் தான் அழைச்சுண்டு வந்தார். தொண்டையிலே ஏதோ கஷ்டமாயிருக்குன்னு ஆஸ்பத்திரிக்கு அழைச்சுப் போனார்களாம். பாவிகள் மயக்க மருந்தைக் கொடுத்து ஒரே மயக்கமாய்க் கிடத்திப் புட்டான்கள் .... பாவம்! ... பார்க்கச் சகிக்கவில்லை. வயது இன்னம் முழுசாப் பதினஞ்சு ஆகவில்லை."

"பதினஞ்சா?"

"போன வருஷந்தான் கல்யாணம் ஆச்சாம். ஆம்படையானுக்குக் கர்நூலில் எண்பது ரூபாய் சம்பளமாம். பாவம்! குழந்தை பிறக்கப்போகிறது என்று அவன் சந்தோஷமா சொப்பனம் கண்டு கொண்டிருப்பான். கார்த்தாலையிலேயே அவனுக்குத் தந்தியடிச்சாய் விட்டதாம். நாளைக்கு வந்து விடுவான்; அவன் வந்துதானே எல்லாம் ஆகவேணும்? ... என்ன கஷ்டம்!" இவ்விடத்தில் மறதியாக வெங்காயம் நறுக்கிய கையுடன் கண்ணைத் துடைத்துக் கொண்டு விட்டாள்; கண்ணீர் பெருகிற்று.

"உலகத்திலே எத்தனையோ கஷ்டம்; நம்ம கஷ்டங்களைச் சகிக்கவே நம்மால் முடியவில்லை. ஏதோ போ .... இருந்தாலும் கஷ்டந்தான்... வயசு பதினஞ்சு கூட ஆகவில்லையென்றால். அவரவர் பண்ணின பாவம்!" என்று நான் சமாதானஞ் சொன்னேன்; "நான் மாடிக்குப் போகிறேன். காபி கொண்டு வா!" என்று சொல்லிவிட்டுச் சாவியை எடுத்துக் கொண்டு சமையலறையை விட்டு வெளியேறினேன்.

மாடிப்படி ஏறும் போதுதான் மறுபடியும் அப்பாவைப் பற்றி ஞாபகம் வந்தது. "ஓஹோ, அதுதான்; அந்தப் பெண் இறந்தது. அவருக்குத் தம்முடைய ஒரே பெண் இருபத்திரண்டாவது வயதில் இறந்தது ஞாபகம் வந்து விட்டது போலும்? அதுதான் அந்தக் கண் கலக்கத்தின் அர்த்தம்" என்று யோசித்தபடியே மாடிக்குப் போகாமல் கீழே இறங்கி வாசல் பக்கம் போனேன்.

அப்பா சிமிண்டுத் திண்ணையில் காலைக் கட்டிக் கொண்டு பித்துப் பிடித்தவர்போல் உட்கார்ந்திருந்தார், என்னைக் கண்டதும் அவர் கண்களில் பிரகாசித்த பித்து கொஞ்சம் மறைந்தது. ஒரு தரம் கனைத்துக் கொண்டார். ஆனால் ஒன்றும் பேசவில்லை.

நான் அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டேன்.

"எதிராளாத்தில் ... " என்று ஆரம்பித்தேன்.

"என்ன கஷ்டம் போ! ஏதோ கஷ்டப்படப் பிறந்தவாள் நாமெல்லோரும். வயசு ஆக ஆக நமக்கெல்லாம் கஷ்டந்தான் அதிகரிக்கிறது...."

"யார் பெண்? அந்த ஸ்டோர்ஸ்...."

"இல்லை, போலீசிலிருந்தாரே அவர் பெண்; நாலைந்து நாளைக்கு முந்தித்தான் அவர் என்னிடம் தம் பெண்வரப்போவதைப் பற்றி ரொம்பப் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்".

"பாவம், சாதுப் பிராம்மணன்".

"இந்தத் தர்ம ஆஸ்பத்திரியிலேயே அநியாயந்தான். பணக்காரன்னா ஒரு தினுசு; ஏழைன்னா ஒரு தினுசு! அப்பா இந்த ஆஸ்பத்திரிக்கே போகப்படாது... "

"என்ன வியாதி?" என்றே நான்.

"வியாதியும் இல்லை. ஒண்ணும் இல்லை. ஏதோ டான்சில்ஸ் ஆஸ்பத்திரியில் கத்துக்குட்டி வைத்தியன்களெல்லாம் சேர்ந்துகொண்டு குளோரபாரத்தை நிறையக் கொடுத்து ஆபரேஷன் செய்தான்களாம். ஆபரேஷன் சரியாகப் போச்சு; மயக்கத்திலிருந்து பெண் விழித்துக் கொள்ளவே இல்லை....".

"அந்த டாக்டரையெல்லாம் ப்ராசிக்யூட் பண்ணினால் என்ன?"

"யார் பண்றது? என்னத்துக்காகப் பண்றது? பெண்ணோ போயிடுத்து. இன்னும் பணத்தைக் கொட்டி அழுது கோர்ட்டுக்கு வேறே போகணுமா?".

“அதுவும் சரிதான் இருந்தாலும்....”

"போன வருஷந்தான் கல்யாணம் ஆச்சாண்டா! மூவாயிரம் ரூபாய் கடன் வாங்கிக் கல்யாணம் பண்ணினாராம். இன்னும் கடன் முழுவதும் அடைஞ்சபாடில்லை. அதுக்குள் பெண்ணே போயிடுத்து".

பெண்ணுக்குப் பதில் அந்தக் கடன்காரனுக்கு நெருப்புப் போடக்கூடாது என்றிருக்கும் அவருக்கு!"

" என்ன பண்றது? பெண் வந்தது பற்றி எவ்வளவு பெருமைப்பட்டார் தெரியுமோ அவர்? என்னவோ, இந்தப் பெருமையிருந்தால் கடவுளுக்கே பொறுக்காது போலிருக்கு. மனித ஆசையைப் பங்கப்படுத்துவதில் ஈசனக்கு ஏனோ இந்தப் பிரேமை! சாஸ்திரியார் இருந்தாரே. உங்க தாத்தா அவர் இரண்டு பிள்ளைகளும் மன்மதனாட்டமா இருக்கும். "ஆனால் ஒரே மக்கு; ஒண்ணுக்காவது மெட்ரிக்குலேஷன் கூடப் பாசாக மாட்டேனென்று விட்டது. ஆனால் அவர்களிடம் சாஸ்திரியாருக்கு என்ன ஆசை! என்ன பெருமை!... கடவுளுக்கே சகிக்கவில்லை. ஒருத்தன் இருபது வயதிலே போய்விட்டான்... சாஸ்திரியாருடைய ஜோரும் அத்துடன் போய்விட்டது. அவர் வாழ்விலே! உற்சாகமில்லை. நான் அப்போது இதைப் பற்றி எண்ணிப் பார்த்திருக்கிறேன். இருந்தாலும் என் பெண்ணிடம் எனக்கிருந்த பெருமை.... "அவர் கண்கள் நிறைந்தன; உதடு துடித்தது; மேலே பேச முடியாமல் தவித்தார்.

"என்னவோ போ! நமக்கு எட்டாதது. எத்தனையோ இவ்வுலகில் இருக்கிறது. சாவையும் வாழ்வையும் பற்றி யோசித்துக்கூடப் பிரயோசனம் இல்லை. ஒரு கோடி கூட நம்மால் காண முடியாது?" என்று தத்துவம் படித்தேன் நான்.

இரண்டு நிமிஷம் அப்பா ஒன்றும் பேசவில்லை; நான் மறுபடியும் பேச ஆரம்பித்தேன். "நான் நேற்று ஒரு கதை வாசித்துக் கொண்டிருந்தேன். பாக்தாத்தில் ஒரு பணக்காரன் தன் வேலைக்காரனைக் காலையில் சந்தைக்கு ஏதோ வாங்கி வர அனுப்பினான். வேலைக்காரன் பத்து நிமிஷத்தில் உள்ளம் பதை பதைக்க மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்க யஜமானிடம் வந்து, "சாமி சந்தையில் நான் இன்று எமனைக் கண்டேன்! அவன் என்னை ஒரு விதமாக உற்றுப் பார்த்து முகத்தைச் சுளித்தான். நான் பயந்து விட்டேன். இன்று நான் பாக்தாத்தில் தங்கினால் எமன் என்னை அழைத்துப் போய்விடுவான் என்றே தோன்றுகிறது. யஜமானே! தாங்களே வழிகாட்ட வேண்டும். நான் ஆயிரம் மைல்களுக்கப்பால் இருக்கும் சமாராவுக்குப் போய்விடுகிறேன்; எமன் என்னைத் தேடி அவ்வளவு தூரம் வரமாட்டான். தங்கள் லாயத்திலிருக்கும் அதிவேகமான குதிரையொன்றைத் தர வேணும்" என்று காலில் விழுந்து கெஞ்சினான்".

"பைத்தியக்காரன்!" என்றார் எங்கப்பா.

நான் மேலே கதையைச் சொன்னேன். "யஜமானும் வேலைக்காரனிடம் அனுதாபங்கொண்டு தன் குதிரையில் மிகச் சிறந்தது ஒன்றின் மேலேற்றி அவனைச் சமாரா நோக்கி அனுப்பினான். பின்னர் யஜமானே சந்தைக்குச் சென்றான். அங்கே அவன் எமனைக் கண்டதும், நீ ஏன் இன்று காலை என் வேலைக்காரனைப் பயமுறுத்தினாய்?" எனறு கேட்டான். யமன் அதற்கு, "நான் அவனைப் பயமுறுத்தவில்லை. நான் இன்று காலை மாலை ஆறு மணிக்கு அவனைச் சமாராவில் சந்திப்பதாக ஏற்பாடு செய்திருந்தேன். அவன் இன்று காலை வரையில் பாக்தாத்தில் இருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன" என்றான்.

"அசடன்! வேலைக்காரன் எமனை ஏமாற்றி விட்டு ஓடி விடுவதாக எண்ணிக்கொண்டு அவனைத் தேடி குறிப்பிட்ட இடத்தில் சந்திக்கவே கிளம்பியிருக்கிறான். ஆம், நாம் செய்யும் காரியங்களில் பல இது

போன்றவையே. எல்லாத் தத்துவ விசாரமும் நமக்கு இதை அறிவுறுத்தவே பிரயோனப்படுகிறது.. ஹூம். காபி சாப்பிட்டாச்சோ?"

"இல்லை" என்று சொல்லிக் கொண்டே எழுந்து மாடிக்குப் போனேன்.

கையில் சூடு ஆறிக் கொண்டிருந்த காபியுடன் காத்துக்கொண்டிருந்தாள் ராஜி; "சட்டைகூடக் கழற்றாமல் என்ன பேச்சு?" என்று கோபித்துக் கொண்டாள்.

காபியைக் கையில் வாங்கினபடியே சிரித்தேன்.

எங்கள் மாடி வராந்தாவிலிருந்து பார்த்தால் எதிர் அகம் தெரியும். ராஜி வராந்தாவில் போய் நின்று கொண்டாள். நான் சட்டையைக் கழற்றிவிட்டுக் கையில் காபியுடன் பின் தொடர்ந்தேன். ராஜி அந்தப் பெண்ணைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள்.

"பாவம், பதினஞ்சு வயசுலே போறதுன்னா? பாவந்தான்! இந்தக் காலத்தில் சுமங்கலிக் கிழவிகள், எழுபது வயதில் நெற்றியுங் குங்குமமுமாய் மஞ்சள் புடவையுடன் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்! அதுமாதிரி ஒரு கிழவி இருந்தால் வீட்டுக்கே மங்களகரமா இருக்கு. இப்போதெல்லாம் பூவும் பிஞ்சுமாய் .. வந்துவிட்டாளா வாசல்லே அவள்! குடியிருக்கிற ஆத்துலே கிளியாட்டமா ஒரு பெண் போயிடுத்து. அழகாத் தலையை வாரிப் பின்னிண்டு, பொட்டு வைத்துக் கொண்டு, வாசல்லே பூவும் மணமுமாக வந்து நிற்கிறாள் வெட்கம் கெட்டவள்! " என்று வசை மாரி பொழிய ஆரம்பித்தாள்.

யாரை என்றறிய நான் அவள் பக்கம் போய் நின்று பார்த்தேன். எதிர்வீட்டில் போலீஸ்காரருடன் ஒட்டுக் குடியிருந்த ஸ்டோர்ஸ்காரரின் மனைவி கோமளம் வழக்கம் போலக் காட்சி அளித்தாள். அவள் பார்க்கக் கொஞ்சம் அழகாய் இருப்பாள். நல்ல சிவப்பு; நீண்டு கறுத்த கூந்தல்; அழகிய உருண்டையான முகம். மூன்று குழந்தை பெற்றெடுத்தவள், எனினும் பதினாறு வயதுச் சிறுமிபோல் இருப்பாள், நடப்பாள், நிற்பாள்.

"போறவா போனா இருக்கிறவா நன்னாயிருக்க வேண்டியதுதானே! என்றேன் நான்.

"லீலா நேத்துதான் சொன்னாள்; அந்தப் பெண்ணைத் தேடி வருகிற ஆளுக்குக் கணக்கு வழக்கில்லையாம்; ஆளுக்கொரு புதுப்புடவை கொண்டு வந்து தரான். கட்டிண்டு மினுக்கறாள்.

"உங்க லீலா ரொம்ப யோக்யந்தன்"

"நீங்க கோமளத்துக்குப் பரிஞ்சுண்டுதான் பேசுவேள். பேசமாட்டோளா! பொம்மனாட்டி கொஞ்சம் அழகாய் இருந்தால் புருஷாள்ளாம் பல்லைக்காட்ட மாட்டேளா?"

அந்த சாவித்திரி செத்ததற்காக இவளை என்ன பண்ணச் சொல்றே?

"எனக்குக்கூட இன்னிக்குத் தலைவாரிப் பூ வச்சுக்க மனசில்லை; அவாத்திலே குடியிருந்ததுண்டு இப்படிப் பண்றாள். அவள் கட்டேலே போக! ராத்திரி பிரேதத்தை எடுத்துண்டு வந்தால் உள்ளே வரக்கூடாது என்று கூடச் சொல்லுவாள் அவள்.

"இன்னும் ஆஸ்பத்திரியிலிலுந்து எடுத்துண்டு வரவில்லையா?"

"இல்லை, ராத்திரி எட்டு மணிக்கு மேல் தான் கொண்டு வரப்போறாளாம். பொணம் ரேழியில் கிடக்க இந்த வெட்கம் கெட்டவள் தன்னைத் தேடி வந்த ஆளை ஒ அழைச்சுண்டு உள்ளே போயிடுவாள். என்ன வேண்டிக்கிடக்கு?" என்றாள் ராஜி.

"அவ எப்படியாவது போறா; நமக்கென்ன?" என்றேன் நான்.

அப்பா இன்னிக்குச் சாயங்காலம் காபி கூடச் சரியாகச் சாப்பிடவில்லை. பாதி டம்ளர் மீதி வச்சுட்டார்... அடடே ! உள்ளே வாணலியில் கறி, கரியாயிருக்கும் என்று சொல்லிக் கொண்டே கீழே ஓடிவிட்டாள்.

அன்று அப்பாவுக்கிருந்த மனோ நிலையில் அவர் தாமாக எங்கும் கிளம்ப மாட்டார் என்று எண்ணி, நான் அவரையும் அழைத்துக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பினேன். அவரைப் பீச்சுப் பக்கம் அனுப்பிவிட்டு நான் மவுண்ட் ரோட் பக்கம் போய் இரவு எட்டரை மணிக்குத்தான் வீடு திரும்பினேன். அப்பா நான் வந்ததற்கு அப்புறம் கால் மணி கழித்துத்தான் வந்தார். சமாசாரப் பத்திரிகை வாங்கிக் கொண்டு வந்தார். சாப்பிட்டு விட்டுப் பத்திரிகை பார்த்துக் கொண்டிருக்கையில், இரவு ஒன்பதரை மணிக்கு எதிரகத்தில் ஒற்றை மாட்டு வண்டியில் 'சாவித்திரி'

வந்து இறங்கினாள்; ரேழியில் கிடத்தப்பட்டாள். அவள் தாயும் பாட்டியும் கம்மிய குரலில் துக்கந் தாளாமல் சப்தஞ் செய்ய முடியாமல் திணறினர். அவள் தகப்பனார் வாய் திறவாமல் தலையைத் தம் கைகளில் தாங்கிக் கொண்டு திண்ணையில் உட்கார்ந்திருந்தார். நான் வாசித்துக் கொண்டிருந்த பேப்பரைக் கீழே வைத்துவிட்டு வேடிக்கை பார்க்க வெளி 'கேட்'**டைத்** திறந்து கொண்டு தெருவில் போக முயன்றேன்.

அப்பா அழைத்தார், "இங்கே வா ராஜா, பாவம் ! அதைப் பார்க்கப் போவானேன்? " என்றார். அவருக்குப் பழைய ஞாபகங்கள் மறுபடியும் வந்து மூளாமலிருக்க நான் அருகிலிருந்தால் தேவலை என்று எண்ணினார் போலும!

''கிராமத்தில் என்றால், தெருவில் யாராவது செத்துக்கிடந்தா யாரும் சாப்பிடக்கூடாது என்று தட்டுப்பாடு. செத்தவர்களின் ஆப்த சிநேகிதர்களே பிணத்தைத் தூக்க வேணும். பட்டணத்தில் அதெல்லாம் கிடையாது ! நமது சாவிலேகூட நாகரிகம் வந்துவிட்டது ! என்றார்.

"ஆஸ்பத்திரியிலேயே வைத்து எடுக்கக் கூடாதோ! வீட்டுக்கு எடுத்து வருவானேன்? கூடக் குடியிருப்பவர்கள் ஆட்சேபணை செய்தால்…..''

''கஷ்டந்தான். ஆனால் கூடக் குடியிருப்பவர்கள் இந்தச் சமயத்திலெல்லாம் ஆட்சேபணை சொல்வார்களா என்ன?''

''அவர்களுக்கு இடஞ்சல்தானே? '' என்றேன்

'' ஆமாம். ஏழையாய் இருந்தால் எல்லாக் கஷ்டமுந்தான்''

இந்தச் சமயம் எதிர்வீட்டில் அழுகை இன்னும் பலமாக ஆரம்பித்தது. அப்பா, ''என்னத்துக்கு இப்படி அழறா? இனிமேல் என்ன பிரயோஜனம்? பாவம்! அந்தப் பிராமணன் காலம்பர முதல் சாப்பிடவில்லை. மத்தியானம் யாராவது தீர்த்தங்கூட வேணுமானால் கொடுப்பாரில்லை. நான் துக்கம் விசாரிக்கலாமோ என்று எண்ணினேன். ஆனால் நான் விசாரித்து என்ன பிரயோஜனம்?'' என்று பெருமூச்சு விட்டார்.

"நாளைக்கு அவன் வந்துதான் நெருப்புப் போடணும்;எப்போ வாரானோ?"

"யார் வந்தா என்ன? எனக்கு என்னவோ அவா படற துக்கத்தைக் காணச் சகிக்கவில்லை. அந்தப் பாழும் எமன்னு ஒருவனிருந்தால் அவனுக்கு எப்படித்தான் சகிக்கிறதோ!"

எமன் இங்கே நின்னால்தானே வேறு யாரையாவது அழைக்க எங்காவது போயிருப்பான்.''

"இவளுக்குப் பதில், உலகத்தில் பற்றுதல் இல்லாத ஒருவன் எமனிடம், 'என்னை அழைத்துப் போ ;நான் வாறேன்; இவளை விட்டு விடு என்று சொன்னால் ஏன் அவன் கேட்கக் கூடாது அவனுக்கு என்ன நஷ்டம்? "

"அப்படிச் சொல்லக்கூடியவர்கள் யார்? இதோ எதுத்தாத்தில் அழுது கொண்டிருக்கிறாளே அந்தப் பெண்ணுக்காக, அவர்களில் யாராவது தங்கள் உயிரைத் தியாகஞ் செய்யத் தயாராக இருப்பார்களா? அவள்தாய்? அவள் தகப்பான்? அவள் தம்பி? அவள் கணவன்? யார்?''

''ஒருவன் தியாகஞ் செய்து அவள் பிழைத்துக் கொண்டால் தன்னைப் பற்றிய வரையில் லாபமில்லை என்பதற்காகத் தியாகஞ் செய்யத் தயாராக இருப்பதில்லை. மனைவி இறக்கக்கணவன் தன் ஆயுளில் பாதியை அவளுக்குத் தத்தஞ் செய்து அவளை மீட்டான் என்று கதையில் கேட்டதில்லையா? அது யாரும் செய்யத் தயாராக இருப்பான்.''

"நிஜந்தான். இறந்தவர்களுடைய உறவினர்தாம் எந்தத் தியாகஞ் செய்யத் தயாராக இருக்க வேணும் என்று என்ன அவசியம்? தெருவில் போகிற யாராவது, நம்மைப் போல் அன்னியன், அவர்கள் துக்கங்கண்டு பரிதாபங்கொண்டு, தன் வாழ்விலே இன்பம் காணாதவனாய்த் தன் உயிரைக் கொடுத்து ஓர்இளம் உயிரை மீட்கத் தயாராக இருக்கலாம்.

"ஏன் இருக்கக்கூடாது? அவன் அபூர்வ மனிதன் என்றே அப்படிப்பட்டவனைச் சொல்ல வேணும். எனக்கு வாழ்விலே பிடிப்புக் கிடையாது; நான் உயிருடனிருந்து இனிப் பிரயோஜனம் என்ன? ஆனால் என்னை இப்படிப்பட்ட தியாகஞ் செய்யச் சொன்னால் நான் தயங்கத்தான் தயங்குவேன். நான் மகாத்மா அல்ல" என்றார் அப்பா.

"நல்ல வேளை! ‘‘என்றேன் நான். "

"மாடியில் அவள் தனியாய் இருக்காள். பயப்படப்போறா, நானும் படுத்துக்கத்தான் போறேன், நீ போ!"

நான் மாடிக்குப் போனேன். ராஜி வராந்தாவில் நின்று கொண்டிருந்தாள்.

"அப்பாவுக்கு ரொம்ப மனசுக்குக் கஷ்டமாயிருக்கு" என்றேன் நான்.

"இன்னிக்குச் சரியா சாப்பிடவே இல்லை".

"நாம் என்ன பண்றது போ. போய்ப் படுத்துக்கோ" போ. நான் கொஞ்ச நாழி எழுதிவிட்டு வருகிறேன் " என்றேன். அவள் படுக்கப் போகும்போது மணி பத்திருக்கும். நான் இரண்டு மணி நேரம் எழுதிக் கொண்டிருந்தேன். மணி பன்னிண்டு அடிக்கும்போது மாடி வரந்தாவுக்குப் போய்ப் பார்த்தேன். எதிர்வீட்டு ரேழியில் ஹரிக்கன் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. விழக்குக்கருகில் சாவித்திரியின் அம்மா உட்கார்ந்திருந்தாள். அவள் அப்பா திண்ணையில் சாய்ந்து கொண்டிருந்தார். உருவம் தெரிந்ததே தவிர, விழித்துக் கொண்டிருந்தாரா, தூங்கினாரா என்று தெரியவில்லை.

மெள்ளக் கீழே இறங்கிப் போய் விளக்கைப் போட்டுப் பார்த்தேன். அப்பா பாயில் காலைக் கட்டுக்கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்தவராக உட்கார்ந்திருந்தார். நான் விளக்கைப் போட்டதும் திடுக்கென்று நிமிர்ந்து பார்த்தார்.

"ஏன் அப்பா இன்னும் தூங்கவில்லை"

"தூக்கம் வரவில்லை," குரல் துக்கத்தாலும் மனோவியா கூலத்தாலும் கம்மி இருந்தது.

"படுத்துக்கோயேன்"என்றேன்.

"நீயும் போய்ப் படுத்துக்கோ, நாழியாச்சு, என்றார். அவர் படுத்ததும் நான் விளக்கை அணைத்துவிட்டு மேலே போய்ப் படுத்தேன். படுத்ததுதான் தாமதம் தூங்கியும் விட்டேன்.

அரைமணிதான் தூங்கியிருப்பேன். அப்பா ஒரு மகாத்மா ஆகிவிட்டதாகக் கனவு கண்டு திடுக்கென்று விழித்தெழுந்தேன். மனதைத் திடப்படுத்திக் கொண்டு சந்தடியில்லாமல் கிழே இறங்கிப் போய் விளக்கைப் போட்டுப்

பார்த்தேன். அப்பா நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார். அன்று இரவு எனக்கு அதற்கு மேல் தூக்கம் பிடிக்கவில்லை. ஏதோ எழுத உட்கார்ந்தேன். அன்றிரவு முழுவதும் எழுதிக் கொண்டே இருந்தேன். பொழுது விடிவதற்குள் அப்பா என்ன பண்ணுகிறார் என்று பார்க்க நான் மூன்று தரம் கீழே இறங்கிப் போய் வந்தேன்.

விடியற்காலம் வராந்தாவில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து சற்றுக் கண் அயர்ந்திருப்பேன். எதிர் வீட்டில் அழுகையும் கூக்குரலும் கேட்டு விழித்துக் கொண்டேன். சாவித்திரியின் கணவன் வந்துவிட்டான். இருபத்தைந்து வயதிருக்கும். நடப்பது ஒன்றிலும் பட்டுக் கொள்ளாமல் அவன்தூர நின்று கொண்டிருந்தான். யாரோ தெருவில் வேடிக்கை பார்க்க வந்தவன்போல் காணப்பட்டான். அவன் செய்வதற்கு, சொல்வதற்கு, என்ன இருந்தது? ஏதோ அவன் வாழ்வில் ஓர் அத்தியாயம் முடிந்துவிட்டது.

கீழே இறங்கிப் போனேன். அப்பா திண்ணையில் உட்கார்ந்திருந்தார். என்னைக் கண்டதும் ‘‘அந்தப் பையனை நான் கும்பகோணத்தில் பாாத்திருக்கிறேன’’ என்றார்.

‘‘இருக்கலாம்’’

‘‘நானும் துக்கம் விசாரித்துவிட்டுக் கூடப்போய் ஒரு முழுக்குப் போட்டுவிட்டு வருகிறேன” என்றார்.

நான் தடுத்துக் கூறவில்லை.

எதிர்வீட்டில் ஏற்பாடெல்லம் விமரிசையாக நடந்தது. காலை எட்டு மணிக்குப் பல்லக்குக் கிளம்பிற்று. சாவித்திரியின் கடைசிப் பிரயாணம் ஆரம்பமாயிற்று. சிவிகைக்குப் பின்னால் ஏழெட்டுப் புருஷர்கள் நடந்தனர். அதில் அப்பாவும் கலந்து கொண்டார். அதற்குப் பின்னால் ஒரு சிறு கோஷ்டி பெண்கள். நானும் , ராஜியும் மாடி வராந்தாவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தோம்.

"இவரும் எதுக்குப் போகணும்? "என்றாள் ராஜி.

"போய்ட்டு வரட்டுமே. அதனால் என்ன?" என்றேன் நான்.

ஆனால் என் மனதில் இருந்த கலவரம் அப்பா திரும்பி வரும் வரையில் நீங்கின பாடில்லை. அவர் திரும்பி வந்த, மறுபடியும் ஒரு தரம் ஸ்நானஞ் செய்து

விட்டு வழக்கப்படி சாப்பிட்டானா பிறகுதான் எங்கள் அப்பா ஒரு மகாத்மா அல்ல என்று அறிந்து என் மனம் நிம்மதி அடைந்தது.

வெயிலோடு போய்

தமிழ்ச் செல்வன்

மாரியம்மாளின் ஆத்தாளுக்கு முதலில் திகைப்பாயிருந்தது. இந்த வேகாத வெயிலில் இந்தக்கழுத ஏன் இப்படி தவிச்சுப் போயி ஓடியாந்திருக்கு என்று புரியவில்லை. "ஓம் மாப்பிள்ளை வல்லியாடி" என்று கேட்டதுக்கு பொறு பொறுங்கிற மாதிரி கையை காமிச்சிட்டு விறுவிறுன்னு உள்ளே போயி ரெண்டு செம்பு தண்ணியை கடக்குக் கடக்குன்னு குடிச்சிட்டு 'ஸ்... ஆத்தாடி'ன்னு உட்கார்ந்தாள்.

"ஓம் மாப்பிள்ளை வல்லியாடி"

அவரு.... ராத்திரி பொங்க வைக்கிற நேரத்துக்கு வருவாராம் இந்நியேரமே வந்தா அவுக யேவாரம் கெட்டுப் போயிருமாம்".

"சரி... அப்பன்னா நீ சித்த வெயில் தாழக் கிளம்பி வாறது ... தீயாய் பொசுக்கிற இந்த வெயில்ல ஓடியாராட்டா என்ன".

"ஆம அதுசரி ... பொங்கலுக்கு மச்சான் அவுக வந்திருக்காகளாமில்ல..."

ஆத்தாளுக்கு இப்ப விளங்கியது. அவளுடைய மச்சான் ஆத்தாளின் ஒரே தம்பியின் மகன் - தங்கராசு இன்னிக்கு நடக்கிற காளியம்மங்கோயில் பொங்கலுக்காக டவுணிலிருந்து வந்திருக்கான். அது தெரிஞ்சுதான் கழுத இப்படி ஓடியாந்திருக்கு.

"மதியம் கஞ்சி குடிச்சிட்டு கிளம்பினியாட்டி" என்று கேட்டதுக்கு கழுத 'இல்லை' யென்கவும் வைது கொண்டே ஆத்தா கஞ்சி ஊத்தி முன்னால் வைத்து குடிக்கச் சொன்னாள். உடெல்லாம் காய்ஞ்சு போயி காதுல கழுத்திலே ஒண்ணுமேயில்லாம கருத்துப் போன அவளைப் பார்க்க பார்க்க ஆத்தாளுக்குக் கண்ணீர் தான் மாலை மாலையாக வந்தது. தங்கராசு மச்சானுக்கு தான் மாரியம்மா என்று சின்னப் பிள்ளையிலேயே எல்லாருக்கும் தெரிஞ்சதுதான். கள்ளன் - போலீஸ் விளையாட்டிலிருந்து காட்டிலே கள்ளிப்பழம் பிடுங்கிப் போகிற வரைக்கும் ரெண்டு பேரும் எந்நேரமும் ஒண்ணாவேதான் அலைவார்கள். கடைசிக்கி இப்படி ஆகிப்போச்சே என்று ஆத்தளுக்கு ரொம்ப வருத்தம். எப்படியெல்லாமோ மகளை வச்சிப்

பாக்கணுமின்னு ஆசைப்பட்டிருந்தாள். பேச்சை மாற்றுவதற்காக ‘‘அண்ணன் எங்கத்தா’’ என்று கேட்டாள்.

‘‘நீங்க ரெண்டு பேரும் வருவீக அரிசிச்சோறு காச்சணும்னிட்டு அரிசி பருப்பு வாங்கியாறம்ணு டவுணுக்க போனான்’’.

கஞ்சியைக் குடித்துவிட்டு சீனியம்மாளைப் பார்க்க விரைந்தாள் மாரி. சீனியம்மாள்தான் மச்சான் வந்திருக்கிற சேதியை டவுணுக்கு தீப்பெட்டி ஒட்டப் போன பிள்ளைகள் மூலம் மாரியம்மாளுக்குச் சொல்லி விட்டது. சேதி கேள்விப் பட்டதிலிருந்தே அவள் ஒரு நிலையில் இல்லை. உடனே ஊருக்குப் போகணுமென்று ஒத்தக் காலில் நின்றாள். ஆனால் அவள் புருஷன் உடனே அனுப்பி விடவில்லை. நாளைக் கழிச்சுப் பொங்கலுக்கு இன்னைக்கே என்ன ஊரு என்று சொல்லிவிட்டான். அவ அடிக்கடி ஊருக்கு ஊருக்குன்னு கிளம்புறது அவனுக்கு வள்ளுசாப் பிடிக்கவில்லை. அவ ஊரு இந்தா மூணு மைலுக்குள்ளே இருக்குங்கிறதுக்காக ஒன்ரவாட்டம் ஊருக்குப் போனா எப்படி. ஆவ போறதப் பத்தி கூட ஒண்ணுமில்லை. போறவட்டமெல்லாம் கடையிலேருந்து பருப்பு, வெல்லம் அது இதுன்னு தூக்கிட்டு வேற போயிர்றா. இந்தச் சின்ன ஊர்லே யேவாரம் ஓடுறதே பெரியபாடா இருக்கு. இப்ப கோயில் கொடைக்குப் போணுமின்னு நிக்கா என்ற வயிறு எரிந்தான். ஆனாலும் ஒரேடியாக அவளிடம் முகத்தை முறிச்சுப் பேச அவனுக்கு முடியாது. அப்படி இப்படி யென்ற ரெண்டு புலப்பம் புலம்பி அனுப்பி வைப்பான்.

இதைப் பத்தியெல்லாம் மாரிக்கு கவலை கிடையாது. அவளுக்கு நினைத்தால் ஊருக்குப் போயிறணும். அதுவும் மச்சான் அவுக வந்திருக்கும் போது எப்படி இங்க நிற்க முடியும்.

அவ பிறந்தது வளர்ந்ததே தங்கராசுக்காகத்தான் என்கிற மாதிரியில்லவோ வளர்ந்தாள். ஆவள் நாலாப்புப் படிக்கிற போது தங்கராசின் அப்பாவுக்க புதுக்கோட்டைக்கு மாற்றலாகி குடும்பத்தோடு கிளம்பியபோது அவள் போட்ட கூப்பாட்டை இன்னைக்கும் கூட கிழவிகள் சொல்லிச் சிரிப்பார்கள். நானும் கூட வருவேன் என்று தெருவில் புரண்டு கையைக் காலை உதறி ஒரே கூப்பாடு. அதைச் சொல்லிச் சொல்லி பொம்பளைகள் அவளிடம் ‘‘என்னாட்டி ஒம் புருசங்காரன் என்னைக்கு வாரானாம்’’ என்று கேலி பேசுவார்கள். ஆனால் அவள் அதையெல்லாம் கேலியாக நினைப்பதில்லை. நிசத்துக்குத்தான் கேட்கிறார்கள் என்று நம்புவாள். ஊர்ப் பிள்ளைகளெல்லாம் கம்மாய்த் தண்ணியில் குதியாளம் போடும் போது இவன் மட்டும் கம்மாய்ப் பக்கமே போக மாட்டாள். கம்மத் தண்ணியிலே குளிச்சா சொறிபிடித்து

மேலெல்லாம் வங்குவத்தும் டவுண்ல படிக்கிற மச்சானுக்குப் பிடிக்காது. அதேபோல கஞ்சியக் குடிச்சிவ குறு வச்சிப் போயி மச்சான் ஒன்னைக்கட்ட மாட்டேன்னு சொல்லிட்டா என்னாகுறது?

சும்மா மச்சான் என்று சொல்லிக் கொண்டிருந்தவன் பெரிய மனுஷியானதும் மச்சானைப் பத்தி நினைக்கவே வெட்கமும் கூச்சமுமாயிருந்தது. கொஞ்ச நாளைக்கி. வெறும் மச்சானைப் பத்தின நினைப்போடு அப்புறம் கனாக்களும் வந்து மனசைப் படபடக்க வைத்தன. டவுணுக்கு தீப்பெட்டி ஒட்டப் போகையிலும் வரையிலும், ஒட்டும் போதும் மச்சானின் நினைப்பு இருந்து கொண்டே இருக்கும். பஞ்சத்திலே பேதி வந்து அவ அய்யா மட்டும் சாகாம இருந்திருந்தா மச்சானுக்குப் பொருத்தமா அவளும் படிச்சிருப்பா. அது ஒரு குறை மட்டும் அவ மனசிலே இருந்து கொண்டிருந்தது.

அதுவும் மச்சான் ஒரு தடைவ அவுக தங்கச்சி கோமதி கலியாணத்துக்கு பத்திரிக்கை வைக்க வந்த போது போயிருச்சு. எந்த வித்தியாசமும் பாராம ஆத்தாளோடவும் அண்ணனோடவும் ரொம்ப பிரியமா பேசிக்கிட்டிருந்த மச்சானை கதவு இடுக்கு வழியா பாத்துப் பாத்து பூரிச்சுப் போனா மாரியம்மா.

மச்சானைப்பத்தின ஒவ்வொரு சேதியையும் சேர்த்துச் மனசுக்குள்ளே பூட்சிவ ச்சிக்கிட்டா. வருசம் ஓடினாலும் பஞ்சம் வந்தாலும் அய்யா செத்துப் போயி வயித்துப் பாட்டுக்கே கஷ்டம் வந்தாலும் அவனைப் பத்தின நினைப்பு மட்டும் மாறவே இல்லை. அதனாலே தான் தங்கராசு அவளுக்கில்லை என்று ஆன பிறகும் கூட அவளால் அண்ணனையும் ஆத்தாளையும் போலத் துப்புரவாக வெறுத்து விட முடியவில்லை.

அவளுக்கு நல்லா ஞாபகம் - மாமனும் அத்தையும் வந்து தங்கராசு மச்சான் கலியாணத்துக்கு பத்திரிகை வச்சுட்டுப் போன பிறகு அண்ணன் வந்த வரத்து. இவளுக்கு பரிசம் போடத்தான் மாமனும் அத்தையும் வருவாகன்னு இருந்த போது வேற இடத்திலே பொண்ணையும் பாத்து பத்திரிகையும் வச்சிட்டு சும்மாவும் போகாம மாமா அண்ணங்கிட்டே ‘‘கலியாணத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்னக்கூட்டியே வந்திரணும்பா. கோமதி கலியாணத்தை முடிச்சு வச்ச மாதிரி எல்லா வேலைகளையும் பொறுப்பா இருந்து நீ தான் பாத்துக்கணுமாப்பா’’ என்று வேறு சொல்லி விட்டுப் போனார். அவுக அங்கிட்டுப் போகவும் ஆத்தாளிடம் வந்து அண்ணன் ‘தங்கு தங் கென்று குதித்தான்- என்னய என்ன சுத்தக் கேணப்பயன்னு நெனச்சுட்டாகளா என்று. கோமதி கலியாணத்துக்க எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டு கொண்டு அண்ணன் செய்தான்னு சொன்னா அது நாளக்கி நம்ம தங்கச்சி வந்து வாழப் போற வீடு. நாம வந்து ஒத்தாசை செய்யாட்ட யாரு செய்வா என்று நினைத்து செய்தது. ஆனா இப்படி

நகை நட்டுக்கு ஆசைப்பட்டு மாமா அந்நியத்திலே போவாகன்னு யாரு கண்டது. என்ன மாமனும் மச்சானும் மயிராண்டிக என்று வெறுத்து விட்டது அவனுக்கு.

ஆனால் ஆத்தா முதலில் அண்ணன் ஏறிக்கொண்டு பேசிய போது பதிலுக்கு கூப்பாடு போட்டாள். என்னடா குதிக்கே. படிச்சு உத்தியோகம் பாக்குற மாப்பிளை தீப்பெட்டியாபீசுக்கு போயிட்டு வந்து வீச்சு மெடுத்துப் போயிக் கெடக்குற கழுதயக் கட்டு வான்னு நீ நெனச்சுக்கிட்டா அவுக என்னடா செய்வாக என்று ஆத்திரமாகப் பேசினாள். அப்படி அப்போதைக்குப் பேசினாலும் அன்னக்கு ராத்திரி செத்துப்போன அய்யாவிடம் முறையீடு செய்து சத்தம் போட்டு ஒப்பாரி வைத்தாள். ‘‘ஏ...என் ராசாவே...என்ன ஆண்டாரே இப்படி விட்டுப் போனீரே.. மணவடையிலே வந்து முறை மாப்பிளை நானிருக்க எவன் இவ கழுத்தில் தாலி கட்டுவான்னு சொல்லி என்னச் சிறையெடுத்து வந்தீரே... இப்படி நிர்க்கதியா நிக்க விடவா சிறையெடுத்தீர் ஐயாவே..தம்பீ...தம்பீன்னு பே கொண்டு போயி அலைஞ்சேனே... அவனைத் தூக்கி வளத்தேனே... என் ராசாவே எனக்குப் பூமியிலே ஆருமில்லாமப் போயிட்டாளே...

பக்கத்துப் பொம்பிளைகளெல்லாம் வைத்தார்கள். ‘‘என்ன இவளும் பொம்பளதான... அப்பயும் இப்படியா ஒப்பாரி வச்சு அழுவாக’’ என்று அண்ணன் வந்து பிறகு இப்பம் நீ சும்மாருக்கியா என்ன வேணுங்கு’’ என்று அரட்டவும் தான் ஒப்பாரியை நிப்பாட்டினாள்.

மறுநாள் அண்ணன், ‘‘தங்கராசு கலியாணதுக்கு ஒருத்தரும் போகப்புடாது’’ ன்னு சொன்னபோது மறு பேச்சுப் பேசாமல் ஆத்தாளும் சரியென்று சொல்லி விட்டாள். அவனுக்கும் நமக்கும் இனிமே என்ன இருக்கு என்று சொல்லிவிட்டாள்.

ஆனால் மாரியம்மா அப்படியெல்லாம் ஆகவிட வில்லை. பலவாறு அண்ணனிடமும் ஆத்தாளிடமும் சொல்லிப் பார்த்தாள். ஒன்றும் மசியாமல் போக, கடைசியில் ‘நீங்க யாரும் மச்சான் கலியாணதுக்கு போகலைன்னா நான் நாண்டுக்கிட்டுச் செத்துருவேன்’ என்று ஒரு போடு போட்டதும் சரியென்று அண்ணன் மட்டும் கலியாணத்துக்குப் போய் வந்தான். எம்புட்டோ கேட்டுப் பாத்தும் கலியாணச் சேதி எதையும் அவன் மாரியம்மாளுக்கோ ஆத்தாளுக்கோ சொல்லவில்லை. எல்லாம் முடிஞ்சு என்பதோடு நிறுத்திக் கொண்டான். தன் பிரியமான மச்சானின் கல்யாணம் எப்படியெல்லாம் நடந்திருக்கும் என்று மாரியம்மாள் தினமும் பலவாறாக தீப்பெட்டி ஒட்டியபடிக்கே நினைத்து நினைத்துப் பார்ப்பாள் எங்கிட்டு இருந்தாலும் நல்லாருக்கட்டும் என்று கண் நிறைய - மனசு துடிக்க வேண்டிக் கொள்வாள்.

தங்கராசு கலியாணத்துக்க போய் விட்டு வந்த அண்ணன் சும்மா இருக்கவில்லை. அலைஞ்சு பெறக்கி இவளுக்கு மாவில்பட்டியிலேயே அய்யா வழியில் சொந்தமான பையனை மாப்பிள்ளை பார்த்து விட்டான். சின்ன வயசிலே நாகலாபுரத்து நாடார் ஒருத்தர் கடையில் சம்பளத்துக்கு இருக்க மெட்ராசுக்குப் போய்வந்த பையன். மாரியம்மாளோட நாலு புவுன் நகையை வித்து மாவில்பட்டியிலேயே ஒரு கடையையும் வைத்துக் கொடுத்து விட்டான்.

இத்தனைக்குப் பிறகும் கோயில் கொடைக்கு மச்சான் வந்திருக்காகன்னு தெரிஞ்சதும் உடனே பாக்கணுமின்னு ஓடியாந்துட்டா. அவுக எப்படி இருக்காக அந்த அக்கா எப்படி இருக்காக. மச்சானும் அந்த அக்காளும் நல்லா பிரியமா இருக்காகளான்னு பார்க்கனும் அவளுக்கு.

ஆனா வந்த உடனேயே மச்சானையும் அந்த அக்காளையும் பார்க்க கிளம்பியவிடவில்லை, மத்தியான நேரம். சாப்புட்டு சித்த கண்ணசந்திருப்பாக என்று இருந்துவிட்டு சாயந்திரமாக போனாள்.

கட்டிலில் படுத்தவாக்கில் பாட்டையாவுடன் பேசிக் கொண்டிருந்தாக மச்சான் ‘‘கும்புடுரேன் மச்சான்’’ என்று மனசு படபடக்க சொல்லிவிட்டு உள்ளே போனாள். தங்கராசின் அப்பத்தாளும் அந்த அக்காளும் அடுப்படியில் வேலையாக இருந்தார்கள. பொன்னாத்தா இவளை பிரியத்துடன் வரவேற்றாள். அந்த அக்கா ரொம்ப லட்சணமாக இருந்தார்கள். நகை நட்டு ரொம்ப போட்டருப்பாகன்னு பாத்தா அப்படி ஒண்ணும் காணம். கழட்டி வச்சிருப்பாக என்று நினைத்துக் கொண்டாள். ரொம்ப பிரியம் நிறைந்த பார்வையுடன் அந்த அக்காளுடன் வாஞ்சையோடு பேசினாள் மாரியம்மா. பேசிக்கிட்டிருங்க இந்தாவாரேன்னு பொன்னாத்தா கடைக்கு ஏதோ வாங்க போகவும் மாரியம்மா அந்த அக்காளிடம் இன்னும் நெருங்கிகிட்ட உட்கார்ந்து கொண்டு கைகளை பாசத்துடன் பற்றிக் கொண்டாள். ரகசியமான - அதே சமயம் - ரொம்ப பிரியம் பொங்கிய குரலில் யக்கா.. மாசமாயிருக்கிகளா’’. என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

பட்டென்று அந்த அக்கா ஒரு நொடிப்புடன் ‘‘ஆம அது ஒண்ணுக்குத்தான் கேடு இப்பம்’’ என்று சொல்லி விட்டாள். மரியம்மாளுக்குத் தாங்க முடியவில்லை. அதைச் சொல்லும் போது லேசான சிரிப்புடன்தான் அந்த அக்கா சொன்னாலும் அந்த வார்த்தைகளில் ஏறியிருந்த வெறுப்பும் சூடும் அவளால் தாங்க முடியாததாக, இதுநாள் வரையிலும் அவள் கண்டிராததாக இருந்தது. ஒரு ஏனத்தைக் கழுவுகிற சாக்கில் வீட்டின் பின்புறம் போய் உடைந்து வருகிற மனசை அடக்கிக் கொண்டாள். உள்ளே மச்சான் அவுக பேச்சு குரல் கேட்டது. ‘‘மாரியம்மா போயிட்டாளா’’ என்று உள்ளே வந்த

மச்சான் அந்த அக்காளிடம் ‘‘காப்பி குடிச்சிட்டியா ஜானு’’ என்று பிரியமாகக் கேட்டதும் படக்குன்னு அந்த அக்கா ஆஹாககா.. ரொம்பவும் அக்கறைப்பட்டுக் குப்புற விழுந்துறாதிக... என்று சொல்லி விட்டது. ரொம்ப மெதுவான தொண்டையிலே பேசினாலும். அந்தக் குரல் இறுகிப்போய் வெறுப்பில் வெந்து கொதிக்கிறதாய் இருந்தது.

வெளியே நின்றிருந்த மாரியம்மாளுக்கு தலையை வலிக்கிற மாதிரியும் காய்ச்சல் வர்ற மாதிரியும் படபடன்னு வந்தது. கழுவின ஏனத்தை அப்படியே வைத்து விட்டு பின்புறமாகவே விறுவிறுவென்று வீட்டுக்கு வந்து படுத்துக் கொண்டாள்.

ஆத்தாளும் அண்ணனும் கேட்டதுக்கு மண்டையடிக்கி என்று சொல்லிவிட்டாள். சிறு வயதில் கள்ளிப்பழம் பிடுங்கப் போய் நேரங்கழித்து வரும் போது தேடி வந்த மாமாவிடம் மாட்டிக் கொண்டு முழித்த தங்கராசின் பாவமான முகம் நினைப்பில் வந்து உறுத்தினது. தண்ணியைத் தண்ணியைக் குடித்ததும் அடங்காமல் நெஞ்சு எரிகிற மாதிரியிருந்தது. அந்த அக்களின் நகைநட்டு குறையாகப் போட்டதுக்காக தங்கராசின் அம்மா ரொம்ப ரொம்ப கொடுமைப் படுத்துகிறாளாம் என்று சீனியாம்மா சொன்னதும் அந்த அக்காள் கொடும் வெறுப்பாகப் பேசினதும் நினைப்பில் வந்து இம்சைப்படுத்தியது.

எல்லாத்துக்கும் மேலே அந்த வார்த்தைகளின் வெறுப்பின் ஆழம், தாங்க முடியாத வேதனையை தந்தது. ராத்திரி ஊரோடு கோயில் வாசலில் பொங்கல் வைக்கப் போயிருந்த போது இவ மட்டும் படுத்தேகிடந்தாள். ஒவ்வொன்றாக சிறுவயதில் அவனோடு பழகினது அய்யாவைப்பத்தி - ஆத்தாளைப்பத்தி அண்ணனைப்பத்தி – எல்லோரும் பாடுகிற பாட்டைப்பத்தி அந்த அக்காளைப்பத்தி நினைக்ககூட பெருந்துன்பமாயிருந்தது. குமுறிக் கொண்டு வந்தது மனசு.

ராத்திரி நேரங்கழித்து அவ புருஷன் வந்தான். ரெண்டு நாளாய் நல்ல யேவாரம் என்றும் தேங்காய் மட்டுமே முப்பத்தி ரெண்டு காய் வித்திருக்கு என்றும் பொரிகடலை தான் கடைசியில் கேட்டவளுக்கு இல்லையென்று சொல்ல வேண்டியதாய்ப் போச்சு என்றும் உற்சாகமாக ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தான். திடீரென்ற இவள் ஏதுமே பேசாமல். ஊமையாக இருப்பதைக் கண்டு எரிச்சலடைந்து. ஏ நாயி நாம் பாட்டுக்க கத்திக்கிட்டிருக்கேன். நீ என்ன கல்லுக் கணக்கா இருக்கே என்று முடியைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கினான்.

உடனே அணை உடைத்து கொண்டு ஏங்கி அழ ஆரம்பித்தாள். அவன் உடனே பதறிப்போய் தெரியாமல் தலையைப் பிடித்து விட்டேன் என்று சொல்லி தப்புத்தான் என்று திரும்ப சொல்லி பார்த்தான். அவள் அழுகை நிற்கவில்லை மேலும் மேலும் ஏக்கமும் பெருச்சும் வெடிப்பும் நடுக்கமுமாய். அவள் அழுகை பெருகிக் கொண்டு வந்தது.

ஏதோ தான் பேசி விட்டதற்காகத்தான் அவள் இப்படி அழுகிறாள் என்று நினைத்துக் கொண்டு ரொம்ப நேரத்துக்கு அவளை வீணே தேற்றிக் கொண்டிருந்தான் அவன்.

சாம்பல் கிண்ணம்

தமயந்தி

கப்பென்று நிச்சலனம் கவிந்து கொண்டிருந்தது. யாருமற்ற மூச்சடைக்கும் சூழல் புகையாய்ப் படர்ந்திருந்தது. மூச்சுக் காற்று அவனுக்கே அந்நியமாகக் கேட்கத் தொடங்கியிருந்தது. அவ்வப்போது மின்னல்கள் வந்துபோயின. ஒரு வௌவாலின் விட்டுவிட்டுக் கேட்ட கோலமும் அது சிறகடித்துக் கடந்த சிறகோசையும் துல்லியமாகக் கேட்டன.

இவன் ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டான். புகையின் சூடு தொண்டையில் பரவி நெஞ்சுக்குள் படர்ந்து ஒரு நண்டின் பாய்ச்சலோடு வயிற்றுப் பிரதேசத்தில் எதிரொலித்தது. இவன் மெதுவாக புகையை வெளியே விட அது சுருள் சுருளாக இருட்டினுள் படர்ந்து விரிந்து சருங்கிற்று. இருளினுள் சிகரெட்டின் நுனி வெளிச்சத்தில் ஒரு புள்ளியைப் போன்ற நெருப்புத்துகளில் புகை சாம்பல் நிறத்தில் சுருண்டது. புவனாவின் விரியும் கண்கள் தன்னிச்சையாய் மனதில் படர்ந்தது. ‘‘நல்லாத்தான் சுருள்களை விடுறீங்க. ஆனா, சிகரெட் பிடிக்கறத விட்டுறுங்க’’ என்கிற போது விரியும் அவளது கண்களை நினைத்தபடி புகைப்பது சந்தோஷமாக இருந்தது.

தொடர்ச்சியாகவே கை தன்னிச்சையாகப் பாக்கெட்டை நெருடியது. கொஞ்சம் மேடிட்டிருந்த பகுதியினுள் மடக்கப்பட்டிருந்த பொட்டலம் குறித்த இன்னும் தெளிவான தீர்மானத்திற்கு இவன் வராதது போலவே தோன்றிற்று. நேற்றும் இது போலவே இதே இடத்தில் உட்கார்ந்து இதே போல் கைகள் பாக்கெட்டைத் தடவ புகைபிடித்து

நினைவுக்கு வந்தது. நேற்று மூன்று முறை கந்தசாமி ஆளை விட்டிருந்தாய் எதிர்வீட்டு அனந்தகிருஷ்ணன் இரவு அறைக்குள் நுழையும்போது சொன்னார். ராமச்சந்திர ஐயர் நேற்று கூறியதை நம்பியது இன்றும் நேற்றைப் போலவே பொட்டலம் சுமந்த உடையோடு உட்கார்ந்திருக்க வைத்து விட்டதை நினைக்கும்போது சலிப்பாயிருந்தது. ‘‘நான் ஏற்பாடு பண்ணித் தர்றேன் வெங்கடேஷ். முதல்லயே எங்கிட்ட கேட்டிருக்கலாமே. சங்கர் குடும்பமே ∴பிராட். அவன நம்பியா வாங்கினே? கிரானைட் பிஸ்னஸ் உனக்கெதுக்கு? வாத்தியார் வீட்டுப் புள்ள நீ?’’ கைகளைப் பிடித்துக் கொண்டு அவர் பேசியபோது அவர் மேல் அசாத்திய நம்பிக்கை ஏற்பட்டது. மறுநாள் விடியற்காலை புதிதாக விடியப் போவது போல் தோன்றிற்று. ஒருவிதமான விடுதலையுணர்வு அறைக்கு நடந்து போகும் வழியெங்கும் ஆக்ரமிக்க வெதுநேர யோசனைக்குப் பிறகு நேற்று இரவு பொட்டலத்தை ஜன்னல் வழியே வெளியே எறிந்தான்.

காலையில் வெளியே வரும்போது அனந்தகிருஷ்ணன், ‘‘வெங்கடேஷ் வெளிய போறியா? நானும் இருக்க மாட்டேன். கந்தசாமி ஆளுங்க வந்தா ஏதும் சொல்லணும்னா வசந்தாட்ட சொல்லிட்டுப் போயிறு, என்றவர் பக்கத்தில் வந்து, என் வொய்∴ப் கொலைல சம்பந்தப்பட்டவன போலீஸ் பிடிச்சிட்டாங்க. பக்கத்து வீட்டுப் பையன்தான். கஞ்சா வழக்குல கைதானவனுக்கு இதுலயும் சம்பந்தமிருக்கிறதா இன்ஸ்பெக்டர் ∴போன் பண்ணினார். போயி அந்த இன்ஸ்பெக்டருக்கு சம்திங் கொடுத்தா தானே சரியாக ∴ப்ரோசீட் பண்ணுவாங்க. வசந்தாவுக்குத் தெரிய வேணாம் என்கிறார் கிசுகிசுப்பாய். ‘‘இன்னிக்கு அநேகமா பணம் கெடைச்சிறும் சார். கொடுத்துறுவேன்’’ என்று பதில் சொன்னது மனசுள் வேதனைக்கீற்றாய் ஓடியது. ஐயர் அவ்வளவு நம்பிக்கையூட்டும் அளவில் பேசி காலையில் கையை ஒரு பெரிய கால்வாய் அளவிற்கு விரித்து விடுவார் என்று எதிர்பார்க்கவில்லை.

வாழ்வின் சகல திசைகளிலும் நம்பிக்கைகள் ஒவ்வொன்றாய் இற்று சிதைந்து போவதன் கொடூரம் தாங்க முடியாததாக இருந்தது. எம் பையன் எங்கப் போனான்னு தெரியலை என்று சங்கரின் அம்மா அழுததிலிருந்த செயற்கைத்தனத்தை விடவும் வட்டிக்கு வாங்கும்போது சங்கர் கொடுத்த வாக்குறுதிகளும் நம்பிக்கைகளும் குரூரமாகத் தோன்றிற்று. ஐயரும் நேற்று அவ்வளவு நம்பிக்கையூட்டும் அளவிற்குப் பேசியிருக்க வேண்டாம் என்று நினைத்தபடி இவன் சிகரெட் சாம்பலை மணலில்

தட்டினான். தூரத்தில் ஒரு லாரி வந்து நிற்பது தெரிந்தது. நாளை வேறொரு லாரி இவன் இப்போது உட்கார்ந்திருக்கும் இடத்தில் வந்து நின்று இவன் இன்று தட்டிய சிகரெட் சாம்பலின் தடங்களோடு மணல் அள்ளப்படலாம் என்ற திடீரென்று தோன்ற உள்ளுக்குள் அயர்வும் துயரமும் கூடின. ஏதோ ஒன்று குப்பென்று பரவி உடலெங்கும் ஆக்ரமித்தது.

வெங்கடேஷ் எழுந்து மெல்ல நடக்கத் தொடங்கினான். வழியில் பழக்கமான ஹோட்டலில் மூன்று சப்பாத்தியும் குருமாவும் வாங்கிக் கொண்டான். அறைக்கு கந்தசாமியின் ஆட்கள் வந்து தேடிப் போயிருக்கலாம். அனந்தகிருஷ்ணன் இல்லாத நேரங்களில் வசந்தா கரடுமுரடாய் அவர்களிடம் பதில் சொல்லியிருக்கலாம். அனந்தகிருஷ்ணன் இறந்துபோன மனைவிக்காக அதிகமான பிரயத்தனங்கள் எடுத்ததில் பணம் கரைவது வசந்தாவுக்கு ஆரம்பக் காலங்கள் முதலேயே எரிச்சலும் வெறுப்புமிருந்தது. மாந்தரீகத்தாலோ பொடி வைத்துப் பார்த்தாலோ, ப்ரைவேட் டிடெக்டிவ்வாலோ இறந்து போன உயிரைத் திரும்பக் கொண்டு வர முடியாது என்றும் அதற்காக பிசாசு போல் பணத்தை இழப்பது சரியல்ல என்றும் சில சமயங்களில் அவள் இரைவது மேலே அறை வரை கேட்கும்.

என்ன செய்றது வெங்கடேஷ்? அவளை நான் அளவுக்கதிகமா நேசிச்சிருக்கேன். அவ போன பிறகு தான் எனக்கே அது தெரியறாப்ல இருக்கு என்றார் அனந்தகிருஷ்ணன் ஒரு நாளிரவு சிகரெட் புகைத்தபடி. சுிகரெட் சாம்பலை பேசினபடியே வெகுலாவகமாக உள்ளங்கையில் தட்டிக் கொண்டார். அவ்வப்போது பேச்சின் இடைவெளியில் அந்தச் சாம்பலை வாயால் ஊதி விசிறிவிட்டார். அவர் அவ்வாறு புகைப்பது வேடிக்கையாக இருந்தது. ஆஷ்ட்ரே எடுத்து வரவா சார் என்று கேட்டான் இவன் பச் என்று உதடுகளை விரிந்தபோது சாம்பல் துகள் பறந்ததில் அவர் இருமத் தொடங்கினார். இல்லாத ஒருத்திக்காக அதிகமான சிரமங்களை அவர் மேற்கொள்கிறாரே என்று தோன்றிறறு. புவனாகூட கொஞ்சநாள் கழித்து வேறு யாரையாவது திருமணம் செய்யக்கூடும் என்கிற நினைவுமெழுந்தது. மரணம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முகத்தைக் காட்டிப் போவது போலிருந்தது. என்றாலும் அது இறப்பவர்களுக்கு எத்தகைய விடுதலையைத் தருகிறது என்று அறுதியிட்டுச் சொல்ல இயலாதென்று தோன்றிற்று. நேற்றே கூட ஜன்னல் எலிப்பாஷணத்தை எறிந்திருக்க வேண்டாமெனத் தோன்றிற்று. கடைக்காரனும் சந்தேகத்துடன் இன்று

மறுபடி பொட்டலத்தை எடுத்துக் கொடுத்தபடி, நேற்று தானே வாங்கிப் போனீங்க? என்றான்.

''எலி தொந்தரவு அதிகம் சார்'' என்றான் இவன்.

''பூனை வளருங்க சார்'' என்றான் அவன் பதிலுக்கு. வெள்ளை வெளேரென அவன் அணிந்திருந்த சட்டை நினைவுக்கு வந்தது. வீட்டுத் திண்ணையில் அனந்தகிருஷ்ணன் உட்கார்ந்திருந்தது தெரிந்தது. ஒரு துண்டை விசிறிமடியப்பாய் மடித்து, நீளவாட்டில் கழுத்துக்குக் குறுக்காய் போட்டிருந்தான். இருட்டினுள் இவரது பிம்பம் ஒரு சிலையை ஒத்திருந்தது. இவனை அடையாளங் கண்டவராய் இப்பத்தான் வர்றியா என்றார். இவன் வெறுமனே தலையசைத்து மேலே ஏறத் தொடங்கினான். யாரும் வந்தார்களா என்று கேட்க நினைத்து உடனே வேண்டாம் என்று தீர்மானித்தான். மேலே அறை இருட்டாய்க் கிடந்தது. உள்ளே போய் கடைசியாகத் தாழிட்டுக் கொள்ளும் கணம் உயிரை உலுக்குவதாக இருந்தது. நாளைக்கு வேறு யாராவது திறக்ககூடும். ஆனந்தகிருஷ்ணன் அல்லது அவரது மகன். அல்லது வேறு யாராவது. அல்லது போலீஸ். இவனுக்குக் கால்கள் தளர்கிறாற் போலிருந்தது.

சிகரெட் வச்சிருக்கியா என்றார் அனந்தகிருஷ்ணன். கடைசி சிகரெட்டை மணலில் உட்கார்ந்தபடி புகைத்து நினைவுக்கு வந்தது. இவன் இல்லையே என்றான். ''பரவால்ல பரவால்ல'' என்றார் அவர். அவருக்கு சிகரெட் வாங்கிக் கொடுக்க வேண்டும் போலிருந்தது. ''ஒரு நிமிஷம் சா'' என்றபடி உணவுப் பொட்டலத்தைக் திண்ணையில் வைத்து விட்டு நடந்தான். தெருவோரத்தில் ஒரே ஒரு பெட்டிக்கடை திறந்திருந்தது. ''இரண்டு'' என்று சொல்ல வந்ததை மாற்றி ஒண்ணு போதும் என்றான். மற்றொன்று தனக்குத் தேவைப்படாது என்று தோன்றும் போது உடல் அதிர்ந்தது. காலைக் கடன்கள் நிமித்தம் ஒரு சிகரெட் அவனது அத்தியாவசியத் தேவை. அதுவும் இனி தேவையாயிருக்காது என்று நினைக்கையில் இயலாமையின் உணர்வு மனதெங்கும் வியாபித்து. மரணம் ஒரு சம்பவம் போல, ஒரு விருந்தாளி போல வந்து போவது வாழ்க்கையின் கட்டாயமோ என்று சந்தேகமேற்பட்டது.

அனந்தகிருஷ்ணன் அவனைப் பார்த்ததும் ரொம்ப சிரமப் படுத்திட்டேனோ? என்றார் சாப்பிடணும் சார் என்றான் இவன். எப்போதும்போல் சிகரெட்டின் சாம்பலை உள்ளங்கையில் அவர் தட்டியபோது சாம்பலோடு சேர்த்து தீத்துகளும்

உள்ளங்கையில் விழுந்தன. ‘‘ஸ்ஸ்’’ என்றபடி உள்ளங்கையில் மூச்சுக்காற்றை ஊதினபடி பெருமூச்சு விட்டார். இன்னிக்கு பிரச்சனையாயிடுச்சு வெங்கடேஷ். வசந்தா கத்தக் கத்த எம் பையன் அமைதியாப் பார்க்கறப்ப சீக்கிரமா போய் சேர்ந்துடணும்னு தோணுது என்றார் இவன் கைகளைப் பிடித்தபடி. இவன் உள்ளங்கையில் சாம்பல் துகள்கள் ஒட்டிக் கொண்டன. அவருக்கு என்ன பதில் சொல்ல வேண்டும் என்று புலப்படாத இடைவெளியில் மௌனம் இவனை ஆட்கொண்டது. ‘‘நீ போய் சாப்பிடு வெங்கடேஷ்’’ என்றவர் ஒரு நிமிடம் நிதானித்து குட்நைட் என்றார்.

‘‘குட்நைட்’’ என்றான் இவனும்.

வக்கிரம்

பாவண்ணன்

‘‘சந்தத் தோப்புக்கு எப்படிப் போவணும்?’’ என்று கேட்பவர்களுக்கு ஒரு சின்னப்பிள்ளைக் கூட வழி காட்டிவிடும். ஊருக்குக் கிழக்கே தள்ளி இருக்கிறது அது. புதுசாகப் பார்க்கிற வெளியூர்க்காரன் ‘‘ஆயிரம் மாடுகள் கொண்டாந்து கட்டலாம் போலிருக்குதே’’ என்று மூக்கில் விரல் வைத்து விடுவான். அவ்வளவு விஸ்தாரம். அவ்வளவு மரங்கள் தோப்பைச் சுற்றிச் சின்னச் சின்ன ஒற்றையடிப் பாதைகள் நீள்கின்றன. ஒரு பாதை சின்னபாபு சமுத்திரம் ரயில்வே ஸ்டேஷன் வரைக்கும்போகிறது. பாண்டிச் சேரிக்குக் கூட குறுக்குப்பாதை ஓடுகிறது. நிலா உச்சியில் இருக்கும்போது மாடுகளை ஓட்டிக் கொண்டு கிளம்பினால் விடிய விடிய பாண்டிச்சேரிக்கு போய்ச் சேரமுடியும். தோப்பின் முகம் சாலையைப் பார்த்தபடி இருக்கிறது. தோப்பின் இடதுகைப் பக்கத்தில் ஆறாம் நெம்பர் சாராயக்கடை.

காலையிலேயே கடை திறக்கப்பட்டு விடும். கடையில் இருக்கும் டேப்ரிக்கார்டரில் போனால் போகட்டும் போடா பாட்டு பாடும். சுலபமாக மனசில் விரக்தியை விதைக்கும் வரிகளும் இசையும் காற்றில் கரைந்தெழும். அதற்கு

இசைவாகத் தலையாட்டித்தன் ரசனையைத் தெரிவித்தபடி சாலையோரம் சிலர் உட்கார்ந்திருப்பார்கள். வேட்டிகளை உயர்த்தி முக்காடு போட்டிருக்கும் கோலம் காணத் தவறாத சித்திரம். அவர்களின் வாய்களில் சுருட்டுகள் புகையும். ஏழரை மணிக்கெல்லாம் ஒற்றையடிப் கொம்புகளில் கட்டிய சலங்கைக் கொத்தின் சத்தம் மரங்களில் மோதி எதிரொலிக்கும். எட்டு எட்டரைக்கெல்லாம் நிறைய மாடுகள் குவிந்துவிடும். அதைத் தவிர ஆடுகள், கோழிகள், குஞ்சுகள், கலவையான அவற்றின் சத்தத்தில் சந்தை கலகலக்கும். வைக்கோற் சுருணைகளும் புல்கட்டுகளும் வண்டிகளிலும் டிரக்குகளிலும் வந்து நிற்கும். சந்தையின் முதல் விற்பனைப் பண்டம் கட்டுகள் கைமாறி மாடுகளின் முன் விழுந்ததும் அவை தின்று இளைப்பாறும். துண்டு போட்ட தரகர்கள் புகுந்து புகுந்து வருவார்கள்.

மெல்ல மெல்ல குலுங்கி வரும் பெட்டி வண்டிகளில் வியாபாரப் பொருள்கள் வந்து குவிகின்றன. ஒவ்வொரு மரத்தடியும் ஒவ்வொரு கடையாகி விடுகிறது. தற்காலிகமாய்க் கொம்பு ஊன்றிக் சாக்குப்படுதா கட்டிப் பந்தல்கள் தயாராகின்றன. அவற்றிற்குள் கூடைகள், மூட்டைகள், தட்டுகள், அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய், பழக்குலைகள் ஏற்றிய வண்டியுடன் வந்தவன் ஏலத்திற்கு அழைக்கும் குரல்கள் எழுகின்றன. ‘‘வந்துட்டான்டி வளவனுர்க்காரன் குடி கெடுக்கிறதுக்கு’’ சில்லறை வியாபாரப் பெண்களின் செல்ல முணுமுணுப்புகள் ஆரவாரத்தில் கரைந்த இடம் தெரியாது போகின்றன. கீரைகள், தயிர், பனஞ்சாறு சுமந்த கூடைக்காரப் பெண்கள் ஒற்றையடிப்பாதைகளில் வந்து சேர்கிறார்கள். மரங்களில் மார்புகளில் செதுக்கப்பட்ட கட்சி சின்னங்களை அதன் அபிமானிகள் தொட்டுத் தொட்டுப் பூரிக்கிறார்கள். எளிய பேச்சாகத் தொடங்கும் அவர்களின் விவாதங்கள் கிண்டலின் எல்லையைத் தாண்டித் தாண்டி நீள்கின்றன. என்ன குரல்வளம்! என்ன ஞாபகசக்தி! எத்தனையோ நுணுக்கமான புள்ளி விவரங்கள்! பல பழைய சம்பவங்கள் அனைத்தும் பெருமிதம் தொனிக்கச் சுலபமாக உதிர்கின்றன. ஒளிரும் அவர்களின் விழிகளில் பக்தியின் வெளிச்சம் மின்னுகிறது.

அலிகளின் கோஷ்டி தாமதமாக வந்து சேர்கிறது. பல நிறங்களில் அவர்கள் புடவை கட்டி இருக்கிறார்கள். சுத்தமாக மழித்த முகங்கள். காதுகளில் தொங்கும் முத்துகள் முறையாய் வகிடெடுத்துப் பின்னப்பட்ட கூந்தல். அச்சு அசல் பெண்களைப் போலவே வருகிறார்கள். தடித்த முரட்டுத்தனத்துடன் இறங்கும் இடுப்புகள் மட்டுமே

பால் பற்றிய சந்தேகத்தை எழுப்புகின்றன. அவர்கள் வரும் போதே அவர்களைச் சுற்றி கூட்டம் சேர்ந்து கொண்டிருக்கிறது. இளைஞர்கள், சிறுவர்கள், மாடுவிற்க வந்த சம்சாரிகள் எட்டிப் பார்க்கிறார்கள். வியாபாரிகளின் முகங்களும் கூட அங்கங்கே தெரிகின்றன. சகலரின் கவனங்களையும் அந்த அலிகள் ஈர்த்தபடி இருக்கிறார்கள். ஒயிலாக கும்மிப் பாட்டு தம்மேல் விழும் கிண்டல்களுக்கு அவர்கள் கொடுக்கிற இடம். ஈக்கூட்டம் போல ஜனங்கள் அவர்களை மொய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆள் கூட்டத்தைப் பற்றி கவலையே இன்றி அவர்கள் நிதானமாக வருகிறார்கள். வழக்கமாய் அவர்கள் உட்காரும் மேடையை நெருங்கும்போது எங்கோ ஒரு விசில் சத்தம் எழுகிறது. உடனே பத்து நூறு விசில் சத்தம். முகத்தில் படரும் நாணத்தை அவர்கள் மறைத்துக் கொள்கிறார்கள். ஒருத்தி மட்டும் முந்தானையால் முகத்தை ஒத்தி எடுக்கிறாள். மேடையில் வட்டமாய்ச் சேர்ந்து கண்களாலேயே ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிறார்கள். பின்னலை முதுகுப்பக்கம் விசிறிவிட்டு முந்தானையை இழுத்துச் செருகித் தயாராகிறார்கள். வயசில் மூத்தவளாயத் தெரிந்த ஒருத்தி பாட்டின் முதல் வரியை ஆரம்பிக்கிறாள். உடனே ஆட்டம் தொடங்குகிறது. கருத்த பாதங்கள் அளவாக எழுந்து துள்ளுகின்றன. சலங்கைச் சத்தத்தின் தாளம் பொருத்தமாக ஒலிக்கிறது. ஆதே கணம் அவர்கள் கைகள் மின்னலாய் உயர்ந்து கும்மி அடிக்கின்றன. ஒருவரி பாட்டு ஒருபாதம் எடுப்பு, தாளம், கும்மி, இயக்கம் மெல்ல மெல்லச் சீராக உயர்கிறது. அவர்களின் ஒவ்வொரு அசைவையும் இளைஞர்கள் உன்னிப்பாய்க் கவனித்து ரசிக்கிறார்கள் கைதட்டி உற்சாகப் படுத்துகிறார்கள். இரண்டாம் சுற்று ஆட்டத்தில் சுதி சேந்து விட்டது. மேடையிலிருந்து சமுக்காளத்தை நோக்கிச் சில்லறைகளை விசிறுகிறார்கள் ஆண்கள்.

ராகங்களை மாற்றி மாற்றிப் புதுப் பாடல்களைப் பாடுகிறார்கள் அவர்கள். அதற்கத் தகுந்த மாதிரி ஆட்டங்களும் அசைவுகளும் மாறுகின்றன. சுழன்று சுழன்று மேடையில் அவர்கள் வரும் போதெல்லாம் ஆரவாரம் உயர்கிறது. ஆவர்களுக்குச் சிறகு முளைத்து வானத்தில் பறந்தபடி மிதப்பதுபோல் இருக்கிறது. அந்த இளைஞர்களின் உற்சாகக் குரலுக்கு ஏற்றபடி ஆட்டத்தின் வேகம் ஏறுகிறது. பாதங்களைச் சுழற்றிச் சுழற்றி அவர்களைக் கிறங்க அடிக்கிறார்கள். புளியமர மேடையில் எழுந்த ஆரவாரம் சந்தைக் தோப்பை கலக்குகிறது. மூலையில் இருக்கிறவர்கள் கூட ஒருமுறை வந்து பார்த்துவிட்டுச் செல்லத் துடிக்கிறார்கள்.

மோர்க்காரக் கிழவிகளும் பனஞ்சாறு விற்கும் பெண்களும் தோப்புக்குள் புகுந்து வருகிறார்கள். சூடேறும் வெயிலில் அலகைிறவர்கள் இவர்களிடம் வாங்கிக் குடிக்கிறார்கள். அங்கங்கே கூடைகளை இறக்கி விட்டு மீண்டும் தூக்கிக் கொள்கிறார்கள். கூடை சுமந்த இடுப்பின் வடு வெயிலில் மின்னுகிறது. அலைச்சலில் புறங்கழுத்தில் வேர்வை வழிகிறது. நடந்த வாக்கில் முந்தானையைச் சுற்றித் துடைத்துக் கொள்கிறார்கள். எந்த மாடு எந்தப்பக்கம் திரும்பும் என்று கணிக்க முடியவில்லை. அக்கம் பக்கம் பார்த்து நடக்க வேண்டி இருக்கிறது.

மேடையில் விழுந்த சில்லறைகளை யெல்லாம் ஒருத்தி குனிந்து எடுத்துக் கொள்கிறாள். பிறகு அங்கிருந்து கடைகளைப் பார்த்து நடக்கிறார்கள். பின்னாலேயே சிலர் பைத்தியம் பிடித்த மாதிரி தெடர்ந்து செல்கிறார்கள். வெறி முற்றிய வேகம். சுயநினைவே இல்லை செலுத்தப்பட்டவர்கள் போல அவர்கள் பின்னாலேயே செல்கிறார்கள். ‘‘என்ன மொதலாளி சௌக்கியாமா?’’ என்று கடைக்காரர்களிடம் அவர்கள் அபிநயிக்கும் போது இளைஞர்களும் திரும்பிச் சொல்லிச் சந்தோஷப் படுகிறார்கள். ‘‘கண்டுக்கவே மாட்டேங்கறியே மொதலாளி’’ என்று அவர்கள் உதட்டைச் சுழித்துத் தோளைக் குலுக்கும்போது ஓவென்று கூறுகிறார்கள். சில்லறைகளோடு அவர்கள் அடுத்த கேடையை நோக்கி நடக்கும் போது பின்பக்க வளைவுகளில் சொக்கிப் போகிறார்கள்.

‘‘அந்த ஆட்டத்தைப் பாருடா மச்சான் என்னமா குலுக்கறா’’ என்கிறான் கூட்டத்தில் ஒருவன். அவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். லுங்கியைத் தொடைவரைக்கும் உயர்த்திக் கட்டி இருக்கிறான். கருத்த முடிச்சுருளின் அடர்த்தியில் அவன் விரல்கள் அடிக்கடி தஞ்சம் புகுகினறன. அவனுடைய பார்வை அவர்கள் மீதே பதிந்திருக்கின்றன. கண்களில் நெறி துள்ளுகிறது.

‘‘ஆட்டத்தைப் பாக்காத மாமா. ஆளப்பாரு’’ பக்கத்தில் வந்தவன் சொல்கிறான். அவன் வாய் பிளந்திருக்கிறது.

‘‘பொண்ணாப் பொறந்ததுக்குக் கூட இவ்ளோ அழகு இல்ல. ஆண்டவன் இதுங்களுக்குப் போய் அள்ளிக் குடுத்திருக்கான் பாரு’’.

அவன் விரல்களிடையே சுருட்டு புதைந்து கொண்டிருக்கிறது. லேசான சாராய வீச்சம். அவன் வார்த்தைகளை அனைவரும் உடனே ஒத்துக்கொள்கிறார்கள். சுற்றி இருக்கிறவர்கள் ஓவென்று சிரிக்கிறார்கள். ஆங்காங்கே போய்க்கொண்டு இருக்கிறவர்கள் ஒருகணம் திரும்பிப் பாாத்துவிட்டுப் போகிறார்கள்.

ஒரு திருப்பத்தில் மோர் விற்றுக் கொண்டிருந்த கிழவியை நிறுத்தி அவர்கள் மோர் வாங்குகிறார்கள். அங்கேயே மரவேர்களில் இளைப்பாறுகிற மாதிரி உட்கார்ந்து மோர்த் தம்பளர்களில் இருந்து மெல்ல மெல்ல உறிஞ்சுகிறார்கள். அவர்கள் எதிரில் கிழவியும உட்கார்ந்து சுருக்குப்பையைத் திறந்து வெற்றிலைபாக்கு மடிக்கிறாள். கும்பலில் ஒருத்தி ஆர்வமாய்எழுந்து வந்து பையை இழுக்கிறாள். ‘‘அடி எஞ்சக்காளத்தி.. காசு குடுத்து வாங்க மாட்டியா?’’ என்று செல்லமாய்க் கோபிக்கிறாள் கிழவி. ‘‘என்ன ஆயா, ஒரு வாயி சுண்ணாம்புக்கு கூடவா பொறாம போய்ட்டன் நானு’’ என்று செல்லமாய்க் கிழவியின் கன்னத்தில் இடிக்கிறாள். அந்தக் கிழவி சிரித்தபடி பையை நீட்டுகிறாள். ஒருத்தியைத் தொடர்ந்து எல்லாரும் வெற்றிலை போடுகிறார்கள்.

‘‘இவ்ளோ பேரு இருக்கும், அந்தக் கிழவிக்கிட்ட போய் கொஞ்சறாளுங்க பார்றா’’ என்று லுங்கிக்காரன் அலுத்துக் கொள்கிறான். ‘‘கெழவி குடுத்து வச்சதுடா’’ என்று மீசைக்காரன் அங்கலாய்த்துக்கிறான். தொடர்ந்து ஒரு சிரிப்பலை எழுந்து ஓய்கிறது.

வெற்றிலைச் சக்கையைத் துப்பிவிட்டு அவர்கள் அந்த வேர் மீதே தம் சௌகரியப்படி உட்கர்ந்திருக்கிறார்கள். சற்றே தள்ளி அந்தக் கூட்டமும் உட்கார்ந்து விடகிறது. பீடிகளைப் பற்ற வைத்துக் கொள்கிறார்கள். எவனாவது எழுந்திருக்க முயலும்போது அவன் தோளை பிடித்த அழுத்தி உட்கார வைத்து விடுகிறான் பின்பக்கத்தில் இருப்பவன்.

சிறிது நேர ஆசுவாசத்திற்குப்பின் மீண்டும் அவர்கள் புறப்படுகிறார்கள். சூரியன் உச்சிக்கு வந்து விடுகிறது. சோர்வை மறைத்துச் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாக் கடைகளிலும் நாலு கும்மி அடித்து இரண்டுவரி பாடியதுமே சில்லறை விழுகிறது. ‘‘இன்னா ரெண்டு வாரமா ஆளயே காணோமே ஒரேயடியா போய்ட்டிங்களோன்னு நெனச்சிட்டனே. எதுக்கு இந்த ஆட்டம்

வா வந்து இங்க உக்காரு. சாயங்காலமா இருபது ரூப குடுத்துர்றன் ஆர்வத்தில் கடைக்காரன் பேச்சில் இளைஞர்களும் கலந்து கொள்கிறார்கள்.

மீண்டும் மேடைக்கே திரும்பி வந்து உட்கார்கிறார்கள் அலிகள். தொடர்ந்து அந்த லுங்கிக்ககாரன் கூட்டம் சிறிது தூரம் தள்ளி நிர்கிறது. ஆவன் சொன்னதையெல்லாம் செய்ய இரண்டு இளைஞர்கள் வலதம் இடதுமாக நின்றிருக்கிறார்கள். ஒருவன் ஓடிப்போய் மீன் துண்டுகளைச் சுடச்சுட வாங்கிவந்து கொடுக்கிறான். நடுமுள்ளைப் பதமாக விலக்கி அப்படியே மென்று தின்னுகிறான் லுங்கிக்காரன். எண்ணெய் கறையைத் தாளில் துடைத்துக் கசக்கி எறிகிறான். அவன் பார்வை அவர்கள் மீதே பதிந்து கிடக்கிறது. அவன்மெதுவாக அவர்கள் அருகே நடந்து செல்கிறான். டேய்..டேய் என்று தடுக்கிற கூட்டாளிகளை அவன் பொருட்படுத்தவில்லை. நிதானமாய் அவர்களில் இளையவளிடம் சென்று டவுசர் பையில் இருந்து இருபது ரூபாய்த் தாளை எடுத்து நீட்டி ஆடுமாறு சொல்கிறான். அவர்களுக்குப் பணத்தைப் பார்த்ததும் உற்சாகம் கிளம்புகிறது. எழுந்து வட்டமிட்டுக கும்மி அடிக்கிறார்கள். கூடவே லுங்கிக்காரனும் கூட்டாளிகளும் கைதட்டி ஆராவாரம் செய்கிறார்கள்

மோர் விற்று முடித்த கிழவிகளும் பெண்களும் அந்த மரத்தடிப் பக்கம் நிழலுக்கு ஒதுங்கி நிற்கிறார்கள். அவர்களும் அந்த ஆட்டத்தைப் பார்க்கத் தொடங்குகிறார்கள். என்னமோ, அவர்களுக்கு நெஞ்சு அடைக்கிறது. முகத்தைச் சுளித்துக் கொள்கிறார்கள்.

‘‘அண்ணே, ஆளு ரோஜா’ மாதிரி இல்ல?’’

உடனே சிரிப்பு.

‘‘அந்த இடுப்பப் பாருங்கடா முட்டாளுங்களா. அந்த வெட்டுக்கு என் ஆஸ்தியயே எழுதி வச்சிருவேன்.’’

மீண்டும் சிரிப்பு.

‘‘அண்ணே, எனக்கொரு சந்தேகம். இதுங்களாம் வயசுக்கு வருமா?’’ என்ற அப்பாவித்தனமாய்க் கேட்டுவிட்டுக் கண் சிமிட்டுகிறான் ஒருவன். உடனே கைதட்டல். எக்களிப்பு அடிவயிற்றிலிருந்து அடக்கமுடியாத சிரிப்பு எழுகிறது. உற்சாகத்தோடு மெல்ல மெல்ல அவர்களை நோக்கி முன்னேறுகிறார்கள். ஆடிக் கொண்டிருந்தவர்களின் முகம் போனபோக்கு சரியில்லை. நின்ற விடுகிறார்கள். அவர்கள் முகங்களில் முதன் முறைாகக் கலவரம் படிகிறது. அடிபட்ட வேதனை தெரிகிறது.

‘‘இன்னா நிறுத்திட்ட இருபது ரூபாய்க்கு இதுதான் ஆட்டமா இந்தா இன்னோர் இருபது.’’

கூட்டாளிகளைப் பார்த்துக் கண்சிமிட்டுகிறான் லுங்கிக்காரன். அவர்கள் காசைத் தொடவில்லை பின்வாங்குகிறார்கள்.

‘‘இருபது பத்தாதா அம்பது ஒணுமா?’’

மீண்டும் கண்சிமிட்டல் சிரிப்பு

அவர்கள் பின்வாங்கப் பின்வாங்க அந்த லுங்கிக்காரன் முன்னேறுகிறான். ‘‘நூறு தரட்டா எரநூறு... தரட்டா.. என்று பிதற்றுகிறான். பிறகு உடலைக் குலுக்கிக்கொண்டே ‘‘எங்கிட்ட இந்த வேலையெல்லாம் நடக்காது. காசு குடுக்கரன்ல. ஒழுங்கா ஆடினாதான் விடுவேன’’ என்கிறான். தொடர்ந்து இந்த லுங்கிகாரன் இளிச்சவாயன்னு நெனச்சிட்டயா. அது நடக்காது’’ என்கிறான். ‘‘அட வெக்கமா வயசுக்கு வந்திட்டாயா என்று சீண்டுகிறான். அவனுடைய ஒவ்வொரு வார்த்தைக்கு கும்பல் ஓவென்று இரைச்சலை எழுப்புகிறது. தனது தலைவனது செய்கைக்கு கைத்தட்டி வரவேற்கிறது. விசில் சத்தம் காதை கிழிக்கிறது.

‘‘இதெல்லாம் நல்லா இல்லிங்க, விட்டுருங்க’’ அனைவரும் கூடி அவனைத் தடுக்கிறார்கள். அவர்கள் பின்னால் ஒதுங்கிய இளையவனின் கண்கள் கலங்குகின்றன.

என்னடி நல்லா இல்லாம் என்னடி இல்ல’’ என்று லுங்கிக்காரன் கேட்கிறான். ‘‘நோட்ட வாங்கிச் சொருகும்போது வலிக்கலியா? ஆடுன்னு சொன்னா மட்டும் வலிக்குதா?’’ என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கத்துகிறான். ‘‘அட ஆடுங்கடின்னா சும்மா அலட்டிக்கறிங்களே’’ என்று சட்டென இளையவளின் நெஞ்சைத் தொட்டு அழுத்திப் பணத்தைச் செருகுகிறான். கைதட்டலும் விசிலும் உச்சத்தை அடைகிறது.

திடீரென மோர்க்காரக்கிழவி மேடையில் ஏறுகிறாள்.

‘‘இன்னாடா.. சங்கமாங்கி.. ஆடுன்னா ஆடறதுக்கு நீ வச்ச ஆளாடா அவுங்க’’ என்று அவள் குரல் உயர்கிறது. லுங்கிகாரன் இந்தத் தாக்குதலைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ‘‘மார்ல கைவச்சிப் பேசற அளவுக்கு ஆயிடுச்சா.. என் சாண்டா குடிச்சவனே, போடா போய் ஒங்காத்தா மார்ல கைவச்சி ஆடச் சொல்லுடா இல்லன்னா ஒங்கக்கா மார்ல கைவச்சி ஆடச் சொல்லு’’ என்று கை நீட்டிச் சொல்கிறான். ‘‘என்னமோ ரெண்டுங்கெட்டானுங்க நாலு ஆட்டம் ஆடி ரெண்டு காசு சம்பாரிக்சு வந்தா திமிராடா காட்டற திமிரு’’ என்கிறாள். உடனே அங்கங்கே நின்றிருந்த பெண்களும் சேர்ந்து கொள்கிறார்கள்.

‘‘இவன் எப்பவும் இப்படித்தான் ஆஹா.. எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் மாரயே மொரச்சிப் பார்ப்பான்..’’

‘‘இதுவே கண்டதுக்குப் பொறந்த நாயி. இதுவந்து மத்தவங்கள எளக்காரம் பண்ணுது’’

‘‘ நம்ம ராமாயிக்கு ஒடம்பு சரியில்லன்னு அவ பொண்ணு வந்தாளே. அன்னிக்கு அவ இடுப்புல கிள்ளினது கூட இந்த பேமானிதான் ஆயா’’.

“அவளாவது அறியா பொண்ணுடி நம்ம பண்டாரம்

பொண்டாட்டிக்கு என்ன வயசாவது. அவளாப் போயி வாரியான்னு

கூப்பிடறாம்மா இந்த தேவடியாமொவன்”.

“கண்ணைக் காட்டி காச நீட்னா வந்து மல்லாந்துடுவாங்கன்னு நெனப்’பு இவனுக்கு. பெரிய மன்மதக்குஞ்சு பாரு”.

கும்பல் கலையத் தொடங்குறது

கிழவியை அவர்கள் நன்றியுடன் பார்க்கிறார்கள் லுங்கிக்காரனும் அவனுக கூட்டாளிகளும் ஆறாம் நெம்பர் கடைப்பக்கம் நடக்கத் தொடங்குகிறார்கள். டேப்ரிக்கார்டர் பாட்டுச்சத்தம் காற்றில் கரைகிறது.

RUl;Lths;

Fkhu bry;th

fplg;gpy; xUtpj Rfk;; Mdhy; vdf;F mJty;y.

clk;giwapy; fple;jhy; J}utiuf;Fk; tay;btspfs; bjhpa[k;. mf;fiuapy; epd;W Cisapl;L Msdf;fnkh/ gl;ofspd; mutnkh cz;lh vdg; ghh]j;J/ nfhHp gpof;f te;j ehpfs; jpUk;g[k; neuk;. cs;tPl;Lj; jpz;izapy; Fjpj;j Nhpaf;F";rpd; mwpt[Wj;jiya[k; kPwp gLj;jpUf;fpnwd;.

Fstuk;igbahl;oa Vyhf;fiuapy;/ fg;gj;bj';fpd; epHypy; thiHf;fhtYf;F fl;oa khlk;. gpd;dh] v';fs; Kfhk;. ,d;Wk; vGe;jt[ld; gl;lJ mJjhd;. Mrhd; rk;gsf;fhy;nghl;L ,Ue;j khjphp....

f";rp rl;oapy; new;W kPe;j fl;oj;bjStpy;/ j';fr;rp jtpL FiHj;Jf;bfhz;L epw;fpwhs;. nfhHpfs; Rw;wp tisj;J ifapypUe;J th';fpg; gwpf;fg; ghh]f;fpd;wd. new;wput[mk;kh mtnshL mlf;fk; ngrpaJ vdf;Fk; nfl;lJ.

"bfHtd; brjj;jnjhl gaf;f tPll';fp bflf;fpahDt. uht[gl;lh fz;zilf;f tpLthDtsh> fspahk;gw Ml;lk; nghl;L. xU btd xHp";r khjphp"

Mrhd; ,Ue;jtiuf;Fk; v';fs; uh$paKk; capnuhoUe;jJ. me;jpf;F Jt';Fk; tpisahl;L es;sput[fz;lgpd; ntW tpjkhd tpisahl;Lfs;. Vyhf;fiuapy; xU bj';F ghf;fp tplhk fUf;F btl;o khlj;jpy; milnthk;. gidfspy; Vwp fs;sf;fiya';fis mtpH;j;J/ ahUf;fhtJ tpisapy; ,w';fp fpH';F nkhl;og;nghk;. cs;Sf;Fs; g[ife;jhYk; cilaf;fhuh]fs; Mrhidf; fz;L btspf;fhl;lj; ja';fpdhh]fs;.

vdf;bfhU vjphp ,Ue;jhd;. kfh vjphp. jpObud xUehs; brj;Jk; nghdhd;. me;jr; rhit bfhiy vd;Wk; brhy;yyhk;. mtd; rht[f;F ehDk; fhuzk;. vjphp brj;jhy; kfpH;r;rp jhd; Vw;gLk;. ehndh tUe;jpndd;. fhuzk;/ rhfg;nghFk; rpy ehl;fspy; ez;gdhf khwpdhd;. mjw;Fg; gpwF bfh";rehs; xJ';fp ,Ue;njd;. tPL njote;j Mrhd; vd;idf; Tl;of;bfhz;L tay';fiuf;F te;jhh].

"vd;d nla;/ ,g;g eP btspna vw';fpanj ,y;ypah>"

"vg;gthtJ"

"ngr;rpya[k; RUf;fk;/ vd;d xUkhhp ,Uf;fpa> "

"xz;qkpy;y"

"vdf;fpl;l fs;sk; brhy;yUJ. vd;dJd;D brhy;Y".

"bfhwr;rp ehsh xU fhhpak; nff;fqk;q bedr;rpnad;"

"..... "

"x';fSf;F vjphpa cz;lh>"

",k;gpLjhdh> vd;dnthbgUrh nff;fg;nghnwz;qy;yh bedr;nrd;. nla;* kD#dh bgwe;j vy;yhUf;Fk; VjhtJ xU vjphpa cz;L".

"Vdhf;Fk;"?

"mJ mg;gpoj;jhd;. rpndfKk;/ tpnuhjKk; ,e;j nyhfk; KGRk; bew";rpbflf;F. kD#gpwth]j;jp xnu byt[y;y nghthJ. tpnuhjKk;/ rpndfKk;/ Jf;fKk;/ re;njhrKk;/ rjpf;fpaJk;/ bul;rpf;fpaJk; vy;yhnk khwp khwp elf;FJ".

"mg;g tpnuhjkpy;yhk $Ptpr;r Koahjh"?

"vdf;F mDgtj;j tr;rp brhy;Ynfd;/ KoahJ. rpndfk; rPf;fpuk; te;J rPf;fpuk; jPuf;ToaJ. ehd; mjpfkhf rpndfpr;r Tl;Lf;fhuDt ahUnk ,z;izf;F ,y;y. tpnuhjk; mg;gpo ,y;y. jiyKiw jiyKiwah bjhlh]e;Jl;nl tUk;. ,UtJ Eg;gJ tU#';fSf;F Kd;d xUbghpa th]khzp vdf;F vjphpah ,Ue;jhd;. vdf;F kl;Lkpy;y/ mtd; vy;yhUf;Fnk vjphp. fw;w tpj;ijas jtwh cgnahfpr;rpl;L te;jhd;. mg[gf;fiuj; bjhpa[kh nla;> mtDf;f mg;gd; ryPk;. mtDf;F mg;g Ml;Lf; fr;nrhlkhf;Fk; bjhHpy;. fspaf;fhtpis re;ijapy; E}w;wk;gJ +th tr;r Ml;il ,td; E}W +tha;f;F nfl;lhd;. FLf;f Koa[kh> brhy;Y. njr;rpaj;jpy; Ml;Lf;f khiug; gpor;rp vd;dnth br";rhd;. ML fiu";rp tpspr;rp Miua[k; epf;ftplhJ. fhk;g[buz;Lk; btj;jpy nghl;L Jg;g[dJnghy brtj;jpUf;F. ,td; vd;dnth br";rhd;q bjhp";rp nghr;rp. gpwF ,iwr;rp tpiyf;F Xl;ly;y tpw;f ntz;oajhr;rp. xUehs; Vw;WKl;ly; cz;lhfp/ vdf;Fk; mtDf;Fk; mo ele;jJ. jdf;F th]k ntiyahd ey;yh fhl;og;ghh]j;jhd;. xz;qk; gyypf;fy;y. ehd; njfj;jpy; glhk jg;gpepz;q/ fhy;bgUbtubyLj;J mtd; bfhg;gpSf;Fj; jhH xU Vj;JVj;jpnddh/ epz;ql;L nkhz;lhd;. ehg;gJf;F brj;jhd;"

"brj;Jg;nghdhdh> "

"பின்ன இல்லாம. விஷயம் அதோட முடியல்ல. அவனுக்க பய ஒருத்தன். பத்தோ, பன்ரெண்டோ வயசிருக்கும். ஒரு நாளு ராத்திரி நான் குடிச்சிற்று வரும்ப, பாறைக்கிடையில ஒளிச்சி நிண்ணுட்டு குத்தினேன். நல்ல நிலாவெட்டம் உண்டு. மறிஞ்சி உருண்டதினால பீயாத்தி, பாறையில் பட்டுது. வயிற்றில் சவுட்டி அங்ஙின தள்ளினேன். இப்ப அவனுக்கயும் மகன் என்னக் கொல்லாம விடமாட்டேன்னு அப்புப்பனுக்க போட்டோயில அடிச்சு சத்தியம் செஞ்சிருக்கான்''.

அதுதான் எங்கள் கடைசி சந்திப்பாகுமென்று நினைக்கவில்லை. ஆசான் செத்துப்போனதா ரெண்டு நாள் கழிச்சி ஆள் வந்தது. பொற்றைக்கு கள்ளு குடிக்கப் போய்விட்டு வீட்டில் வந்து படுத்தவர்தான். எழும்பவே இல்லை. முன் விரோதத்தில் யாரோ கள்ளில பூனைமுடி போட்டுக் கொன்றதாக ஊரில் பேச்சு.

ஆசான் எனக் குறிப்பிடும் அய்யாவு நாடாரை, 'பூதம்' என்றால்தான் அறிய முடியும். மூத்த மகளின் கல்யாணச் சீட்டில் சொந்தப் பெயரைப் போடப்போய் யாருக்கும் தெரியாமற்போயிற்று. அந்த அளவுக்கு பட்டப்பெயர் பிரபலம். ஆள் எப்படி இருப்பார் தெரியுமா? காட்டு சைசு, அடவு, செவிடு வகையறாக்களால்

கல்லான தேகம். அவர் வீட்டின் முன்பு ஒரு கல்லுருண்டை கிடக்கிறது. இந்தக்கால யுவன்களில் ஆறுபேர் சேர்ந்தாலும் அசைக்க முடியாது. என்ன செய்வார் தெரியுமா? ஆகாசத்தை நோக்கி எறிந்து பின் கழுத்தும், முதுகும் சேருமிடத்தில் சதையை திரட்டித் தாங்குவார். மலந்து கிடந்து கால்களால் உயர்த்தி வித்தைகள் செய்வார். அவர் வீட்டில் ஒரு உரல் உண்டு. உரலா அது? செக்கு மாதிரி இருக்கும். படுத்தவாறு தம்பிடித்து மார்பிலேற்றி, இரண்டு மருமக்களையும் கூப்பிட்டு நெல்லரக்க வைப்பார். இந்த தேகத்தை அனுபவித்த சொர்ணவடிவு உலகத்தை விட்டுப் போனது உண்மை தான். ஆனால் வீரியம் குறையவில்லை.

ஆசானுக்கும் எனக்கும் நட்பு ஏற்படக் காரணமாக இருந்தது. அந்தச் சண்டைதான் வீட்டுக்கு கரண்ட் எடுத்தபோது பக்கத்து வீடு தாண்டி ஒயர் வருவதில் தகராறு. மனிதனுக்கு மனிதன் ஏற்படும் சாதாரண சச்சரவாகத்தான் அதைநான் எடுத்தேன். ஒருநாள் பக்கத்துவீட்டுக்காரன் வலிய சண்டைக்கு வந்தான். வார்த்தைகள் ஒரு சுற்று மோதி ஓய்ந்த பிறகு உடல்கள் மோதி சரிய ஆவல்கொண்டன. அவன் தான் முதலில் அதைப் பிரகடனமும் செய்தான்.

"ஒரு அப்பனுக்கு பெறந்தியானா, வீடவிட்டு வெளியே எறங்கி வாலே".

ஆள் எள்ளுபோல இருப்பான். ஒரு சவுட்டில நாலாமுறிஞ்சி நாப்பதா எழும்புவான். வங்காள தடியனான என்னைப் பார்த்து நோஞ்சலான ஒருவன், அதிலும் ஆஸ்துமா நோயாளி பேசும் பேச்சா இது? உள்வீட்டுத் திண்ணையிலிருந்து குதித்து வாசலுக்கு வந்தேன். அவன் தள்ளையும், பெண்டாட்டியும் பார்த்துக் கொண்டு நின்றார்கள். இவனிடம் எப்படி சண்டைக்குப் போவது? என்ற அதிர்ச்சி எனக்கு ஏற்பட்ட போதிலும், அவர்கள் முகங்களில் துளி கூட இல்லை. மனதில், என்னிடமிருந்து அவன் வாங்கப் போகும் அடிகளைக் குறித்து சிரிப்பும் வந்தது. சாரத்தை மடித்துக் கட்டியவாறு படிகளில் இறங்கினேன். தோளில் காக்கட்டையுடன் கொடிக்கு வெள்ளம் கோரச் சென்ற வறுவேல் ஓடி வந்து தடுத்தான்.

"நீ அவனுட்ட சண்டைக்கு போப்பிடாது பிள்ளா".

"விடும் ஓய். வெள்ளாவி கொள்ளாம சீர்பட மாட்டான் ".

"யாரு கொள்ளியதுண்ணு பார்க்கலாம்.

எனக்கு வந்த ஆத்திரத்தில் வறுவேலைத் தூக்கித் தள்ளிவிட்டுப் பார்த்தேன். நகர விடாமல் கால்களைப் பிடித்துக் கொண்டான். காக்கட்டை தூரப்போய் சப்பிக் கிடந்தது. சன்னமான குரலில் எனது காதோரம். "அவன் கக்குமடியில் கோமாரி வச்சிருக்கான். புளுத்துச் சாவணும்னா போ! ". என முணுமுணுத்தான். நான் அப்படியே நின்றேன்.

மாட்டின் வயிற்றுப் பாகத்திலுள்ள எலும்பால் உருவான கோமாரி, உடம்பில் பட்டால் அந்த இடம் புழுக்கும். அந்த நம்பிக்கைதான். அவனை என்னிடம் போர் செய்யத் தூண்டுகிறது. கொஞ்ச நேரம் சவால் விட்டபடி நின்றவனின் ஆண்மையில் கிளர்ச்சியடைந்த அவன் பொண்டாட்டி, கண்ணீர் மல்க சிரித்தாள். வாய் கடுத்ததும் நிறுத்தி விட்டுப் போனான்.

அதற்குப் பிறகு ஊரிலே அவன் பலருடன் சண்டை போடுவதை பார்த்திருக்கிறேன். கோமாரி அல்லது தெரச்சி வாலுடன் வந்து நின்று வல்லரசைப் போல உறுமுவான். கையிலிலுக்கும் ஆயுதத்தைக் கண்டு யாருமே அவனிடம் சண்டையிடாமல் ஒதுங்கினார்கள். இவனை எப்படியாவது வீழ்த்த வேண்டுமென்ற வெறி எனக்குள் வளர்ந்த போதுதான் வறுவேல், ஆசானின் பெயரை மொழிந்தான். அதற்கு முன்னே அவரைக் குறிதது நான் அறிந்திருந்தேன்.

அர்த்தராத்திரியில் எழுந்து வேத்திலை தல்லும் பழக்கம் ஆசானுக்கு உண்டு. தெரு வராந்தாவில் அமர்ந்து, இரவின் அசைவைக் கவனிப்பார். துணைக்கு பக்கத்து ' லேத்' திலுள்ள வாச்சர். ராமசாமியும் உண்டு. அன்றும் அப்படித்தான் அமர்ந்திருந்தார். காற்று கொஞ்சம் குளிராக அடித்தது. எங்கோ நல்ல மழை பெய்வதை உணர்ந்தார். தொடுவெட்டி சந்தைக்கு விளைபொருட்கள் மாட்டு வண்டியிலும், கால்நடையிலுமாகச் சென்று கொண்டிருந்தன. கொஞ்சம் தூரத்தில் ஒருவன் பம்மிப் பம்மி வந்துக் கொண்டிருந்தான். தலையில், ஒரு தடி ஆளுக்கு சுமக்கத்தக்க செமடு உண்டு. ஆசானை ஒரு மாதிரியாக நின்று பார்த்தவன், கீழே இறக்கி வைக்கச் சொல்லிவிட்டு திண்ணையில் ஏறி அவருக்குச் சமமாக உட்கார்ந்தான். அவனைக் கவனிக்காதது போல இருந்தவர் தூரப் பார்த்தபடியே, 'கச்சோடத்துக்கா?' என்று கேட்டார். இருட்டில் அவன் தலையாட்டினான்.

" கரக்காயா?"

"வயலங்காய் "

ஆசான் எழுந்து ஏத்தங்காயை கொட்டிப் பார்ததான். 'வெளச்சி மதியில்ல' என்று முணுமுணுத்தவர், ஒரு காயின் கீழ்ப்பகுதியைத் திருகினார்.

"ஓய்! சீணிச்சி உண்டாக்கினது கையவச்சி நவுடுனா முறிச்சிடுவேன். "

ஆசான் லேசாகச் சிரித்தார். "வெளுக்குமுன்னா வித்திட்டு பிள்ள குட்டியளுட்ட ஒழுங்கா போய்ச்சேரு. என்று அவன் தலையில் தூக்கி வைத்து அனுப்பினார்.

ரெண்டு நிமிஷம் கழிந்திருக்கும். ஒருத்தன் மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு ஓடினான். கூட ரெண்டு மூணு பேர்கள். ஆசான், 'சரிதான்' என்றார்.

"தாத்தா! இங்ஙினோடி ஆரெங்கிலும் குலை கொண்டு போச்சினுமா?"

"நீ ஆருலே?"

"பொன்னுமுத்தாளுக்க மொவன், நேத்து சாயந்தரமே வெட்டி எடுக்க நினைச்சேன். குழந்தைய ஆசுத்திரிக்கு கொண்டு போனதில நேரம் கிட்டல. காலத்த சந்தைக்கு கொண்டு வர வெட்டப்போனா, தலையில வெள்ளம் பாயுது, மேலப் பாத்தா குலையக் காணல்ல".

ஆசான் வேகமாக நடந்தார். கொஞ்ச தூரத்தில் கரிஇலை தெரிந்தது. ஓடிப்போய் வழிமறித்து செமடைப் பிடித்தார்.

பொதுவாக ஆசானுக்கு முன் நிமிர்ந்து நடக்கவே பயப்படுவார்கள். ஒருவரைப் பற்றித் தெரியாமல் அவருடன் ஈடுபடுவது எவ்வளவு அபாயகரமானது. செமடை இறக்காமல் ஆசானின் கையைத் தட்டப் போனவன் குலையோடு ஓடையில் கிடக்கிறான். விஷயம் அப்படியே முடிந்திருந்தால் நல்லது. ஆனால் அவன் அதை விரும்பவில்லை எழுந்து, ஆசானுக்கு நேராய் 'நரிப்பாய்ச்சல்' பாய்ந்தான் இவனும் கொஞ்சம் வேலைகள் தெரிந்தவன் போல் தோன்றுகின்றது. கூடி நின்றவர்கள் சூழ, கையமர்த்தி தடுத்துவிட்டு, அவனது பள்ளையின் பக்கவாட்டில் செருகி துக்கி நிறுத்தினார். இப்போதுதான் ஆசானின் முகத்தை நேராகப் பார்த்தான். பூதம் ஒன்று தாண்டவமாட, தப்ப முனைந்தவனை

நகரவிடாமல் நெருங்கி, இடக்கையை கால்வழி எடுத்து அந்தரத்தில் எலிக்குஞ்சைப் போல நிறுத்தி, பூட்டுப்போட்டு தரையில் கிடத்தினார்.

"எங்கேருந்துலே வாற?"

"……..."

கொவுட்டில் ரெண்டு விரல் வைத்து அசைக்க ' ஆ… ஊ…' என்றான். கூட்டத்தில் ஒருவன் கெட்டிவைத்து அடிக்கச் சொன்னான்.

"விடமாட்டேன். சொல்லு".

"நேசமணி பாலத்துக்க அருவுல. "

"அங்ஙின எங்க?"

முளித்தாள். அந்த அமைதி அவனைப் பொய்யன்று காட்டியது. அதுவரை அடங்கிக்கிடந்த கோபம் வெளியே வர, கழுத்து நெட்டில் தூக்கி மூலங்குத்துற இடித்தார். பெரிய சத்தத்துடன் களியக்காவிளையிலுள்ள தனது வீட்டை விலாசம் வாரியாக ஒலிபரப்பினான்.

"லேய், அங்ஙின மாட்டுச்சந்தையில தரவு பேசினாலாவது பொன்னுபோல ஜீவிக்கலாம் இல்லியா? ஏம்பிலே இப்பிடி வெறுதால அடிபட்டுச்சாவிய. ம்…? "

"……."

"ஒடமஸ்தன் எங்கலே? இவன் குலைய சந்தவரைக்கும் கொண்டுவந்து தருவான். லே! நீ சீணிச்சி உண்டாக்கினதக் கொண்டு வில்லு. போ! "

கூட்டம் கலைந்தது.

வறுவேலுக்கு ஆசானிடம் நல்ல நெருக்கம். அவர் எண்ணையோ, லேகியமோ வைக்கும் போது கூடமாட நின்று வேலைகள் செய்வான். பக்கத்து வீட்டுக்காரனைத் தட்ட ரெண்டு மூணு நாளா உண்ணாம, உறங்காம யோசித்த எனக்கு, அவனின் வார்த்தைகள் கருப்பட்டி போல இனித்தன.

"பூதத்தானுட்ட ஒரு சுருட்டுவாள் இருந்தது. அரையடி நீளந்தான் இருக்கும். சுழற்றினா பத்தடிவர நீளும், ஒருக்கா, கோயிலுக்கு நேந்த நேர்ச்சக்கிடாவ வெட்டித் தின்னாரு. அண்ணுராவு பனிரெண்டு மணிக்கு ஒரு பூதம் வந்து நிண்ணு படைநவுட்டிச்சி. அங்ஙின ஆருக்கும் கெடக்க முடியாது. ஆசான் மரியாதியா வெலக்கிப் பார்த்தார். கேக்கல்ல. அதோட மல்லுக்குப்

போனார். பூதம் அவரத் தூக்கி செவருல அடிச்சி கெடத்தியாச்சி. தாது விழுந்தவர் ஓடிப்பெய் ஓலச்செருவயில ஒளிச்சி வச்சிருந்த சுருட்டுவாளை எடுத்து கெறக்கினாரு பாரு., பூதம் பிடுக்கு தெறிக்க ஓடியே போச்சி.

"அப்பிடியா?"

"உம்மாண ஓய். "

"இப்ப அது எங்க இருக்கு?"

"தெரியாது. ஆனா அவருட்ட இல்லண்ணுமட்டும் தெரியும். கஷ்டகாலத்தில் ஆருக்கோ விற்றுப்போட்டாராம்."

வறுவலை ஆசாக்கி, ரெண்டு குப்பி மாம்பட்டை வாங்கிக் கொடுத்து, ஆசான பழக்கப்படுத்தித்தரக் கேட்டேன். இண்ணைக்கு நாளைக்கு என்று நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தான். மாம்பட்டையின் அளவு மட்டும் கூடிக்கொண்டே வந்தது. தெங்கு காய் வைக்க உரம் வேணும். பனைக்கு யாது கெளையலும்? பறண்டலும்? அதுபோல, ஆசான் நேரடியாக எனது திறமையைக் காணும் சந்தர்ப்பமும் வந்தது.

ஒரு சமயம் கேரளத்திலிருந்து ரெயில்வே லைனில் வேலை செய்ய வந்த ஒரு கோஷ்டியினர், ஆசான் தாமசிக்கும் விளைக்கு அடுத்து வீடெடுத்து தங்கினார்கள். அதில் வடக்கன் விளையாட்டு தெரிஞ்ச நல்ல களிவுள்ள ரெண்டு மூணு பையன்கள் உண்டு. தினமும் ராத்திரி தாமிரவருணியின் கரையில் டயர் கொழுத்திப் போட்டு விளையாட்டு நடந்தது. நான் போன அண்ணைக்கு ஆசான் இருந்தார். கம்பு விளையாட்டு நடந்து கொண்டிருந்தது. ஆசானின் பிரதம சிஷ்யன் பாளையங்கட்டி ரமேந்திரன் கையிலிருந்து கழிய தட்டணும்ணா ஒருத்தன் புதுசா பெறந்து வரணும். அவ்வளவு வித்தை கற்றவன். மலையாளத்தான் முன்ன அவனால கூட முக்காமணிக்கூருக்கு மேல் தாக்குப் பிடிக்க முடியல்ல. அப்பிடி விளையாட்டு. ஏதோ சக்தி உந்தித்தள்ள களத்தில் இறங்கினேன். நிசசயம் அது ஆசான் அங்கே இருந்ததால் தான் ஏற்பட்டிருக்கும். பலர், ஏளனமாகப் பார்த்தனர். கடைசியில் என்னிடம் விளையாடித் தோற்ற மிகப்பெரிய ஆசானும், மலபாரில் ஏழுதேசத்து வீரர்களை வென்று

பொன்னுருண்டை பெற்ற பயில்வானுமான முஸ்தபா கூட, முதலில் ஒரு பொடியனைத்தான் என்னோடு விளையாட விட்டான். படிப்படியாக எல்லோரையும் வென்று, கடைசியில் யாருமே இல்லை என்ற நிலையை அடைந்து ... ஆசானைப் பார்த்தபோது அங்கில்லை. நான் விளயாடிக்கொண்டிருக்கும் போது எழும்பிப் போனதாகச் சொன்னார்கள். எல்லாம் வீணாகிய உணர்வுடன் திரும்பினேன்.

ஒரு வாரம் கழித்து, கொச்சப்பி கடையில் ஆசான் புட்டு தின்னுக்கொண்டிருந்தார். அறியாமல் உள்ளே சென்ற நான் பின் வாங்கி கதவண்டை தங்கிய போது ஏறிட்டுப் பார்த்தவர், எடம் ஒருவாடு இருக்கே என்றார். வெட்கத்துடன் உள்ளே போய் தூர அமர்ந்தேன். இங்ஙின இருக்கலாமே என்று அருகில் அழைத்தார். கொச்சப்பி! எலபோடு என்றவர். புட்டு வைக்கச் சொன்ன போது பலமாக மறுத்தேன். ஒருவித பயம் என்னை விட்டு அகலாமல் இருந்தது. பதினெட்டு வரியமா எனக்க கடையில பூதத்தான் புட்டு தின்னியாரு. ஆருக்கும் இதுவர வேண்டிக் குடுத்தத எங்கண்ணு காணல்ல" என்றான். கொச்சப்பி.

குனிந்திருந்த நான் ஆசானின் முகத்தைப் பார்த்தேன். முன்பிருந்த மூர்க்கம் மறைய, லேசான முறுவல், என்னோடு சினேகம் பாராட்ட விளைவதை உணர்ந்தேன். நெஞ்சிலிருந்து என்னவோ திரண்டு கண்களை மறைத்தது. சொல்லி வைத்தற்போல் இடது தோளில் கை வைத்தார். மடை திறந்த வெள்ளமானேன்.

எனது தகப்பனையும், குடும்பத்தையும் கேட்டு மனசிலாக்கியவர், தன்னை எவ்வாறு தெரியும்? என்று வினவினார். அன்று இரவு நடந்த வாழைக்குலை சம்பவத்தை ஞாபகப்படுத்தினேன். 'ஓ அதுவா?' என்றவர் கபடமில்லாத சிரிப்பு சிரித்தார். அவரது இறுக்கம் முற்றிலும் தளர்ந்தது.

"கொறச்சி காலத்துக்கமுன்ன எங்கூட்டுக்காரன் ஒருத்தன் கருப்பங்குளத்தங்கரையில் நூறுமூடு வாழை நட்டிருந்தான். கொச்சப்பிக்கு அந்த சம்பவம் தெரியுமாடேய்? "

"சொன்னாலல்லா தெரியும். "

"மறந்திட்டாயா? சொல்லுதேன். குலை தள்ளிய சமயம் ஒருநாளு போயப் பார்த்தேன். தள்ளைய நின்னது ஒரோரு காயும் எங்கையளவு இருக்கும். நானே கம்பேறு போட்டுட்டேன்….. "

"உள்ளதுதாம் பிள்ள. பண்டெலலாம் நல்லவொரு ஏத்தங் கொலய ஒரு முழு ஆணாப் பெறந்தவனால வெட்டி எறக்க முடியாது. " கொச்சப்பி.

"நீ இடையில பேசப்பிடாது. நானாக்கும் கதை சொல்லுகேன். தெவசம் ஒரு குலைவச்சி ஆரோ வெட்டிக்கொண்டே இருந்தினும். கொறச்சி அப்புறம் மிக்கேலுண்ணு ஒருத்தன் கோடை போட்டிருந்தான்…."

"ஓ… இப்ப பிடிக்கெடச்சாச்சுது. மற்றவனர் போட்டு அடிச்சதியானே?"

"நீ ஒன் சோலியப் பாருடேய், நான் இல்லியா கதை சொல்லுகேன். எனக்கு அவம் மேல சம்சயம் உண்டு . உச்ச நேரம் பாத்துப் போனேன். கோட அடுப்புக்க சூடு சாம்பல்ல நாப்பத்தாறு காயள பூத்திப் போட்டிருந்தான். மிண்டாத வந்தேன். சாயந்தரம், மின்னிட்டாம் பூச்சி மினுங்காத சமயம். மிக்கேலு, ஒரு கிளாஸ் நாடன் வேணும்ணு நேரே கோடை போட்டிருந்த எடத்துக்கு அவனக் கொண்டு வந்தேனா…."

"ஏத்தங்காயள அவன் தலையில் ஏத்தி, மீத்த கதம்ப அடுக்கி கரும்புள்ளியும், செம்புள்ளியுங்குத்தி கள்ளியும் முள்ளும் வெட்டிச்சாரி, அங்ஙின இருந்து நடத்தி அடிச்ச அடி, வெட்டுமணி முக்கு வரைக்கும் அடிச்சாரு. கடைசியில் பய கால்ல விழுந்து ஒருக்காலத்துக்கும் மாப்பு கேட்டதுனால விட்டாரு. இதாக்கும் சம்பவம். " கொச்சப்பி கழுத்தை நீட்டி இழுத்தவாறு முடித்தான்.

‘‘முடிஞ்சுதா? அது சரி, நீ ஆருட்டயாக்கும் விளையாட்டு படிச்ச?’’.

அடிமுறை படிக்க நானெடுத்த முயற்சியை வைத்து புராணமே எழுதலாம். அந்த அளவுக்கு அனுபவம் உண்டு. பத்து, பனரெண்டு வருஷம் இருக்கும். ஒருத்தன பெரிய ஆசானா நெனச்சி படிக்கப் போனேன். ரெண்டு மாசமா அவன தயவுபண்ணி, நயந்துரெண்டு ரூவா கொடுத்து கும்பிட்டெழுந்து, அதற்குப் பிறகு சாயந்தரம் வரச்சொன்னான். நான் போன போது ஆசானுக்கு லெவுலு இல்ல. மூக்குமுட்ட குடிச்சிருந்தான். முற்றத்தில் அரி பாத்திக்கொண்டிருந்த அவன்

பொண்டாட்டி எழும்பி உள்ளே போனாள். உள் வீட்டுக்கு அழைத்தவன் பக்கவாட்டில் நீண்ட அறையில் நிறுத்தி கதவைத் தாளிட்டான். சுவரோரம் தரையில் உட்கார்ந்தவன், மடியிலருந்து பீடி எடுத்து பற்றவைத்தவாறு கண்களை மூடினான். மணிக்கூருக்கு மேல் ஆகி இருக்கும். வெறும் மௌனத்தை எதிர்கொண்டிருக்கப் பிடிக்காமல் அவனை எழுப்பினேன். சலிப்புடன் பார்த்தவாறு, 'கம்பு கெறக்கத் தெரியுமா? என்றான். சிரமத்துடன் எழுந்துபோய் எங்கிருந்தோ ஒரு கம்பு கொண்டுவந்து தாறுமாறாகச் சுழற்றி விட்டு, இதுமாதிரி சுழற்று என்றான். ஒரு லேகையும் கிடைக்காததுனால இன்னொருமுறை சுழற்றச் சொன்னேன். இரண்டும் வித்தியாசமாக இருந்ததைச் சொன்னபோது அதெல்லாம் எனக்குத் தெரியும் சுழற்றுவியா? எனச் சத்தம் போட்டான். பயந்து எப்படியெல்லாமோ சுழற்றினேனோ, கம்பை வாங்கி எனது கால் கறண்டையில் ஐந்தாறு அடி. உயிர்போகும் வலியெடுக்க, உட்கார்ந்தேன். பக்கத்து வீட்டில் யாரோ குளித்து வெள்ளம் கீழே விழும் சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்க்கையில், எனக்கெதிரே கால்களை அகற்றி வைத்துக்கொண்டு நீள்வெட்டோத்தியை ஓங்கியபடி, இனிமே வெட்டோத்தி விளையாட்டு படிக்கலாம் என நின்றுகொண்டிருந்தான். முதலில், நீ மரத்தில் ஒரு வெட்டோத்தி உண்டாக்கிக்கொண்டு வரணும். அதை வைத்துப் படித்தப்பிறகு ஒர்ஜஷினல் வெட்டோத்தியை வச்சி விளையாடலாம். என்றவன், இப்போது குடிபோதையில் இப்படி நிற்கிறான். அடிகொண்ட ஆவேசமும் எல்லாம் ஒருசேர எழும்பி, அவன் மீது பாய்ந்து தலையை வயிற்றில் கொடுத்து தூக்கி தரையில் பொத்தென மறித்துப் போட்டேன். வெட்டோத்தி தூரப்போய் விழுந்தது. கீழே சாய்ந்தவன் பொண்டாட்டியின் பெயரைச் சொல்லி, இஞ்ச வாடி, இந்தப் பய என்னக் கொன்னாண்டியே எனச் சத்தம் போட்டான். எனக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது. மெதுவாக கதவைத் திறந்து திண்ணைக்கு வந்தேன். அவன் பெண்டாட்டி வழி மறித்தது போல நின்று செறஞ்சி பார்த்தாள்.

"குடிகாரம்மாருவளுட்ட ஒங்களுக்கெல்லாம் என்ன பிள்ள கூட்டுக்கட்டு?"

நான் மௌனமாக நின்றேன்.

''ஒங்களஎல்லாம் எனக்குத் தெரியும். வீட்டில் வந்து வெலக்கணுமா?''

''வேண்டாம் ''.

''பின்ன இஞ்ச இனிமே காணப்பிடாது. ''

கடைசி வார்த்தை அதட்டலாக ஒலித்தது. திரும்பிப் பார்க்காமல் நடந்தவன் தான். இன்று வரைக்கும் அந்தப் பக்கமே தலை காட்டவில்லை.

பிறகொரு ஆசான். வர்மக்கலை மன்னன். 'சுண்டுவர்மம்' வரைத் தெரியுமாம். வசக்கேடா யாரையாவது சுண்டினான் என்றால் அவ்வளவுதான். அதனால் அவனைக் கண்டு எல்லோரும் பயந்து நடந்தார்கள். 'அறதி' தெரிந்தவன். அடிபட்டு மயங்கியவர்களைத் தட்டி எழுப்புவதைக் கண்டிருக்கிறேன். குறுக்குப்பிடியுடன் ஒருவன் வேதனை தாளாமல் ஒரு பக்கம் சரிய நடந்து இவனிடம் வந்தான். உள்ளே போய்க் காலைக் கழுவித் துடைத்தவன், அவனைத் திரும்பி நிற்கச் சொல்லிவிட்டு மூணாரத்தில் சவுட்டினான். பொடுபொடுவென ஐந்தாறு நரம்புகள் பொட்டித் தெறித்தன. அவன் நல்லா நிமிர்ந்து நடந்து போனான்.

நாங்கள் நாலுபேர் அவனிடம் வர்மம் படித்தோம். எதையாவது பேசி பொழுதை வீணாக்கினானே தவிர, எதுவும் சொல்லித்தரவில்லை. பெரும்பாலும் அவைகள் அவனது வீரப்பிரதாபங்களாக இருந்தன. கொல்லன் உலையில் இரும்பு, தண்ணீர் உறிவதைப்போல பணத்தை மட்டும் கறந்து வந்தான். படிச்சிருந்தா மட்டும் இனிமே பைசா குடுத்தா மதி என முடிவெடுத்த நாங்கள், கொஞ்சநாள் கூட அவனுடன் திரிந்துவிட்டு நிறுத்தினோம். ஒருநாள் ரோட்டில் வைத்து பைசா கேட்டான். அவிழாது என்றதும் கெட்டவார்த்தை பேசினான். பெண்கள் போவதாகச் சொன்னபோது, எனது பயப்படுதலை வைத்து இன்னும் பெரிதாக சத்தம் போட்டான். ரெண்டு மூணுநாள் கழித்து கையில் ஒரு ரேடியோவுடன் கடைக்கு வந்தான். ஒரு சட்டையை விரைவில் முடிக்க வேண்டுமென்ற அவசரத்தில் தைத்துக்கொண்டிருந்த என்னை விளித்து, ‘ஒரு பத்துரூவா எடு!’ எனக் கட்டளைபோட, சட்டையை ஒதுக்கி வைத்துவிட்டு அவனிடம் வந்தேன். ரேடியோவை வாங்கித் திருகியவாறு, விலைக்கு

கொடுப்பமா? என்று கேட்டேன். ‘இப்பத்தான் செரியாக்கிக் கொண்டு வாறேன்’ என்றான், கடையில் கொண்டு வந்து கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து சத்தங்கூட்டினேன். ஏதோவொரு டப்பாங்குத்து பாடலைப்பாட, பழையபடி தையல் வேலையைத் தொடர்ந்தேன்.

''இஞ்ச எடுடேய். ''

''பைசாவா? ரேடியோவா?''

''விளையாடாத. ''

''ஒமக்கிப்ப என்ன வேணும்? ''

''ரேடியோ. ''

''உள்ளே வந்து எடும். ''

அவன் உள்ளே ஏறியது தான் தாமதம், பாதிக் கதவைப் பூட்டிவிட்டு, வெளியேற நகர்ந்தவனை சுவரோடு சேர்த்து வைத்து நெருக்கி அற்றத்திற்கு கொண்டுபோய் நிறுத்தி, மனுஷனின் ஆக அடங்கல் எங்க ஓய் இருக்கு?'என்று கேட்டான். 'ரூவா தந்தா சொல்லியேன்' என்றான். மேசையைத் திறந்து பத்துரூவா எடுத்து பொதுவே வைத்து, ‘சொல்லீற்று எடும்’ என்றேன். சொல்லாமல் எடுக்கப் பார்த்தான். கையிலிருக்கும் துணி அளக்கும் கோலால் ஒன்று வைத்தேன். கையை உதறியவாறு கெட்டவார்த்தை பேசினான். செவுட்டில் ஒன்று கொடுத்து சவுட்டித் தள்ளினேன். தையல்மெஷின் மேல் சரிந்து போய் மூலையில் விழுந்தான். எழும்பியவன் திரும்பவும் வெளியேற நகர்ந்தான். பழையதுபோல சுவரோடு சேர்த்து நெருக்கி அற்றத்துக்கு கொண்டுபோனேன்.

''நான் கிழவன்டேய். என்னவிடு. ''

''கேட்டதுக்கு பதில்சொல்லும். ''

''அதெல்லாம் இஞ்சவச்சி சொல்லப்பிடாது. ''

''வீட்டில வந்தா சொல்லுவீரா?''

''உவா. ''

''சொல்லாட்டா என்ன செய்யணும்? வேண்டின பைசாயள திரும்பத் தருவீரா?''

''உவா. ரேடியோவ எடுடேய் பிள்ள. ''

''ரெண்டுநாளு அது இங்கயே இருக்கட்டு. ''

முன்பக்கம் சென்றவனைத் தடுத்து வெளிக்கதவைத் திறந்து பின்புறமாக அனுப்பினேன். கீழே இறங்கியதுதான் தாமதம், 'கள்ளண்டோய் ' எனக் கத்த, டயர் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் கையில் கம்பித்துண்டுகளுடன் விரட்டினார்கள். ஓடியவன், கோட்டை எத்திச் சாடும்போது செரட்டை முறி ஒன்றை மிதித்து காலில் இரத்தம் பாய, நொண்டி நொண்டி நடந்து கடையின் முன்பக்கம் வந்து நின்று ரேடியோவைக் கேட்டான். உள்ளே வந்து எடுக்கச் சொன்னேன். கொஞ்சநேரம் நின்று கேட்டுப் பார்த்துவிட்டுப் போய்விட்டான்.

பொட்டக்கண்ணு ஆசான் ஓரளவு விஷயந்தெரிந்தவர்தான். ஆனால் அவரது கவனமெல்லாம் மந்திரம், மாயத்தில் இருந்தது. அம்சிவரை தினமும் சைக்கிளில் போய்ப் படித்துவிட்டு நள்ளிரவுக்குப் பின் வீடு திரும்புவேன். அல்லது அங்கு படுத்துவிட்டு காலையில் நேராக கடைக்கு வருவேன். துவக்கத்தில் கொஞ்சநாள் அடிவேலை படித்துத் தந்தவர், மந்திரத் தகடுகள் எழுதவும், ஓலைகளைப் பகர்ப்பெடுக்கவும் நிர்ப்பந்தித்தது கஷ்டமாக இருந்தது. ஒருநாள் பகர்ப்பெடுத்துக் கொண்டிருக்கும் போது ஒரு ஓலையை எடுத்து மறைத்து வைத்தார். முதலில் கேட்டபோது பேசாமல் இருந்தவர், மீண்டும் வலியுறுத்தவே, அது பெண் விஷயம் என்றார். பிறகொரு நான் என்னைத் தனியே அழைத்து, ‘கருப்பட்டி முதலாளி நல்லதம்பி நாடாருக்க மகளத் தெரியுமா?’ என்று கேட்டார். அன்று மறைத்த ஓலையிலிருந்து மந்திரம் ஒன்றை எழுதவைத்து, இதை நீ ஆயிரத்தெட்டு தடவை உச்சரித்துவிட்டு ஒரு பெண்ணைப் பார்த்தால் அவள் மயங்கி உனக்குப் பின்னால் வருவாள். நீ ஒரு பணக்காரப் பெண்ணை வளைத்து, கிடைக்கும் சொத்தில் பாதியை எனக்குத் தரவேண்டும் என ஒப்பந்தம் பேசினார். அதுவும் அத்தோடு முடிய வேண்டியதாயிற்று.

ஆசானுடன் பரிச்சயப்பட்டு ஆறுமாசங்கூட ஆகவில்லை. ஒரு செறுப்பக்கார கூட்டம் அவர் பின்னால் திரண்டதை எல்லோரும் ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். எங்களது உருவாக்கம் பக்கத்து வீட்டுக்காரனை மீரள வைத்து.

எங்கிருந்தோ ஒரு கடிபட்டியைக் கொண்டு வளர்ந்தான். இறைச்சிக்கு மட்டும் அதற்கு தினம் இருபது ரூபாய் செலவழித்தான்.

விளக்கு வைக்கப்போகிற நேரம். ஒருநாள் அவர்கள் வீட்டு முற்றம் தாண்டி வருகையில், சூ! சூ! என யாரோ பட்டியை விட்டுப் பிடிகாட்டினார்கள். நாலுகால் பாய்ச்சலில் அது என்மேல் வந்து விழ, சத்தம் போட்டேன். வீட்டில் யாருமே இல்லாதது மாதிரி தெரிந்தது. எனக்கு முன்னேயும் போக முடியாது. பின்னேயும் போக முடியாது குனிந்து கல்லெடுப்பது போல பாவிக்க சாதாரண நாய்களென்றால் பின்வாங்கி நின்று குலைக்கும், இதுவோ மௌனம் சுதாகரித்தது. திரும்பவும் பாய்ந்தது. சற்று ஒதுங்கியவாறு தப்பித்து, மீண்டும் வருகையில் கைகளை ஒப்பத்திற்கு விரித்து அதன் மேவாய், கீழ்வாய் நடுக்க வாயை அடைக்கவிடாமல் பிடித்து தூக்கினேன். பின்காலெடுத்து பறண்ட, தரையில் ஓங்கி ரெண்டு மூணு அடி அடித்து விடுத்தேன். அதன் காலத்தில் எழும்பாத காயத்துடன் நோவின் முனகலை வெளியிட்டவாறு நரங்கிச் சென்றது. சம்பவத்தை இதுவரையிலும் ஒளிந்து பார்த்துக் கொண்டு நின்ற அவன் பொண்டாட்டி நேரில் தோன்றினாள்.

''ஒனக்கென்னலே நீக்கம்பா? ஏம்பிலே பட்டிய அடிச்ச?''

''ஆளுவள வழிநடக்க விடண்டாமா?''

''கொம்மைக்க தாலிய அறுக்க வந்துதாக்கும்பிலே?''

''வீட்டில இருக்கியவள விளிச்சே, கதை வேற ஆகிடும். கொம்மையப்போல ஆரும் மாங்கா பறிக்க வாறவங்கூட ஓடிப்போகல்ல. அத்தன அருமைண்ணா பட்டிய கெட்டிப் போட்டு வளக்கணும். ''

தனது தாயின் உடன்போக்கு குறித்த வாய்ப்பான எனது ஒலிபரப்பு அவளை மேலே பேசவிடாமல் மடக்கியது. அதன் பிரதிபலிப்பு ராத்திரி பத்துமணிக்கு மேல்தான் வெளிப்பட்டது.

''யாருபிலேய் நான் இல்லாத்த நேரம் பாத்து வீடேறி சண்டைக்கு வந்தது? ''

முன் கதவைப் பூட்டிவிட்டு வீட்டுக்குள் வந்து படுத்தேன். கதவிலொரு பெரிய கல் வந்து விழுந்தது. தொடர்ந்து கூரையிலும், மாட்டுத் தொழுவிலும்.

கேட்க முடியாத நல்ல வார்த்தைகள். எனது மௌனம் ஏற்றிய வெறியில் வீட்டுக்கு முன் படர்ந்து நின்ற ரெண்டு மூணு சீலாந்திகளில் ஏறி குளை அரக்கிவிட்டு ஓய்ந்தான். அவனது சவாலுக்கேற்றபடி மரத்திலிருந்து கையுடன் உயர்ந்து தாழ்ந்த ஆக்கத்தியை, பௌர்ணமி ஒளியில் உடம்பறையில் கிடந்து கண்ட எனக்கு இப்போது நினைத்தாலும் சிரிப்புவருகிறது.

அதற்குப் பிறகு சுருட்டுவாள் சம்பந்தமாக ஆசானை அதிகமாக நெருக்கினேன். உடனே கொண்டுவந்து தருவது போல உறுதி அளிப்பார். நடக்காது. எதிரியிடமிருந்து எப்போது தாக்குதல் வருமென பயத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கையில், அவர் காட்டிய மெத்தனம் எரிச்சலைத் தந்தது.

"ராஜன்! சுருட்டுவாள் கேட்ட இல்லியா. எனக்கிட்ட விளையாட்டு படிச்ச ஒருத்தன் கல்யாணத்துக்கு கேரளம் போறேன். இருவது ரூவா இருந்தா அன்னளிச்சிப் பார்க்கலாம் ".

"இருவதோ நுப்பதோ தாறேன். வேணுமணா நானுங்கூட வாறேன். மற்றவன் பிறகும் சண்டைக்கு வந்தான் ".

"நீ ஒண்ணும் பேடிச்சாத. அவன நான் பாத்துடலாம் ".

ஆசானை மறுநான் கொச்சப்பிகடையில் கண்டதாகப் பலரும் சொன்னபோது நம்பவில்லை. சாயங்காலம் வீட்டுக்குப் போனதும் விஷயம் உண்மை என்று தெரிந்தது.

"ராஜன்! போகமுடியல்ல. ஒரு பையன அனுப்பிவச்சிருக்கேன். உனக்க காரியத்தையும் கவனிச்சிட்டு வருவான்".

அதற்குப்பிறகு சிலநாள் அதைப் பற்றிய பேச்சே இல்லை. ஒரு மாசங்கழிச்சி பேரனை விட்டு விளித்தார்.

"இப்ப இருவது ரூபா எடுத்தா. நாளை ராவில் வாளு ஒனக்க கையில".

எப்படியெல்லாமோ மறித்தெடுத்துக் கொடுத்தேன். பழைய கதைதான். ஒருநாள் வீட்டுக்கும் வந்தார்.

"ராஜன்! இதுவொரு நல்ல தருணம். பிரயோஜனப்படுத்திக்க".

கொஞ்சங்காலமாக ஆசான் 'வாளு" என்பதும், உடனே நான் எங்கயாவது போயோ. எதையாவது எடுத்து விற்றோ .இருபது ரூபாய் கொடுப்பதும் தோடர்ந்தது.

பக்கத்து வீட்டுக்காரன் வீடு திரும்ப ராத்திரி பத்து மணி வரை ஆகும். அதற்குப் பிறகு வயலங்கரை வந்து வெளிக்கிறங்கிவிட்டு கிணற்றில் குளிப்பான். அப்போது மட்டும் அவன் கையில் எந்த ஆயுதமும் இருக்காது. மற்றபடி, பெண்டாட்டியுடன் படுக்கும்போதும் அந்த நீச ஆயுதம் அவன் கையிலிருக்கும். ஆபீஸ் செல்லும்போது பையில் சுருட்டி வைத்திருப்பான். நம்ம சிஷ்யபிள்ள ஒருத்தன் துப்பறிஞ்சி வந்து சொன்னதும், சட்டங்கட்டி வச்சிட்டு வேஷா வெளுத்தோம். தூக்கி வயலில் எறிந்துவிட்டு வீடு திரும்பினோம்.

பிற்ற நாள் காலை முதல் ரெண்டு வாரம் ஆசானும் நானும் தலைமறைவு வாழ்க்கை. அந்தக் காரியத்தில் ஆசான் சம்பந்தப்படவில்லை. என்றாலும் போலீஸ் முதல் பிரதியாக்கியது அவரைத்தான். கல்லறைத் தோட்டத்தில் ஒளித்துக் கிடந்த நாட்கள் இன்பக்கனவின் அனுபவிப்பு. ஆசானுக்குள் முங்கி, எழும்பியதான உணர்வு, மகாராஜா காலத்திலுள்ள போலீசை எதிர்கொண்டது முதல். கருணாநிதியின் முதல் தவணை ஆட்சியில் கேரளத்திற்கு சைக்கிளில் அரிசி கடத்தினது வரையிலான தனது அனுபவங்களைக் கூறினார்.

ராத்திரி உறங்கும்போது ஒரு கம்பளிதான் இருந்தது. பட்டாளத்திலிருக்கும் சிஷ்யன் ஒருவனின் அன்பளிப்பு. ஆசானினி பிரமாண்ட தேகத்திற்கே அது போதாது பிறகு அந்த டிசம்பர் மாசக் குளிரில் எனக்கும் சேர்த்து எப்படி காணும்? இளம்பெண்ணின் கல்லறை. இதில் படுக்கவேண்டாமென்று நல்லா சொல்லிப்பார்த்தேன். 'இதுதான் வசதி' எனப் பிடிவாதங்கொண்டார். அந்தப் பயம் ஒருபக்கமிருக்க, என்ன செய்தாலும் பாதிமுதுகு கம்பளிக்குள் வரமாட்டேன் என்று அடம்பிடித்தது. போகப் போக சிமென்ட் குளிர் கடுமையாக வாங்கிப் பறிப்பது தவிர வேறு வழிஇல்லை என உணர்ந்து மெல்ல தலை உயர்த்திப் பார்த்தேன். ஆளு பூண்ட உறக்கம் இதுதான் வசதி என்று இழுத்தேன். இரண்டு இழுப்பில் ஏகதேசம் பகுதி எனது எல்லைக்குள் வந்தாயிற்று. இனி கொஞ்சம் போல பாக்கி. அப்போதுதான் அந்தக் காரியம் நடநடதது. தூக்கத்தில் சாதாரணமாக அசைவது போல மலந்துபடுத்தவர், இடக்கையை அடியில்

கொடுத்து நான் கைப்பற்றிய பகுதிகளை மீட்க முனைந்தார். பிடியை விடாமல் முழுப்பலத்தையும் பிரயோகித்து நான் பின்னுக்கு இழுக்க, ஒவ்வொருவரும் தெரிநடதே, ஆனால் தெரியாதது போலக் காட்டிக்கொண்டோம். பிடியும் வலியும் உக்கிரமடைந்து, கடைசியில் வெற்றி என் பக்கம் என்ற நிலை வந்தபோது பானை கீறியதுபோல ஒரு ஓசை, மூக்கைப் பொத்திக் கொண்டே நாலைந்தடி தள்ளி புல்தரையில் விழுந்தேன்.

ஆசான் என்ன எழவும் தின்னுவார். பனைகளில் அக்கானி குடிக்கவரும் பழவுண்ணிகளைப் பொறிகட்டிப் பிடிப்பது முதல், காக்கை கூடுகளைக் கடஞ்சி பொறுக்குவது வரையிலும் செய்வார். சாரயாத்துடன் கூட்ட ஒன்றும் இல்லை என்றால் யாருக்காவது தேன் பெட்டிகளில் கையிட்டு ஈச்சிகளை அள்ளி வந்து வறுப்பார். ஒரு தடைவை வளையில் கையிட்டு எலி பிடிக்கப்போய் மாட்டிய சம்பவத்தைச் சொன்னார்.

"டேய்! இப்பதான் பேசீண்டிருக்கேன். என் இருதயம் தளர்ந்திட்டுண்டு. விசாகம் கம்பு எறங்கின சமயம். பள்ளி விளையில பனை ஏறீட்டு வரும்ப, வளைக்குள்ள சத்தங் கேட்டுது. எலி இருக்கும்ணு கையப் போட்டேன். எழவு இருந்ததோ முட்டைபோட்டு அடைகாத்த நல்லபாம்பு. கொத்தின கொத்தல்ல பல்லுபொடிஞ்சி என் வெரலுக்குள்ள ஏறீட்டுது. கூட உள்ள பனையேறிய, 'நீ போக்குத் தான்' னு சொன்னானுவ. நான் இத்திரி சுண்ணாம்பெடுத்து அந்த எடத்தில தடவினேன். வேற ஒண்ணும் செய்யல்ல. வெளஞ்ச மிருங்கயாப் பாத்து ஒரு கடி. இனிச்சிட்டிருந்தது. பல்லுபட்ட எடத்தில பச்சிலையை வதக்கி சூடுவசடசேன். பிறவு கொஞ்சநாளு பத்தியபாகம், தன்றேடம் இருந்தா மதி, பாம்பில்ல எந்த மயிராவட்டு , நம்மள என்னடேய் செய்யும்? அப்பிடி செஞ்சாத்தான் என்ன? ஆன சவுட்டினா உசிரு போவும், மயிரப் பிடுங்குமா?".

வனவாசம் முடிந்த சில நாட்களில் பக்கத்துவீட்டுக்காரன் செத்துப் போனான். இயல்பிலேயே நோயாளியான அவன் மேல் நாங்கள் தொடுத்த தாக்குதலும் காரணமாக இருந்தது. இழுக்கத் தொடங்கினானென்றால் நிறுத்தாத இழுப்பு. உயிர் பிரிய மிகவும் சிரமப்பட்டான். ஒருநாள் உறக்கப்

பாயிலிருந்து நான் எழவில்லை, அவன் பொண்டாட்டி நின்று, அண்ணா என்றாள். "அவியளுக்கு கூடுதலா இருக்கு. உங்களைத் தேடுனும்."

என்னைக் கண்டதும் கண்ணீர்விட்டு அழுதான். 'எனக்க மக்களுக்கு இனி யாரு இருக்கியா?' என பாதி வார்த்தையும், பாதி சைகையுமாக கேட்டான். கையைப்பிடித்து முத்தினான். அவனை ஆறுதல்படுத்தும் முகமாக நானும் சில வார்த்தைகள் சொன்னேன். கூடஇருந்து ஆஸ்பத்திரியில் வச்சிப்பார்க்கவும் செய்தேன். அவன் சாகும் முன்பு கூறிய வார்த்தைகள் அப்படியே நெஞ்சில் உள்ளன.

"தம்பி! கொஞ்சம் போல நாளு இந்த ஒலகத்தில் ஜீவிப்போம். அதுல நீயா நானாண்ணு மனுஷன். ஒன்னக்கண்டு எனக்குப் பயம். என்னக்கண்டு ஒனக்குப் பயம். அதாங்காரணம். நான் சாவியதுல எனக்கு வருத்தமே கிடையாது. உனக்கு விரோதமா ஜீவிச்சியத விட சினேகமா செத்துப் போறதில சந்தோசம். என்ன அடக்கி குழியில மண்ணுவாரிப் போடும்போது நான் கொண்டு திரிஞ்ச கோமாரியையும், தெரச்சிவாலையும் வடக்குப்புரையில வச்சிருக்கிற எல்லா ஆயுதங்களையும் நீதான் கூடப்போடணும் செய்வியா?"

யாரை எதிரியாக நினைத்தேனோ, யாருக்குப் பயந்த சுருட்டுவாள் வாங்க முயற்சித்தேனோ, அவன் நண்பனாக மரித்துப் போனதில் மனக்கலக்கம். இனிமேல் அடியும் வேண்டாம், பிடியும் வேண்டாம் என சும்மா இருந்தேன். ஆசான் விடுவதாக இல்லை.

"ராஜன்! கள்ளம் சொல்லியேண்ணு நெனச்சாத. நல்ல சுருட்டுவாளு ஓரிடத்தில் இருப்புண்டு. இப்பபோனா கிட்டும். "

வழக்கம்போல இருபது ரூபாய் கொடுத்தேன். ஏலாயக் கடந்து பொற்றையில் ஏறியவர் மரிச்சினி கம்பின் உதவியால் கொல்லாவிலிருந்து பழம் பறித்தார். பனங்கீற்றோலையுடன் பாறையில் அமர்ந்தவர், முண்டின் நுனிகொண்டு ஓலையில் படிந்த அழுக்கைத் துடைத்து, முனைகளை மடக்கி நடுவில் பள்ளமெடுத்து பட்டைமுடைந்தார். கொல்லாம்பழத்தை அதில் பிழிந்துவிட்டவர் கள்ளுகொண்டு பனையேறி இறங்கும்வரை காத்திருந்தார்.

எழும்பி உடம்பறையில் அமர்ந்தேன். தூரத்தெரியும் மாடத்தின் வெளியே நின்று ஒருவர் மண் கவ்விக்கிடக்கும் அதனைக் கவனிக்கிறார். ஆசானாக இருக்குமோ? ஆடிப்போன தூண் கம்புகளைத் தோளில்தாங்கி நிறுத்தியபோது இன்னொருவன் துணைக்குவந்தான்.

நான் ஓடினேன். என் நினைப்பு சரியாக இருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும். வரப்புகளில் கால் பாவாமல் விழுந்தெழும்பியதைக் கூட பொருட்படுத்தாமல், மாடத்தில் வந்து நின்று மூச்சிரைக்கிறேன். சந்தேகமே இல்லை. ஆசான்தான் கூட பக்கத்துவீட்டுக்காரன்.

''ராஜன்! சுருட்டுவாள் கேட்ட இல்லியா?''

''……..''

''ஓரிடத்தில ஒண்ணு இருப்புண்டு. பாப்பம்மா?''

''…. ….. …..''

''என்ன டேய் மிண்டாத இருக்கிய?''

''இல்ல''

''பண்டொரு வலிய ஆயான் இனிமே வாளையோ, வேறெந்த ஆயுதத்தையோ எடுக்கமாட்டேன்ணு சத்தியஞ்செஞ்சி காளிக்க முன்ன ஒரு தாழம்பூவுடன் வச்சதாக்கும். அந்தப் பூவு இண்ணிக்கிவர வாடல்ல. ''

''…. ….. …''

அவன் அப்பன் பனையேறம்ப துக்கதேவிக்க தொந்தரவு இருந்தது. திடீர்ணு தீயா மாறி பனைவரை எழும்பி கெட்டிப்பிடிச்ச வருவாளாம். அக்கானிய காஞ்சாடியில வீத்தம்ப மூத்திரமா நாறும். ஒருநாளு பாளை இடுக்கம்ப கண்டெடுத்தான். பாத்தா சுருட்டுவாளு. அவனுக்க நெலமயக் கண்டு காளிதேவி கொடுத்ததாக்கும்.

''…. ….. ….''

''அவன் செத்தபிறகு மொவன் பனையேறி அதக் கொண்டு திரிஞ்சான். திருவெட்டாறு பக்கம் காஞசனிண்ணு ஒரு அம்மிங்கிரு. அவளுக்கோட சினேகமுண்டாயி தட்டிக் கொண்டு வரும்ப நாயம்மாரு தடுக்கப் போய்

வெட்டுங்குத்தும், கொலவாதமும் தெய்வத்துக்க வாளுக்கு தோஷம் உண்டாக்கீற்றேண்ணு காளிக்கே அத திரும்ப படைச்சான். "

"இனிமே அது நமக்கு வேண்டாம். "

"அதுனால ஒருகேடும் உண்டாவாது, காலங்கழிஞ்சதுதான். தோஷங்கழிச்சா செரியாவீடும். "

"அதுக்கில்ல. இனி வேண்டாம். "

"ஏனாக்கும்? "

பதில் சொல்லாமல் நான் பக்கத்துவீட்டுக்காரனைப் பார்த்தேன். எனது கையைப் பிடித்து மெதுவாய் அழுத்தினான். அதில் அன்பு தெரிந்தது.

"ஒண்ணு கைல இருந்தா கொள்ளாம் இல்லியா டேய். "

"வெறுதால என்னத்துக்கு? கைல இருந்தா என்னெல்லாமோ தோணும். "

ஆசான் தலையை ஆட்டிச் சிரித்தார். அதில் குறும்பு இருந்தது. "ஒனக்கிது இப்பத்தான் தெரிஞ்சுதா?"

நான் பதில்பேசவில்லை.

"முதமுதலா எனக்கிட்ட நீ வாளுகேட்ட இல்லியா. அப்பவே எனக்குத் தெரியும். "

"அதுனாலத்தான் ஆகாட்டீட்டு கள்ளுகுடிச்ச பைசா வேண்டினீராக்கும்? "

"ஓம்பிள்ள. வேற என்ன செய்ய?"

"நல்ல ஆளுதான் நீரு. "

"நமக்கு சினேகந்தான் டேய் நிரந்தரம் வேணும். ஒண்ணுக்கொண்ணு சண்டை இடுவோம். சரிதான். நீ விழுந்தா நான் தூக்கணும், நான் விழுந்தா நீ தூக்கணும். இல்லாத என்னடேய் வாழ்க்க ... எல்லாம் போவட்டும், வல்லவும் படியறுமா?"

"இதா கொண்டு வாறேன். நிண்ணுடும். "

"வீட்டுக்காரள உபத்திவிச்சாத அஞ்சோ பத்தோ கிட்டினாலும் மதி. "

"சரி. ஒரு இடமும் போவாதேயும். "

வீட்டில் வந்து மேசையைத் திறந்தேன். நயாபைசா இல்லை. புளிப்பானையைக் கடைந்தேன். அண்டிப்பானையில் கையிட்டுப் பார்த்தேன். எங்குமே இல்லாமை தொனித்தது.

''புரைக்குள்ளபோய் என்னலே கடைய?'' அடுக்களையிலிருந்து அம்மாவின் குரல்.

''ஒண்ணுமில்ல. இருவது ரூவா தருவியா? ஒடுக்கம் தாறேன். ''

''ரூவாயா? என்னத்துக்குலே?''

''ஆசானுன்னு கொடுக்க. ''

''பயலுக்கென்ன கிறுக்கா? கெழவன் செத்த இடத்தில புல்லுகூட முளைச்சிருக்குமே.''

உரைநடைநாள் மலர்கள்

ஆசிரியர் தொ. பரமசிவன்

அச்சிட்டோர் பாவை பப்ளிகேஷன்ஸ்,

இராயப்பேட்டை, சென்னை 600014.

நாவல் புத்தன்வீடு

ஆசிரியர் ஹெப்சியா ஜேசுதான்,

அச்சிட்டோர் காலச்சுவடு பதிப்பகம்,

நாகர்கோவில்,

குமரி மாவட்டம்.

நாடகம் ஜன்மா

ஆசிரியர் முத்துவேலழகன்

அச்சிட்டோர் சீதை பதிப்பகம்

6/16, தோப்பு வேங்கடாசலம் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தாள் 2 இலக்கணம் நன்னூல் - எழுத்து

பொதுப்பாயிரம் சிறப்பு பாயிரம் நீங்கலாக

Allied Subject I

பாடநூல் நாட்டுப்புறவியல் ஆய்வு

ஆசிரியர் டாக்டர் சு. சக்திவேல்

மணிவாசகர் பதிப்பகம்

31, சிங்கர் தெரு, பாரிமுனை

சென்னை – 800 108

பார்வை நூல் நாட்டார் வழக்காற்றியல்

சில அடிப்படைகள்

ஆசிரியர் தே. லூர்து.

கிடைக்குமிடம் நாட்டார் வழக்காற்றியல்துறை

தூய சவேரியார் கல்லூரி

பாளையங்கோட்டை – 627002

அலகு – 1 நாட்டுப்புற கலைகளும் கைவினைப் பொருட்களும் கட்டுரை எண் 8 நாட்டுப்புற கலைகளின் வகைப்பாடு, நாட்டுப்புற கலைகள், கூத்து வகைகள், மண்பாண்டக் கலை முதலான கைவினைப் பொருட்கள்

அலகு – 2 நாட்டுப்புற நம்பிக்கைகள், நாட்டுப்புற தெய்வங்கள் கட்டுரை 9,10 பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளும் சகுனங்களும், நம்பிக்கைகளின் வகைகள், நம்பிக்கைப் பற்றிய ஆய்வு, நம்பிக்கைப் பற்றி அமைப்பியல் ஆய்வு.

அலகு - 3 நாட்டுப்புற திருவிழாக்கள், நாட்டுப்புறவிளையாட்டுகள் கட்டுரை 11,12 விழாக்கள், சந்தைகள், கொள்கைகள், சிறுவர் சிறுமியர் விளையாட்டுக்கள், அமைப்பியல் ஆய்வு.

அலகு - 4 நாட்டுப்புற மருத்துவம் கிறிஸ்த்தவ மீனவர் நாட்டுப்புற மருத்துவம் இயற்கை நாட்டுப்புற மருத்துவம், நாட்டுப்புற வைத்திய முறை

அலகு - 5 நாட்டுப்புறக் கட்டடக்கலை, பயன்பாட்டு நாட்டுப்புறவியல் ஆய்வு கட்டுரை 14,16

மூவகையான கட்டிடக்கலைகள், கல்வி திட்டங்களுக்கு நாட்டுப்புறவியலைப் பயன்படுத்துதல் ,முதியோர் கல்வி சிறுசேமிப்பு.

Environmental Studies

சுற்றுப் புறச் சூழல் கல்வி

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்

திருநெல்வேலி

B.A. தமிழ் - முதலாமாண்டு

முதற்பருவம்

இக்கால இலக்கியம்

காலம் : 3 மணி **மாதிரி வினா** மதிப்பெண் : 75

பகுதி - அ (20 x 1 = 20)

சரியான விடையைத் தேர்வு செய்க.

1. மாதங் தங் கற்பின் புகழினிலே உயர்ந்த நாடு எது எனப் பாடிய கவிஞர் யார்?

   அ) பாரதி ஆ) பாரதிதாசன் இ) அமுத பாரதி ஈ) சித்ரபாரதி

2. வெள்ளம் போல் தமிழர் கூட்டம் பெருகுதல் வேண்டும் எனப் பாடியவர்

அ) சுரதா ஆ) மு. மேத்தா இ) சிற்பி ஈ) பாரதிதாசன்

3. புத்தரும் ஏழைச் சிறுவனும் என்ற பாடல் அமைந்துள்ள நூல் யாது?

அ) மரும் மாலையும் ஆ) உமர்கய்யாம பாடல்கள்

இ) ஆசிய ஜோதி ஈ) சிரிக்கும் பூக்கள்

4. வீடுகட்டும் தொழிலாளி பின்னாளில் வீரத்தலைவன் என்று பட்டுக் கோட்டையார் யாரைக் குறிப்பிடுகின்றார்?

அ) ஆபிரகாம் லிங்கன் ஆ) டைலர்

இ) மாலினோவஸ்கி ஈ) நெப்போலியன்

5. எத்தனை தடவை மன்னிப்பது யார் படைப்பு?

அ) காவ்யா ஆ) கண்ணன் இ) கம்பர் ஈ) கண்ணதாசன்

6. அனுபவத்தின் சிக்கனம் எது?

அ) அறம் ஆ) சமயம் இ) நீதிநூற்கள் ஈ) சிற்றிலக்கியங்கள்

7. அகிலமே அவனோடு நட்புக் கொள்ள வருகிறது? யாரோடு?

அ) துறவி ஆ) மருத்துவர் இ) கட்டிடத்தொழிலாளி ஈ) மனிதனோடு

8. மனிதர்கள் மரங்களைப் போல் வாழும் காலம் வரும் என்று எதிர்பார்க்கும் கவிஞர் யார்?

அ) அ.ழ. வள்ளியப்பா ஆ) பிச்சமூர்த்தி

இ) பசுவய்யா ஈ) பிரதீபன்

9. 'ஸ்டேஷன்' என்னும் கவிதையின் ஆசிரியர்?

அ) நகுலன் ஆ) பிரமிள் இ) சல்மா ஈ) கனிமொழி

10. பிச்சைப் பாத்திரம் செய்து கையில் ஏந்துகிற போது அவமானப்படுவது எது?

அ) மணல் ஆ) சகதி இ) சிமெண்ட் ஈ) மண்

11. ஊடகங்களுக்கு நல்ல தீனி எது?

அ) மக்கள் ஆ) மாணவர் உலகம்

இ) தொழிலாளர் ஈ) சாமியார்கூத்து

12. தேயிலைச் செடி எதற்கு உவமைக் கூறப்பட்டுள்ளது?

அ) கயன் ஆ) மண்டை நாடு இ) உண்டியல் ஈ) அட்சயப் பாத்திரம்

13. பூமி சாஸ்திரம் என்னும் நூலைத் தமிழில் எழுதி வெளியிட்டவர்?

அ) இரேனியுஸ் அடிகளார் ஆ) பெங்கி

இ) சீகன் பாங்கு ஈ) தாமஸ்

14. நும் பாடப்பகுதியில் அமைந்த ஆசிரியர் ஆதவன் தீட்சண்யாவின் கதைத் தலைப்பு?

அ) ஹிதம் ஆ) தனிமை இ) கூட்டம் ஈ) விரதமல்ல தனிமை

15. 'ஒரு கர்ம வீரனைப் போல் சடக்கென்று எழுந்தான்' யார்?

அ) சிம்சன் ஆ) கர்ணன் இ) சடையன் ஈ) மூக்கன்

16. 'அரிசி' என்னும் கதையின் ஆசிரியர் யார்?

அ) நீலபத்மநாபன் ஆ) ஜெயகாந்தன் இ) அகிலன் ஈ) நகுலன்

17. இருளில் மறைந்து பொன்னகரம் கதைத்தலைவி சம்பாதித்த ரூபாய் எத்தனை?

அ) 25 ஆ) 50 இ) 15 ஈ) முக்கால் ரூபாய்

18. புத்தன் வீடு நாவல் எவ்வகையைச் சார்ந்தது?

அ) வரலாற்று நாவல் ஆ) குறு நாவல்

இ) பண்பு விளக்க நாவல் ஈ) வட்டார வழக்கு நாவல்

19. 'ஜன்மா' என்ற நாடகத்தில் இடம் பெறும் அம்பையின் காதலன்.

அ) சல்மா ஆ) பீஷ்மர் இ) வேடுவன் ஈ) பரசுராமர்

20. காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்ட இன்பம்

அ) காந்தர்வம் ஆ) பைசாசம் இ) ஆசுரம் ஈ) ராக்கதம்

பகுதி - ஆ (5 x 4 = 20)

(250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க)

21. அ) இளந்தமிழருக்கு நாமக்கல்லார் கூறும் செய்திகள் யாவை?

(அல்லது)

பாரதிதாசன் கூறும் புதிய சமுதாயம் எத்தகையது? விளக்குக.

22. அ) செய்குதம்பி பாவலர் குறிப்பிடும் பெண்ணின் மாட்சி குறித்து எழுதுக.

(அல்லது)

அ.ழ. வள்ளியப்பா 'எது சுதந்திரம்' என்னும் தலைப்பில் குழந்தைகளுக்கு கூறும் அறிவுரை யாது?

23. அ) பட்டுக்கோட்டை வழி நின்று உழைப்பின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

(அல்லது)

சிக்கனம் குறித்து ஆசிரியர் சுரதா கூறுவனவற்றைக் கூறுக?

24. அ) விருட்ச மனிதர்களின் வாழ்வு எவ்வாறு அமைதல் வேண்டும் என சித்தரிக்கின்றார்?

(அல்லது)

சினேகிதனின் தாழ்வான வீட்டின் நிலையை விவரி.

25. அ) நாட்டுத்தொண்டின் ஒரு பகுதியென தொ.ப. குறிப்பிடும் கல்வெட்டுச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

புதுமைப்பித்தன் காட்டும் பொன்னகரத்தின் வாழ்வைக் கூறுக.

பகுதி - இ (5 x 7 = 35)

(600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க)

26. அ) 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்' - பாரதிவழி நின்ற விளக்குக.

(அல்லது)

'எந்நாளோ' என்னும் தலைப்பில் ஆசிரியர் கூறும் கருத்துக்களைக் கூறுக.

27. 'மண்' தன் இயல்பை புலப்படுத்துதலை ஆசிரியர் வழிநின்று விளக்குக.

(அல்லது)

வழித்துணையில் மக்களுக்கு கூறும் செய்திகளை எழுதுக.

28. அறிவியல் தமிழ் குறித்து தொ.ப. கூறும் கருத்துக்களை தொகுத்துரைக்க.

(அல்லது)

நல்ல உரைநடை அமைதல் வேண்டும் எவ்வாறு?

29. அரிசி' என்னும் கதையில் அமைந்த மக்களின் உளப்பாங்கினை எடுத்துரைக்க.

(அல்லது)

அரசமரம் கூறும் கதையின் பெண்ணின் நிலையைச் சித்தரிக்க.

30. 'ஜன்மா' நாடகத்தின் 'அம்பா' என்னும் பாத்திரத்தின் குணநலனை எழுதுக?

(அல்லது)

‘g[j;jd; tPL’ ehty; TWk; r\fr; bra;jpfisf; Fwpg;gpLf.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

B.A. தமிழ் - முதலாமாண்டு

முதலாம் பருவம்

இலக்கணம் - நன்னூல் - எழுத்து

காலம் : 3 மணி **மாதிரி வினா** மதிப்பெண் : 75

பகுதி - அ (20 x 1 = 20)

சரியான விடையைத் தேர்வு செய்க

1. அணுத்திரள் ஒலி என்பது எது?

   (அ) சொல் (ஆ) எழுத்து (இ) மெய் (ஈ) உயிர்

2. முதல் எழுத்துக்கள் எத்தனை

   (அ) 30 (ஆ) 3 (இ) 9 (ஈ) 12

3. சார்பெழுத்தின் விரி

   (அ) 100 (ஆ) 200 (ஈ) 369 (ஈ) 150

4. இடையின எழுத்துக்கள் பிறக்கும் இடம்

   (அ) தலை (ஆ) கழுத்து (இ) மூக்கு (ஈ) தொண்டை

5. அண்ணம் நுனிநா வருடபிறக்கும் எழுத்துக்கள்

   (அ) பம (ஆ) கங (இ) ரழ (ஈ) றன

6. நிலம் என்பதை

   (அ) பெயர்ப் பாகாப்பதம் (ஆ) வினைப்பகாப் பதம்

   (இ) இடைப்பகாப்பதம் (ஈ) உரிப்பகாப்பதம்

7. உயிரளபெடை எத்தனை

(அ) 21 (ஆ) 11 (இ) 1 (ஈ) 14

8. விகாரம் அனைத்தும் மேவலது _____?

(அ) இயல்பே (ஆ) திரிதல் (இ) தோன்றல் (ஈ) கெடுதல்

9. நனிபேதை என்பது

(அ) இடைச்சொற்றொடர் (ஆ) அடுக்குத்தொடர்

(இ) விரித்தொடர் (ஈ) உரிச்சொற்றொடர்

10. இணையடி நீழலே என்னவிகாராம்

(அ) வலித்தல் (ஆ) மெலித்தல் (இ) குறுக்கல் (ஈ) நீட்டல்

11. சாக்குத்தினான் என்பது

(அ) சா + குத்தினான் (ஆ) சாவ + குத்தினான்

(இ) சாக்கு + குத்தினான் (ஈ) சாக்குத்தி + ஆன்

12. மரப்பெயர் முன் எழுத்து மிகும்

(அ) இனமெல்எழுத்து (ஆ) இனவல்எழுத்து

(இ) இனஇடையினஎழுத்து (ஈ) இனநீட்டல் எழுத்து

13. "ஈழும் கம்மும் உருகும் _____ மானும்"

(அ) சினைப்பெயர் (ஆ) தொழிற்பெயர்

(இ) பண்புப்பெயர் (ஈ) இடப்பெயர்

14. தெங்கு நீண்டு ஈற்றுயிர் மெய் கெடும் எதுவரின்?

(அ) காய் (ஆ) மலர் (இ) இவை (ஈ) ஒலை

15. எட்டன் உடம்பு எதுவாகும்?

(அ) ன (ஆ) ம (இ) ல (ஈ) ண

16. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது

(அ) இயல்பு (ஆ) மிகுதல் (இ) திரிதல் (ஈ) தோன்றல்

17. ஆ, மா, கோ ஆகியச் சொற்கள் எந்தச் சாரியைப் பெற்றவரும்

(அ) ண (ஆ) ற (இ) ன (ஈ) அற்று

18. வேற்றுமை உருபுகள் எத்தனை

(அ) 8 (ஆ) 16 (இ) 4 (ஈ) 20

19. அ.ஃ.து இ.ஃ.து உ.ஃ.து என்ற சுட்டின் முன் வரும் வரும் சாரியை எது

(அ) அன் (ஆ) அற்று (இ) இன் (ஈ) இற்று

20. பெயர்வழித் தம்பொருள் தரவரும்

(அ) திணை (ஆ) பால் (இ) இடம் (ஈ) உருபு

பகுதி - ஆ (5 x 4 = 20)

250 சொற்களுக்கு மிகாமல் விடைதருக

21. (அ) சார்பெழுத்தின் விரியினை எழுதுக

(அல்லது)

(ஆ) மாத்திரை - குறிப்பெழுதுக

22. (அ) பதம் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) பண்புப்பகுதிகள் புணர்ச்சியில் அடையும் மாறுதல்களை விளக்குக.

23. (அ) விகாரப்புணர்ச்சியினைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) திசைப்பெயர் புணர்ச்சியினை விளக்குக.

24. (அ) தேன் என்னும் சொல் எவ்வாறு புணரும்?

(அல்லது)

(ஆ) தமிழ் தாழ் என்னும் சொற்களின் புணர்ச்சியை எழுதுக.

25. (அ) 'உருபுகள் நாற்பது' எவ்வாறு?

(அல்லது)

(ஆ) பொதுச் சாரியைகள் எவை? விளக்குக.

பகுதி - இ (5 x 7 = 35)

பின்வரும் வினாக்களுக்கு 600 சொற்களில் விடையளிக்க

26. (அ) சார்பெழுத்துக்களில் அளபெடைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களைச் சான்றுடன் விளக்குக.

27. (அ) ஓரெழுத்தொரு மொழிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) வடமொழி குறித்து நன்னூலார் கருத்துக்களை விளக்குக.

28. (அ) செய்யுள் விகாரத்தினைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) அகரயீற்றுச் சொற்கள் புணரும் விதத்தினை விவரி?

29. (அ) னகர யீற்றுச் சொற் பணர்ச்சியை விளக்குக.

(அல்லது)

(ஆ) மகரயீற்றுச் சொற்புணர்ச்சியை விளக்குக.

30. (அ) உருபுப் புணரியலில் நன்னூலார் கூறும் செய்திகளைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

(M) rhhpia vd;why; vd;d> rhhpiafs; ahit> tpsf;Ff.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

B.A தமிழ் - முதலாமாண்டு

முதலாம் பருவம்

Paper –I நாட்டுப்புறவியல

காலம் 3 மணி **மாதிரிவினா** **மதிப்பெண் 75**

பகுதி இ (20x1)

சரியான விடையைத் தெரிவு செய்க

1. மக்களின் இல்லங்களிலும், திருவிழாக்களிலும் அழகுணர்ச்சியுடன் காணப்படுவது

(அ) நாட்டுப்புறக்கலைகளும் கைவினைப் பொருட்களும்

(ஆ) தொன்மைக்கலை

(இ) நாட்டுப்புறக்கலை

(ஈ) செம்மைக்கலை

2. நாட்டுப்புறக்கலைகளை பானர்ஜி பிரிப்பது

(அ) 12 (ஆ) 9

(இ) 6 (ஈ) 3

3. கரகாட்டம் தொடர்புடைய தெய்வம்

(அ) கொற்றவை (ஆ) மாரியம்மாள்

(இ) முருகன் (ஈ) இந்திரன்

4. பலகலைகளின் பிறப்பிடம்

(அ) திருச்சி (ஆ) சேலம்

(இ) தஞ்சை (ஈ) மதுரை

5. வாழ்க்கை முறைகளின் கூட்டுச் சேர்க்கை பண்பாடு என்று கூறுபவர்

(அ) டெய்லர் ஆ) மாலினோவஸ்கி

(இ) ரூம் பெனடிக்ட் (ஈ) பிரவுன்

6. ஆறலைக்கள்வரின் நடமாட்டத்தைக் காட்டும் பறவை

(அ) கணந்துள் ஆ) குயில்

(இ) கிளி (ஈ) நாரை

7. பெரும்பாரம்பரிய தெய்வத்தின் பெயர்

(அ) காளி ஆ) சுடலைமாடன்

(இ) பிள்ளையார் (ஈ) சிவன்

8. பண்பாட்டுணர்வையும், ஒருமைப்பாட்டுணர்வையும் வளர்க்கும் அமைப்பு

(அ) சடங்குகள் ஆ) திருவிழாக்கள்

(இ) விளையாட்டுகள் (ஈ) திருமணங்கள்

9. ஐயானாருக்கு எடுக்கப்படும் விழா

(அ) தேர் திருவிழா ஆ) கம்பம் திருவிழா

(இ) தீ மதி திருவிழா (ஈ) மொந்தையன் திருவிழா

10. பொழுதுபோக்கை அன்றி உடல்நலம், மனநலம் பேணுபவை

(அ) சிறுகதைகள் ஆ) நாடகங்கள்

(இ) விளையாட்டுகள் (ஈ) வில்லுபாட்டு

11. ஆப்பிரிக்க நீக்ரோ மக்களின் தேசீய விளையாட்டு

(அ) சடுகுடு ஆ) பல்லாங்குழி

(இ) கிரிக்கெட் (ஈ) ஹாக்கி

12. குருவிக் குஞ்சுகளை நோய்க்கு பயன்படுத்தும் பழங்குடி மக்கள்

(அ) கோண்ட்இன மக்கள் ஆ) பொஹீமியா

(இ) கோதா இன மக்கள் (ஈ) கோயீ இன மக்கள்

13. உடலுறுப்புக்களைச் செய்து படைக்கும் சடங்கு

(அ) பாவனைச் சடங்கு ஆ) தொத்துச் சடங்கு

(இ) போல செய்தல் (ஈ) மாந்திரீகம்

14. நோய்க்குக் காரணம்

(அ) தூய்மையின்மை ஆ) வறுமை

(இ) தெயவச் சினம் (ஈ) பொருனாதாரக் குறைவு

15. கலைகளின் தாய்

(அ) சிற்பம் ஆ) நடனம்

(இ) ஓவியம் (ஈ) கட்டிடம்

16. காலத்தால் அழிக்க இயலாத கலைக்கருவூலங்கள்

(அ) கோயில்கள் ஆ) மாடல்கள்

(இ) எழுத்துகள் (ஈ) கல்வெட்டுகள்

17. திராவிடக் கட்டிடக் கலையின் முன்னோடி

(அ) மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆ) சிந்துவெளி நாகரீகம்

(இ) மொசப்பத்தாமியா (ஈ) ஸ்பெயின்

18. கியூபா நாட்டு மகக்ளின் எழுச்சிக்குப் பயன்பட்ட பாடல்கள்

(அ) சமய பாடல்கள் ஆ) கலை பாடல்கள்

(இ) திரைப் பாடல்கள் (ஈ) நாட்டுப்புறப் பாடல்கள்

19. சமூக மாற்றத்திற்குப் பயன்படுபவை

(அ) நாட்டுப்புறக்கலைகள் ஆ) நாட்டுப்புறப்பாடல்கள்

(இ) நாட்டுப்புற விளையாட்டுகள் (ஈ) நாட்டுப்புற நடனங்கள்

20. ‘‘வானம் பொழியுது; பூமி விளையது; மன்னவன் காணிக்குக் கப்பம் ஏது’’ எனக் கூறியவர்

(அ) காந்தியடிகள் ஆ) கட்டபொம்மன்

(இ) காமராஜர் (ஈ) காமராஜர்

பகுதி ஆ (5x4)

250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க

21. நாட்டுப்புற கைவினைப் பொருட்கள் ஏதேனும் இரண்டினைக் குறித்து எழுதுக.

அல்லது

கணியான் ஆட்டம் குறித்து எழுதுக.

22. நாட்டுப்புற நம்பிக்கைகள் பற்றி அறிஞர்களின் கூற்றினைத் தருக

அல்லது

நம்பிக்கைப் பற்றிய அமைப்பியல் ஆய்வு குறித்து எழுதுக

23. குலக்குறி வழிபாடு – விளக்குக

அல்லது

புனிதப்போலி பொருள் வழிபாடு – விளக்கு

24. ஆடிப் பெருக்கு குறித்து எழுதுக

அல்லது

கார்த்திகைத் தீபம் குறித்து எழுதுக

25. ஆப்பிரிக்க நீக்ரோ மக்களின் தேசிய விளையாட்டு பற்றி எழுதுக

அல்லது

மந்திர சமய மருத்துவம் பற்றி நீவிர் அறிந்துவற்றை எழுதுக

பகுதி இ (5x7)

600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க

26. பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளும் சகுனங்களும் குறித்து இலக்கியம் சார்ந்த

கருத்துகளை எழுதுக

அல்லது

நம்பிக்கைகளின் வகைகளை தொகுப்பு எழுதுக.

27. நாட்டுப்புற விளையாட்டுக்களை விளக்கி , அதன் பயன்களை எழுதுக.

அல்லது

பெருந்தெய்வம் சிறு தெய்வ வழிபாடுகள் விளக்குக.

28. இயற்கை நாட்டுப்புற மருத்துவம் குறித்து எழுதுக

அல்லது

மீனவர் நாட்டுப்புற மருத்துவத்தினை விவரி

29. நாட்டுப்புற கட்டக் கலையினை குறித்து கட்டுரைக்க

அல்லது

நாட்டுப்புறவியலின் கைவினைப் பொருட்கள் பற்றி எழுதுக

30. நாட்டுப்புறவியலின் பயன்பாட்டினை ஆய்க?

அல்லது

முதியோர் கல்வி, சிறுசேமிப்பு குறித்து எழுதுக.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

SCHEME OF SYLLABUS

இளங்கலை – தமிழ் - பாடத்திட்டம்

இரண்டாம் பருவம் (Second Semester)

Title of the subject Part –III Tamil Literature	Teaching Hours Per week	Exam Hours	Maximum Marks	Credits
Major 3 சிற்றிலக்கியம்	5	3	75	
Major 4 நன்னூல்	5	3	75	
Allied subject paper II நாட்டுப்புறவியல்	6	3	75	
Rule bassed Education சமூக மதிப்பீட்டுக்கல்வி	2			

பருவம் - 2

சிற்றிலக்கியம்

தாள் 3 Major

அலகு 1 உள்ளடக்கம்

கலிங்கத்துப்பரணி

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

அலகு 2 நந்திக்கலம்பகம்

அலகு 3 தமிழ் விடு தூது

திருக்கைலாய ஞானஉலா

அலகு 4 முக்கூடற்பள்ளு

அலகு 5 குற்றலாக்குறவஞ்சி

தாள் 4 Major

இலக்கணம் நன்னூல் - சொல்

(இடையில் உரியியல் நீங்கலாக)

Allied Subject

நாட்டுப்புறவியல் Paper II **சு. சக்திவேல் நாட்டுப்புறக் கலைகள்**

சமூக மதிபீட்டுக் கல்வி

கலிங்கத்து பரணி

காடு பாடியது

(பாலை நிலத்தையும் அது வெம்மை மிகுதியால் விளங்கும் இயல்பையும் பற்றிப் பாடிய செய்யுட்களின் பகுதி.)

காடு பாடுவோம்

போரில் இறந்த கலிங்க வீரர்களுடைய தினத்தாலாகிய உணவைத் தந்து, ஒப்பற்ற கலிங்கப் போர்களத்திலுள்ள பேய்களினுடைய வயிற்றினை இரண்டு பங்காக நிறையச் செய்தாள் காளி தேவி. அவள் வாழுமிடம் பாலை நிலத்தைச் சார்ந்த காடு. அதன் சிறப்பை இனிப் பாடுவோமாக!

களப்போர் விளைந்த கலிங்கத்துக்
கலிங்கா நிணக்கூழ் களப் பேயின்
உளப்போர் இரணடு நிறைவிம்மதாள்
உறையும் காடு பாடுவோம். 75

மரம் செடி கொடிகள்

பொரிந்த காரை, கரிந்த சூரை
புகைந்த வீரை, எரிந்த வேய்,

உரிந்த பாரை, எரிந்த பாலை,
உலர்நத ஓமை, கலந்தவே, 76
உதிர்ந்த வெள்ளில் ஒடுங்கு நெல்லி,
உணங்கு தும்பை, உலர்ந்த வேல்,
பிதிர்ந்த முள்ளி, சிதைந்த வள்ளி,
பிளந்த கள்ளி, பரந்தவே, 77
வற்றல் வாகை, வறந்த கூகை,
மடிந்த தேறு, பொடிந்த வேல்,
முற்றல் ஈகை, முளிந்த விண்டு,
முரிந்த புன்கு! நிறைந்தவே. 78

பரிதியின் செயல்

தீய அக் கொடிய கானகத் தரை
திறந்த வாய்தொறும் நுழைந்து, 'தன்
சாயை புக்க வழி யாது' எனப் பரிதி
தன் கரம் கொடு திகைக்குமே! 79

நிழல் இல்லாமை

ஆடுகின்ற சிறை வெம் பருந்தின் நிழல்
அஞ்சி, அக் கடு வனத்தை விட்டு
ஓடுகின்ற நிழல் ஒக்கும்; நிற்கும் நிழல்
ஓரிடத்தும் உளய் அல்லவே! 80

நிழலின் செயல்

ஆதவம் பருகும் என்று நின்ற நிழல்
அங்கு நின்று குடிபோனது- 'அப்

பாதவம் புனல் பெறாது உணங்குவன்
பருகும் நம்மை என வெருவியே.'

நெருப்பும் புகையும்

செந் நெருப்பினைத் தகடு செய்து பார்
செய்தது ஒக்கும், அச்செந்தரைப் பரப்பு!

அந் நெருப்பினில் புகை திரண்டது ஒப்பு
அலது ஒப்புறா, அதன் இடைப் புறா! 82

நிலத்தில் நீரின்மை

தீயின் வாயின் நீர் பெறினும் உண்பதோர்
சிந்தை கூர, வாய் வெந் துலர்ந்து செந்
நாயின் வாயின்நீா தன்னை, நீர் எனா
நவ்வி நாவினால் நக்கி விக்குமே! 83

நிலத்தின் வெம்மை

இந் நிலத்துளோர் ஏகல் ஆவதற்கு
எளிய கானமோ? அரிய வானுளோர்
அந் நிலத்தின் மேல் வெம்மையைக் குறித்த
அல்லவோ, நிலத்து அடி யிடாததே! 84

இரவியும் இரு பொழுதும்

இரு பொழுதும் இரவி பசும் புரவி விசும்பு
இயங்காதது இயம்பக் கேண்மின்-
ஒரு பொழுதும் தரித்தன்றி, ஊடுபோக்கு
அரிது அணங்கின் காடு என்று அன்றோ! 85

பனிநீரும் மழைநீரும் வியர்வை நீரே!

'காடு இதனைக் கடத்தும்' எனக் கருமுகிலும்
வெண் மதியும் கடக்க, அப்பால்
ஓடி இளைத்து உடல வியர்த்த வியர்வன்றோ,
உகு புனலும் பனியும் அம்மா! 86

தேவர் வாழ்க்கை

விம்மு கடுவிசை வனத்தின் வெம்மையினைக்
குறித் தன்றோ, விண்ணோர் விண்ணின்
அம்முகடு முகில்திரை இட்டு, அமுத வட்ட
ஆலவட்டம் எடுப்பது அம்மா! 87

பேயின் மூச்சும் மரத்தின் புகையும்

நிலம் பிடை போர்ந்து ஓடாமே
நெடு மோடி, நிறுத்திய பேய்
புலம்பொடு நின்று உயிர்பன போல்

புகைந்து மரம் கரிந்து உளவால் 88

வறண்ட நாக்கும் முதிய பேயும்

வற்றிய பேய் வாய் உலர்நது,
வறள்நாக்கை நீட்டுவ போல்,
முற்றிய நீள் மரப் பொதும்பின்
முது பாம்பு புறப்படு மால்! 89

சூறாவளியின் இயல்பு

சுழி சுழல வரு பேய்த்தேர்!
மிதந்து வரு நீர்; அந் நீர்ச்
சுழி சுழல வருவதெனச்
சூறைவளி சுழன்றிடுமால்! 90

நீறு பூத்த நெருப்பு

சிதைந்த உடல் சுடு சுடலைப் பொடியைச் சூறை
சீத்தடிப்பச், சிதறிய அப்பொடியால், செம்மை
புதைந்த மணி புகை போர்த்த தழலே போலும்!
போலாவேல். பொடி மூடும் தணலே போலும்! 91

முத்துச் சொரிதல்! கண்ணீர் பொழிதல்!

மண் ஓடி, அற வறந்து, அங்காந்த
வாய் வழியே வேய் பொழியும் முத்தம், அவ்வேய்
கண்ஓடிச் சொரிகின்ற கண்ணீர் அன்றேல்
கண்ட இரங்கிச் சொரிகின்ற கண்ணீர் போலும்! 92

முத்துக்கள் கொப்புளங்கள்

வெடித்த கழை, விசை தெறிப்பத் தரைமேல முத்தம்
வீழ்ந்தன, அத்தரை புழுங்கின அழன்று, மெய்ம்மேல்
பொடித்த வியர்ப் புள்ளிகளே போலும் போலும்!
போலதவேல், கொப்புளங்கள் போலும் போலும்! 93

காற்றின் தன்மை

பல்கால் திண் திரைக் கரங்கள் கரையின் மேன்மேல்
பாய்க கடல்கள் நூக்குமது, அப் படர்வெங் கானில்
செல் காற்று வாராமல காக்க அன்றோ!
திசைக் கரியின் செவிக் காற்றும் அதற்கே அன்றோ! 94

வெந்த வனமே இந்த வனம்!

முள்ளாறும் கல்லாறும் தென்னர் ஓடி,
முன்னொருநாள் வாள் அபயன் முனிந்த போரில்
வெள்ளாறும் கோட்டாறும் புகையால் மூட,
வெந்த வனம் இந்த வனம் ஒக்கும் ஒக்கும். 95

மணலின் தன்மை

அணி கொண்ட குரங்கினங்கள்,
அலை கடலுக்கு அப் பாலை
மணல் ஒன்று காணாமல் வரை
எடுத்து மயங்கினவே! 96

ஜெயங்கொண்டார்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

கூ. வருகைப்பருவம்

அஞ்சிலம் போலிட அரிக்குரற் கிண்கிணி
அரற்றுசெஞ் சீறடிபெயர்த்
தடியிடுந் தொறுநின் அலத்தகச் சுவடுபட்
டம்புவி அரம்பையர்கள்தம்
மஞ்சுதுஞ் சளகத் திளம்பிறையும் எந்தைமுடி
வளரிளம் பிறையுநாற
மணி நூ புரத்தவிழும் மென்குரற் கோவசையும்
மடநடைக் கோதொடர்ந்துன்
செஞ்சிலம் படிபற்று தெய்வக் குழாத்தினொடு
சிறையோதி மம்பின்செலச்
சிற்றிடைக் கொல்கிமணி மேகலை இரங்கத்
திருக்கோயில் எனவெனெஞ்சக்
கஞ்சமுஞ் செஞ்சொல் தமிழ்க்கூட லுங்கொண்ட
காமர்பூங் கொடிவருகவே
கற்பகா டவியில் கடம்பா டவிப்பொலி

கயற்கணா யகி வருகவே

குண்டுபடு பேரகழி வயிறுளைந் தீன்றபைங்
கோதையும் மதுரமொழுகும்
கொழிதமிழ்ப் பனுவல் துறைப்படியும் மடநடைக்
கூந்தலம் பிடியும் அறுகால்
வண்டுபடு முண்டக மனைக்குடி புகச்சிவ
மணங்கமழ விண்ட தொண்டர்
மானதத் தடமலர்ப் பொற்கோயில் குடி கொண்ட
மாணிக்க வல்லிவில்வேள்
துண்டுபடு மதிநுதல் தோகையொடும் அளவில்பல
தொல்லுரு எடுத்தமர்செயுந்
தொடுநிலை எனக்ககன முகடுமுட் டிப்பூந்
துணர்த்தலை வணங்கி நிற்கும்
கண்டுபடு கன்னல்பைங் காடுபடு கூடற்
கலாபமா மயில் வருகவே
கற்பகா டவியில் கடம்பா டவிப்பொலி
கயற்கணா யகிவருகவே.

முயல்பாய் மதிக்குழவி தவழ்சூல் அடிப்பலவின்
முட்பொதி குடக்கனியொடு
முடவுத்தடந்தாழை முப்புடைக் கனிசிந்த
மோதி நீர் உண்டிருண்ட
புயல்பாய் படப்பைத் தடம்பொழில்கள் அன்றியேழ்
பொழிலையும் ஒருங்கலைத்துப்
புறமூடும் அண்டச் சுவர்த்தலம் இடித்தப்
புறக்கடல் மடுத்துழக்கிச்
செயல்பாய் கடற்றாணை செங்களங்கொள அம்மை
திக்குவிச யங்கொண்ட நாள்
தெய்வக் கயற்கொடிகள் திசைதிசை எடுத்தெனத்
திக்கெட்டு முட்டவெடிப்போய்க்

கயல்பாய் குரம்பணை பெரும்பணைத் தமிழ்மதுரை
காவலன் மகள் வருகவே
கற்பகா டவியில் கடம்பா டவிப்போலி
கயற்கணா யகிவருகவே.

வடம்பட்ட நின்துணைக் கொங்கைக் குடங்கொட்டு
மதுரவமு துண்டுகடைவாய்
வழியும் வெள்ளருவியென நிலவுபொழி கிம்புரி
மருப்பிற் பொருப்பிடித்துத்
தடம்பட்ட பொற்றாது சிந்துரங் கும்பத்
தலத்தணிவ தொப்பவப்பிச்
சலராசி ஏழுந் தடக்கையின் முகந்துபின்
தான நீ ரால் நிரப்பி
முடம்பட்ட மதியங் குசப்படை எனக்ககன
முகடுகை தடவிஉடுமீன்
முத்தம் பதித்திட்ட முகபடாம் எனவெழு
முகிற்படாம் நெற்றி சுற்றும்
கடம்பட்ட சிறுகட் பெருங்கொலைய மழவிளங்
களிறீன்ற பிடி வருகவே
கற்பகா டவியில் கடம்பா டவிப்பொலி
கயற்கணா யகிவருகவே.
தேனொழுகு கஞ்சப் பொலன் சீ றடிக்கூட்டு
செம்பஞ்சி யின் குழம்பால்
தெள்ளமு திறைக்கும் பசுங்குழவி வெண்திங்கள்
செக்கர்மதி யாக்கரைபொரும்
வானொழுகு துங்கத் தரங்கப் பெருங்கங்கை
வாணிநதி யாச்சிவபிரான்
மகுடகோ டீரத் தடிச்சுவ டழுத்தியிடு
மரகதக் கொம்புகதிர்கால்
மீனொழுகு மாயிரு விசும்பிற் செலுங்கடவுள்
வேழத்தின் மத்தகத்து

வீற்றிருக் குஞ்சே யிழைக்கும் பசுங்கமுகு
வெண்கவரி வீசும்வாசக்
கானொழுகு தடமலர்க் கடிபொழிற் கூடல்வளர்
கவுரியன் மகள் வருகவே
கற்பகாட வியில் கடம்பா டவிப்பொலி
கயற்கணா யகி வருகவே

வடக்குங் குமக்குன் றிரண்டேந்தும்
வண்டல் மகளிர் சிறுமுற்றில்
வாரிக் குவித்த மணிக்குப்பை
வானா றடைப்ப வழிபிழைத்து
நடக்குங் கதிர்பொற் பரிசிலா
நகுவெண் பிறைகைத் தோணியதா
நாள்மீன் பரப்புச் சிறுமிதப்பா
நாப்பண் மிதப்ப நாற்கோட்டுக்
கடக்குஞ் சரத்தின் மதநதியும்
கங்கா நதியும் எதிர்கொள்ளக்
ககன வெளியும் கற்பகப்பூங்
காடும் கடந்து கடல்சுருங்க
மடுக்குந் திரைத்தண் துறைவைகை
வள நாட் டரசே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.
கண்ணந் திமிர்ந்து தேனருவி
துளைந்தா டறுகால் தும்பிபசுந்
தோட்டுக் கதவம் திறப்பமலர்த்
தோகை குடிபுக் கோகை செயும்
தண்ணங் கமலக் கோயில்பல
சமைத்த மருதத் தச்சன்முழு
தாற்றுக் கமுகு நாற்றியிடும்
தடங்கா வணப்பந் தரில்வீக்கும்

விண்ணம் பொதிந்த மேகபடாம்
மிசைத்தூக் கியபன் மணிக்கொத்து
விரிந்தால் எனக்கால் நிமிர்ந்துதலை
விரியும் குலைநெற் கற்றைபல
வண்ணம் பொலியும் பண்ணைவயல்
மதுரைக் கரசே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.
தகரக் குழலின் நறையும் நறை
தருதீம் புகையும் திசைக்களிற்றின்
தடக்கை நாசிப் புழைமடுப்பத்
தளரும் சிறுநுண் மருங்குல்பெருஞ்
சிகரக் களபப் பெத்மல்முலைத்
தெய்வ மகளிர் புடையிரட்டும்
செங்கைக் கவரி முகந்தெறியும்
சிறுகாற் கொசிந்து குடிவாங்க
முகரக் களிவாண் டடைகிடக்கும்
முளரிக் கொடிக்கும் கலைக்கொடிக்கும்
முருந்து முறுவல் விருந்திடுபுள்
மூரல் நெடுவெண் ணிலவெறிப்ப
மகரக் கருங்கட் செங்கனிவாய்
மடமான் கன்று வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.
தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்

இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.
பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

எ. அம்புலிப் பருவம்

கண்டுபடு குதலைப் பசுங்கிளி இவட்கொரு
கலாபேதம் என்ன நின்னைக்
கலைமறைகள் முறையிடுவ கண்டோ அலாதொண்

கலாநிதி எனத்தெரிந்தோ
வண்டுபடு தெரியல் திருத்தாதை யார்மரபின்
வழிமுதல் எனக்குறித்தோ
வளர்சடை முடிக்கெந்தை தண்ணறுங் கண்ணியா
வைத்தது கடைப்பிடித்தோ
குண்டுபடு பாற்கடல் வருந்திருச் சேயொடு
கூடப் பிறந்ததோர்ந்தோ
கோமாட்டி யிவள்நின்னை வம்மெனக் கொம்மெனக்
கூவிடப் பெற்றாயுனக்
கண்டுபடு சீரிதன் றாதலால் இவளுடன்
அம்புலீ ஆடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ ஆடவாயே
குலத்தோடு தெய்வக் குழாம்பிழிந் தூற்றிக்
குடித்துச் சுவைத்துமிழ்ந்த
கோதென்றும் அழல்விடங் கொப்பளிக் கின்றஇரு
கோளினுச் சிட்டமென்றும்
கலைத்தோடு மூடிக் களங்கம் பொதிந்திட்ட
கயரோகி என்றுமொருநாள்
கண்கொண்டு பார்க்கவும் கடவதன் றெனவும்
கடற்புவி யெடுத்திகழவிட்
புலத்தோடும் உடுமீன் கணத்தோடும் ஓடுநின்
போல்வார்க்கு மாபாதகம்
போக்குமித் தலமலது புகலில்லை காண்மிசைப்
பொங்குபுனல் கற்பகக்கா
டலைத்தோடு வைகைத் துறைப்படி மடப்பிடியொ
டம்புலீ ஆடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ ஆடவாயே.
கீற்றுமதி என நிலவு தோற்றுபரு வத்திலொளி
கிளர்நுதற் செவ்விவவ்விக்

கெண்டைத் தடங்கணார் எருவிட் டிறைஞ்சக்
கிடந்ததும் உடைந்தமுதம்விண்
டூற்றுபுது வெண்கலை உடுத்துமுழு மதியென
உதித்தவமை யத்தும் அம்மை
ஓண்முகத் தொழுகுதிரு வழகைக் கவர்ந்து கொண்
டோடினது நிற்கமற்றை
மாற்றவ ளொடுங்கேள்வர் மௌலியில் உறைந்ததும்
மறந்துனை அழைத்தபொழுதே
மற்றிவள் பெருங்கருணை சொற்றிடக் கடவதோ
மண்முழுதும் விம்முபுயம்வைத்
தாற்றுமுடி அரசுதவும் அரசிளங் குமரியுடன்
அம்புலீ ஆடவாயே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ ஆடவாயே.
விண்டலம் பொலியப் பொலிந்திடுதி யேலுனது
வெம்பணிப் பகைவிழுங்கி
விக்கிடக் கக்கிடத் தொக்கிடர்ப் படுதிவெயில்
விரியும் சுடர்ப்பரிதியின்
மண்டலம் புக்கனை இருத்தியெனின் ஒள்ளொளி
மழுங்கிட அழுங்கிடுதிபொன்
வளர்சடைக் காட்டெந்தை வைத்திடப் பெறுதியேல்
மாசுணம் சுற்ற அச்சம்
கொண்டுகண் துஞ்சா திருப்பதும் மருப்பொங்கு
கோதையிவள் சீறடிகள்நின்
குடர்குழம் பிடவே குமைப்பதும் பெறுதியெம்
கோமாட்டி பாலடைந்தால்
அண்டபகி ரண்டமும் அகண்டமும் பெறுதியால்
அம்புலீ ஆடவாயே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ ஆடவாயே.

எண்ணில்பல புவனப் பெருந்தட்டை ஊடுருவி
இவள்பெரும் புகழ்நெடுநிலா
எங்கணும் நிறைந்திடுவ தங்கதனின் மெள்ள நீ
எவ்வளவு மொண்டு கொண்டு
வெண்ணிலவு பொழிவது கிடைத்ததனை மடுத்திடுவள்
விழிக்கடை கொழித்தகருணை
வெள்ளந் திளைத்தாடு பெற்றியால் தண்ணளி
விளைப்பதும் பெற்றனைகொலாம்
மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பதுன் இடத்தம்மை
வைத்திடுஞ் சத்தியேகாண்
மற்றொரு சுதந்திரம் நினக்கென இலைக்கலை
மதிக்கடவுள் நீயுமுணர்வாய்
அண்ணலங் களியானை அரசர்கோ மகளுடன்
அம்புலீ ஆடவாயே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ ஆடவாயே.

முன்பும்பர் அரசுசெய் பெரும்பாவ முங்கோப
மூரிமாத் தொடர்சா பமும்
மும்மைத் தமிழ்ச் செழியன் வெப்பொடு கொடுங்கூனும்
மோசித்த இத்தலத்தின்
தன்பெருந் தன்மையை உணர்ந்திலைகொல் சிவராச
தானியாய்ச் சீவன் முத்தித்
தலமுமாய்த் துவாதசாந் தத்தலமும் ஆனதித்
தலமித் தலத்த டைதியேல்
மன்பெருங் குரவற் பிழைத்தபா வமுமற்றை
மாமடிகள் இடுசா பமும்
வளரிளம் பருவத்து நரைதிரையும் முதிர்கூனும்
மாற்றிடப் பெறுதி கண்டாய்
அன்பரென் புருகக் கசிந்திடு பசுந்தேனொ
டம்புலீ ஆடவாயே

ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ ஆடவாயே.
கும்பஞ் சுமந்தமத வெள்ளநீர் கொட்டுங்
கொடுங்களி றிடும்போர் வையான்
குடிலகோ டீரத் திருந்து கொண் டந்நலார்
கொய்தளிர்க் கைவ ருடவும்
செம்பஞ் சுறுத்தவும் பதைபதைத் தாரழற்
சிகையெனக் கொப்ப ளிக்கும்
சீறடிகள் கன்றிச் சிவந்திடச் செய்வதும்
திருவுளத் தடையா துபொன்
தம்பஞ் சுமந்தீன்ற மானுட விலங்கின்
தனிப்புதல்வ னுக்கு வட்டத்
தண்குடை நிழற்றுநினை வம்மென அழைத்தனள்
தழைத்திடும் கழைக்க ரும்பொன்
றம்பஞ் சுடன்கொண்ட மகரக் கொடிக்கொடியொ
டம்புலீ ஆடவாயே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ ஆடவாயே.
துளிதூங்கு தெள்ளமுத வெள்ளருவி பொழியுநின்
தொன்மரபு தழைய வந்து
தோன்றிடுங் கௌரியர் குலக்கொழுந் தைக்கண்டு
துணைவிழியும் மனமும் நின்று
களிதூங்க அளவளாய் வாழாமல் உண்ணமுது
கலையொடும் இழந்து வெறுமட்
கலத்திடு புதுக்கூ ழினுக்கிரவு பூண்டொரு
களங்கம்வைத் தாயி துவலால்
ஒளிதூங்கு தெளிவிசும் பினினின்னொ டொத்தவன்
ஒருத்தன் கரத்தின் வாரி
உண்டொதுக் கியமிச்சில் நள்ளிருளில் அள்ளியுண்
டோடுகின் றாயென் செய்தாய்
அளிதூங்கு ஞிமிறெழுந் தார்க்குங் குழல் திருவொ

டம்புலீ ஆடவாயே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ ஆடவாயே.
மழைக்கொந் தளக்கோதை வம்மினென் றளவில் நீ
வந்திலை எனக்க டுகலும்
வாள்முகச் செவ்விக் குடைந்தொதுங் கினவனெதிர்
வரகொல்கி யோபணி கள்கோள்
இழைக்குங்கொல் பின் தொடர்ந் தெனவஞ்சி யோதாழ்த்
திருந்தனன் போலு மெனயாம்
இத்துணையும் ஒருவாறு தப்புவித் தோம்வெகுளில்
இனியொடு பிழைப்பில்லை காண்
தழைக்கும் துகிற்கொடி முகிற்கொடி திரைத்துமேல்
தலம்வளர் நகிற் கொடிகளைத்
தாழ்குழலும் நீவிநுதல் வெயர்வும் துடைத்தம்மை
சமயமிது வென்ற லுவலிட்
டழைக்கும் தடம்புரிசை மதுரைத் துரைப்பெணுடன்
ஆம்புலீ ஆட வாயே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ ஆடவாயே.

ஏடகத் தெழுதாத வேதச் சிரத்தர
சிருக்குமிவள் சீறடி கள்நின்
இதயத் தடத்தும் பொலிந்தவா திருவுளத்
தெண்ணியன் றேக படமா
நாடகத் தைந்தொழில் நடிக்கும் பிரான்தெய்வ
நதியொடு முடித்தல் பெற்றாய்
நங்கையிவள் திருவுள மகிழ்ச்சிபெறில் இதுபோலொர்
நற்றவப் பேறில் லைகாண்
மாடகக் கடைதிரித் தின்னரம் பார்த்துகிர்
வடிம்புதை வருமந் நலார்
மகரயாழ் மழலைக்கு மரவங்கள் நுண்துகில்

வழங்கக் கொழுங்கோங் குதூங்
காடகப் பொற்கிழி அவிழ்க்குமது ரைத்திருவொ
டம்புலீ ஆடவாயே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ ஆடவாயே.

-குமரகுருபரர்

நந்திக் கலம்பகம்

(மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா)

மண்டலமாய் அம்பரமாய் மாருதமாய் வார்புனலாய்
ஒண்சுடராய் ஒளியென்னும் ஒருருவ மென்றுருவம்
மைவடிவோ வளைவடிவோ மரகதத்தின் திகழ்வடிவோ
செவ்வடிவோ பொன்வடிவோ சிவனேநின் திருமேனி.

(இது தரவு)

அருவரையி னகங்குழைய அனலம்பு தெரிந்தவுணர்
பொரமதில்க எவைமூன்றும் பொன்றுவித்த புனிதற்கும்
குருமணிசே ரணிமுறுவல் குலக்கங்கை நதிபாயத்
திருமுடியைக் கொடுத்தாற்குஞ் செம்பாகந் திறம்பிற்றே
இலகொளிய மூவிலைவே லிறைவாநின் னியற்கயிலைக்
குலகிரியும் அருமறையும் குளிர்விசும்பும் வறிதாக
அலைகதிர்வேற் படைநந்தி அவனிநா ராயணனிவ்
உலகுடையான் திருமுடியும் உள்ளமுமே உவந்தனையே
பொருப்பரையன் மடப்பாவைபுணர்முலையின் முகடுதைத்த
தெருப்புருவம் வெளியாக நீறணிந்த வரைமார்ப
பருப்புரசை மதயானைப் பல்லவர்க்கோ னந்திக்குத்
திருப்பெருக அருளுகநின் செழுமலர்ச்சே வடிதொழவே.

(இவை மூன்றும் தாழிசை)

செழுமலர் துறைதெரு தெரிகணை மதனனது
எழிலுடல் பொடிபட வெரிதரு நுதலினை
அருவரை அடியெழ முடுகிய அவுணனது
ஒருபது முடியிற வொருவிரல் நிறுவினை.

(இவை இரண்டும்
அராகம்)

வீசிகையிற் கொன்றையும் வெள்ளெருக்கும் விராய்த்தொடுத்த
வாசிகையி னூடேவெண் மதிக்கொழுந்தைச் சொருகினையே
பாய்புலியின் உரியசைத்த பலபுள்ளிப் படிவமெலாம்
ஆயிரவாய்க் கருங்கச்சை அனலுமிழ அசைத்தனையே
சோர்மதத்த வார்குருதி சோனைநீ ரெனத்துளிப்ப
வேர்மதத்த கரியுரிவை ஏகாச மிட்டனையே.

(இவை மூன்றும் தாழிசை)

திசைநடுங்கத் தோன்றிற்று நீயுண்ட திறல்நஞ்சம்
உயிர்நடுங்கத் தோன்றிற்று நீஉதைத்த வெங்கூற்றம்

(இவை நாற்சீரடி இரண்டும் அம்போதரங்கம்)

அனைத்துலகிற் பிறப்புநீ அனைத்துலகி லிறப்பநீ
அனைத்துலகில் துன்பமுநீ அனைத்துலகி லின்பமுநீ
வானோர்க்குத் தாதையுநீ வந்தோர்க்குத் தந்தையுநீ
ஏனோர்க்குத் தலைவனுநீ எவ்வுயிர்க்கும் இறைவனுநீ

(இவை இருசீரடி எட்டு அம்போதரங்கம்)

எனவாங்கு, (இது தனிச் சொல்)

ஒரு பெருங் கடவுள்நிற் பரவுதும் எங்கோன்
மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி
வடவரை அளவுந் தென்பொதி அளவும்
விடையுடன் மங்கல விசயமு நடப்ப
ஒருபெருந் தனிக்குடை நீழல்
அரசு வீற்றிருக்க அருளுக வெனவே.

(இ.ஃ.து ஆசிரியச் சுரிதகம் -1)

(நேரிசை வெண்பா)

2. எனதே கலைவளையும் என்னதே மன்னர்
சினவேறு செந்தனிக்கோன் நந்தி - இனவேழம்
கோமறுகிற் சீறிக் குருக்கோட்டை வென்றாடும்
பூமறுகிற் போகாப் பொழுது.

(கட்டளைக் கலித்துறை)

3. பொழுதுகண்டு ஆய்அதிர் கின்றது
போகநம் பொய்யற்கென்றும்
தொழுதுகொண் டேனென்று சொல்லுகண்
டாய்தொல்லை நூல்வரம்பு
முழுதுண் டான்நந்தி மல்லையங்
கானல் முதல்வனுக்குப்
பழுதுகண் டாயிதைப் போய்ப்பகர்
வாய்சிறைப் பைங்குருகே.

(எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

4. குருகுதிர்முன் பனிக்கொதுங்கிக் கூசுங் கங்குற்
குளிர்திவலை தோய்ந்தெழுந்த நறுந்தண் வாடை
அருகுபனி சிதறவர அஞ்சு வாளை
அஞ்சலஞ்ச லென்றுரைத்தால் அழிவதுண்டோ?
திருகுசினக் கடக்களிற்றுச் செங்கோன் நந்தி
தென்னவர்கோன் தன்குறும்பிற் சென்று சூழ்ந்த
சுரிகைவினைப் பகைஞருடல் துண்ட மாகத்
துயிலுணர்ந்த வல்லாண்மைத் தொண்டே வேந்தே.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

5. தொண்டை வேந்தன் சோணாடன்
தொன்னீ ரங்கல் முந்நீரும்
கொண்ட வேந்தர் கோனந்தி
கொற்ற வாயில் முற்றத்தே
விண்ட வேந்தர் தந்நாடும்
வீரத் திருவும் எங்கோனைக்
கண்ட வேந்தர் கொண்மீன்கள்

என்னும் கன்னிக் கடுவாயே.

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

6. கடுவா யிரட்ட வளைவிம்ம மன்னர்
கழல்சூட அங்கண் மறுகே
அடுவார் மருப்பின் அயிரா வதத்தின்
அடுபோர்செய் நந்தி வருமே
கொடுவார் புனத்து நகுவார் படைக்கண்
மடவா ரிடைக்குள் மனமே
வடுவாயிருக்க மகளேயிம் முன்றின்
மணியூச லாடன் மறவே

புயவகுப்பு

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

7. மறமத கரிதிசை நிறுவின
மணிநகை யவர்மனம் நகுவன
விறலர சர்கள்மன நெகிழ்வன
விரைமலர் களிமுலை பொருவன
திறலுடை யனதொடை புகழ்வன
திகழொழி யனபுகழ் ததைவன
நறுமல ரணியணி முடியன
நயபர நினதுஇரு புயமதே.

(கலி விருத்தம்)

8. புயங்களிற் பூவைமார் பொங்கு கொங்கையின்
நயங்கொளத் தகுபுகழ் நந்தி கச்சிசூழ்
கயங்களிற் கடிமலர் துழாவிக் காமுகர்
பயங்கொளப் புகுந்தது பருவ வாடையே.

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

9. வாடை நோக வீசு மால்
மாரன் வாளி தூவுமால்
ஆட லோத மார்க்கு மால்என்
ஆவி காக்க வல்லனோ

வேடு லாவு மாலை சேதி
ராசன் மல்லை நந்திதோள்
கூடினால் அலர்வ ராது
கொங்கு விம்மு கோதையே

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

10. கோதை சோரிற் சோர் கொங்கை
விம்மில் விம்மு குறுமுறுவல்
சோதி வெளுக்கில் வெளுமருங்குதல்
துவளின் நீயுந் துவள்கண்டாய்
காது நெடுவேற் படைநந்தி
கண்டன் கச்சி வளநாட்டு
மாத ரிவரோடு உறுகின்றாய்
வாழி மற்றென் மடநெஞ்சே

(வேறு)

11. நெஞ்சாகுல முற்றுஇங் ஙனே மெலிய
நிலவின்கதிர் நீளெரி யாய்விரியத்
துஞ்சாநய னத்தோடு சோருமிவட்கு
அருளாதொழி கின்றது தொண்டைகொலோ
செஞ்சாலி வயற்படர் காவிரிசூழ்
திருநாடுடை நந்தி சினக்கலியின்
வெஞ்சாயல் மறைத்த தனிக்குடையான்
விடைமண்பொறி ஓலை விடேல்விடுகே.

(கட்டளைக் கலித்துறை)

12. விடுதிர்கொல் லோவள நாடுடை வீரரசற்கு முன்னின்று
இடுதிற்கொல் லோபண் டிறுக்குந் திறைஎரி கானத்தும்மை
அடுதிர்கொல் லோதிறன் நந்தியெங் கோன்அயி ராவதத்திற்
படுதிர்கொல் லோபடை மன்னீர்என் னாமுங்கள் பாவனையே

(வஞ்சி விருத்தம்)

13. வனைவார்குழல் வேணியும் வாடைகணீர்

நனைவார் துகிலுமிவை நாளும்இரா
வினைவார்கழல் நந்திவி டேல்விடுகின்
கனைவார்முர சொத்தது காரதிர்வே

(தரவு கொச்சக் கலிப்பா)

14. அதிர்குரல மணிநெடுந்தே ரவனிநா ராணன்களிற்றின்
கதிரோளிய வெண்மருப்புக் கனவயிரஞ் செறிந்ததால்
மதுரைகொலோ அடுபுலிக்கோன் நகரிகொலே மரிகை சாய்ந்
தெதிரெதிரே கெடநின்றது எவ்வூர்கொ லறியோமால்

(நேரிசை வெண்பா)

15. ஓம மறைவாண ரொண்பொற் கழல்வேந்தர்
தாம முடிக்கணிந்த தாளிப்புற் – கோமறுகிற்
பாவடிக் கீழ்ப் பல்யானைப் பல்லவர்கோன் நந்திதன்
சேவடிக்கீழ்க் காணலாஞ் சென்று.

(கட்டளைக் கலித்துறை)

16. சென்றஞ்சி மேற்செங்கண் வேழஞ் சிவப்புச் சிலர்திகைப்ப
வன்றுஞ் சினத்தார் இனமறுத் தார்போலு ம.ஃ.த.ஃ.தே
குன்றஞ்செய் தோள் நந்தி நாட்டங் குறிகுருக் கோட்டையின்மேற்
சென்றஞ்ச்ப் பட்டதெல் லாம்படு மாற்றலர் திண்பதியே

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

17. பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு
பருமணி பகராநெல்
கதிர்தொகு வருபுனல் கரைபொருது இழிதரு
காவிரி வளநாடா
நிதிதரு கவிகையு நிலமகள் உரிமையு
மிவையிவை யுடைநந்தி
மதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர்
வானக மாள்வாரே

(கலிவிருத்தம்)

18. ஆட்குலாங் கடற்படை அவனி நாரணன்
தோள்குலா மதுமலர்த் தொண்டை வாய்ச்சியர்
வாட்குலாங் கண்ணினால் வளைத்த மம்மர்நோய்

மீட்கலா மடல்கையில் விரவு மாயினே.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

19. விரவாத மன்னரெல்லாம் விண்ணேற
வெள்ளாற்று வெகுண்டோன் தொண்டைக்கு
இரவாத பரிசெல்லா மிரந்தேற்றும்
பாவைமா ரெல்லீர் வாடை
வரவாதை உற்றிருந்து வருந்துவார்
பலரென்றும் வாழி வாழி
பரவாதை நந்திசெங்கோ லிதுவாகில்
அதுபார்க்கும் பரிசு நன்றே.

(வேறு)

20. நன்றுந்நெடி தாயவிர் கின்றதிரா
நலிகின்றது மாருத சாலமெனக்கு
என்றிண்ணில என்னு மிளம்பிறையும்
எரியேசொரி கின்றதி யாதுசெய்கோ
அன்றிந்நில மேழு மளந்தபிரான்
அடல்உக்ரம கோபன் அடங்கலர்போல்
இன்றென்னுயி ரன்னவள் கொங்கையைவிட்டு
எங்ஙன்துயில் கின்றனன் ஏழைனே.

(வஞ்சித் துறை)

21. ஏழைமார்துணை வாழிநந்திதண்
நீழல்வெண்குடை – ஊழிநிற்கவே

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

22. நிற்க மன்னவர் நிரந்த வெண்குடை
மிடைந்த நீள்கடை நெடுந்தகை
விற்கொள் நன்னுதன் மடந்தை மாமிக
முயங்கு தோள்அவனி நாரணன்
கற்கொள் வார்மதிற் கச்சிநந்தி
நலங்கொள் அன்னவ னலங்கன்மேல்
ஒற்க மென்மக ளுரைசெய் தோஉல
களிப்பன் இத்திற னுரைத்திடே

- சோ.அருணாசல தேசிகர் (உரை ஆசிரியர்)

மதுரைச் சொக்கநாதர்

தமிழ்விடு தூது

கண்ணிகள்

1. சீர்கொண்ட கூடல் சிவராச தானிபுரந்து
ஏர்கொண்ட சங்கத்து இருந்தோரும் - பேர்கொண்டு

2. இசையும் தமிழரசுஎன்று ஏத்தெடுப்பத் திக்கு
விசையம் செலுத்திய மின்னும் - நசையுறவே

3. செய்ய சிவஞானத் திரளேட்டில் ஓரேடு
கையில் எடுத்த கணபதியும் - மெய்யருளால்

4. கூடல் புரந்தொருகால் கூடற் புலவர்எதிர்
பாடல் அறிவித்த படைவேளும் - வீடகலா

5. மன்னும் மூவாண்டில் வடகலையும் தென்கலையும்
அன்னை முலைப்பாலில் அறிந்தோரும் - முன்னரே

6. மூன்றுவிழி யார்முன் முதலையுண்ட பிள்ளையைப்பின்
ஈன்றுதரச் சொல்லின் இசைத்தோரும் - தோன்று அயன்மால்

7. தேடிமுடியா அடியைத் தேடாதே நல்லூரில்
பாடி முடியாப் படைத்தோரும் - நாடிமுடி

8. மட்டோலைப் பூவனையார் வார்ந்துஓலை சேர்த்தெழுதிப்
பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும் - முட்டாதே

9. ஒல்காப் பெருந்தமிழ் மூன்று ஓதியருள் மாமுனியும்
தொல்காப் பியம்மொழிந்த தொல்முனியும் - மல்காச்சொல்

10. பாத்திரம் கொண் டேபதிபால் பாய்பசுவைப் பன்னிரண்டு
சூத்திரம்கொண்டே பிணித்ததூயோரும் - நேத்திரமாம்

11. தீதில் கவிதைத் திருமா ளிகைத்தேவர்
ஆதி முனிவர் அனைவோரும் - சாதியுறும்

12. தந்திரத்தி னால் ஒழியாச் சார்வினையைச் சாற்றுதிரு
மந்திரத்தி னால்ஒழித்த வல்லோரும் - செந்தமிழில்

13. பொய்யடிமை இல்லாப் புலவரென்று நாவலர்சொல்

மெய்யடிமைச் சங்கத்து மேலோரும் - ஐயடிகள்

14. காடவரும் செஞ்சொல் கழறிற் றறிவாரும்
பாடவரும் தெய்வமொழிப் பாவலரும் - நாடவரும்

15. கல்லாதார் சிங்கமெனக் கல்விகேள் விக்குரியர்
எல்லாரும் நீயாய் இருந்தமையால் - சொல்லாரும்

16. என்னடிகளே உனைக்கண்டு ஏத்தின்இடர் தீருமென்றுன்
பொன்னடிகளே புகலாப் போற்றினேன் - பன்னியமென்

17. பஞ்சிபடா நூலே பலர்நெருடாப் பாவே கீண்டு
எஞ்சி அழுக்கேறா வியன்கலையே – விஞ்சுநிறம்

18. தோயாத செந்தமிழே சொல்லேர் உழவரகம்
தீயாது சொல்விளையும் செய்யுளே – வீயாது

19. ஒருகுலத்தும் வாராது உயிர்க்கு உயிராய் நின்றாய்
வருகுலம் ஓர் ஐந்தாயும் வந்தாய் - இருநிலத்துப்

20. புண்ணியம்சேர் உந்திப் புலத்தே வளிதரித்துக்
கண்ணிய வாக்காம் கருப்பமாய் - நண்ணித்

21. தலைமிடறு மூக்குஉரத்தில் சார்ந்து இதழ்நாத் தந்தம்
உலைவிலா அண்ணத்து உருவாய்த் - தலைதிரும்பி

22. ஏற்பமுதல் முப்பதுஎழுத் தாய்ச்சார்பு இருநூற்று
நாற்பது எழுத்தா நனிபிறந்தாய் - மேற்படவே

23. எண்முதலா கப்பகரும் ஈராறு எனும்பருவம்
மண்முதலோர் செய்து வளர்க்கும்நாள் - கண்மணிபோல்

24. பள்ளிக்கூடத்து அசையாம் பற்பலதொட் டில்கிடத்தித்
தள்ளிச் சிறார்கூடித் தாலாட்டி – உள்ளிலகு

25. மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய் - மஞ்சரையே

26. பன்னிஒரு பத்துப் பருவமிட்டு நீவளர்த்தாய்
உன்னை வளர்த்துவிட ஒண்ணுமோ – முன்னே

27. நினையும் படிப்பெல்லாம் நின்னைப் படிப்பார்

உனையும் படிப்பிப்பார் உண்டோ – புனைதருநல்

28. செய்யுள்சொல் நான்கும்உயர் செந்தமிழ்ச்சொல் ஓர் நான்கும்
மெய்யுட் பொருள்ஏழ் விதத்திணையும் - மையிலெழுத்து

29. ஆதியாப்பு எட்டும் அலங்காரம் ஏழைந்தும்
பேதியாப் பேரொழில்மாப் பிள்ளையாய்ச் - சாதியிலே

30. ஆங்கமைசெப் பல்பண் அகவல்பண் துள்ளல்பண்
தூங்கல்பண் பட்டத்துத் தோகையரா – ஓங்குமனத்து

31. எண்கருவி ஐந்து ஈன்றிடு நூற்று மூன்றான
பண்களும்பின் கல்யாணப் பாவையரா – எண்கொளும்

32. நல்தா ரகமா நவரசமாம் பிள்ளைகளைப்
பெற்றாய் பெருவாழ்வு பெற்றாயே – உற்றகலாப்

33. பண்கள்முதல் பெண்களோடும் பாலரோடு நாடகமாம்
பெண்கொலுவில் வீற்றிருக்கப் பெற்றாயே – மண்புகழத்

34. தாழ்விலா அட்டா தசவன் னனைகள் எனும்
வாழ்வெலாம் கண்டு மகிழ்ந்தாயே – ஆழ

35. நெடுங்கோல வையையில் என் நேசர்மேல் பட்ட
கொடுங்கோல்செங் கோலாகக் கொண்டாய் - அடங்காத

36. எம்கோவே பத்தென்று இயம்புதிசைக் குள்ளேநின்
செங்கோல் செலாத திசையுண்டோ - இங்கேயுன்

37. தேசம் ஐம்பத் தாறில் திசைச்சொல் பதினேழும்
மாசற நீ வைத்தகுறு மன்னியரோ – வீசு

38. குடகடலும் கீழ்கடலும் கோக்குமரி யாறும்
வடவரையும் எல்லை வகுத்தாய் - இடையிருந்த

39. முன்னுறும் தென்பாண்டி முதல்புனல்நாடு ஈறான
பன்னிரண்டு நாடும்அப் பால்நாடோ – அந்நாட்டுள்

40. வையை கருவைமரு தாறும ருவூர் நடுவே
ஐய நீ வாழும் அரண்மனையோ – செய்யபுகழ்

41. மூவேந்தர் வாகனமா மூவுலகம் போய்வளைந்த

பாவேந்தே நீ பெரிய பார்வேந்தோ – காவேந்து

42. விண்ணவரும் காணரிய வேதா கமங்கள்எலாம்
புண்ணியனே உன்றன் புரோகிதரோ – எண்ணரிய

43. நல்லபெருங் காப்பியங்கள் நாடகம் அலங்காரம்
சொல்லரசே உன்னுடைய தோழரோ – தொல்லுலகில்

44. சார்புரக்கும் கோவேநல் சாத்திரங்கள் எல்லாமுன்
பார்புரக்கும் சேனா பதிகளோ – வீரரதிர்

45. போர்ப்பா ரதமும் புராணமும் பதினெட்டும்
சீர்ப்பாவே உன்னுடைய சேனைகளோ – பார்ப்பார்கள்

46. அக்கர வர்த்தி என லாம்என்பார் பூலோக
சக்கர வர்த்தியும் நீ தானன்றோ – சக்கரமுன்பு

47. ஏந்தி நெடுந்தேர்மேல் ஏறிச் சுழிகுளம்
நீந்திஓர் கூட நிறை சதுக்கம் - போந்து

48. மதுரம் கமழ்மாலை மாற்று அணிந்து சூழும்
சதுரங்க சேனை தயங்கச் - சதுராய்

49. முரசம் கறங்க முடிவேந்தர் சூழ
வரசங்கம் மீதிருந்து வாழ்ந்தே – அருள்வடிவாய்

50. ஓங்குபுகழ் மூவர் ஒருபா ஒருப.ஃதும்
ஆங்கவைசொல் வாதவூ ராளிசொல்லும் - ஓங்குமவன்

51. கூற்றாய் அரனெழுதும் கோவையும் கோதில்தாய்
மாற்றா இரட்டைமணி மாலையும் - தேற்றமுற

52. பற்றாம் இலக்கணநூற் பாவும் நூற் பாவறிந்து
கற்றார்வழங் கும்பஞ்ச காப்பியமும் - கொற்றவர்க்கு

53. எண்ணிய வன்னனைகள் ஈரொன் பதும்அறியக்
கண்ணியம் மிக்கபெருங் காப்பியமும் - நண்ணியே

54. இன்புறு சேரன் அரங் கேற்றமகிழ்ந்து அம்பலத்தான்
அன்புறு பொன் வண்ணத்தந் தாதியும் - முன்பவர்சொல்

55. மாத்தமிழாம் மும்மணி மாலையும் பட்டினத்தார்

கோத்தணிந்த மும்மணிக் கோவையும் - மூத்தோர்கள்

56. பாடி யருள்பத்துப் பாட்டும்எட் டுத்தொகையும்
கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும் - ஆடகமா

57. வெற்பனையார் மாதை விமலரிடத் தேஇருவர்
கற்பனையாற் சொன்ன கலம்பகமும் - முற்படையோடு

58. ஆடல் கலிங்கம் அழித்து ஆயிரம் ஆனைகொன்ற
பாடற்கு அரிய பரணியும் - கூடல்

59. நராதிபன் கூத்தன்எதிர் நண்ணிஓர் கண்ணிக்கு
ஓராயிரம் பொனீந்த உலாவும் - பராவுமவன்

60. பிள்ளைத் தமிழுமுன்னாம் பேராத பல்குரவர்
வெள்ளத் தினுமிகுத்தோர் மெய்காப்ப — உள்ளத்து

61. வீரியம் சேய்து வினை ஒழியவே ராச
காரியம் செய்யும் கவிதையே — பாரில்

62. அரியா சனம்உனக்கே ஆனால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே — விரிவார்

63. திகழ்பா ஒருநான்கும் செய்யுள்வரம் பாகப்
புகழ்பா வினங்கள்மடைப் போக்கா — நிகழவே

64. நல்லேரி னால் செய்யுள் நால்கரணத்து ஏர்பூட்டிச்
சொல்லேர் உழவர் தொகுத்து ஈண்டி — நல்லநெறி

65. நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்
மேலே பலன்பெறச்செய் விக்கு நாள் - மேலோரில்

66. பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் வில்லிஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் - சீத்தையரைக்

67. குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகள் எல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி

68. வளர்ந்தனைபால் முந்திரிகை வாழைக் கனியாய்க்
கிளர்ந்தகரும்பாய் நாளி கேரத்து - இளங்கனியாய்த்

69. தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்

70. உண்ணப் படும்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக் கேள் - மண்ணில்

71. குறமென்று பள்ளென்று கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவென்று மூன்றினத்து முண்டோ – திறமெல்லாம்

72. வந்தென்றும் சிந்தா மணியாயிருந்த உனைச்
சிந்தென்று சொல்லியநாச் சிந்துமே – அந்தரமேல்

73. முற்றும் உணர்ந்த தேவர்களும் முக்குணமே பெற்றார் நீ
குற்றமிலாப் பத்துக் குணம் பெற்றாய் மற்றொருவர்

74. ஆக்கிய வண்ணங்கள் ஐந்தின்மே லுண்டோ நீ
நோக்கிய வண்ணங்கள் நூறுடையாய் - நாக்குலவும்

75. ஊனரசம் ஆறல்லால் உண்டோ செவிகள் உணவு
ஆன நவரசம்உண் டாயினாய் - ஏனோர்க்கு

76. அழியா வனப்பு ஒன்றலதுஅதிக முண்டோ
ஒழியா வனப்புஎட் டுடையாய் - மொழிவேந்தர்

77. வாங்கு பொருள் கோள்வகைமூன்றே பெற்றார் நீ
ஓங்குபொருள் கோள்வகையெட் டுள்ளாயே – பாங்குபெற

78. ஓர்முப்பா லன்றிஐம்பால் உள்ளாய் உனைபோலச்
சீர்முப்பதும் படைத்த செல்வரார் - சேரமான்

79. தன்னடிக் கண்டு தளைவிடுத்தாய் ஏழ்தளைஉன்
பொன்னடிக்கு உண் டென்பது என்ன புத்தியோ – என்னரசே

80. திண்பா வலர்க்குஅறிவாம் செந்தமிழாய்நின்ற உன்னை
வெண்பாஎன் றோதுவது மெய்தானோ – பண்பேர்

81. ஒலிப்பாவே சங்கத்துகம் மூன்று இருந்தாய்
கலிப்பாஎன் றோதல் கணக்கோ – உலப்பில்

82. இருட்பா மருள்மாற்றி ஈடேற்றும் உன்னை
மருட்பாஎன் றோதல் வழக்கோ – தெருள்பாப்

83. பொருத்தம்ஒரு பத்துப் பொருந்தும்உனைத் தானே
விருத்தம் என்று சொல்லல் விதியோ - இருள்குவையை

84. முந்திஒளி யால்விலக்கும் முச்சுடர்என் பாருனைப்போல்
வந்துஎன் மனத்துஇருளை மாற்றுமோ – சிந்தா

85. மணிகொடையின் மிக்கதென்பார் வண்கோடையும் உன்பேர்
அணியும் பெருமையினால் அன்றோ – தணியும்

86. துலங்குஆரம் கண்டசரம் தோள்வளைமற் றெல்லாம்
அலங்கார மேஉனைப்போல் ஆமோ – புலங்காணும்

87. உன்னைப் பொருளென்று உரைக்குந்தோறும் வளர்வாய்
பொன்னைப் பொருளென்னப் போதுமோ – கன்னமிட்டு

88. மன்னர் கவர்ந்தும் வளர்பொருளே கைப்பொருள்கள்
என்ன பொருள் உனைப்போல் எய்தாவே – நன்னெறியின்

89. மண்ணில் புகழுருவாய் வாழ்வதற்கும் வாழுநர்
விண்ணில்போய்த் தேவுருவாய் மேவுதற்கும் - எண்ணியுனைக்

90. கொண்டுபுகழ் கொண்டவர்க்கே கூடுமுனைக் கூடாத
தொண்டருக்குத் தென்பாலே தோன்றுமால் - தண்டமிழே

91. ஈங்குனது சங்கத்தால் ஈசர் உயர்ந்தாரே
ஓங்கும் அவ ரால்நீ உயர்ந்தாயோ - பூங்கமல

92. வீடாளும் வாணி அங்கை மேலே இருந்தாயோ
ஏடாக உன்மேல் இருந்தாளோ – ஆடுஅரவத்

93. தாழ்பாய லாளரை நீ தானே தொடர்ந்தாயோ
சூழ்பாயோடு உன்னைத் தொடந்தாரோ – வாழ்வேயென்று

94. ஓதிமுனி கேட்க உனைமுருகர் சொன்னாரோ
சோதி அவரை நீ சொற்றனையோ – பேதியா

95. நேசர் உனக்கேபொருளாய் நின்றாரோ நீள்மதுரை
வாசகருக்கு நீ பொருளாய் வந்தாயோ – பாசமுறும்

96. என்செய்திநீ கண்டு இரங்குவது நீதியல்லால்
உன்செய்திநானோ உரை செய்வேன் - இன்சொல்லாய்

97. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தகவென்ற – சொற்குள்ளே

98. எல்லார்க்கும் புத்தி இயம்பிக் கரையேற்ற
வல்லாய் உனக்குரைக்க வல்லேனோ – சொல்லியவுன்

99. ஈரடிக்குள் ளேஉலக மெல்லாம் அடங்குமெனின்
நேரடிக்கு வேறே நிலனுண்டோ – ஓரடிக்கு ஓர்

100. ஆயிரம் பொன்னிறைக்கும் ஐயரை வீதியிலே
போயிருந்து தூதுசொல்லப் போக்கினாய் - ஆயிருந்தும்

101. மாண்பாய்ஓர் தூது சொல்லி வர என்பேன் என்வருத்தம்
காண்பாய்என் பெண்மதி நீ காணாதே – ஆண்பனைநல்

102. பெண்பனை யாக்கினையால் பெண்களிலே காரைக்கால்
வண்பதியார் ஔவையென வந்துதித்தாய் - நண்பார்

103. திலதவதி யாருடனே சென்மித்தாய் மாடக்
குலதவதி யானத்தார் கூடல் - பலதவம்சேர்

104. மேனியார் கண்டிகையும் வெண்ணீறும் கண்டுருகும்
மானியார் தேசிகனா வந்துதித்தாய் - ஞானியார்

105. துங்க மகவாகத் தோன்றி வனப்பகைக்கும்
சிங்கடிக்கும் தாதையாய்ச் சீர்செய்தாய் - இங்கு நீ

106. பெண்கள் எல்லாம் வாழப் பிறந்தமையால் என்மனத்தில்
புண்கள்எல்லா மாறப் புரிகண்டாய் - ஒண்கமலத்து

107. அன்னந்தனை விடுப்பேன் அன்னந்தான் அங்கவரை
இன்னம்தான் கண்டுஅறியாது என்பரே – மன்எந்தாய்

108. அப்பால்ஓர் வண்டை அனுப்பின் அவர்காமம்
செப்பாதே என்றால் திகைக்குமே – தப்பாது

109. மானைப்போய் தூது சோல்லி வாவென்பேன் வல்லியபூந்
தானைப் பரமர்பால் சாராதே – ஏனைப்பூங்

110. கோகிலத்தை நான்விடுப்பேன் கோகிலமும் காக்கையினம்
ஆகி வலியானுக்கு அஞ்சுமே – ஆகையினால்

111. இந்தமனத்தைத் தூதாய் ஏகென்பேன் இம்மனமும்
அந்தமனோ தீதர்பால் அண்டாதே – எந்தவிதம்

112. என்றுஎன் றிரங்கினேன் என்கவலை யெல்லாம்பொன்
குன்றுஅனையாய் உன்னுடனே கூறுகேன் - சென்றாலும்

113. பண்ணிய பத்தொன் பதினா யிரத்து இருநூற்று
எண்ணிய தொண் ணூற்று ஒன் றெனும் தொடையாய் - நண்ணி

114. ஒரு தொடை வாங்கி உதவாயோ ஓர்சே
விருதுடை யார்க்கு நீ வேறோ – தருமிக்கே

115. ஓர்வாழ்க்கை வேண்டி உயர்கிழிகொள் வான்கொங்கு
தேர்வாழ்க்கை என்றெடுத்த செய்தியும் - கீரன்

116. இசையா வகையின் இயம்பினான் என்றே
வசையாடித் தர்க்கித்த வாக்கும் - இசையான

117. பாட்டுக்கு இரங்கிஒரு பாணனுக்குச் சேரலன்மேல்
சீட்டுக் கவி விடுத்த சீராட்டும் - பாட்டியலில்

118. நாத்திரமா மேவுபொருள் நன்றா அறுபதெனும்
சூத்திரமாப் பாடியருள் தோற்றமும் - மாத்திரமோ

119. உன்னோடு அவர்விளையாட்டு ஒன்றோ வடமதுரைக்கு
அந்நேரம் உன்பிறகே யார் வந்தார் - மன்னவன்மேல்

120. காரியார் நாரியார் கண்டகவி யைப்பகிர
வாரியிலாக் கானகத்தில் வந்தவரார் - நாரினொடும்

121. போற்றியுறும் பத்திரர்காப் போந்து கிழஉருவில்
தோற்றி விறகு சுமந்தவரார் – தேற்றியவற்கு

122. ஈயரிய பொற்பலகை இட்டவரார் மற்றவன்றன்
நேயமனை விக்குஎதிரா நேர்ந்தவளைப் – போய் அவையில்

123. தள்ளியிசை தாபிக்கத் தக்கவரார் தென்மதுரைக்கு
உள்ளிருந்த சொக்கர்உனக் குள் அன்றோ – எள்ளி

124 வடமொழியில் வேத வசனமே ஈசர்
திடமொழியாம் என்பார் சிலரே - அடரும்

125 பரசமயக் கோளரியாய்ப் பாண்டிநா டெங்கும்
ஆரசமயம் நீநிறுத்தும் அந்நாள் - விரசு நீ

126 ஆதிக்கண் வையையில்வே தாகமத்தைத் தாபித்தாய்
சோதிக்கின் ஏடகமே சொல்லாதோ – வேதம்

127. ஆதவனங் கண்டாது அடைத்தகத வம்திறந்தாய்
வேதவனம் கண்டால் விளம்பாதோ – வேதம்

128. அமிர்தினும் மிக்கெனும் முனிக்கு அன்பர் உனைச் சொன்னார்
தமிழ்முனிஎன் னும்பேர் தாராதோ – தமிழால்

129. அறம்பொருள் இன்பம் வீடு ஆரணர் சொன்னார் அத்
திறம்பரமர் வாக்கே செப்பாதோ – மறந்திடலில்

130. கற்பு அலகை ஒதுமறை காணார்கீழ் நிற்கவும் நீ
பொற்பலகை மேலிருந்தாய் போதாதோ தற்பரரோடு

131. எண்ணிறந்த வாசிஅழைத் திட்டாய் சதுர்வேதப்
பண்ணிறைந்த வாசி பகராதோ – அண்ணலார்

132. தென்பால் உகந்தாடும் செய்தியெல்லாம் உன்னிடத்தில்
அன்பால்என் றப்பாலும் ஆரறியார் – உன்பேர்

133. பழியார் திசைச்சொல்லார் பன்னார் திருவாய்
மொழியார் குழறி மொழிவார் – அழியா

134. உருவால் அவாயிருக்கும் ஓதரிய முத்தித்
திருவால வாயிருக்கும் செல்வர் – ஒருமால்

135. வடமதுரை ஏறுமுன்னே வந்தவடி வென்னத்
தடமதுரை மீனுயர்த்த தாணு – படர்தீர்க்கும்

136. சத்திபுரத்து ஓர்பால் தழைத்து மகிழ்ந் தோர் சீவன்
முத்திபுரத்து ஓர்பால் முளைத்தெழுந்தோர் – அத்திசைபோல்

137. ஆங்கோர் இருநான்கு அயிரா வதம்சுமக்கும்
பூங்கோயிற் குள்உறைந்த புண்ணியனார் – பாங்காம்

138. இடம்பவனம் ஈதாக இந்திரன்வந் தேத்தும்
கடம்பவனம் மீதிலுறை காந்தர் – அடும்பேர்

139. அலகம் பரிக்கும் அரியார் முடிவேய்ந்து
உலகம் பரிக்கும்முறை யுள்ளார் – பலநாளும்

140. நின்றவூர்ப் பூசலார் நீடிரவெ லாம்நினைந்து
குன்றுபோ லேசமைத்த கோயிலும் - நன்றிதரும்

141. தாயான கங்கைமுடி தான்குளிரக் கண்ணப்பர்
வாயால் உமிழ்ந்ததிரு மஞ்சனமும் – தூயமழைத்

142. துன்புஆர் திருக்குறிப்புத் தொண்டர் துணித்துறையில்
அன்பால் அளித்தபரி வட்டமும் - இன்பாத்

143. தணிவரிய மானக்கஞ் சாறனார் சாத்தும்
மணிமுடிசூழ் பஞ்ச வடியும் – அணிவிடையார்

144. காமன்பால் முன்சேந்த கண்போல மூர்த்தியார்
தாமன்பால் முன்சேர்த்த சந்தனமும் - பூமன்போல்

145. காக்கும் அரிபுனைந்த கண்மலரும் காதலொடு
சாக்கியர்தாம் சாத்தியபூந் தண்மலரும் – போக்கியமா

146. ஆக்கிய மாற னமுதும் சிறுதொண்டர்
மாக்கறியும் தாயர்தரு மாவடுவும் – நீக்கரிய

147. காரர் இரவில் கணம்புல்லர் தம்முடிமேல்
சீராக ஏற்றியசெந் தீபமும் – ஆரால்

148. அமைத்து வணங்கலுறும் அங்கணர்க்கப் பூசை
சமைத்து வணங்கத் தகுமோ – உமைக்கன்பர்

149. அற்சனைப்போட் டேயாம் என்று ஆரூரர்க்கு ஆதியிலே
சொற்றமிழ் பாடெனச் சொன்னமையால் – சொற்படியே

150. செய்தாய்நால் வேதம் திகைத்தொதுங்கப் பித்தனென்று
வைதாய்நீ வைதாலும் வாழ்த்தாமே – மெய்தான்

151. இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் – வருந்தினன்மால்

152. வெல்லானை தின்ற விளங்கனியா னேன்விரகக்
கல்லானை தின்ற கரும்பானேன் – நல்லவரைத்

153. தேடுநிழல் சிந்தனையில் தேம்பினேன் வெம்பனியால்
வாடிய செந்தா மரைஒத்தேன் – ஓடமிசைக்

154. கொள்ளம்பூ தூர்வெள்ளக் கொள்ளை கடந்தாய் என்மால்
வெள்ளம் கடத்திவிட வேண்டாவோ – தள்ளென்று

155. மாறிட்ட சாக்கியரை வன்கழுவேறச் செய்தாய்
சீறிட்ட வேளைஅது செய்யாயோ – நீறிட்டே

156. அங்கரும்பின் கூனொழித்தாய் அன்று வழுதிக்கு மதன்
செங்கரும்பின் கூனொழியச் செய்யாயோ – அங்கமுறு

157. வெப்புநோய் தீர்த்தாய்அவ் வேந்தனுக்குஎன் வெவ்விரக
வெப்புநோய் தீர்க்க விரும்பாயோ – தப்பலவே

158. சாக்கியர் இட்ட நஞ்சு தன்னைஅமு தாக்கினைஇன்று
ஆக்கிய நஞ்சைஅமு தாக்காயோ – நீக்கரிய

159. வெந்தீக்குள் ளேகிடந்தும் வேவாய் என்பார்காமச்
செந்தீச் சுடாதிருக்கச் செய்யாயோ - வந்து கொங்கில்

160. அப்பனியால் வாடாதே யார்க்கும் துயரொழித்தாய்
இப்பனியால் வாடாது இரங்காயோ - அப்பரை

161. மைக்கடல்கொல் லாதபடி வன்கல் மிதப்பித்தாய்
அக்கடல்கொல் லாமல்உறு வாக்காயோ – மிக்குயர்ந்த

162. மன்றில் பனைவடிவம் மாற்றினாய் அப்பனைமேல்
அன்றில்புள் வேறொருபுள் ஆக்காயோ - தொன்றுதொட்டுத்

163. தென்பொதியில் சாந்தினொடு தென்றலுறுவாய் வந்தாய்
அன்புறஎன் னோடும்உறு வாக்காயோ - முன்பிருந்து

164. பாடுமிசை எல்லாமுன் பாவையராச் சேர்ந்தாய் என்
னோடுமுனியா திருக்க ஓதாயோ – பாடலால்

165. சின்னமொடு காளம் சிவிகை பந்தர் முத்தடைந்தாய்
பொன்னே சூடாது அணியப் பூட்டாயோ- முன்னிறந்தாள்

166. அங்கத்தைப் பூம்பாவை ஆக்கினாய் ஆதலினென்
அங்கத்தைப் பூம்பாவை ஆக்காயோ – மங்கத்தான்

167. மாய்ந்தாலும் மாமுதலை வாய்ப்பிள்ளை யைப்படைத்தாய்

மாய்ந்தாலும் பின்படைக்க வல்லையோ – ஏய்ந்தவுரை

168. செய்தாளென்று என்சொல் செவியோர்ந்து செல்வாயிங்கு
எய்தாமல் அங்கிருக்க எண்ணாதே – பொய்தீரத்

169. தேசிவரும் சொக்கருக்கே சென்றிருந்து ஆங்கவரைப்
பேசிவரும் தூது பிறிதுண்டோ – நேசமொடு

170. தைவரினும் காட்டத் தகாதாரைத் தாதையர்க்குக்
கைவிரலால் காட்டியருள் காளையும் - தெய்வ வெள்ளிப்

171. பூதர வானவரைப் போற்றமுயன்று ஐயாற்றில்
ஆதரவாய்க் கண்ட அரசரும் - நாதர்

172. அளந்தருள் செம் பொன்னைமணி யாற்றிலிட்டு ஆருர்க்
குளந்தனிலே தேடியருள் கோவும் - வளந்திகழும்

173. காளத்தி யில்வந்த காட்சிகயி லாயத்து
நீளத்தான் சொற்றவனும் நீயன்றோ – கேளப்பால்

174. அம்மைதமக் கில்லாதார் அம்மைதா மாஇருந்தார்
அம்மையென்று முன்னுரைத்த அம்மையாய்த் - தம்மெதிரே

175. வெள்ளானை மேற்கொண்ட வேந்தர் வரவிடுத்த
வெள்ளானை மேற்கொண்ட வித்தகராய்த் - தள்ளாது

176. விஞ்சுவரால் வண்ணானை வெண்ணீற்றர் என்றுபணிந்து
அஞ்சலி செய்து ஆட்செய்த அன்பராய்ச் - சஞ்சரியாத்

177. தென்கையி லாயவரைச் செல்வர்பால் சென்றாயே
உன்கையில் ஆகாதது ஒன்றுண்டோ – என் கையால்

178. ஆயும் பாகத்து அவள் அன்பரும் உக்கிரராம்
சேயும் புரந்திருக்கும் தென்மதுரை - வாயினிய

179. செவ்வழியே செல்வாய் நீ செல்வழி நல்வழிதான்
எவ்வழி என்றால் இயம்பக்கேள் - எவ்வழியும்

180. வெல்வாய் உனைநினைந்து வேயுறு தோளியென்று
சொல்வார்தம் காரியம் சித்திக்குமே - செல்வாய்

- சொக்க நாத புலவர்

திருக்கைலாய ஞான உலா

1 திருமாலும் நான்முகனுந் தேர்ந்துணரா தன்றங்
கருமால் உறஅழவாய் நின்ற-பெருமான்

2 பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான்-முறைமையால்

3 அழாதே ஆழ்ந்தான் அகலா தகலியான்
ஊழால் உயராதே ஓங்கினான்-சூழொளிநூல்

4 ஓதா துணாந்தான் நுணுகாது நுண்,ணியான
யாதும் அணுகா தணுகியான்-ஆதி

5 அரியாகிக் காப்பான் அயனாய் படைப்பான்
அரனாய் அழிப்பவனுந் தானே-பரனாய

6 தேவர் அறியாத தோற்றத்தான் தேவரைத்தான்
மேவிய வாறே விதித்தமைத்தான்-ஒவாதே

7 எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான்-எவ்வுருவும்

8 தானேயாய் நின்றளிப்பான் தன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்குங் காண்பரிய எம்பெருமான-ஆனாத

9 சீரார் சிவலோகத் தன்னுட் சிவபுரத்தில்
ஏரார்திருக்கோயி லுள்ளிருப்ப-ஆராயட்ந்து

10 செங்கண் அமரர் புறங்கடைக்கட் சென்றீண்டி
எங்கட்குக் காட்சி அருள் என்றிரப்ப-அங்கொருநாட்

11 பூமங்கை பொய்தீர் தரணி புகழ்மங்கை
நாமங்கை என்றிவர்கள் நன்கமைத்த-சேமங்கொள்

12 ஞானக் கொழுந்து நகராசன் றன்மடத்தை
தேன்மொய்த்த குஞ்சியின்மேற் சித்திரிப்ப-ஊனமில்சீர்

13 நந்தா வனமலரும் மந்தா கினித்தடஞ்சேர்
செந்தா மரைமலர்நூ றாயிரத்தால்-நொந்தா

14 வயந்தன் தொடுத்தமைத்த வாசிகை சூட்டி
நயந்திகழும் நல்லுறுப்புக் கூட்டிப்-பயன்கொள்

15 குலமகளிர் செய்த கொழுஞ்சாந்தங் கொண்டு
நலமலிய ஆகந் தழீஇக்-கலைமலிந்த
16 கற்பகம் ஈன்ற கமழ்பட் டினைஉடுத்துப்
பொற்கழல்கள் கால்மேற் பொலிவித்து-விற்பகரும்
17 சூளா மணிசேர் முடிகவித்துச் சுட்டிசேர்
வாளார் நுதற்பட்டம் மன்னுவித்துத்-தோளா
18 மணிமகர குண்டலங்கள் காதுக் கணிந்தாங்
கணிவயிரக் கண்டிகை பொன்னாண்-பணிபெரிய
19 ஆரம் அவைபூண் டணிதிக ழுஞ்சன்ன
வீரந் திருமார்பில் வில்லிலக-ஏருடைய
20 எண்டோட்கும் கேயூரம் பெய்துதர பந்தனமும்
கண்டோர் மனமகிழக் கட்டுறீஇக்-கொண்டு
21 கடிசூத் திரம்புனைந்து கங்கணங்கைப் பெய்து
வடிவுடைய கோலம் புனைந்தாங்-கடிநிலைமேல்
22 நந்திமா காளர் கடைகழிந்த போழ்தத்து
வந்து வசுக்கள் இருக்குரைப்ப-அந்தமில்சீர்
23 எண்ணருங் கீர்த்தி எழுவர் இருடிகளும்
அண்ணல்மேல் ஆசிகள் தாம்உணர்த்த-ஒண்ணிறத்த
24 பன்னிருவர் ஆதித்தர் பல்லாண் டெடுத்திசைப்ப
மன்னு மகதியன்யாழ் வாசிப்பப்-பொன்னியலும்
25 அங்கி கமழ்தூபம் ஏந்த யமன்வந்து
மங்கல வாசகத்தால் வாழ்நதுரைப்பச்-செங்கண்
26 நிருதி முதலோர் நிழற்கலன்கள் ஏந்த
வருணன் மணிக்கலசந் தாங்கத்-தெருவெலாம்
27 வாயு நனிவிளக்க மாமழை நீர்தெளிப்பத்
தூயசீர்ச் சோமன் குடைஎடுப்பப்-மேவியசீர்
28 ஈசானன் வந்தடப்பை கைக்கொள்ள அச்சுனிகள்
வாயார்நத மந்திரத்தால் வாழந்துரைப்பத்-தூய
29 உருத்திரதர்கள் தோத்திரங்கள் சொல்லக் குபேரன்
திருத்தகு மாநிதியஞ் சிந்தக்-கருத்தமைந்த
30 கங்கா நதியமுனை உள்ளுறுத்த தீர்த்தங்கள்

பொங்கு கவரி புடைஇரட்டத்-தங்கிய
31 பைந்நாகம் எட்டும் சுடர்எடுப்பப் பைந்தறுகட்
கைந்நாகம் எட்டும் கழல்வணங்க மெய்ந்நாக
32 மேகம் விதானமாய் மின்னெலாஞ் சூழ்கொடியாய்
மேகத் துருமு முரசறையப்-போகஞ்சேர்
33 தும்புரு நாரதர்கள் பாடத் தொடர்ந்தெங்கும்
கொம்புருவ நுண்ணிடையார் கூத்தாட-எம்பெருமான
34 விண்ணோர் பணிய உயர்ந்த விளங்கொளிசேர்
வெண்ணார் மழவிடையை மேற்பொண்டாங்-கெண்ணார்
35 கருத்துடைய பாடங்கள் காப்பொத்துச் செய்யத்
திருக்கடைகள் ஏழ்கழிந்த போதிற்-செருக்குடைய
36 சேனா பதிமயில்மேல் முன்செல்ல யானைமேல்
ஆனாப்போர் இந்திரன் பின்படர-ஆனாத
37 அன்னத்தே ஏறி அயன்வலப்பால் கைபோதக்
கன்னவிலுந் திண்டோட் கருடன்மேல்-மன்னிய
38 மால்இடப்பாற் செல்ல மலரார் கணைஐந்து
மேலிடப்பால் மென்கருப்பு வில்லிடப்பால்-ஏல்வுடைய
39 சங்கணையும் முன்கைத் தடமுலையார் மேல்எய்வான்
கொங்கணையும் பூவாளி கோத்தமைத்த-ஐங்கணையான்
40 காமன் கொடிப்படைமுன் போதக் கதக்காரி
வாமன் புரவிமேல் வந்தணைய-நாமஞ்சேர்
41 வேழ முகத்து விநாயகனை உள்ளுறுத்துச்
சூழ்வளைக்கதைத் தொண்டைவாய்க் கெண்டைஓண்கட்டாழ்கூந்தல்
42 மங்கை எழுலருஞ் சூழ் மடநீலி
சிங்க அடலேற்றின் மேற்செல்லத்-தங்கிய
43 விச்சா தரர்இயக்கர் கின்னரர் கிம்புருடர்
அச்சா ரணர்அரக்க ரோடசுரர்-எச்சாரும்
44 சல்லரி தாளந் தகுணிதந் தத்தளகம்
கல்லலகு கல்ல வடம்மொந்தை-நல்லிலயத்
45 தட்டழி சங்கஞ் சலஞ் சலம் தண்ணுமை
கட்டழியாப் பேரி கரதாளம் - கொட்டும்

46 குடமுழவங் கொக்கரை வீணை குழல் யாழ்
இடமாந் தடாரி படகம்-இடவிய
47 மத்தளந் துந்துபி வாய்ந்த முருடிவற்றால்
எத்திசை தோறும் எழுந்தியம்ப-ஒத்துடனே
48 மங்கலம் பாடுவார் வந்திறைஞ்ச மல்லரும்
சிங்கரரும் எங்குங் கிலுகிலுப்பத்-தங்கிய
49 ஆறாம் இருதுவும் யோகும் அருந்தவமும்
மாறாத முத்திரையும் மந்திரமும்-ஈறார்ந்த
50 காலங்கள் மூன்று கணமும் குணங்களும்
வால கிலியரும் வந்தீண்டி-மேலை
51 இமையோர் பெருமானே போற்றி எழில்சேர்
உமையாள் மணவாளா போற்றி-எமைஆளும்
52 தீயாடி போற்றி சிவனே அடிபோற்றி
ஈசனே எந்தாய் இறைபோற்றி-தூயசீர்ச்
53 சங்கரனே போற்றி சடாமகுடத் தாய்போற்றி
பொங்கரவா பொன்னங் கழல்போற்றி-அங்கொருநாள்
54 ஆய விழுப்போர் அருச்சுனன தாற்றற்குப்
பாசுபதம் ஈந்த பசும்போற்றி-தூய
55 மலைமேலாய் போற்றி மயானத்தாய் வானோர்
தலைமேலாய் போற்றிதாள் போற்றி-நிலைபோற்றி
56 போற்றிஎனப் பூமாரி பெய்து புலன்கலங்க
நாற்றிசையும் எங்கும் நலம்பெருக-ஏற்றுக்
57 கொடியும் பதாகையும் கொற்றக் குடையும்
வடிவுடைய தொங்கலுங் சூழக்-கடிகமழும்
58 பூமாண்கருங்குழலார் உள்ளம் புதிதுண்பான்
வாமான ஈசன் வரும்போழ்திற்-சேமேலே

குழாங்கள்

59 வாமான ஈசன் மறுவில்சீர் வானவர்தம்
கோமான் படைமுழக்கங் கேட்டலுமே-தூமாண்பில்
60 வானநீர் தாங்கி மறைஓம்பி வான்பிறையோ
டுனமில் சூலம் உடையவாய்-ஈனமிலா

61 வெள்ளை அணிதலால் வேழத் துரிபோர்த்த
வள்ளலே போலும் வடிவுடைய-ஒள்ளிய
62 மாட நடுவில் மலராய் அமளியே
கூடிய போர்க்கள மாக்குறித்துக்-கேடில்
63 சிலம்பு பறையாகச் சேயரிக்கண் அம்பா
விலங்கு கொடும்புருவம் வில்லா-நலந்திகழும்
64 கூழைபின் தாழ வளைஆர்ப்பக் கைபோந்து
கேழ்கிளரும் அல்குலாந் தேருந்திச்-சூழொளிய
65 கொங்கைமாப் பொங்கக் கொழநர் மனங்கவர
அங்கம் பொருதசைந்த ஆயிழையார்-செங்கேழற்
66 பொற்கலசத் துள்ளால் மணிநீர் முகஞ்சேர்த்தி
நற்பெருங் கோலம் மிகப்புனைத்து-பொற்புடைய
67 பேதை முதலாகாப் பேரிளம்பெண் ஈறாக
மாதரவர் சேர மகழ்ந்தீண்டிச்-சோதிசேர்
68 சூழிகையுஞ் சூட்டுங் சுளிகையுஞ் சுட்டிகையும்
வாளிகையும் பொற்றோடும் மின்விலக-மாளிகையின்
69 மேல்ஏறி நின்று தொழுவார் துயர்கொண்டு
மால்ஏறி நின்று மயங்குவார்-நூல்ஏறு
70 தாமமே தந்து சடாதாரி நல்கானேல்
யாமமேல் எம்மை அடுமென்பார்-காமவேள்
71 ஆமென்பார் அன்றென்பார் ஐயுறுவார் கையேறிவார்
தாம்முன்னை நாணோடு சங்கிழப்பார்-பூமன்னும்
72 பொன்னாரி மாலையைப் பூண்பார்அப் பூண்கொண்டு
துன்னரி மாலையாச் சூட்டுவார்-முன்னம்
73 ஒருகண் எழுதிவிட் டொன்றெழுதா தோடித்
தெருவம் புகுவார் திகைப்பார்-அருகிருந்த
74 கண்ணாடி மேற்பஞ்சு பெய்வார் கிளிஎன்று
பண்ணாடிச் சொற்பந்துக் குற்றுரைப்பார்-அண்ணல்மேற்
75 கண்ணென்னும் மாசாலங் கோலிக் கருங்குழலார்
திண்ண நிறைத்தாழ் திறந்திட்டார்-ஒண்ணிறந்த

பேதை

76 பேதைப் பருவம் பிழையாதாள் வெண்மணலால்
தூதைச் சிறுசோ றடுதொழிலாள்-தீதில்
77 இடையாலும் ஏக்கழுத்த மாட்டாள் நலஞ்சேர்
உடையாலும் உள்ளுருக்க கில்லாள்-நடையாலும்
78 கௌவநோய் காளையரைச் செய்யாள் கதிர்முலைகள்
எவ்வநோய் செய்யுந் தொழில்பூணாள்-செவ்வனேர்
79 நோக்கிலும் நோய்நோக்கம் நோக்காள்தன் செவ்வாயின்
வாக்கும் பிறர்மனத்தை வஞ்சியாள்-பூக்குழலும்
80 பாடவந் தோன்ற முடியாள் இளவேய்த்தோள்
ஆடவர் தம்மை அயர்வுசெய்யாள்-நாடொறும்
81 ஒன்றுரைத் தொன்றுன்னி ஒன்றுசெய் தொன்றின்கட்
சென்ற மனத்தினளாஞ் சேயிழையாள்-நன்றாகத்
82 தாலி கழுத்தணிந்து சந்தனத்தால் மெய்பூசி
நீல அறுவை விரித்துடுத்துக்-கோலஞ்சேர்
83 பந்தலிற் பாவைகொண் டாடும்இப் பாவைக்குத்
தந்தையார் என்றொருத்தி தான்வினவ-அந்தமில்சீர்
84 ஈசன் எரியாடி என்ன அவனையோர்
காய்சின மால்விடைமேற் கண்ணுற்றுத்-தாய்சொன்ன
85 இக்கணக்கு நோக்காள் இவள்போல்வாள் காமன்நூல்
நற்கணக்கின் மேற்சிறிதே நாட்செய்தாள் - பொற்புடைய

பெதும்பை

86 பேரொளிசேர் காட்சிப் பெதும்பைப் பிராயத்தாள்
காரொளிசேர் மஞ்ஞைக் கவின் இயலாள்-சீரொளிய
87 தாமரை ஒன்றின் இரண்டு குழைஇரண்டு
காமரு கொண்டையோர் செந்தொண்டை – தூமருவு
88 முத்த முரிவெஞ் சிலைசுட்டி செம்பவளம்
ஐவத்தது போலும் மதிமுகத்தாள் - ஒத்தமைந்த
89 சுங்கணஞ் சேர்ந்திலங்கு கையாள் கதிர்மணியின்
கிங்கிணி சேர்ந்த திருந்தடியாள் - ஒண்கேழல்
90 அந்துகில் சூழ்ந்தசைந்த அல்குலாள் ஆய்பொதியிற்
சந்தனந் தோய்ந்த தடந்தோளாள் - வந்து

91 திடரிட்ட திண்வரைக்கண் செய்த முலையாள்
கடல்பட்ட இன்னமுதம் அன்னாள் - மடல்பட்ட
92 மாலை வளாய குழலாள் மணம்நாறு
சோலை இளங்கிளிபோல் தூமொழியாள் - சாலவும்
93 வஞ்சனை செய்து மனங்கவரும் வாட்கண்ணுக்
கஞ்சனத்தை இட்டங் கழகாக்கி - எஞ்சா
94 மணியாரம் பூண்டாழி மெல்விரலிற் சேர்த்தி
அணியார் வளைதோள் மேல் – மணிஆர்த்த
95 தூவெண் மணற்கொண்டு தோழியருந் தானுமாய்க்
காமன் உருவம் வரஎழுதிக் - காமன்
96 கருப்புச் சிலையும் மலரம்புந் தேரும்
ஒருப்பட் டுடன்எழுதும் போழ்தில் - விருப்பூரும்
97 தேனமருங் கொன்றையந்தார்த் தீர்த்தன் சிவலோகன்
வானமால் எற்றின்மேல் வந்தணையத் - தான் அமர
98 நன்றறிவார் சொன்ன நலந்தோற்று நாண்தோற்று
நின்றறிவு தோற்று நிறைதோற்றா – நன்ருகக்
99 கைவண்டுங் கண்வண்டும் ஓடக் கலைஒட
நெய்விண்ட பூங்குழலாள் நின்றொழிந்தாள் - மொய் கொண்ட
100 மங்கை இடங்கடவா மாண்பினாள் வான்இழிந்த
கங்கைச் சுழியனைய உந்தியாள் - தங்கிய
101 அங்கை கமலம் அடிகமலம் மான்நோக்கி
கொங்கை கமலம் முகங்கமலம் - பொங்கெழிலார்
102 இட்டிடையும் வஞ்சி இரும்பணைத்தோள் வேய்எழிலார்
பட்டுடைய அல்குலுந் தேர்த்தட்டு – மட்டுவிரி
103 கூந்தல் அறல்பவளம் செய்யவாய் அவ்வாயில்
ஏய்ந்த மணிமுறுவல் இன்முத்தம் - வாய்ந்தசீர்
104 வண்டு வளாய வளர்வா சிகைசூட்டிக்
கண்டி கழுத்திற் கவின்சேர்த்திக் - குண்டலங்கள்
105 காதுக் கணிந்து கனமே கலைதிருத்தித்
தீதில் செழுங்கோலஞ் சித்திரித்து – மாதராள்
106 பொற்கூட்டிற் பூவையை வாங்கி அதனோடும்

சொற்கோட்டி கொண்டிருந்த ஏல்வைக்கண்- நற்கோட்டு
107 வெள்ளி விலங்கல்மேல் வீற்றிருந்த ஞாயிறுபோல்
ஒள்ளிய மால்விடையை மேல்கொண்டு – தெள்ளியநீர்
108 தாழுஞ் சடையான் சடாமகுடந் தோன்றுதலும்
வாழுமே மம்மர் மனத்தாளாய்ச் – சூழ்ஒளியான்
109 தார்நோக்குந் தன்தாரும் நோக்கும் அவனுடைய
ஏர்நோக்கும் தன்ன தெழில்நோக்கும் - பேரருளான்
110 தோள்நோக்குந் தன்தோளும் நோக்கும் அவன்மார்பின்
நீள்நோக்கம் வைத்து நெடிதுயிர்த்து – நாண்நோக்கா
111 துள்ளம் உருக ஒழியாத வேட்கையாம்
வெள்ளத் திடைஅழுந்தி வெய்துயிர்த்தாள் - ஒள்ளிய

மடந்தை

112 தீந்தமிழின் தெய்வ வடிவாள் திருந்தியசீர்
வாய்ந்த மடந்தைப் பிராயத்தாள் - ஏய்ந்தசீர்
113 ஈசன் சிலையும் எழில்வான் பவளமும்
சேய்வலங்கை வேலுந் திரள்முத்தும் - பாசிலைய
114 வஞ்சியும் வேயும் வளர்தா மரைமொட்டும்
மஞ்சில்வரு மாமதிபோல் மண்டலமும் - எஞ்சாய்
115 புருவமுஞ் செவ்வாயுங் கண்ணும் எயிறும்
உருவ நுசுப்பும்மென் தோளும்- மருவினிய
116 கொங்கையும் வாண்முகமு மாக்கொண்டாள் கோலஞ்சேர்
பங்கயப் போதனைய சேவடியாள் - ஒண்கேழல்
117 வாழைத்தண் டன்ன குறங்கினாள் வாய்ந்தசீர்
ஆழித்தேர்த் தட்டனைய அல்குலாள் - ஊழித்
118 திருமதியும் மற்றொன்றாம் என்று முகத்தை
உருவுடைய நாண்மீன்சூழ்ந் தாற்போல்-பெருகொளிய
119 முத்தாரங் கண்டத்(து) அணிந்தாள் அணிகலங்கள்
மொய்த்தார வாரம் மிகப் பெருகி – வித்தகத்தால்
120 கள்ளும் கடாமும் கலவையும் கைபோந்திட்(டு)
உள்ளும் புறமும் செறிவமைத்துத் - தெள்ளொளிய

121 காளிங்கம் சோதி கிடப்பத் தொடுத்தமைத்த
தாளிம்பத் தாமம் நுதல்சேர்த்தித் - தோளெங்கும்
122 தண்ணுறுஞ் சந்தனங்கொண் டப்பிச் சதிர்சாந்தை
வண்ணம் பெறமிசையே மட்டித்தாங் - கொண்ணுதலாள்
123 தன்னமர் தோழியர்கள் சூழத் தவிசேறிப்
பின்னுமோர் காமரம் யாழ் அமைத்து – மன்னு
124 விடவண்ணக் கண்டத்து வேதியன்மேல் இட்ட
மடல்வண்ணம் பாடும் பொழுதீண் -டடல்வல்ல
125 வேல்வல்லான் வில்வல்லான் மெல்லியலார்க கெஞ்ஞான்றும்
மால்வல்லான் ஊர்கின்ற மால்விடையின் - கோல
126 மணியேறு கேட்டாங்கு நோக்குவாள் சால
அணியேறு தோளனைக் கண்டாங் - கணிஆர்ந்த
127 கோட்டி ஒழிய எழுந்து குழைமுகத்தைக்
கோட்டி நுதல்சிவப்ப வாய்துலக்கி – நாட்டார்கள்
128 எல்லோருங் கண்டார் எனக்கடவுள் இங்காய
நல்லாய் படுமேற் படுமென்று – மெல்லவே
129 செல்ல லுறுஞ்சரணங் கம்பிக்குந் தன்னுறுநோய்
சொல்லலுறுஞ் சொல்லி உடைசெறிக்கும் - நல்லாகம்
130 காண லுறுங்கண்கள் நீர்மல்குங் காண்பார்முன்
நாண லுறும்நெஞ்சம் ஒட்டாது – பூணாகம்
131 புல்லலுறும் அண்ணல்கை வாரான்என் றிவ்வகையே
அல்ல லுறும்அழுந்தும் ஆழ்துயரால் - மெல்லியலாள்
132 தன்னுருவம் பூங்கொன்றைத் தார்கொள்ளத் தான்கொன்றைப்
பொன்னுருவங் கொண்டு புலம்புற்றும் - பின்னெருத்தி

அரிவை

133 செங்கேழற் றாமரைபோல் சீறடியாள் தீதிலா
அங்கோழ் அரிவைப் பாராயத்தாள் - ஒண்கேழல்
134 திங்களுந் தாரகையும் வில்லுஞ் செழும்புயலும்
தங்கொளிசேர் செவ்வாயும் உண்மையாற் - பொங்கொளிசேர்

135 மின்னார்வான் காட்டும் முகஒளியாள் மெய்ம்மையே
தன்னாவார் இல்லாத் தகைமையாள் - எந்நாளும்
136 இல்லாரை எல்லாரும் எள்குவார் செல்வரை
ஏல்லாருஞ் செய்வர் சிறப்பென்னும் - சொல்லாலே
137 ஆல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள்அணிமுலைமேல்
மல்கிய சாந்தொடு பூண்புனைந்து – நல்கூர்
138 இடையிடையே உள்ளுருகக் கண்டாள் எழிலார்
நடைபெடை அன்னத்தை வென்றாள் - அடியிணைமேற்
139 பாடகங் கொண்டு பரிசமைத்தாள் பன்மணிசேர்
சூடகம் முன்கை தொடர்வித்தாள் - கேடில்சீர்ப்
140 பொன்னரி மாலை தலைக்கணிந்து பூண்கொண்டு
மன்னுங் கழுத்தை மகிழ்வித்தாள் - பொன்னனாள்
141 இன்னிசை வீணையை வாங்கி இமையவர்தம்
அண்ணல்மேல் தானிட்ட ஆசையால் - முன்னமே
142 பாடல் தொடங்கும் பொழுதிற் பரஞ்சோதி
கேடிலா மால்விடைமேல் தோன்றுதலும் - கூடிய
143 இன்னிசையும் இப்பிறப்பும் பேணும் இருந்தமிழும்
மன்னிய வீணையுங் கைவிட்டுப் - பொன்னனையீர்
144 இன்றன்றே காண்ப தொழில்நலங் கொள்ளேனேல்
நன்றன்றே பெண்மை நமக்கென்று – சென்றவன்றன்
145 ஒண்களபம் ஆடும் ஒளிவாள் முகத்திரண்டு
கண்களபம் ஆடுவபோற் கட்டுரைத்தும் - ஒண்கேழற்
146 கூந்தல் அவிழ்க்கும் முடிக்குங் கலைதிருத்தும்
சாந்தந் திமிரும் முலைஆர்க்கும் - பூந்துகிலைச்
147 சூழும் அவிழ்குந் தொழும்அழுஞ் சோர்துயருற்
றாழும் அழுந்தும் அயாவுயிர்க்கும் - சூழொளிய
148 அங்கை வளைதொழுது காத்தாள் கலைகாவாள்
நங்கை இவளும் நலந்தோற்றாள் - அங்கொருத்தி

தெரிவை

149 ஆரா அழுதம் அவயவம் பெற்றனைய
சீரார் தெரிவைப் பிராயத்தாள் - ஓரா

150 மருளோசை இன்மழலை வாய்ச்சொலால் என்றும்
இருள்தீர் புலரியே ஒப்பாள் - அருளாலே.

-சேரமான் பொருமாள் நாயனார்

முக்கூடற்பள்ளு

மழைக்குறி

கலிப்பா

முத்திதர வந்ததிரு முக்கூடல் மாதவர்தாள்
பத்திமற வாதபண்ணைப் பச்சேரிப் பள்ளரெல்லாம்
புத்தியொடு தெய்வநிலை போற்றியபின் வானமுகில்
எத்திசையும் பெய்யமழை யின்குறியுண் டாகியதே.

சிந்து

இராகம் : ஆனந்தபைரவி **தாளம் : அடதாளம்**

ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி - மலை
யாள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே
நேற்றும் மின்றும் கொம்பு சுற்றிக்
காற்றடிக் குதே - கேணி
நீர்ப்படு சொறித் தவளை
கூப்பிடு குதே
சேற்று நண்டு சேற்றைக் குழைத்
தேற்றடைக் குதே - மழை
தேடியொடு கோடி வானம்
பாடி யாடுதே
போற்று திரு மாலழகர்க
கேற்றமாம் பண்ணைச் - சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப் பாடித்
துள்ளிக் கொள்வோமே.

இக்கரைக் காலிற் பொருநை
யக்கரைக் காலின் – மழைக்
கேம மின்றிச் சாம மின்றி
நாமல்லோ போவோம்
தக்க தோணி யைத்துறையிற்
சிக்கெனக் கட்டும் – படல்
தாழைக் குடைக் கொங்கணியும்
வேளைக்கே வேண்டும்
பக்கமேயுஞ் சூழ்கம்புஞ்சு
ருக்க வாங்கிடும் – சீலைப்
பந்தமும் விளக் கெண்ணெயும்
முந்தவே தேடும்
முக்கூடல் அழகர் பண்ணை
மிக்க சேரியில் – பள்ளர்
முழுதூங் குரவை யிட்டே
எழுவோ மடா.

மழைபெய்தல்

கலிப்பா

சூலா னதுமுதிர்ந்தால் தோன்றாதோ பேறுசெங்கண்
மாலாசூர் நாட்டில் மழையுமந்த வண்ணமன்றோ
வேலா வலயமுந்நீர் மேய்ந்துகருக் கொண்டமுகில்
காலான தூன்றியந்தக் காலமுறை காட்டியதே.
காவுக் கிறைவ னாகும் இந்திரன்
ஏவற் பணிகொண் டெழுந்த கார்
கடலிற் படிந்து திருவிற் கோட்டி
அடல்முக் கூடல் அரியு மாய்ப்
பூவுக் குயர்ந்த கலைமின் னோடு
மேவிக் கமலத் தயனு மாய்ப்
புனலைத் தரித்து வரையி லேறிக்
கனலைத் தரித்த சிவனு மாய்த்

தாவிப் பறந்து பணிகள் பதுங்கக்
கோவித் தெழுந்த கருடனும்

தானே யாகி யுலகுக் குரிமை
ஊனே யாகி உயிரு மாய்க்
கோவிற் பெரிய வடம லேந்திரன்
மாவிற் கறுத்துப் பொழிந்தபின்
குளிறு கின்றதன் கோன்களிற்றினில்
வெளிறு கின்றது வானமே

ஆற்று வரவு

கலிப்பா

பாயுங் கருடப் பரியார்முக் கூடலிலே
காயும் பொருப்பென் களபத் தனப்பொருப்பே
சாயும் புனலமுத தாரைகுளி ரக்குளிரத்
தோயும் பொருப்பர்கலை தோய்ந்தீரத் தோயாரே.

குறிஞ்சி

இராகம் : கல்யாணி சிந்து தாளம் : அடதாளம்

வானக் குரிசில் வள்ளலாய் – வரைக்
கோனைப் பரிசு கொள்ளலாய்
வழக்கு மாறும் புறப்பட்டே - புனல்
முழங்கு மாறுந் திறப்படடே
தானக் களிறு படிந்திடக் – கொலை
ஏனக் களிறு மடிந்திடத்
தழையின் ஆரம் உந்தியும் – பசுங்
கழையின் ஆரம் சிந்தியும்
கானக் குளவி அலையவே – மது

பானக் குளவி கலையவே

காட்டுச் சாதி வேரிற் போய்க் – குற

மோட்டுச் சாதி ஊரிற் போய்ச்

சேனைப் புரவி அழகனார் – மரு

கோனைப் பரவி யழகுபூந்

தினையை வனத்தில் உதிர்த்துப் – பாலை

யனைய வனத்தை எதிர்ந்ததே.

கலிப்பா

பால்வெள்ளத் தாறுடைய பண்ணவர்முக் கூடலிற்கண்

வேல்வெள்ளத் தாறெமது மின்னிறைக்குங் கார்காலம்

கால்வெள்ளத் தாறுகரை கண்டுங்கரை காணாமல்

மால்வெள்ளத் தாறு வரவிரவு தீர்வாயே.

பாலை

சிந்து

இராகம் : புன்னாகவராளி தாளம் : அடதாளம்

எதிரும் பாலை மரவமுந் – திரள்

வெதிரும் பாலைக் குரவமும்

இருப்பை ஈந்து கள்ளியும் – கரைப்

பொருப்பை ஈர்ந்து தள்ளியும்

முதிரும் பாறு முறையிடக் – கழு

குதிரும் பாறு சிறையிட

முள்வே லெயினக் கிடைஎழப் – பதி

வெள்வே லெயினப் படைஎழப்

பிதிருங் காளை விழியுடன் – குடில்

அதிகுங் காளை மொழியுடன்

பெரும றத்தியர் அல்லவே – யெனுங்

கரும றத்தியர் செல்லவே

கதிருங் காலும் போலவே – சென்

றுதிரங் காலுஞ் சூலவேற்

கன்னி, முலையிற் சுரந்தபால் – என

முன்னி முலையிற் பரந்ததே.

கலிப்பா

முந்நீ ரிடுங்கணையார் முக்கூடல் மால்வரையின்

மின்னீர் வரக்கான் விளங்கிநின்ற வாறேயோ

நன்னீர் மருதமென நால்வளமுண் டாயதுவே

நுண்ணீர் கைக்கொண்டு உகந்துமெல்லச் சொல்வீரே.

முல்லை

இராகம் : சங்கராபரணம் சிந்து தாளம் : அடதாளம்

முல்லைக் கோடி யடுக்கையின் – மலி

கொல்லைக் கோடி கடுக்கையின்

முட்டித் தோன்றி மங்வலை – மது

கொட்டித் தோன்றி வெவ்வலை

இல்லைச் சாடி எண்ணெயும் – அயல்

எல்லைச் சாடி வெண்ணெயும்

எள்ளும் அவரை துவரையும் – உரை

கொள்ளும் அவரை எவரையும்

தொல்லைப் பாடு பண்ணியும் – துறு

கல்லைப் பாடு நண்ணியும்

தொடுத்துப் பூவை நெற்றியைத் - தொட

மடுத்துப் பூவை எற்றியே

குல்லைத் தானந் தேக்கி – மாலுக்

கொல்லைத் தான மாக்கி மால்

கொள்ளுங் கயத்தை நிகர்ந்து – மருதந்

துள்ளுங் கயத்தில் பரந்ததே.

ஆற்று வரவு

கலிப்பா

குன்றைக் குடைகவித்த கோவலர்முக் கூடலிலே
இன்றைக் கிரவில் இளையஎவர் தேற்றுவரோ
கன்றைக் கழுத்தணைத்துக் கற்றாவைக் கூவுமண்டர்
கொன்றைக் குழல்பூங் குழலிசெவிக் கேறாதே.

மருதம்

சிந்து

இராகம் : புன்னாகவராளி தாளம் : அடதாளம்

பாயும் மருதஞ் செழிக்கவே – பண்ணை
தோயும் மருதந் தளிர்க்கவே
பகட்டுக் கமலக் குட்டத்திற் – புனல்
தகட்டுக் கமலை வட்டத்தில்
போயும் எருமை பதறவே – உற
மேயும் எருமை சிதறவே
புழுதிச் சாலை நனைத்துதே – குளிர்
கொழுதிச் சாலை யனைத்துமே
சாயும் உரலுங் கரும்புந்தான் – அதில்
பாயும் முரலுஞ் சுரும்புந்தான்
சரிய முதலை முடுக்கியும் – வாழைப்
பெரிய முதலை அடுக்கியும்
காயுந் தவள வாரணம் – எதிர்
ஆயுந் தவள வாரணம்
கழனிக் குடிலைத் தொகுத்து – நெய்தலந்
துழனிக் குடிலிற் புகுந்ததே.

கலிப்பா

முன்றிற் குடவளையூர் முக்கூட லூரர்செய்த
நன்றிக் கிணையில்லை நான்நெடுமால் ஆகினேனே
வென்றித் திருநாமம் வேறோ பொருநைநதி
அன்றிற் குலங்காள் அவற்கிதுநீர் சொல்வீரே.

நெய்தல்

இராகம் : புன்னாகவராளி தாளம் : அடதாளம்

புகுந்த நெய்தலை மயக்கியே – மலர்
மிகுந்த நெய்தலைக் கயக்கியே
புடையிற் புளினஞ் சரியவே – அதன்
இடையிற் புளினம் இரியவே
பகுந்து நுழையப் பட்டினம் – திரை
முகந்து நுழையப் பட்டினம்
படைத்தி டாமை நிகழவே – நிலை
கிடைத்தி டாமை புகழவே
உகுந்த தண்டலை நீக்கியே – புன்னை
வகுந்த தண்டலை தாக்கியே
உப்பளத் திரை யோட்டியும் – புனல்
அப்பளத் திரை யூட்டியும்
தகுந்தடங் கடல் இறைவனைத் – தொழ
மகிழ்ந்திடுங் கடன் முறையினிற்
சார்ந்து சரிந்து நேர்ந்து குறுகி
வார்ந்து வெள்ளம் ஊர்ந்ததே

கலிப்பா

கங்கமே யூருங் கடவுளர்முக் கூடலிலே
தங்கமே தேடத் தணந்தார் மணந்திலரே
வங்கமே யங்கமனல் வங்கமே யானேன்வெண்
சங்கமே செங்கைதனில் சங்கமே தாங்கேனே.

ஆற்று வெள்ளம்

பொருநையாறு (தாமிரபரணி)

சிந்து

இராகம் : காம்போதி தாளம் : அடதாளம்

உதைத்து விசைகொண் டெதிர்த்துக் கடலின்
உதரங் கீறி யதிரும் நீர்
உதய வரைக்கும் பொதிகை வரைக்கும்
ஒத்துப் போம்படி முற்றும்போய்
பதைத்து நெளியும் துதிக்கை மூக்கன்
பண்ணைச் சாளை எண்ணெய்மீன்
பசலி திருக்கை கசலி கெழுத்தி
பண்ணாக் கும்பழம் பாசிமீன்
வதைக்கும் மகரங் குதிக்குஞ் சள்ளை
மத்தி உல்லம் பொத்திமீன்
மடந்தை கடந்தை சம்பான் நொறுக்கி
மலங்கும் பஞ்சலை கருங்கண்ணி
புதைத்து மணலில் ஒதுக்கிக் கடலில்
போக்கி அழகர் கருணைபோல்
பொருநை யாறு பெருகி வாற
புதுமை யாரும் பள்ளீரே

சித்திரா நதி

குற்றாலத் திரி கூட மால்வரை
யுற்றே மேகம் பொழிந்தநீர்
கூடப் பொருநை நாடித் திருமுக்
கூடற் பதியை வலங்கொண்டே
வற்றா மடுவிற் பறவை குறவை
வாளை கோளை தேளிமீன்
மயிந்தி உழுவை அயிந்தி கூனி
மணலி ஆரால் ஓராமீன்
பற்றா அயிரை கொண்ட கெளிறு
பரு வராலும் அணையிலே
பாயக் காலிற் பாயக் குளத்திற்
பாய வயலிற் பாயவே
சிற்றா றென்பது பெற்றாலும் ஒரு

சிறியவர் மனப் பெருமைபோல்
சித்திரா நன்னதி பெருகி வாற
சித்திரம் பாரும் பள்ளீரே.

- திரிகூடராசப்பக் கவிராயர்

குற்றாலக்குறஞ்சி

1. இறைவனின் திருவுலா

தேர்கொண்டவசந்த வீதிச் செல்வர்குற் றாலத் தீசர்
பார்கொண்டவிடையில் ஏறும் பவனிஎச் சரிக்கைகூற
நேர்கொண்ட புரிநூல் மார்பும் நெடியகைப் பிரம்பும் ஆகக்
கார்கொண்ட முகிலேறு என்னக்கட்டியக்காரன் வந்தான்.

பூமேவுமனுவேந்தர் தேவேந்தர் முதலோரைப்
புரந்திடும்செங் கோலான பிரம்புடையான்
மாமேருச் சிலையாளர் வரதர்குற் றாலநாதர்
வாசற் கட்டியக்காரன்வந் தனனே!

2. ஞாயிறுபோல் மேவினாரே!

விருத்தம்

